G.F.Oyor

# Who needs Deliverance?
# யாருக்கு விடுதலை தேவை?

அர்ப்பணிப்பு

*யாருக்கு விடுதலை தேவை?* என்ற புத்தகத்தை இபதான், லாகோஸ், மற்றும் அபியோகுற்றா என்ற இடங்களிலுள்ள ‘விடுவிக்கிக்கவும் சுகமாக்கவும் போதிக்கும் பள்ளியின் [**S**chool **O**f **D**eliverance **A**nd **H**ealing -SODAH] அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அர்ப்பணிக்கின்றேன். அவர்கள் எழுப்பிய கேள்விகளும் நடைமுறையில் நடந்த விடுதலை ஊழியங்களும் என்னை அமர்ந்திருந்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு பயிற்சியளிக்க உதவும் ஒரு செயல்முறையில் வழிகாட்டும் புத்தகத்தை ஆயத்தம் செய்ய என்னை வற்புறுத்தியது. அதன் விளைவுதான் இப்புத்தகம்.

# மதிப்புரை

ரெவரென்ட் டி.கே.ஒனுஓஹா

பரிசுத்தஆவியானவரின் அசைவாடுதலை உடன்உடன் அறிந்து செயல்படுவது ‘கடைசிகால கிறிஸ்தவர்களின்’ கட்டாயபொறுப்பாகும். பிசாசின் நடவடிக்கைகள் பெருகியிருக்கிற இக்காலத்தில் கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் அதுபற்றிய விழிப்புணர்வின்றி வாழ்கின்றனர். அனேக மக்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளை கவனிக்கும் போது ‘‘யாருக்கு விடுதலை தேவை?’’ என்பது இக்காலத்திற்கு ஏற்றபுத்தகமாகும்.

ஒருவருக்கு விடுதலை அவசியமா என்பதை அறிந்துகொள்வது எப்படி என்பதை கலந்துரையாடல் செய்யும் வேளையில் நான் தொடர்ந்து மக்களுக்கு விளக்கமளித்து வருகிறேன். தங்களுக்கு விடுதலைவேண்டுமா அல்லது வேண்டாமா என்று அறியாதிருக்கிற கிறிஸ்தவர்கள் இப்புத்தகத்தை அவசியம் படித்தாக வேண்டும். விடுதலைக்கு ஏதுவான ஆலோசனை அளிப்பதற்கு இப்புத்தகம் உதவியாக இருப்பதால் ஊழியர்களும் ஆலோசகர்களும்கூட இதைப்படித்தாகவேண்டும்.

இப்புத்தகத்தின்எழுத்துப்பிரதிகளை நான் படித்தபின்னர்தான், இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தைஇக்காலகட்டத்தில் எழுதும்படி இத்தேவமனிதனுக்கு கர்த்தர் அளித்த வெளிப்பாட்டு அறிவைக் குறித்து வியப்படைந்தேன். பலவகையான கனவுகளைப் பற்றிய அவரது விளக்கங்கள் அருமையாக இருக்கிறது. கனவுகளை நம்பாதவர்களும்,கனவுகளேஅனைத்து வெளிப்பாடுகளுக்கும்அடிப்படை என்று கருதுபவர்களும் இதைப் படித்தபிறகு,முன்னைவிட அதிக சமநிலையோடு (பாரபட்சமில்லாமல்)முடிவெடுப்பார்கள்.இதில் காணப்படும் சாட்சிகள் விசுவாசத்தை அனல்மூட்டி எழுப்பி விடுவதாக உள்ளது.

ரெவரென்ட் ஜி.எ.ஃப். ஓயார் அவர்கள், இத்தலைமுறையில் தேவன் வல்லமையாக பயன்படுத்திவரும் ஒரு விடுதலை ஊழியராக மட்டுமல்லாமல்,சமநிலையோடு பயிற்சியளிக்கும் மையம் என்று அனைத்து கிறிஸ்தவ ஊழியர்களால்அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ‘‘விடுவிக்கிக்கவும் சுகமாக்கவும் போதிக்கும் பள்ளி’யின் (**S**chool **O**f **D**eliverance **A**nd **H**ealing) தலைவராகவும் இருக்கிறார். இப்புத்தகத்திற்குள்ளிருக்கும் வெளிப்பாடுகளை கிரகித்துக்கொள்ளும்படி உங்களது இதயத்தை பரிசுத்த ஆவியானவர்திறக்க வேண்டும் என்பதே எனது ஜெபம். மகிழ்ச்சியுடன் படிப்பீர்களாக!

ரெவரன்ட். டி.கே.ஒனுஹா,(Rev.D.K.Onuoha)

The EmancipationMinistries, Enugu, Nigeria

# மதிப்புரை

ரெவரென்ட் கானான்வி.எஸ்.ஏடனுக்பா

அநேக கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்குள் தாங்கள் எத்தகைய உன்னதநிலையில் இருக்கிறார்கள் என்பதை அறியாமலும், கிறிஸ்துவின் சரீரமாகிய அவரது சபைக்கு கிறிஸ்து **மத்தேயு 28:18**இன்படி பகிர்ந்தளித்துள்ள அதிகாரத்தை பயன்படுத்தாமலும் இருக்கின்றனர்.

ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டு அவருடைய உயிர்த்தெழுதலில் அவரோடு எழுந்தவர்களாக இருக்கிறார்கள் என்று **ரோமர் 6:3-5** சொல்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் என்று **எபேசியர் 2:6** சொல்கிறது. ஆகவே சாத்தானையும் அவனது கூட்டத்தாரையும்விட நாம் மேலானவர்களாக இருக்கிறோம்.

பிசாசினால் துன்புறுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட நிலையிலிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு உதவும்படி ரெவரென்ட் ஜி. எ.ஃப். ஒயாருடைய ‘யாருக்கு விடுதலை தேவை?’ என்ற புத்தகம் வந்திருக்கிறது. இருளின் இராஜ்யத்திற்கு எதிராக கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் விசுவாசத்தையும் அதிகாரத்தையும்கிறிஸ்துவின் சரீரமானது செயல்படுத்துவதற்கு இப்புத்தகம் துணைசெய்யும்.

இப்புத்தகத்தில் நிரம்பியிருக்கும் சாட்சிகளெல்லாம் உண்மையானவைகள். நமது விசுவாசமானது இயேசுகிறிஸ்துவுக்குள் ஆழமாய் வேரூன்றுவதற்காக இவைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு விடுதலை அளிக்கும் கூட்டத்திற்காக அபியோகுட்டா (Abeokuta) என்று இடத்துக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, இரட்டையராய் பிறந்த அவரது மகன்கள் ஆரோக்கியக்குறைவுடன் இருந்தபோது இவர் தவிப்போடும் பதட்டத்தோடும் இருந்த நிகழ்ச்சி ஒரு உதாரணம். ‘‘அங்கே ஊழியத்திற்கு செல்லாமல் இங்கே இருப்பதால் பிள்ளைகளுக்கு நீங்கள் என்ன செய்ய முடியும்? நமது ஜெபத்திற்கு பதில்கொடுப்பவரும் சுகமாக்குபவரும் தேவன்தான். தேவன் எல்லாவற்றையும் அவரது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். ஆகவே நீங்கள் போய் வாருங்கள்’’ என்று அவருடைய மனைவி சொன்னாள். இது, நமது கர்த்தராகிய இயேசுவுக்குள்ளிருக்கும் உயிருள்ள வல்லமையுள்ள ஒரு விசுவாசமாகும். அத்தகைய அவளது விசுவாசத்தை நாம் பின்பற்றுவோம்.

தனிப்பட்டமுறையில் நான்இப்புத்தகத்தை படித்திருக்கிறேன்; ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். இதைப்படிக்கும் உங்களுக்கும் இதுவே அனுபவமாக இருக்கும் என்று நம்புகிறேன். உங்கள் கனவுகளில் மட்டுமல்ல உங்கள் சொந்த வாழ்விலும்கூட சரீரபிரகாரமாக உங்களைத் துன்புறுத்துகின்ற பிசாசுகளிடமிருந்து நீங்கள் விடுதலையாக்கப்படுவீர்கள். தேவனுடைய எளிமையான

ஊழியக்காரராகியஇப்புத்தக ஆசிரியர்,அனைத்து மகிமையையும் தேவனுக்கு செலுத்துகிறார்.

தேவன் உங்களை ஆசீர்வதிக்கிறார்.

ரெவரென்ட். கானான் வி.எஸ் அடினுக்பா,
( Rev. Cannon V.S.Adenugba)
இம்மானுவேல் ஆங்கிலிக்கன் சபை, கெட்டு, லாகோஸ்

---

## நன்றியுரை

ரெவரன்ட். ஜி. எ.ஃப். ஒயார்

---

நைஜீரியாவிலும் அதற்கு அப்பாலும்,பன்னிரண்டு ஆண்டுகாலமாக பிசாசுகளை துரத்துவதில் எற்பட்ட நடைமுறை அனுபவங்களின் விளைவுதான் 'யாருக்கு விடுதலை தேவை' என்ற இப்புத்தகமாகும். என்ன செய்யவேண்டும் என்று தெரியாததால் எளிதில் தவிர்க்கக் கூடிய பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டுஅநேகா் அவதிப்படுகின்றனா். விடுதலை தேவைப்படுகிறவா்களின் வாழ்க்கையில் என்ன அடையாளங்களும் அறிகுறிகளும் காணப்படும் என்பதை இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. 'குணப்படுத்துவதைவிட தடுப்பதே சிறந்தது'என்று சொல்வார்கள். இது உண்மைஎன்பது இவ்விடுதலை ஊழியத்தில் பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தேவனிடமிருந்து வெளிப்பாடுகளை தாராளமாகபெற்றுக்கொள்ள எனக்கு அனுமதியளித்த தேவனுக்கு எனது ஆழமான நன்றி உணர்வை வெளிப்படுத்த விரும்புகிறேன்.என்றோ எப்போதோ நாம் அழிக்கப்பட்டிருக்கக் கூடும் ஆனால் தேவன் உண்மையுள்ளவா் என்பதையே இவ்வளவு வருடங்களாக நிருபித்து வருகிறார்.

1991ஆம் ஆண்டில் எனக்கும் என்மனைவிக்கும் பயனுள்ள விடுதலைச் செய்திகளை கொடுத்த, பெனின் நகரில் உள்ள பரிசுத்த ஆவியானவரின் மிஷன் சபையின் தலைமை பேராயராகிய எம்.எ. மரியோக்ஹா (M.A. Marioghae) அவா்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.இவ்வளவு காலங்களாக ஜெபங்களிலும் ஆலோசனையளிப்பதிலும் ஊக்கமூட்டுவதிலும் எங்களோடு துணையாக நின்றுவருகிறார். இப்புத்தகத்தை ஒழுங்குபடுத்திய *தேவன் - இதை- செய்வார் - ஊழியங்களின்*(God-Will-Do-It-Ministries) இலக்கியத்துறை மற்றும் வெளியீடு செய்யும் துறையின் தலைவராக இருக்கும் திருமதி.எமிசி அடிபோவேல் (Mrs. Yemisi Adebowale) அவா்களுக்கும்கூட நான் நன்றி சொல்கிறேன்.

என் நண்பரும், விடுதலை ஊழியத்தின் மூத்த உடன் ஊழியரும், முதல் மதிப்புரையை பெந்தெகோஸ்த் கண்ணோட்டத்தில் எழுதித்தந்தவருமாகிய ரெவரென்ட். டி.கே. ஒனுவோகா அவா்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். இரண்டாவது மதிப்புரை வழங்கிய ஆங்கிலிக்கன் சபை ஊழியராகிய ரெவரென்ட். கானான் வி.எஸ் அடினுக்பா அவா்கள் எனது சிறப்பான நன்றிக்குரியவா்.எங்களது 'விடுவிக்கவும் சுகமாக்கவும் போதிக்கும் பள்ளி'யில் 6மாத பயிற்சியை முடித்தபின்னா், தேவன் அவரை ஒரே இரவுக்குள் விடுதலை ஊழியராக மாற்றிவிட்டார். இந்நாளில் அவரது சபையில் பரிசுத்த ஆவியின் அக்கினியானது அனல் மூட்டபட்டிருக்கிறது என்று நூற்றுக்கணக்கானோா் அறிக்கையிடுகின்றனா்.

தட்டெழுத்து பணிசெய்த எனது உதவியாளரான திருமதி. மொடுப்பே அடியோ (Mrs.Modupe Adio) அவா்களுக்கு அநேக நன்றிகள். ஜெபத்தாலும்

ஊக்கப்படுத்துவதாலும் என் வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் பேருதவியாக இருந்துவரும் 'தேவன்-இதை-செய்வார்-ஊழியங்களின்' அனைத்து பணியாளர்களுக்கும் தலைவர்களுக்கும் நான் நன்றி சொல்கிறேன். இப்புத்தகம் அச்சிட்டு வெளிவருவதற்கு பொருளுதவி அளிப்பதில் உண்மை உள்ளவர்கள் என்று தேவன் கண்டுகொண்டவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடைசியாக இப்புத்தகம் எழுதப்படும்போது ஆதரவாலும் ஜெபத்தாலும் ஊக்கமூட்டிய என் சிறந்த நண்பரும் என் ஜெபதோழனும், நம்பகத்தன்மை கொண்ட நபருமாகிய என் மனைவி 'பேசியன்ஸ்' (Patience) க்கும் நான் நன்றி சொல்லியாக வேண்டும்.

ரெவரன்ட். ஜி. எ்.ப். ஒயார்(Rev.G.F. Oyor) செப்டம்பர் 16, 1995

---

# உள்ளடக்கம்

---


அற்பணிப்பு
மதிப்புரை
நன்றியுரை
முன்னுரை

1. யாருக்கு விடுதலை தேவை?
   முதல்படி : ஆவி;
   இரண்டாம்படி: ஆத்மா;
   மூன்றாம் படி:சரீரம்

2. கனவு வாழ்க்கை :
   மனிதனிடமிருந்து வரும் கனவுகள்.

3. தேவனிடமிருந்து வரும் கனவுகள்
   1) கதை வடிவில் வரும் கனவு
   2) செய்தியாக வரும் கனவு
   3) நோக்கத்தை வெளிப்படுத்தும் கனவு
   4) ஒரு அடையாளமாக வரும் கனவு

4. பிசாசிடமிருந்து வரும் கனவுகள் :
   - பிசாசினால் ஏற்படும் கனவுகள்
   - கனவே வருவதில்லை
   - கனவு காண்பேன் ஆனால் ஞாபகம் இருக்காது
   - காண்கிற கனவுக்கு எதிர்மறையான காரியங்கள் நடக்கும்
   - விநோதமான காரியங்களை செய்வது போல, உயரங்களிலிருந்து விழுவதுபோன்ற கனவு
   - முந்தி குடியிருந்த வீடு, பள்ளிக்கூடம், அலுவலகம் அல்லது முன்னமே வெற்றிபெற்ற தேர்வை எழுதிக்கொண்டிருப்பது போன்ற கனவு.

5. பாலியல் சம்பந்தமான கனவுகள்
   - பாலுறவில் ஈடுபட்டதுபோன்ற, திருமணமாவது போன்ற, அல்லது காதலிப்பதுபோன்ற கனவுகள்

- நிர்வாணமாயிருப்பதைப் பார்ப்பது போன்ற கனவு
- காதல் வயப்பட்டு கட்டித்தழுவுவது போன்ற கனவு
- காதலிப்பது போன்ற,அல்லது திருமணம் நிச்சயமாவது போன்ற அல்லது திருமணமானது போன்ற கனவு
- சரீரத்தை ஈரமாக்கும் கனவுகள்
- எதிர் பாலினரோடு பாலுறவு கொள்வது போன்ற கனவு

6. தம்பதியரது - பாலுறவு சம்பந்தமான கனவுகள்
    - தங்களது வாழ்க்கை துணைவர் அல்லது துணைவியைப் போல தோற்றமளிக்கும் ஒருவரோடு பாலுறவு கொள்வதுபோன்ற கனவு
    - குழந்தைகளோடு இருப்பது போன்ற கனவு – கருவுற்றது போன்ற கனவு
    - சிறுபிள்ளைகளோடு விளையாடுவதுபோல அல்லது அவர்களுக்கு ஆகாரம் கொடுப்பது போன்ற கனவு
    - இரத்தத்தையோ அல்லது சிவப்புநிற பொருட்களையோ கண்டபின்னர் மாதவிடாய் வருதல்
    - உங்கள் குழந்தையை உங்களிடமிருந்து யாரோ எடுத்துச் செல்வது போன்ற கனவு.

7. தண்ணீர் கனவுகள்:

    தண்ணீர் - ஆறு – சமுத்திரம் போன்ற கனவுகள்

8. பிறபல்வேறு கனவுகள் :
    - சாப்பிடுவது போன்ற கனவு
    - மரணஆவி
    - தாக்கப்படுவது போன்று அல்லது சண்டை போடுவது போன்று கனவு
    - கனவில் பறத்தல்

9. விரும்பத்தகாத சூழ்நிலைகள் திரும்பத் திரும்ப ஏற்படுதல்
    - உண்மையான வாழ்க்கை அனுபவங்கள்
    - எவ்வித மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாத வியாதிகள்

10. சத்தியத்திற்கு புறம்பான மத சடங்காரங்கள்
    - முன்னாளில் முஸ்லீம்களாய் இருந்தவர்கள்
    - முன்னாளில் குறிசொல்லுகிற வீட்டில் ஆண் அல்லது பெண் பூசாரியாக இருந்தவர்கள்.
    - பிசாசுக்கு அற்பணிக்கப்பட்ட நபர்கள்
    - குறி சொல்லுகிற வீட்டிற்கு முன்பு வந்துபோய் இருந்தவர்கள்
    - முன்னாளில் சத்தியத்திற்கு புறம்பான மதக்குழுக்களில் உறுப்பினராக இருந்தது
    - முன்னாளில் சாத்தானின் சபையில் உறுப்பினராயிருந்தவர்கள்

11. பயம்
    - கவலை
    - உபத்திரவம்
    - விநோத குரல்களை கேட்டல் அல்லது விநோத உருவங்களை பார்த்தல்
    - திடீரென்று கோபங்கொள்ளுகிறவர்கள்
    - கண்டிப்பாக செய்தே ஆகவேண்டும் என்ற நிலையிலுள்ளோர்

## முன்னுரை

### கிறிஸ்தவர்களுக்கு விடுதலை தேவை

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தெய்வீக சுகத்தையும் அற்புதத்தையும் எதிர்ப்பதைவிடவும் அதிகமாக விடுதலைசெய்தியின் கொள்கையை / போதனையை,எதிர்த்தும் புறக்கணித்தும் வருகிறது. ஆனால் கடந்த சில வருடங்களாக தெய்வீக சுகத்தையும் அற்புதங்களையும் அநேக வேதபண்டிதர்கள் படிப்படியாக ஏற்று வருகின்றனர்.(ஆனால் சிலர் தெய்வீக சுகமும் அற்புதங்களும் இயேசு கிறிஸ்துவின் காலத்தோடு முடிந்துவிட்டது என்று அறியாமையினாலே இன்னும் பிடிவாதமாக கூறிக்கொண்டிருக்கின்றனர்.) ஆனால் நான் தேவவார்த்தையைக் கற்றுக்கொண்டபோதும்,அவைகளைப் பயன்படுத்தி மனுக்குலம் சந்திக்கின்ற பலவகையான பிரச்சினைகளில் வெற்றியான விடுதலை கண்டபின்னர்,‘‘இவ்விடுதலைச் செய்தியினை அடிக்கடி போதித்தாக வேண்டும்’’ என்பதை புரிந்துகொண்டேன்.

விடுதலையைப்பற்றிய தகவலை அறிந்துகொள்வதற்கோ கற்றுக்கொடுப்பதற்கோ அதிகமான புத்தகங்கள் நம்மிடத்தில் இல்லை. ஜெபம், பரிசுத்தம், செழிப்பு, விசுவாசம், தெய்வீக சுகம், அற்புதம் போன்றவை பற்றிய அநேக புத்தகங்களும் ஒலிநாடாக்களும் எங்கும் காணப்படுவது போல விடுதலை பற்றிய செய்திகளை எங்கும் காணமுடிவதில்லை.ஆகவே,தேவ ஜனங்களை சுகப்படுத்துவதற்கும் விடுவிப்பதற்கும் தேவன் என்னை ஊழியத்திற்கு முதன் முறையாக அழைத்ததிலிருந்தே ( 1983 ஜூலை 28 ) அந்த உன்னத பணியை நிறைவேற்றுவதற்கு என்னை முழுமையாக ஆயத்தமாக்கி பலப்படுத்த வேண்டும் என்று கதறி வருகிறேன். இந்நாள் வரை பெற்ற வெற்றியின் அளவில் நான் திருப்தி அடையாவிட்டாலும் கூட இன்னும் நான் நடக்க வேண்டிய வழியில் என்னை நடத்துவதாக கர்த்தர் எனக்கு உறுதியளித்துள்ளார்.

ஆவியில் நிறைந்து அந்நியபாஷையை பேசுகிற ஒரு கிறிஸ்தவனுக்கும் விடுதலை தேவையா? இப்படி ஒரு கேள்வியை 1986ஆம் ஆண்டு ஜனவரி 26இல் எனுகுவிலுள்ள (Enugu, Uiversity of Nigeria) நைஜீரியா பல்கலைகழகத்தில் ஒரு பெண் என்னிடம் கேட்டாள். அக்கேள்விக்கு 'ஆம்' என்று பதிலளித்தேன். அதுவே இப்போதும் எனது பதிலாக இருக்கிறது. மறுபடியும் பிறக்கும்போது ஒரு கிறிஸ்தவனின் ஆவிதான் புதிதாக்கப்படுகிறது. ஆகவே அவன் முன்பு நேரடியாக செய்த உடன்படிக்கையாலோ,அல்லது அவனது பெற்றோர் அல்லது முன்னோரால் - அவன் சார்பாக செய்த உடன்படிக்கைகளாலோ பிசாசுகளோடுஏற்படுத்தப்பட்ட தொடர்புகளை – பந்தங்களைத் துண்டித்துவிடவேண்டும்.மேலும் அவனுக்கு மற்றவர்களோடு இருக்கிறஒவ்வொரு தெய்வீகமற்ற தொடர்புகளையும் -பந்தங்களையும் துண்டித்து விடவேண்டும்.***முதலாவது அதுபோன்ற தெய்வீகமற்ற உறவுகளை(பிணைப்புகளை) உடைத்துவிட்டு பின்னர் ஜெபிப்பதைத்தான் விடுதலை ஊழியம்*** *என அழைக்கிறார்கள்.*

நான் மறுபடியும் பிறந்தபோதே விடுதலை ஊழியத்திற்கென்று என்னை அற்பணித்துவிட்டேன்.ஒரு மனிதன் விடுதலைபெறத்தேவையான அடிப்படைத்தகுதி மறுபடியும் பிறந்த அனுபவமே தவிரமதப்பற்றோ மதச்சடங்காச்சாரங்களோ அல்ல.மறுபடியும் பிறக்காத ஒரு மனிதனிடமிருந்து பிசாசுகளைத் துரத்தினால் அவனிடமிருந்து துரத்தப்பட்ட பிசாசு, அதைவிட பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய முன்னிலையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்**(மத்தேயு12:43-45)**. கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து செலுத்த வேண்டிய அனைத்து விலைக்கிரயத்தையும், பரிகாரத்தையும் செய்து முடித்தபோதும் இரட்சிக்கப்பட்டவர்களில் அநேகர்,அவைகளில் இன்னும் சில காரியங்களில் விடுதலை பெறாமல் அவதிபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சுமார் 500பேர்களுள்ள கிறிஸ்தவ ஜெபக்குழுவை நடத்தும் என் நண்பரும் ஊழியக்காரருமாகிய ஒருவரை விடுதலை-ஜெபத்திற்காக 1993 ஆண்டு பெப்ருவரி மாதம் என்னிடம் அழைத்து வந்திருந்தனர். அவரது சபைக்கு பிரசங்கிக்க பலமுறை அழைக்கப்பட்டு சென்றிருக்கிறேன். என்னை விடுதலை ஊழியத்திற்கு அழைத்த தேவன் எப்போதும் உண்மையுள்ளவராக இருந்து வருவதால்,இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கவும், குணமாக்கவும், விடுவிக்கவும், செழிப்படையச் செய்யவும் முடியும் என்பதை நிரூபிக்கும் அநேக சாட்சிகளை அச்சபையில் கர்த்தர் ஏற்படுத்தினார் என்பதை அந்த சகோதரன் மூலமாக கேட்டிருக்கிறேன்.ஒருநாள் திடீரென்று அந்த அற்புதமான தேவ ஊழியரால் தூங்க முடியவில்லை; சாப்பிடமுடியவில்லை. சகோதரர்கள் ஜெபித்தபோது அதற்குக் காரணம் சரீரபிரகாரமானது அல்ல என்பதையும் விடுதலை ஊழியத்தினால் விடுவிக்கவேண்டிய ஆவிக்குரிய பிரச்சனை என்பதை புரிந்துகொண்டதால் என்னிடம் அழைத்து வந்தனர். நாங்கள் ஜெபிக்கத் துவங்கியதும்,''நாங்கள் பன்னிரண்டு பேராக இருக்கிறோம், அவனைவிட்டு விலக மாட்டோம்'' என்று சொன்னவாறு அந்த ஊழியர்சத்தமிடத் துவங்கினார்.

இந்த ஊழியருக்கா இப்படி? என நான் வியப்படைந்தேன்! ஒருவேளை இவர் பாவஞ்செய்த காரணத்தால் பிசாசுகள் எதிர்த்து நிற்கின்றனவோ என்று எண்ணினேன். ஆகவே 'தேவனே இவரிடம் இரக்கமாயிரும்,இவர் செய்த பாவங்களை தயவாய் மன்னியும்' என்று நாங்கள் மன்றாடத்துவங்கினோம். ஆனால் பிசாசுகள் மறுபடியும் வியப்படையத்தக்க விதத்தில் பேசத்துவங்கின.''மிகவும் சின்ன வயதாக இருக்கும்போதோ அவனை வழிகாட்டி,பாதுகாத்து, ஆசீர்வதிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் அவனுக்குள்ளே கொண்டு வரப்பட்டோம். கடந்த வருடங்களெல்லாம்அவனோடிருந்து அப்படி செய்துவந்தோம். ஆனால் அவன் இப்போது போகிறபோக்கைப் பார்த்தால் அவனுக்குள்ளே இனி நாங்கள் இருக்க முடியாது என நாங்கள் பயமுறுத்தப்படுவதால் இவனைக் கொல்வதற்கு தீர்மானித்தோம்.'' என்று பேசின.

பிசாசுகள் சொல்வதை உடனே நானும் எனது குழுவிலுள்ள அனைவரும் புரிந்து கொண்டோம். அப்பிசாசுகள் அங்கே நெடுங்காலமாக இருக்கின்றன என்பதையும் அவைகளுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டு வந்திருப்பதால் அவைகளை நாங்கள்

துரத்தமுடியாது என்று சொல்கின்றன என்பதையும் புரிந்துகொண்டோம். இறுதியில் நாங்கள் அவைகள் எல்லாவற்றையும் துரத்திவிட்டோம். தேவனுக்கு மகிமை உண்டாவதாக! அந்த சகோதரர் முற்றிலும் விடுதலை அடைந்த பின்னர், நடந்த காரியங்கள்அவரை வியப்படையச் செய்வதாக எங்களிடம் சொன்னார். எங்களை உதைக்கும்படி அந்த அசுத்த ஆவிகள் அவரைத் தூண்டின என்றும் ஆனால் அவரது உள்ளான இதயமோஇந்த ஊழியக்காரர்கள் மனவேதனையடைந்து தன்னை அப்படியே விட்டுவிட்டு விலகிப் போய்விடக்கூடாது என்று இதயத்தின் ஆழத்தில் ஜெபித்துக்கொண்டிருந்ததாக சொன்னார். என்ன நடக்கிறது என்ற உணர்விருந்தும் முரட்டுத்தனமாக செயல்படாமலிருக்கும் கட்டுப்பாடு அவருக்கு இல்லாமலிருந்தது என்றும் சொன்னார். அதாவது அசுத்த ஆவிகள் அவரது குரலை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு எங்களிடம் பேசியது. அசுத்த ஆவிகள் அவரது கால்களையும் கைகளையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டதால்தான் அம்மனிதர் எங்களிடம் சண்டையிடத்துவங்கினார். விடுவிக்கப்பட்ட அவர் இப்பொழுது கர்த்தருக்காய் அக்கினியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்.

இந்நிகழ்ச்சியால்,‘ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தவுடன்விடுதலையை நாடித்தேடியாகவேண்டும்’ என்ற ஒரு பாடத்தை நான் கற்றுக்கொண்டதோடு,விடுதலை ஊழியத்தின் அவசியத்தைக் குறித்த எனது நம்பிக்கையும் இன்னும் பலப்பட்டது. ஒரு நபருடைய கடந்த காலவாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு அசுத்தங்களும் விடுதலை ஜெபத்தின் மூலமாக அகற்றப்படுகின்றன. ஏனென்றால் வேத வசனத்தின்படி பார்த்தால் ஒவ்வொரு அவிசுவாசியிடமும் குறைந்த பட்சம் ஒரு பிசாசாவது இருக்கும்.

> “அக்கிமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.”
> (எபேசியர்2:1-2)

மனிதருக்குள் கிரியை செய்த இந்த ஆவி,அவர்களை ஏதாவது ஒரு தீமையைஅல்லது பல தீமைகளைச் செய்யும்படி வழி நடத்தியது. ‘அவர்களது பிதா (பிசாசு) பொய் சொல்வதால் அவர்களும் பொய் சொல்கிறார்கள்’ என்று இயேசு சில பரிசேயர்களைப் பார்த்து சொன்னார்.

> “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்.”(யோவான் 8:44)

மறைந்த ரெவரன்ட் (திருமதி) விக்டோரியா ‘மீந்துபோன அடிமண்டி’என்ற ஒன்று இருப்பதையும் அது விடுதலை ஊழியத்தின் மூலம் அகற்றப் படவேண்டும் என்பதையும் நம்பினார்கள்.கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஊழியக்காரர்களாக இருந்தாலும்கூட மனித பலவீனங்களும்,கவனக்குறைவும், அறியாமையும் அவர்களுக்குள் பிசாசு ஆதிக்கம் செய்வதற்கு ஏதுவான வாசலை திறக்கின்றது.திருமதி விக்டோரியாவின் கருத்தின்படி‘மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளை, பிசாசையும் அவனது நிர்வாகஅமைப்பையும் கடிந்துகொண்டாலும்கூட அவைகள் அவனை எளிதில் செல்ல விடுவதில்லை. அதிலும் குறிப்பாக யாரெல்லாம் பிசாசிடம் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களையும் அவனிடம் ஒப்பந்தம் செய்துகொண்டவர்களையும் அல்லது அவன் ஒரு குறிப்பிட்ட பேய்தனமாக வேலைக்காக அவன் ஆயத்தபடுத்தி வருகிறவர்களையும் அல்லது பயன்படுத்திவருகிறவர்களையும் அல்லது ஒரு காலத்தில் பிசாசின் ஆதிக்கத்திற்குள்ளிருந்த சமுதாயத்தில்

பிறந்தவர்களையும் அவன் எளிதில் விடுவதில்லை.இது சத்தியவசனம் கூறும் உண்மை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுவருவதால் இதை நான் நம்புகிறேன்.

விக்கிரக வழிபாடுகள் . . .போன்றவற்றை விட்டுவிட்டு கர்த்தரிடம் வந்தவர்களுடைய கடந்தகால வாழ்விலுள்ள ‘அடிமண்டி’எஞ்சியிருப்பதால் அவைகள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டாக வேண்டும். மனம்மாறி கர்த்தரிடம் வந்தவருக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் அவர்களது சுகத்திற்காகவும் விடுதலைக்காகவும் கண்டிப்பாக ஜெபித்தாக வேண்டும். அந்நபரோடு கலந்துரையாடி பிசாசின் செல்வாக்கு அவரது வாழ்வில் எந்த அளவு இருக்கிறது என்பது தீர்மானிக்கப்படவேண்டும். அதன் பின்னரே அந்நபருக்கு விடுதலை ஊழியத்தை (தேவைபடுமானால்) செய்தாக வேண்டும். அப்போதுதான் அவரால் ஒரு உறுதியான அடித்தளத்தின் மேல் அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையை துவக்க முடியும்.

> ‘‘சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்த பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரியஅற்புதங்களையும் கண்டு பிரமித்தான்.(அப்8:4-13)

கலப்படமில்லாத சுத்தமான தேவவார்த்தையை பிலிப்பு பிரசங்கித்தான். ஆகையினால் அதை உறுதிப்படுத்தும் அற்புதங்களும் அதிசயங்களும் நடந்தன. அநேகர் பாவங்களை விட்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்தார்கள். அதில் ஒருவன் தான் சிமியோன். முன்னொரு காலத்தில் பிசாசுக்கு கீழ்படிந்த விக்கிரக ஆராதனைக்காரனாக இருந்தான். <u>அவனுடைய மனந்திரும்புதல் உண்மையானது என்று பிலிப்பு நினைத்தான். ஆனால் அவனது வாழ்க்கையில் படிந்துகிடந்த ‘மண்டியை’ பற்றி யோசிப்பதற்கு மறந்துவிட்டான்.</u> பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியினால் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் ஊழியத்தை செய்தார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. ஆனால் சிமியோன் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளவில்லை. அவன் ஒருவேளை உபவாசித்து ஜெபித்து விசுவாசத்தை செயல்படுத்தியும் பார்த்தும் ஏனோபலன் கிடைக்காமல் இருந்திருக்கக் கூடும். வந்த அப்போஸ்தலர்கள் விரைவில் எருசலேம் திரும்பிச்சென்றுவிடக்கூடும் என்று அறிந்து,அவன் சுயபுத்திக்கு மிகநல்லகாரியம் போல் தோன்றிய ஒரு காரியத்தைச் செய்தான்.

> ‘‘அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து : நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி : தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ

நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்கு சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.(அப் 8:18-24)

பிரியமானவர்களே! அந்த மனிதன் மறுபடியும் பிறந்தவன், பிலிப்புவினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டவன். பிலிப்புவின் ஊழியமானது உண்மையிலேயே அபிஷேகம் பண்ணப்பட்டதாக இருந்தது.நற்செய்தியாளன் (சுவிசேஷகன்) என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிற ஒரே ஒரு மனிதன் பிலிப்புதான். இதே பிலிப்புதான் எத்தியோப்பியனுக்கு ஊழியஞ்செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டவன். எந்த வாகனமும் இல்லாமல் அங்கிருந்து ஆசோத்திற்கு பரிசுத்த ஆவியினால் கொண்டு செல்லப்பட்டவன். (அப் 8:34-40)இந்த அனைத்து பின்னணியும் பார்க்கும்போது,பிலிப்பு ஒரு ஆரோக்கியமான நற்செய்தியைத்தான் பிரசங்கித்திருப்பான் என்று என்னை நம்பச்செய்கிறது.

அந்த மனிதன் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் பேதுரு அவனைக்குறித்து,“நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்.” என்று சொல்வதால் அவனுக்குள் அடிமட்டத்தில் மீந்திருந்த மண்டியானது விடுதலை ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படவில்லை. அது மட்டுமல்ல,“உன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இராதபடியால்” என்றும் பேதுரு சுட்டிக் காட்டுகிறார். சமாரியாவிலிருந்த எவருக்கும் இக்காரியம் தெரியாமலிருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

*விக்கிரகங்களுக்கு பணிவிடைசெய்தவர்களும், பிசாசுக்குப் பலியிட்டவைகளை சாப்பிட்டவர்களும்,சத்தியத்திற்கு புறம்பானபல்வகைமதக்குழுக்களைச் சேர்ந்திருந்தவர்களும் முதிர்ந்த, அனுபவமிக்க விடுதலை ஊழியர்களினால் விடுதலைஊழியத்தின் மூலம் இயேசுவின் இரத்தத்தினால் இவர்கள் கழுவப்படாமலிருந்தால் அப்படிப்பட்டவர்கள் சாட்சிசொல்லவோ, செய்தி கொடுக்கவோ, தீர்க்கதரிசனம் சொல்லவோ ஆரம்பிக்கக் கூடாது என்பது எனது கருத்தாகும்.*

விடுதலை ஊழியத்தின் மூலமாக அதிகமான விடுதலையைப்பெற்றாக வேண்டிய அநேகர் இன்று மறுபடியும் பிறந்த உடனேயேஅவர்களுக்கென்று சொந்தமாக, சுயமாக ஊழியத்தை துவக்கி விடுகின்றனர். இவர்கள் ஆவிக்குரிய ஒருவரது தலைமையின் கீழிருந்து – கண்காணிப்பிலிருந்து கற்றுக்கொள்வதற்கு சிறிது காலம் இவர்களுக்கு தேவையாக இருந்தும் இப்படி நடந்துகொள்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன்பு ஒரு ஊழியர் ஒரு சபையில் ஊழியம் செய்தபோது, அவர் யார் தலைமேலெல்லாம் கைவைத்து ஜெபித்தாரோ அவர்கள் ஒவ்வொருவரிடமும் பாலியல் இச்சை ஆசைகள் தீவிரமாக எழஆரம்பித்தனவாம். அப்படிப்பட்ட சிமியோன் போன்ற நற்சாட்சியில்லாத நபர் கைவைத்து ‘விடுதலையாக்கப்பட்ட’ மக்களை உண்மையாகவே விடுவிப்பதற்காக இன்னொரு விடுதலை ஊழியக்கூட்டத்தை ஏற்பாடுசெய்ய வேண்டியதாயிற்று. தேவன் நமக்கு உதவி செய்வாராக.

புதிதாக தேவனிடம் வந்தவர்களுக்கு அவர்களது முந்தியவாழ்க்கையில் பிசாசோடு இருக்கும் தொடர்புகளைக் குறித்து ஒன்றும் அறியாதவராக இருக்கின்றார்.ஆகையால் அந்த சத்துருவால் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு அறியாமையின் கருவியாகக்கூட இருக்கக்கூடும். ஒரு நபர் மறுபடியும் பிறக்கும்போதுதான்,விடுதலைஊழியத்தினால் பலன்

பெறுவதற்குதேவையான தகுதியை பெறுகிறார்.பொதுவாக பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், உண்மையாகவே மனந்திரும்பி பரிசுத்தஆவியானவருக்கு தங்கள் இருதயத்தை திறந்து கொடுத்து தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியும்போது பிசாசுகள் வெளியேறிவிடும்.விசுவாசத்தில் வளரும்போது முந்தைய வாழ்க்கையால் வந்த பின்விளைவுகளும் 'தேங்கிநிற்கும் மண்டிகளும்' தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்தஆவியினாலும் கழுவப்பட்டுவிடும். ஆகவேதான் ஜெபிப்பதற்கும் சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்து படிப்பதற்கும் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கும் நற்செய்தி சொல்வதற்கும் போதுமான நேரத்தை செலவளிப்பவராக இருந்தால் விடுதலை ஊழியம் இல்லாமலேயே குறிப்பிடத்தக்க தீய பழக்கவழக்கங்கள் தானாகவே அவர்கள்வாழ்க்கைவிட்டு வெளியேறியிருப்பதைக் கண்டுகொள்வார்கள்.

ஆனால் சிலவகையான பிசாசுகள், அவைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள், விசுவாசத்தில் வளரவேண்டிய அளவுக்கு வளரமுடியாதபடி அவர்களை கட்டிவைத்து தடுக்கின்றன. அப்படிப்பட்ட நபர்கள் யோவான் 11அதிகாரத்தில் சொல்லப்பட்ட உயிரோடு எழுந்த லாசருவைப் போன்றவர்கள். அவர்கள் ஜீவவார்த்தையைக் கேட்டு ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்தெழுந்தவர்கள், ஆனால் அவர்கள் இன்னும் பிரேதசீலைகளால் இறுக்கமாக கட்டப்பட்டவர்கள் போல் இருக்கின்றனர்.

> "இவைகளைச் சொன்னபின்பு லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்." (யோவான் 11:43-45)

மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்த லாசரு,"வெளியே வா" என்று சொல்லப்பட்ட ஜீவ வார்த்தையைக் கேட்டு அதற்கு கீழ்படிந்தான். உடனடியாகவே அவனுக்குள் ஜீவன் வந்துவிட்டது. தேவனுடைய ஜீவனால் அந்த கல்லறையைவிட்டு வெளியே வந்தான். ஆனால் அவன் இன்னும் கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தான். இயேசு அவரோடு இருந்தவர்களை நோக்கி,"இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" என்றார். அதன் பின்னர்தான் யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அதேபோல நாமும் இவ்வுலகத்திலிருந்தோம். நாம் நமது பாவங்களினால் மரித்தவர்களாகவும், ஒழுங்கீனங்களாலும் குடிப்பழக்கங்களினாலும் அல்லது குறி சொல்லுகிற வீடுகளுக்கு சென்றதாலும் அல்லது வேறு எதாவது தீய பழக்க வழக்கங்களிலும் அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் இருந்தோம். மகிமையான ஜீவ வாழ்க்கையின் நற்செய்தியை நாம் கேட்டபோது, இயேசுவைப் பின்பற்ற தீர்மானித்தோம். ஆகையால் நாம் தேவனால் ஜீவன் பெற்றவர்களாக மாறினோம். ஆனால் நாம் அங்கேயே நின்றுவிடக்கூடாது. விடுதலை ஜெபத்தினால் 'கட்டவிழ்க்கப்படும்படி' நம்மை நாமே விட்டுக்கொடுத்து பழைய தீய காரியங்களுக்கும் தீய விளைவுகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும். அறியாமையினாலோ அக்கரையற்றதன்மையாலோ பெருமையாலோ நாம் தேவன் வகுத்து வைத்திருக்கும் விதிமுறைகளுக்கும், கொள்கைகளுக்கும் உடன்பட மறுத்தால் அதனுடைய விளைவு பயங்கரமாயிருக்கும்.

---

## ஒன்று

---

# யாருக்கு விடுதலை தேவை?

"இப்படிப்பட்ட வாக்குதத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்." (2கொரிந்தியர் 7:1)

"ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்." (யாக்கோபு 1:21)

மறுபடியும் பிறந்தவரும், பரலோகத்தை நோக்கி பரிசுத்தபயணம் செய்கிறவருமாகிய ஒரு விசுவாசிக்குள் அசுத்தம் இருக்க முடியுமா? ஆம் இருக்க முடியும் என்று வேதாகமம் கூறுகிறது. அதோடுகூட அப்போஸ்தலரான யாக்கோபு,"எல்லாவித அழுக்கையும் துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு" என்று ஒழிக்கவேண்டிய அநேக காரியங்களை குறிப்பிட்டுள்ளார். ஆகவே சிலர் மறுபடியும் பிறந்த பிறகும்கூட அவர்களிடம் ஓரளவு துர்க்குணம் எஞ்சியுள்ளது என்று பொருள் படுகிறது.

'அசுத்தம்' என்ற வார்த்தையை தவிர பிசாசைக் குறித்து விவரிக்க மிகச் சரியான வார்த்தை வேறுஇல்லை. இரட்சிக்கப்பட்ட பின்னர்கூட சிலரிடம் பிசாசின் கிரியைகள் மண்டியைப் போலமீந்து இருப்பதைக் குறித்து வேதாகமம் கூறுகிறது. இரட்சிக்கப்படும் முன்னர் இந்த பிசாசுகள் ஒருவரிடம் சட்டபூர்வமாக உள்ளே வந்திருக்கக் கூடும்; ஆனால் கர்த்தருக்குள் புதிதாய் பிறந்தபின்னரும் அவைகள் உங்களுக்குள் இருக்குமானால் அவைகள் உங்கள் எல்லைக்கோட்டையை மீறிவந்தவைகளாக இருப்பதால் அவைகளை பலவந்தமாய் நீங்கள் துரத்தியாகவேண்டும். மறுபடியும் பிறந்தபின்னரும் நீங்களாக இன்னொரு பாவத்தினாலோ பெருமையினாலோ அல்லது அறியாமையினாலோ சட்டபூர்வமாக இடங்கொடுத்தால் மட்டுமே அவைகள் உங்களுக்குள் தங்கியிருக்க முடியுமே தவிர வேறு எக்காரணத்தினிமித்தமும் உங்கள் சரீரத்திற்குள் அவைகள் இருக்கமுடியாது.

உங்களில் "மீந்திருக்கும் எல்லாஅழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும்" தான் சகோதரி ஈட்டோ (Eto)"மீந்திருக்கும் பிசாசின் உரிமைச்சொத்து" என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். ஆகவேதான், ஒரு நல்லகிறிஸ்தவ வாழ்க்கை உத்தமமாய் வாழவிரும்புகிறவனும் தேவனோடு ஒரு நல்ல ஐக்கியத்தை அனுபவித்து மகிழ விரும்புகிறவனும் மூன்று முக்கிய காரியங்களை செய்ய வேண்டும்.

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." (1தெசலோ 5:23)

முதற்படி : **ஆவி**

ஒருவன் தன்னை இயேசுவிடம் அர்ப்பணிக்கும்போது அவனது ஆவி மறுபடியும் பிறக்கிறது. (ஆவியில்) அவன் ஒரு புதிய மனிதனாகமாறி தேவனின் சுபாவமும் இயல்பும் ஜீவனும் அடங்கியுள்ள நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறான்.'இயேசுவே என் பாவங்களை மன்னித்து என்னை சுத்தமாக்கும்' என்று வேண்டிக்கொண்டதால் இவன் ஒரு பரலோக குடிமகனாக மாறி விட்டான்.

கிறிஸ்தவர்களில் அநேகர் ஆவிக்குரிய வளர்ச்சியில் இந்த அளவோடு (முதல்படியிலேயே) நிறுத்திக் கொள்கின்றனர், அதனால் ஏற்படும் விளைவோ பெரும்பாலோருடைய வாழ்வில் பயங்கரமானதாக இருக்கிறது. *ஆவி மனிதன், இரட்சிப்பு என்னும் அளவுக்கு மேலாக வளரமுடியாதபோது ஆசீர்வாதங்களை*

*பெற்றுக்கொள்ள முடியாமலும் அவனுடைய ஜெபத்திற்கு குறிப்பான பதிலை பெற்றுக்கொள்ள முடியாமலும் இருக்கக்கூடும்.* பொதுவாக இவ்வகையான கிறிஸ்தவர்கள் மாம்சீக அளவுக்கு மேலாக வளர்ச்சி அடையாதவர்களாக இருக்கின்றனர். சிலவேளைகளில் இவர்கள் ஒரு அவிசுவாசி பேசுவதைப்போல கவனமில்லாமல் பேசுகிறார்கள். அவர்களை **மாம்சீக கிறிஸ்தவர்கள்** என்று குறிப்பிடலாம். அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையாதவர்களாக இருக்கின்றனர். அவர்களது நடவடிக்கைகளும் சுபாவமும் சிலவேளைகளில் கேள்விக்குரியதாகவும், சிலவேளைகளில் அவர்களது இரட்சிப்பே சந்தேகப்படத்தக்கதாகவும் இருக்கிறது.

எனினும்,அவனது ஆவியானது மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டிருப்பதால், அவனது ஆவியால் ஆவிக்குரிய மண்டலத்தை அவனால் தொடர்பு கொள்ள முடியும். தேவன் அவனது தகப்பனாக இருக்கிறார்.

இரண்டாம் படி : **ஆத்துமா**:

ஆத்துமாவானது ஒரு மனிதனின் உள்ளுக்குள் உள்ளான ஒரு ஆழமான பகுதியல்ல. ஆவி மறுபடியும் பிறப்பதுபோல ஆத்துமா மறுபடியும் பிறப்பதில்லை. நம் ஆத்தும-இரட்சிப்பானது ஒரு படிப்படியானமாற்றமாக இருக்கிறது. (மனமும்) அறிவும் உணர்வும் சித்தமும் உள்ளடங்கியதுதான் ஆத்துமா. ஆத்துமாவினால் அறிவுப்பூர்வமான மண்டலத்தோடு நாம் தொடர்புகொள்கிறோம்.

மனித ஆவி மறுபடியும் பிறக்கும்போது, ஆத்துமாவை தேவவார்த்தை என்னும் ஆகாரத்தால் உணவூட்ட வேண்டும். அப்போதுதான் ஆத்துமாவானது புதிப்பிக்கப்பட முடியும். அப்போதுதான் சிருஷ்டித்தநாளில் நாம் இருந்த அந்த புத்தம் புதிய ஆதிநிலையை அடைய முடியும்; இரட்சிக்கப்பட முடியும். ஆத்துமாவானது புதிப்பிக்கப்படும்போதுதான் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப,இசைந்து, இணைந்து நம்மால் பேசவும் சிந்திக்கவும் முடியும். அதனால் தான் அப்போஸ்தலர் பவுல் தேவஆவியின் ஏவுதலால் இப்படி எழுதியிருக்கிறார்.

> “நீங்கள் இந்த பிரம்பஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக,உங்கள்மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.”(ரோமர் 12:2)

நம் மனங்களை நாம் புதிதாக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறாரே தவிர நாம் இந்த உலகத்துக்கு ஒத்த வேஷந்தரிக்கட்டும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.
“அவர் என் ஆத்துமாவை தேற்றுகிறார்”(சங் 23:3) என்று சங்கீதக்காரன்பாடுகிறான். ஆங்கிலத்தில் இதே வசனமானது “அவர் என் ஆத்துமாவை ஆதிநிலைக்கு மாற்றுகிறார் அல்லது புதுப்பிக்கிறார்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.ஆகவே ஆத்துமாவானது புதிப்பிக்கப்படமுடியும் அல்லது ஆதிநிலையை அடையச்செய்ய முடியும் என்பதை மீண்டும் கண்டுகொள்கிறோம். அப்போஸ்தலர் யாக்கோபு, தலையில் ஆணி அடித்ததுபோல் நம்மை கடிந்து கொள்கிறார்.

> “ஆகையால் நீங்கள் எல்லாவித் அழுக்கையும் கொடிய துர்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிற வசனத்தைசாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.”(யாக்கோபு 1:21)

இந்த உலகத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல் நமது மனங்களை புதிதாக்கும்போது தேவவார்த்தையால் நமதுஆத்துமாவை இரட்சிக்கமுடியும் என்று பொருள்படுகிறது.
கென்னத் இ. ஹாகின் (1993),“நமது ஆத்துமாக்களை இரட்சிக்கிற தேவ வார்த்தையானது நமது மனங்களை புதிதாக்கி, நமது ஆத்துமாவை ஆதிநிலையை அடையவைக்கிறது.

தேவனுடைய வார்த்தைகளினால் நமது மனங்கள் புதிதாக்கப்படும்போது நாம் சிந்திப்பதுகூட தேவவார்த்தைக்கு ஒத்து சிந்திக்கிறோம். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் தேவனுடைய வார்த்தையே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆத்துமா இரட்சிக்கப்பட்டுவிட்டால் தேவனுடைய சித்தத்தை குறித்து அநேக கேள்விகள் நமக்கு இருக்காது.''

அநேக கிறிஸ்தவர்கள் இரண்டாவதுபடியோடு நின்றுவிடுவதால் மீண்டும் அபாயம் வருகிறது. இன்னும் அநேகர் மூன்றாவது ஒரு படி இருக்கிறது என்பதையே மறந்துவிடுவதால் இரண்டாம் படியிலேயே நின்றுவிடுகின்றனர்.

மூன்றாம் படி: **சரீரம்**

நம் சரீரத்தினால் மாம்சீக உலகத்தோடு தொடர்புகொள்கிறோம். மனித ஆவியானது உயிர்பிக்கப்படும் போது (ஒரு புத்தம் புதிய சிருஷ்டியாக மாறுகிறீர்கள்), ஆத்துமாவானது படிப்படியாக வேதவசனத்தால் புதிப்பிக்கப்படுகிறது அல்லது ஆதிநிலையை அடைகிறது,இந்நிலையில் சரீரமானது கழுவப்படவேண்டும் அல்லது பரிசுத்தப்பட வேண்டும். ஆகையால் தான் யாக்கோபு,''நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்குணத்தையும் ஒழித்துவிட்டு,''(யாக்1:21) என்று சொல்கிறார். 'மிஞ்சியுள்ள எல்லாவித அழுக்கையும் துர்குணத்தையும்' என்று வேதாகமம் சொல்கிறது. *விசுவாசத்தை முக்கியப்படுத்தி பேசும் சில பிரசங்கியார்களுக்கு இந்த விடுதலை ஊழியத்தைக்குறித்த தெளிவு இல்லாமலிருப்பதால்,சுருக்கமாக ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறேன்.*

உள்ளான மனிதன் என்று ஒருவன் இருக்கிறான். இந்த உள்ளான மனிதன் வெளிப்புறமான மனிதனிலிருந்து வேறுபட்டவனாக இருக்கிறான். இந்த உள்ளான மனிதன்தான் மறுபடி பிறந்தவனாகவும் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாகவும் பரிசுத்தஆவியின் வரங்களை செயல்படுத்துகிறவனாகவும் இருக்கிறான். ஆனால் நாம் காண்கின்ற வெளிமனிதன், அதாவது சகோதரர் ஜாண் அல்லது சகோதரி ரோஸ்லின், மறுபடியும் பிறக்கு முன்னர் சரீரத்தில் எப்படி இருந்தார்களோ அப்படியே இருக்கிறார்கள். அவர்களது உயரம், அவருடைய தோற்றம், நிறம் போன்றவை அப்படியே இருக்கிறது.<u>வெளிமனிதனானவன் (மாம்சமானது) உள் மனிதனால் (ஆவியினால்) ஆளுகை செய்யப்படவேண்டும்.</u>

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.'' (ரோமர் 12:1)

தேவ வார்த்தைக்கு ஏற்ப நமது விருப்பங்களை கீழ்படுத்த வேண்டும் என்பதையும் நமது வெளிமனிதனை நமது உள்மனிதன் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது ஒழுங்குப்படுத்த வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

அமெரிக்காவிலோ பிற நாட்டிலோ உள்ள சகோதரர்களுக்கு இவ்விளக்கம் போதுமானது. ஆனால் ஆப்பிரிக்கர்களாகிய நாம் அந்த விளக்கத்தோடு நிறுத்திக்கொள்ள கூடாது. ஆப்பிரிக்கராகிய எங்களில் சிலர் பிறந்த முதல் நாளிலேயே குறி சொல்லுகிற வீட்டில் பிறந்திருக்கக் கூடும்; அல்லது பிறந்த நாளிலேயே பிசாசுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கக் கூடும். நம் வாழ்க்கையில் பிசாசானவன் உரிமைபாராட்டக் காரணமாக இருக்கிற ஒவ்வொரு காரியங்களையும் விட்டுவிட்டு அதனால் ஏற்பட்ட ஒவ்வொரு அசுத்தத்தையும் இயேசுவின் இரத்தத்தினால் சுத்தப்படுத்தவேண்டும் இல்லாவிட்டால் அந்நிலையிலிருப்போர் எவ்வளவுதான் ஆக்கப்பூர்வமான விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்தாலும் விசுவாசத்தில் செயல்பட்டாலும் பிசாசுகளை கட்டிப்போட்டாலும் சத்தமிட்டுக்கத்தி ஓட்டினாலும் அவைகள் முழுமையான நல்ல விளைவை ஏற்படுத்தாது.

1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆலோசனையும் விடுதலை ஊழியமும் தேவைப்படுகிற ஒரு பெண்ணை அழைத்து வந்திருந்தார்கள். எதற்காக நாங்கள் ஜெபிக்கவேண்டும் என்று அவளிடம் கேட்டோம். அவளுடைய கதையை எங்களிடம் விவரிக்கும்போதே அழுகின்ற நிலைக்கு வந்துவிட்டாள். ஒரு முதியபெண்ணோடு தண்ணீருக்கடியில் நிற்பதாகவும் அவள் இவளை தன்னுடைய மகள் என்று உரிமைபாராட்டுவதாகவும் கனவு கண்டதாக, விழித்தபின்னர் அவளுடைய தாயாரிடம் இக்கனவை சொன்னாளாம். அவளுடைய தாயாரும் அது உண்மை என்றும் அவளை தண்ணீரிலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் தண்ணீரிலுள்ள அசுத்த ஆவிகளுக்கு அவள் அற்பணிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்களாம்.

தண்ணீரோடு சம்பந்தப்பட்ட அந்த அசுத்தஆவிகள் அவளது திருமணவாழ்க்கையை சீரழித்துவிட்டது என்றும் தனிமையில் மூன்று பிள்ளைகளை கவனிக்க வேண்டியதாயிற்று என்றும் தெரிவித்தாள். அவளது பதினோருவயது மகன் பலதடவை அவளோடு பாலுறவுகொள்ள முயன்றதாகவும் சொன்னாள். அவள் மறுபடியும் பிறந்தவள்தான்; பரிசுத்த ஆவியில் நிறைந்தவள் தான்; எனினும் கனவில் இத்தண்ணீர பிசாசுகள் வந்து அவளோடு பாலுறவு கொள்ளும் என்றும் மகனைக்கூட அவைகள் ஆட்கொண்டு உபத்திரவப்படுத்தும் அளவுக்கு நிலைமை சீர்கேடாயிற்று என்றும் தெரிவித்தாள்.

அவள் ஜெபித்துப்பார்த்தாள்; உபவாசித்துப்பார்த்தாள், அந்நியபாஷையில் பேசிப்பார்த்தாள். ஆனால் அவைகளெல்லாம் தோல்வியாய் போயின.*இத்தகைய நெருக்கத்திலிருக்கும் ஒரு நபரைப்பார்த்து,'' இன்னும் விசுவாசி அப்போது எல்லாம் சரியாகிவிடும்'' என்று சொல்வதுஅவளை தற்கொலைக்கு வழிநடத்துவதாக முடியும்.* அவள் முற்றிலும் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்படவேண்டியது இன்றியமையாததாகும். அதைத்தான் 'விடுதலை அடைதல்' என்று நாங்கள் கூறுகிறோம். வெளிமனிதன்,விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை சாப்பிட்டதையும் மந்திரவாதிகளாலும் அசுத்த ஆவிகளை தொடர்பு கொள்கிறவர்களாலும் சரீரத்தில் மூடநம்பிக்கையால் போடப்பட்ட வெட்டுக்காய தழும்புகளாலும் பச்சைக்குத்திய அடையாளங்களாலும் ஏற்பட்ட எல்லா கறைகளும் கழுவப்படவேண்டும். வேதாகமத்தில் தேவன் கட்டளையிட்டுள்ள விதிமுறைகளை,கொள்கைகளை அலட்சியப்படுத்தி கைக்கொள்ள மறுக்கும்போதும் அது தேவபிள்ளைகள் மீது பிசாசினால் சொல்ல முடியாத வேதனை ஏற்படுத்த வழிவகுக்கும்.''ஆகையால் எல்லாவித அழுக்கையும் துர்குணத்தையும் ஒழித்துவிடுங்கள்.''

'ஒழித்துவிடும்' காரியத்தை செய்யும் தகுதி மறுபடியும் பிறந்தபின்னர் தான் வருகிறது. 'யுத்தத்திற்கு ஆயத்தப்படு' (Prepare for War) என்ற புத்தகத்தில் ரெபேக்காள் பிரௌன் (1992) இவ்வாறு கூறியுள்ளார்.

> ''ஏற்கெனவே கிறிஸ்தவராக மாறாத எவரிடமிருந்தும் எந்த ஒரு பிசாசையும் துரத்தும்படி கர்த்தர் எனக்கு ஒருபோதும் கட்டளையிடவில்லை. ஏனென்றால் அப்படிசெய்வதால் நான் அவர்களுக்கு நன்மை செய்யவில்லை. ஏனென்றால் அப்படி செய்தால் வெளியே போன அசுத்தஆவிகள் இன்னும் பயங்கரமான அதிக அசுத்த ஆவிகளோடு திரும்பிவந்தால் அந்த மனிதனது முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமை மிக மோசமாய் இருக்கும். அப்படி ஏதாவது கிறிஸ்தவரல்லாதவரிடமிருந்து அசுத்தஆவிகள் வெளியேறும்படி கட்டளையிட்டிருந்தால் அது சின்ன பிள்ளைகளாகத்தான் இருக்கும். கர்த்தருடைய பார்வையில் அவர்கள் இன்னும் பொறுப்புள்ள வயதை அடையாததால் இவர்கள் விதிவிலக்கானவர்களாக இருக்கின்றனர்.''

ஒருவேளை ஒரு அவசரமான சூழ்நிலைகளில் அவிசுவாசியிடமிருந்து பிசாசுகளை துரத்தும்படி இயேசு உங்களிடம் சொல்லக்கூடும். அப்படிப்பட்ட சூழலில் பொருத்தமான, ஏற்றவேளையில் அவர்களது ஆவிக்குரிய நிலையையும் வளர்ச்சியையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். உதாரணமாக மாற்கு 5ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட கதரேயன் நாட்டிலுள்ள ஒரு பைத்தியம் பிடித்தமனிதன், அவிசுவாசியாக இருந்தபோதும்

அவனிடமிருந்து ஆயிரக்கணக்கான பிசாசுகளை இயேசு துரத்தினார். இறுதியில் அந்த மனிதன் இயேசுவின் பின்னால் செல்ல விரும்பினான்,கடைசியாக அவன் மறுபடியும் பிறந்தான்.

> "அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக்கொண்டான்." (மாற்கு 5:17)

மக்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தி அவர்களை காலந்தவறாமல் கண்காணிக்க முடியாமலிருந்தால் அப்படிப்பட்டவர்களிடமிருந்து பிசாசுகளை துரத்துவது அபாயமானது. உண்மையாகவே அவர்கள் மறுபடியும் பிறந்து கர்த்தருக்குள் உறுதியாய் நிற்பவர்களாக இருந்தால்தான் விடுதலை ஜெபத்தினால் முழுமையாய் பலனடைய முடியும்.

இக்கொள்கையினால் (விதிமுறையினால்) எங்கள் ஊழியத்தை நாடி வந்த அநேகருக்கு விடுதலை ஊழியம் செய்யாமலே அவர்களை வீட்டிற்குத் திருப்பி அனுப்பி வைத்திருக்கிறோம். பேயிலிருந்தும் நோயிலிருந்தும் மலட்டுத்தன்மையிலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலைபெற விரும்புவோர் அநேகராக இருக்கின்றனர் ஆனால் அவர்கள் பாவத்தைவிட்டு விட்டு முழுமையாய் இயேசு கிறிஸ்துவை அண்டிக்கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை.

வற்புறுத்துவதாலோ மன உருக்கத்தினாலோ அல்லது ஐயோ பாவம் என்று இரக்கப்பட்டோ அப்படிப்பட்டவர்களுக்கு விடுதலை ஊழியம் செய்தால் அவர்கள் நிலையான முன்னைவிடவும் சீர்கேடடைந்துவிடும். *(ஒரு காண்டிராக்டர் விபத்தில் தலையில் அடிபட்டு இறந்தார். ஆபத்து வரும் முன் 6மாதங்களுக்கு முன்னதாக எச்சரித்தும்,கர்த்தர் இயேசுவை மனதார ஏற்றுக்கொண்டு முழுகிஞானஸ்நானம் எடுத்து முன்னோர் வழியாக வருகிற சாபத்திலிருந்து சீக்கிரமாய் விடுதலை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியும் கேளாமல் போகாத இடத்துக்கு போய்விட்டார். –தாயாரும் தலையில் அடிபட்டு இறந்தார்கள். தந்தையும் அப்படியே. தாத்தா ஒருவரை கோபத்தில் தலையை வெட்டி பிளந்துவிட்டார். நாகர்கோவில்)*

> "அசுத்த ஆவி ஒரு மனுஷனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டிற்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்." (மத்தேயு 12:43-45)

1993ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு ஆணும் பெண்ணும் என்னிடம் ஆலோசனை கேட்கவும் விடுதலை ஊழியத்தின் மூலம் பலனடையும் வந்திருந்தனர்.தேவன்-இதை-செய்வார்-ஊழியங்களைக் குறித்து நிறைய காரியங்கள் கேள்விபட்டிருப்பதாகவும் ஆகவே கற்பத்தின் கனி கிடைக்கும்படி ஜெபிக்க வந்ததாகவும் சொன்னார்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள்தானா என்று விசாரித்தேன். ஆம் என்று சொன்னதோடு அவர்கள் செல்லும் சபையின் பெயரைக்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். "இவள்தான் என் மனைவி, தேவன் எங்களுக்கு கற்பத்தின் கனியைத் தருவார் என்று விசுவாசிக்கிறோம்" என்று அந்த மனிதன் சொன்னான். வானத்துக்கும் பூமிக்கும் தேவனானவர் மற்ற தம்பதிகளுக்கு செய்யும் அற்புதத்தை உங்கள் மனைவிக்கும் செய்வார் என்று உடனே அவர்களுக்கு உறுதிகூறினேன்.

"நாம் ஜெபிக்கலாம்" என்று நான் சொன்னபோது பரிசுத்த ஆவியானவர்,"இவர்களோடு சேர்ந்து ஜெபிக்காதே" என்று சொல்லி என்னைக் கடிந்து கொண்டார்.பிள்ளை பாக்கியத்தை நாடும் ஒரு தம்பதியினருக்காக ஜெபிக்கவேண்டாம்

என்று தேவன் அனுமதிக்க மறுக்கிறாரா,எனக்கு விநோதமாக இருந்தது. ஏற்கெனவே நான்,''நாம் ஜெபிக்கலாம்'' என்று சொல்லிவிட்டு ஜெபிக்காமலிருந்தது எனக்கு தர்மசங்கடமான நிலைக்குள்ளாக்கிற்று. மிகச் சிறிய ஜெபமாவது பண்ணியாக வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் பரிசுத்தஆவியானவர் மீண்டும் என்னைக் கடிந்துகொண்டார்; அதிலும் இம்முறை மிகக்கடுமையாக கடிந்துகொண்டார்.''இவர்களோடு ஜெபிக்காதே என்று நான் உனக்கு சொல்லவில்லையா?'' என்ன காரணம் என்று ஆண்டவரிடம் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும் போலிருந்ததால் ''ஏன்'' என்று கேட்டேன்.''அவர்கள் திருமணமானவர்களா?'' என்று என்னிடம் கேட்டார். நான் அவர்களிடம்,''நீங்கள் எப்பொழுது திருமணம் செய்துகொண்டீர்கள்?'' என்று கேட்டேன். உடனே அப்பெண் தலைகுனிந்தாள்.''அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் நாங்கள் திருமணஞ்செய்து கொள்வோம்.'' என்று அவள் சொன்னாள். மறுபடியும் பிறந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு சபைக்கு ஒழுங்காக செல்கிறவர்கள் இன்னும் பாவத்திற்குள் வாழ்ந்துகொண்டிருப்பது வேதனையாக இருக்கிறது.

> ''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும்விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.'' (எபிரேயர் 13:4)

இந்த வசனத்தை அவர்களுக்கு படித்துக்காட்டிவிட்டு அவர்களை கர்த்தரிடம் வழி நடத்தினேன். அவர்கள் பரலோகத்திற்குப்போக விரும்பினால் வாழ்க்கையின் பாவம் நிறைந்த வழியை விட்டுவிடவேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்தேன். அந்நாளிலிருந்து அவர்கள் என் கண்ணில் படவில்லை. திருமணமே ஆகாத அவர்களிடமிருந்து ஒரு மலட்டுஆவியை துரத்தாதபடி பரிசுத்த ஆவியானவர் என்னைத் தடுத்தாரே ஸ்தோத்திரம். இப்பகுதியை படித்தபிறகு ஒரு வேளை நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு உங்கள் இதயத்தை கொடுக்க விரும்பக் கூடும். உங்கள் தலையைத் தாழ்த்தி உங்கள் இருதயத்திற்குள்ளும் உங்கள் சித்தத்திற்குள்ளும் அவரை அழைத்திடுங்கள். அப்போதுதான் நிரந்தரமான விடுதலை அனுபவத்தைப்பெற தகுதி அடைந்தவர்களாக இருப்பீர்கள்.

> ''பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.'' (யோவான் 9:31)

---

இரண்டு

---

# கனவு வாழ்க்கை

கனவுகளைப் புரிந்துகொள்வதில் அநேகருக்கு பிரச்சினைகள் இருக்கின்றது. அநேகர் தங்களது சொப்பனங்களையெல்லாம் இன்னொரு சுவிசேஷமாக மாற்றிவிடுவதோடு எப்போதெல்லாம் கனவு காண்கிறார்களோ அப்போதெல்லாம் தேவன் சரியான சத்தியத்தைத்தான் பேசியிருக்கிறார் என்று நம்புகிறார்கள்.சிலருக்கு வரும் பயங்கரமான இரவுகனவுகள் பொதுவாக பிசாசினால்உண்டானதாகவும்அவைகள் சாதகமானதோ (அனுகூலமானதோ) அல்லது பாதகமானதோ (எதிர்மறையானதாகவோ) இருக்கின்றன என்றும் அவைகள் அப்படியே நிச்சயமாக வந்து பலிக்கின்றன என்றும் எவ்வளவு ஜெபித்தாலும் உபவாசித்தாலும் அதை மாற்ற முடியாது என்றும் சொல்கின்றனர்.

மேற்சொன்ன கனவுகளில் எது உங்களுக்குப் பொருந்துகிறதாக இருந்தாலும் இவ்வகையான அனைத்து பிரச்சினைகளுக்கும் சூழ்நிலைகளுக்கு பதில்கள் தேவ வார்த்தையில் தான் உண்டு. இந்த அத்தியாயத்தில் கனவுகளைப்பற்றியும் அவைகள் எங்கே தோன்றுகின்றன என்பதுபற்றியும் விவரிக்கின்றோம்.

எண்ணங்கள், உறங்கும்போது படங்களாகவும் வெளிப்பாடுகளாகவும் (தரிசனங்களாகவும்) வருவதுதான் கனவுகளாகும். இவைகள் மூன்று முக்கியமான இடங்களிலிருந்து வருகின்றன: மனிதன், பிசாசு, தேவன்

## மனிதனிடமிருந்து வரும் கனவுகள்

> “அது பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டும் விழிக்கும்போது அவன் வெறுமையாயிருக்கிறது போலவும் தாகமாயிருக்கிறவன், தான் குடிக்கிறதாகச் சொப்பனம் கண்டும் விழிக்கும்போது அவன் விடாய்த்து தவனத்தோடிருக்கிறது போலவும் சீயோன் மலைக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிற திரளான சகலஜாதிகளும் இருக்கும்.” (ஏசாயா 29:8)

சில கனவுகள் பலிப்பது இல்லை என்று தேவவார்த்தை நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஒரு பசியுள்ள மனிதன் கனவில் திருப்தியாக சாப்பிட்டதுபோல கனவுகண்டும், விழித்தபோது அதற்கான எந்த அடையாளங்களும் காணாமலிருக்கிறான். அதுபோல ஒரு தாகமுள்ள மனிதன் திருப்தியாக தண்ணீர் குடித்ததுபோல கனவுகண்டும் விழித்தபோது முன்னைப்போலவே அவன் தாகமிக்கவனாக இருக்கிறான்.

அநேகர் தங்கள் வாழ்வில் மகத்தான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று ஒருமுறையோ அல்லது பலமுறையோ உபவாசித்து ஜெபித்திருக்கிறார்கள். அவர்களது விருப்பம் கைகூடியதுபோல கனவு கண்டும் உண்மையான வாழ்க்கையில் அதற்கு எதிமறையான அனுபவங்களே நிகழ்ந்திருக்கின்றன. அவர்களது வாழ்நாளெல்லாம் இத்தகைய விநோத அனுபவங்களே தொடருவதால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல் குழப்பத்திலிருக்கின்றனர்.

ஏன் இப்படி நடக்கின்றன என்று நீங்கள் கேட்கக்கூடும்?இப்படி கனவு காண்பதற்கு இவர்களே காரணமாக இருக்கின்றனர். வேதாகமம் நமக்குச் சொல்கிறது:

> “மேலும், உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம் போக்கவொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.” (எரேமியா 29:8)

“சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனத்திற்கு செவிகொடாமலிருங்கள்.” என்று வேதாகமம் கூறுகிறது. சொப்பனக்காரர்களால் சொப்பனத்தை உண்டு பண்ணமுடியுமா? ஆம், பகல் முழுவதும் சொப்பனக்காரர்கள் எண்ணுகின்ற எண்ணத்தாலும் அல்லது என்ன விரும்புகிறார்களோ அல்லது எதைக்குறித்து சஞ்சலப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்களோ அதன் விளைவாக அநேககனவுகள் வருகின்றன. சொப்பனக்காரர்கள் அல்லாதவர்களும்கூட சொப்பனக்காரர்களைப்போல அதே போன்ற ஒரு வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

> “இஸ்ரவேலின் தேவனாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் மத்தியிலிருக்கும் தீர்க்கதரிசிகளோ குறிகாரரோ உங்களை வஞ்சிக்கவிடாதிருங்கள். அவர்கள் கனவுகாணும்படி நீங்கள்

ஊக்கப்படுத்துகின்ற கனவுகளுக்கு செவிகொடாமலிருங்கள். என் நாமத்தினாலே பொய்களை உங்களிடம் தீர்க்கதரிசனமாக சொல்கிறார்கள். நான் அவர்களை அனுப்பவில்லை என்று கர்த்தர் சொல்கிறார்.'' (எரேமியா 29:9)

சிலர் அவர்களது நண்பர்களையும் மேய்ப்பர்களையும் உறவினர்களையும் கனவுகாணும்படி தூண்டுகின்றனர்- உற்சாகப்படுத்துகின்றனர். இப்படித்தான்துவங்குகின்றது.

*ஒரு சகோதரி இன்னொரு சகோதரியிடம் சொன்னாள்:*
''சகோதரர்.ஜே, தான் என் வாழ்க்கை துணைவர் என்ற வெளிப்பாட்டை பெற்றுவிட்டேன். நான் அவரைத்தான் காதலிக்கிறேன். இதைப்பற்றி நான் ஜெபித்து கொண்டிருக்கிறேன். இக்காரியத்தில் தேவன் துணையாயிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன், எனினும் இதை உறுதிபடுத்துவதற்கு நீங்கள் உதவவேண்டும் என்று விரும்புகிறேன் என்று சொன்னாள். காதுகொடுத்து கேட்டவளும் வெளிப்பாட்டை உறுதிபடுத்த வேண்டியவளுமான அச்சகோதரி வீட்டிற்கு போனதும் ஜெபிப்பதற்குப் பதில் திருப்தியாக சாப்பிட்டுவிட்டு, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத ஜெபத்தை முணுமுணுத்துவிட்டு அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறாள். சொன்னவள் சொன்ன வெளிப்பாட்டிற்கு ஒத்துப்போகிற வெளிப்பாட்டையே இவளும் பெற்றுக்கொள்கிறாள். இப்படி இருவர் கண்டவுடனே இது தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடாக ஏற்றுக்கொள்கின்றனர். இப்படிப்பட்ட விதத்தில் இவர்கள் கனவுகண்டு வெளிப்பாட்டை பெற்றுக்கொண்டதால் இந்த வெளிப்பாடுகள் வாழ்வில் உண்மையாய் நிறைவேறுவது மிக அபூர்வம்.

கர்த்தரின் நாமத்தினால் அவர்கள் உங்களுக்கு பொய்களை தீர்க்கதரிசனமாக உரைக்கின்றனர் என்று ஏரேமியா 29:9இல் வேதாகமம் கூறுகிறது.

1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆலோசனை பெறவந்த ஒரு சகோதரன் அவனது கதையைச் சொல்லி முடித்ததும் நான் மிகநெகிழ்ந்துவிட்டேன். உங்களோடு அதைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அப்போதுதான் பிறருடைய தவறுகளிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளலாம்.

அவன் திருமணம் செய்ய வேண்டிய ஒரு பெண்ணைப்பற்றிய 'வெளிப்பாட்டை' பெற்றான். ஆனால் அந்த பெண்ணோ ஏற்கெனவெ இன்னொருவருக்கு என்று திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்ட பெண். இந்த சகோதரன் உள்ளத்தில் முழுநிச்சயமிருந்ததால், திருமணஏற்பாட்டில் தீவிரமாக இருந்த பெண்ணிடம் சென்று அவனது விருப்பத்தையும் வெளிப்பாட்டையும் சொன்னான். இந்த பயங்கரமான ஜெபவீரன் சொன்ன 'வெளிப்பாட்டை' கேட்டதும் அந்த சகோதரி சொன்னபதில்: ''இந்த திருமணம் நடக்காமல் முறிந்துபோனால் உன்னை நான் திருமணம் செய்துகொள்வேன். 'தேவனுடைய வீட்டில் அறுவெறுப்பு'. சீக்கிரத்தில் அந்த நிச்சயதாம்பூலம் உடைந்துபோயிற்று. அவளது திருமணம் நடக்கக்கூடாது என்று அவன் ஜெபித்திருக்க வேண்டும். ஆகவே அப்படி நேர்ந்தது. அவனது கருத்துப்படி கர்த்தர் குறுக்கிட்டு இதைச்செய்தார் என்று அந்த 'ஜெபவீரனுக்கு' மகிழ்ச்சி.

ஆனால் இறுதியில் அந்த பெண் இன்னொருவனை திருமணம் செய்துகொண்டாள். அவனை தேவன் ஏமாற்றிவிட்டார் என்று எண்ணிக்கொண்டு கவலைப்பட்டான். ஜெபமலைக்கு சென்று நீண்டகாலம் உபவாசிக்க முடிவெடுத்தான். தேவனிடம் கதறினான். மீண்டும் அதேபோன்ற வெளிப்பாட்டை பெற்றான். ஏற்கெனவே திருமணமாகிய (ஒருவேளை கற்பமுற்றிருக்கக்கூடும்) ஒரு பெண்ணை திருமணஞ் செய்யும் வெளிப்பாடு!? இப்படிப்பட்ட வெளிப்பாடு பிசாசிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

அந்த ஜெபமலையில் வேறு பலஊழியக்காரர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரை நாடி ஜெபிக்கச் சொல்லியிருக்கிறான். அந்த ஊழியர் 5பெயர்கள் கொண்ட பட்டியலை இவனிடம் கொடுத்திருக்கிறார். இதில் இரண்டாவது வரிசையில் வரும் சகோதரியின் பெயர்தான் அவர் ஜெபித்தபோது உறுதிப்படுத்தப்பட்ட 'வெளிப்பாடு' என்று சொன்னார். மீண்டும் இன்னொரு ஊழியரிடம் சென்று ஆலோசனை கேட்டபோது அவரும் 'அதே

வெளிப்பாட்டை’ உறுதிபடுத்தினாராம். அந்த ஊழியர் சொன்னாராம்: ஒரு நீலநிற பென்னை கையில் வைத்துக்கொண்டு அந்த பெயர் பட்டியலில் இருந்த இரண்டாம் எண்ணையே இயேசு நோக்கிக்கொண்டிருந்ததாகக் கண்டாராம். அந்த ஊழியர் சொன்ன பெண்மணி ஏற்கெனவே திருமணமானவர் என்று இவன் அந்தஊழியரிடம் சொல்லியிருக்கிறான்.

ஆனால் அந்த ஊழியர் உண்மையை ஒத்துக்கொள்ளாமல்,அவர் கண்ட ‘வெளிப்பாடுகள்’ எல்லாம் பொதுவாக அப்படியே நிறைவேறும் என்றும் ஆகவே தேவன் சீக்கிரமாய் அது குறித்து ஏதோ செய்யப்போகிறார் என்றும் சொன்னாராம். அதன் பிறகுதான் என்னிடம் வந்து இதை எல்லாம் பகிர்ந்துகொண்டார். யாரை திருமணம் செய்வது என்று கனவையோ, வெளிப்பாட்டையோ, தீர்க்கதரிசத்தை பெற்றுக்கொள்வதற்கு தவறான இடத்திற்கு வந்திருக்கிறார் என்று உடனே சொல்லிவிட்டேன். இந்த மாதிரி நபர்களுக்கு பொதுவாக அவர்களோடிருந்து, தேவன் அவர்களது கண்களைத் திறந்து நேரான பாதையில் நடத்தும்படி வேண்டிக்கொள்வேன். யாரைத்திருமணம் செய்யவேண்டும் என்று நான் ஒருபோதும் தெரிந்தெடுத்துக் கொடுப்பதில்லை.“மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்;...”(நீதி18:22) என்று வேதாகமம் கூறுகிறது. மேலும் அவர்களிடமிருந்து அவர்கள் தயை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நான் ஜெபிப்பேன்.

அந்த சகோதரனை நான் கடிந்து கொண்டேன். ஆனால் சகோதரர்களுக்கு திருமணமான பெண்களை திருமணம் செய்ய ஆலோசனை கூறுமளவுக்கு ‘வெளிப்பாட்டை’ பெற்றுக்கொள்ளும் சொப்பனக்காரர்களையும்,பெயரளவுக்கு ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களையும் குறித்து நான் கவலைப்படுகின்றேன். தேவன் அவர்களை மன்னிப்பாராக!.

இதே போன்ற இன்னொரு கதை. சர்வதேச கூட்டமொன்றில் பேசும்படி ஒரு தேவ ஊழியர் அழைக்கப்பட்டிருந்தார். முதல்நாள் இரவில் அநேகர் அவர்களது வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தனர், ஒழுக்கக் கேடான அசுத்த ஆவிகளின் வல்லமைகள் கட்டப்பட்டுதுரத்தப்பட்டன. ஒழுக்கக் கேடான பழக்க வழக்கங்களிலிருந்து அநேகர் பரிசுத்தமாக்கப்பட்டார்கள். அந்த கூட்டத்திற்கு வந்த ஒரு பெண்ணிடம் கனவில் அவளுடைய பாஸ்டர் வந்து புதிதாக ஊழியம் செய்யவந்திருக்கும் ஊழியரோடுபோய் படுத்துக்கொள் என்று சொன்னாராம்.

முதலில் அதற்கு மறுத்ததாகவும், பின்னர் அவளுடைய பாஸ்டருக்கு கீழ்படிய விரும்பியதால் இணங்கியதாகவும் சொன்னாள். அந்த தேவமனிதன் அவளை கனவில் முத்தமிடும்போது திடீரென அவரது முகம் தாடிவளர்த்த ஒரு அவலட்சணமான மனிதனாக மாறியதைக் கண்டாளாம். கனவில் கண்டது அந்த தேவஊழியர்தானா (ஏற்கெனவே திருமணமானவர்) என்று அறிய விரும்பினாள்.

ஆலோசனையளிக்கும் நேரத்தில்தான் அவள் ஏற்கெனவே பல்வேறு காலகட்டத்தில் மூன்றுபேரை திருமணம் செய்துகொண்டதாகவும் அவர்களிடமிருந்து மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்ததாகவும் சொன்னாள். இந்த கூட்டம் நடக்கும் போது நாலாவது கணவருக்காக தேவனை விசுவாசித்துக் கொண்டிருந்தாள்! உறங்கச் செல்லும் முன் அந்த தேவ ஊழியக்காரரைக் குறித்து இச்சையாக சிந்தித்தவளாய் படுக்கச்சென்றிருக்க வேண்டும். அதுதான் அந்த ஒழுங்கங்கெட்ட கனவுக்கான காரணமாக இருந்திருக்கக்கூடும். அவளுக்கு விடுதலை ஊழியத்தை செய்தபோது அவளை வேதனைப்படுத்திக் கொண்டிருந்த பிசாசுகள் அநேகமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு துரத்தப்பட்டது.<u>இந்நாளில் பிரபலமான செழிப்பின் செய்தியைவிட விடுதலை குறித்தும் பரிசுத்தத்தை குறித்துதான் அநேக கிறிஸ்தவர்களுக்கு போதிக்க வேண்டும்.</u>

> “தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறதுபோல, வார்த்தை களின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும்.”(பிரசங்கி 5:3)

> “அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பது போல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு.” (பிரசங்கி 5:7)

நீங்கள் உறங்கும் முன்னதாக நீங்கள் சிந்திக்கும் எண்ணங்கள், செயல்கள், விவாதங்கள் போன்ற பல்வேறு வேலைகள் உங்களிடம் ஆதிக்கம் செலுத்தி அவைகளின் மூலம் கனவுகள் வருகிறது என்று வேதாகமம் கூறுகிறது. அபாசமான படங்களையும் திரைப்படங்களையும் நிகழ்ச்சிகளையும் பார்க்கிறவர்கள் அல்லது ஒழுங்கீனமானவைகளையும் அபாசமானவைகளையும் எப்போதும் சிந்திக்கின்றவர்களுக்கும் உறங்கும்போது இப்படிப்பட்ட கனவுவரும். இதேபோல பசியோடு படுக்கைக்கு செல்பவர்கள் ஆகாரத்தைக் குறித்து எளிதாக கனவு காண்பார்கள். ஆவிக்குரிய பொதுகூட்டத்திற்காக கருத்தோடு ஜெபித்து உபவாசிக்கின்ற சிலர் திரளான மக்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று ஆதாயப்படுத்தப்படுவதுபோல காணக்கூடும் - இது ஆக்கப்பூர்வமான ரீதியில் வரும் கனவு.

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கான பரிகாரத்தை கனவு மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்று படுக்கைக்கு போகும் முன்னர் சிலர் தேவனிடம் வேண்டிக்கொள்வார்கள். 1994 ஆம் ஆண்டு என் வாழ்க்கையில் நடந்தது. 1994ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் இரவில் நைஜீரியாவிலுள்ள இபதானிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் என் மனைவியோடு பேச முடியாததால் மிகவும் தவிப்புடனிருந்தேன். நான் பகலில் அழைத்தபோது அவள் வெளியே சென்றுவிட்டாள் என்று எனக்கு பதில் கொடுத்தனர். என்ன நடக்கிறது என்று நான் அறியாமலிருக்கட்டும் என்பது அவளது திட்டமாக இருக்கும் என்று நினைத்து மிகக்கவலைப்பட்டேன். இந்த வேளையில் நிலைமை இன்னும் மோசமாக்குவதற்காக பிசாசு அநேக தீய ஆலோசனைகளையும் காரணங்களையும் என்னிடம் சொன்னான். மூன்றாவது குழந்தையை கருவில் சுமந்தவளாக இருந்தாள். பின்னர் ஏற்பட்ட சில சிக்கலால் குழந்தை பிறக்கும் வரை மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை அளித்திருந்தார்கள்.

நான் அவளுக்காக ஜெபித்தேன். இரகசியமாக அவளைக்குறித்து தேவன் எனக்கு கனவு மூலமாக வெளிப்படுத்தவேண்டும் என்று இரகசியமாக எனக்குள்ளே விரும்பினேன். ஆனால் அவளை கவனித்துக்கொள்வதிலும் பூரணமாக அவளைக் காத்துக்கொள்வதில் கர்த்தருக்கு ஆற்றல் உண்டென்பதை சந்தேகப்பட்டதற்காக பரிசுத்த ஆவியானவர் என்னை கடிந்துகொண்டார். பயத்தினாலும் கவலையினாலும் தவிப்பினாலும் விசுவாச பாதையை விட்டு விலக துணிந்துவிட்டேன் என்பதை நான் அப்போது உணரவில்லை. நான் மனந்திரும்பி எனது பாவங்களை அறிக்கையிட்டேன். அந்த இரவில் என் மனைவியைக் குறித்த எந்த கனவும் காணவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய தேற்றுகிற வார்த்தைகள் என் இதயத்திற்குள் சென்று மிகுந்த ஆறுதலை அளித்தது.

மறுநாள் காலையில் மனைவியுடன் தொலைபேசியில் பேசினேன். அவளும் குழந்தையும் நன்றாக இருப்பதாக என்னிடம் சொன்னாள். அதற்கு முந்தின நாள் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட வேளையில். மருத்துவ மனையில் தங்க தேவையான பொருட்களை வீட்டிலிருந்து எடுத்துவர அனுமதிபெற்று சென்றதாக சொன்னாள். உண்மை இப்படியிருக்க அவ்வேளையில் பிசாசு என் மனதில் போட நினைத்த கற்பனைகள் எத்தனை! அநேக கிறிஸ்தவர்கள் இதுபோன்ற கற்பனைகளால் வேதனைப்படும்படி மாய அனுபவங்களின் ஊடாக சென்றுகொண்டிருக்கிறார்கள். நமது பிரச்சினைகளைத்தீர்க்கவும் நமது பயங்களையும் கவலைகளையும் போக்கவும் நம்மோடு பேசுவதற்கு தேவ வார்த்தை இருக்கிறது! ஆனால் பிசாசு நம்மைத் தாக்கும் சில தருணங்களில் வேதத்தில் சொல்லப்பட்டவைகள் நமக்குரியதென்று விசுவாசித்து உரிமைபாராட்டி பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக நம் கண்களை திடீரென வசனங்களை விட்டு விலக்கி ஒரு அடையாளத்திற்காகவும் ஒரு கனவுக்காகவும் வேண்டிக்கொண்டிருக்கிறோம்.

> “அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவெ உங்களுக்குச் சொல்கிறேன் என்று சொல்லி, (மாற்கு 8:21)

எல்லா அசுத்தங்களையும் நம்மை விட்டுவிலக்கி நம்மை நாமே சுத்திசெய்துகொள்வோம். நமது கேள்விகளும் சந்தேகங்களுக்கும் பொருத்தமான பதிலாக அமைந்துள்ள வேதவசனங்களைத் தேடிகண்டுபிடித்து அவைகளை ஜெபத்தின் மூலம் கர்த்தர் சமூகம் கொண்டு சென்று அவைகளை நமக்குச் சொந்தமாக்கி உரிமைபாராட்டி நம் நிஜவாழ்வில் அற்புதங்களை பெறும்வரை தொடர்ந்து விசுவாச அறிக்கைசெய்து கொண்டிருப்போம். நிச்சமாக இது நமக்கு பலன் தரும். இது உண்மை ஏனென்றால் தேவவார்த்தையானது வானங்களில் நிலைத்திருக்கிறது.

> "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பினகாரியமாகும்படி வாய்க்கும்." (ஏசாயா 55:11)

---

மூன்று

---

# தேவனிடத்திலிருந்து வரும் கனவு
(Dreams from God)

ஒரு கனவு என்பது ஒரு வெளிப்பாடு. ஒரு வெளிபாட்டின் நோக்கமே மறைந்திருக்கிற ஒன்றை காணும்படிச்செய்தல். தேவன் தம்முடைய பிள்ளைகளோடு பலவழிகளில் பேசுகிறார். சிறப்பாக அவருடைய வார்த்தைகளின் மூலம் பேசுகிறார். தேவனுடைய வார்த்தையானது குறையற்றது, உறுதியானது. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலமாக நமக்கு ஊழியம்செய்வது மிகநல்லது.

> " அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்;உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன்அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப்பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்."(எண்ணாகமம் 12:6-8)

தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேக்கு எதிராக மிரியாமும் ஆரோனும் பேசினார்கள். தேவனிடமிருந்து இஸ்ரவேலர் பெற்றுக்கொண்ட கட்டளைகளில் ஒன்று பிற தேசத்தாரை எவரும் திருமணம் செய்யக் கூடாது. இக்கட்டளைக்கு முரணாக மோசே ஒரு குசைட்(Cushite) பெண்மணியைத் திருமணம் செய்தான். இக்காரியத்தைக் குறித்து ஆரோனும் மிரியாமும்,தேவனுடைய ஊழியக்காரர்களாக இருந்ததால்,மோசேக்கு எதிராக சவால்விட உரிமை உண்டு என்று நினைத்து வீணான வம்பு பேச்சில் ஈடுபட்டனர்.

> "கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக்கேட்டார்." (எண்12:2)

மிரியாம் ஒரு தீர்க்கதரிசினி என்று வேதாகமம் அழைக்கிறது.

> "ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸதீரிகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப்போனார்கள்."(யாத்தி 15:20)

அவர்கள் அவருடைய ஊழியக்காரர்கள் என்பதை தேவனே அங்கீகரித்திருக்கிறார்.

> "நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்து உன்னை மீட்டுக்கொண்டு, மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்." (மீகா 6:4)

இங்கே, மோசே, ஆரோன் மற்றும் மிரியாம் என்ற மூவரும் தேவனுடைய ஊழியக்காரர்கள். தேவன் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக பல்வேறு நேரங்களில் அவர்கள் மூலமாக பேசினார். ஆனால் மோசே குறித்துமட்டும் தேவன்,

> "நான் அவனுடனே மறைபொருளாகஅல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; (எண்ணாகமம் 12:8)

தேவன் ஏன் மோசேயோடே மறைபொருளாகப் பேசாமல் முகமுகமாகப் பேசினார்? இதற்கான விடை எண்ணாகமம் 12:7இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

> "என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல; என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்." (எண்ணாகமம் 12:7)

> "கர்த்தராகிய நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்." (எண்ணாகமம் 12:6)

மேற்குறிப்பிட்ட வேதவாக்கியங்களின்படி நாம் கீழ்கண்டவாறு ஒரு முடிவுக்கு வரலாம்:

- ✓ தேவன் சொப்பனங்களின் மூலமாக மக்களோடு பேசுகிறார்.
- ✓ தேவன் வாயோடு வாயாக, முகமுகமாக, வெளிப்படையாக தாம் சிறப்பாக தெரிந்துகொண்ட மக்களோடு பேசுகிறார்.
- ✓ தேவன் உவமைகளின் வாயிலாக(சாதாரணமாக மற்ற எல்லாராலும் அல்ல ஒருசிலரால் மட்டும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய ரீதியில்) ஒரு சிலரோடு பேசுகிறார் (மத்13:3-23).

"அவர் அவர்களுக்கு அநேக காரியங்களை உவமைகளில் (சிறுகதைவடிவில்) பேசினார்." என்று இயேசுவைக் குறித்து வேதாகமம் சொல்கிறது.

> "அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார். கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அப்பொழுது

சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர் அவர்களுக்கு பிரதியுத்திரமாக பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. அவர்களுக்கோ அருளப்படவில்லை. உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.'' (மத்தேயு13:3,10,11,16)

- ✓ சில மக்களிடம், கர்த்தர் உவமையணியாக, (இன்னொன்றை ஒப்பிட்டுக்காட்டி) பேசுகிறார்.

**தேவனோடுள்ள நெருக்கத்தின் அளவு (ஐக்கியத்தின் அளவு) ஒரு தனிநபரைச் சார்ந்துள்ளது. தேவன் என்னோடு முகமுகமாக 'வாயோடு வாயாக' பேசுவதையே நான் தனிப்பட்ட முறையில் மிகவிரும்புகிறேன்**. சிலவேளைகளில், நான் ஜெபிக்கும்போது உள்ளான சாட்சிகள் மூலமாகவும் அல்லது பிறர் பேசும் பிரசங்கங்கள் (செய்திகள்) மூலமாகவும் அவர் என்னுடன் பேசுகிறார். மேலும் நான் வேதத்தைப் படிக்கும்போது அவர் என்னிடம் பேசுகிறார். சில வேளைகளில் நான் பிரசங்கம் பண்ணும்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்வார். அவர் குணமாக்குகிறவர்களையும் அல்லது விடுதலையாகிக்கொண்டிருக்கிறவர்களைப்பற்றியும் அவர் என்னிடத்தில் பேசுவார். சிலவேளைகளில் அவர்களுடைய பிரச்சினைகளையும் அவர்களை வேதனைப்படுத்திய பிசாசுகள் அவர்களைவிட்டு ஓடுவதையும் நான் காணும்படி செய்கிறார். பரிசுத்தஆவியானவரோடு இப்படிப்பட்ட அனுபவங்களை அனுபவிப்பதை நான் விரும்புகிறேன்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் தேதியில் தேவன்- இதைச்-செய்வார்- ஊழியங்களின் உடன் ஊழியக்காரர்களுக்கான புத்துணர்ச்சி முகாமை மூன்று நாள் நடத்தினோம். நான்கு மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படும் உபவாச ஜெபக்கூட்டத்திற்கு 'விடுதலை மற்றும் குணமாக்கும் பள்ளி'யிலுள்ள ஒவ்வொரு மாணவர்களும் ஊழியர்களும், ஊழிய பணியாளர்களும் கண்டிப்பாக கலந்துகொண்டாக வேண்டும். நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த யாரோ ஒருவருக்கு சரீரத்தின் வலது பக்கத்தில் ஒருபகுதியில் நரம்பு பலவீனத்தினால் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதாக பரிசுத்த ஆவியானவர் என்னிடம் சொன்னார். அந்த நபர் குணமாக்கப்பட்டுவிட்டார் என்றும் என்று அவர் சொன்னார். இச்செய்தியை அறிவித்துவிட்டு பிரசங்கத்தைத் தொடர்ந்தேன். சாட்சியின் வேளையில், இன்னொரு மாநிலத்திலிருந்து வந்திருந்த ஒரு பெண்மணி, நான் அறிவை உணர்த்தும் வரத்தால் வார்த்தை சொன்ன உடனேயே அவள் குணமானதாக சாட்சிசொன்னாள்.

மேலும் அநேக தடவைகள், எனக்கும் என் மனைவிக்கும் சில காரியங்களை தேவன் கனவு மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். சில மாதங்களுக்குமுன்பு ஒரு குறிப்பிட்ட பிரச்சினையுள்ள ஒரு பெண்ணைக் குறித்து, என் மனைவி கனவு கண்டாள். அவள் விழித்தெழும்பியபோது அவள் கண்ட கனவை என்னோடு பகிர்ந்துகொண்டாள். அப்படிப்பட்ட பிரச்சினையுள்ள அந்த பெண்ணுக்கு எப்படி ஆலோசனை கொடுத்து எப்படி சரிபடுத்த வேண்டும் என்பதை எங்களுக்கு கற்றுத்தரும்படி நாங்கள் இருவரும் தேவனிடம் ஜெபித்தோம்.

காலையில் ஊழியஅலுவலகத்திற்குச் சென்றபோது அங்கே ஆலோசனையையும் விடுதலையையும் நாடி வந்தவர்களில் ஒருபெண்மணி,ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஓசன் மாநிலத்திலுள்ள அபியோகுட்டா (Abeokuta in Ogun State) விலிருந்து வந்திருந்தாள். அவளது அனுபவங்களையும் பிரச்சினைகளையும் அவள் சொல்லத் துவங்கியதும், என் மனைவி பேசியன்ஸ் (Patience)அவளிடம் சில கேள்விகளைக் கேட்டபோது அவளைப்பற்றி நாங்கள் அதிகமாக அறிந்துவைத்திருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டாள். தேவன் அவளை நேசிக்கிறார் என்றும் அவள் வருமுன்னதாவே அவளுக்கு எப்படி உதவவேண்டும் என்றும் தேவன் ஏற்கெனவே எங்களுக்கு வெளிப்படுத்திவிட்டார் என்பதையும் அவளிடம் சொன்னோம். அவள் பரவசமடைந்தாள்.அவளுக்கு எங்களால் எளிதாக உதவ

முடிந்ததற்கு காரணம், அவள் வரும்போது அவளுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை தேவன் ஏற்கெனவே எங்களிடம் காண்பித்துவிட்டார்.

கனவுகள் மூலமாகவும் தேவன் மனிதனிடம் பேசுகிறார்.

> “தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே. கனநித்திரை மனுஷர் மேல் இறங்கி அவர்கள் படுக்கையின் மேல் அமர்ந்திருக்கையில் அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரைபோட்டு…” (யோபு 33:14,16)

தேவன் உண்மையாக மனிதனிடம் வெளிப்படையாக பேசுகிறார் என்று வேதாகமம் சொல்கிறது. ‘தேவன் ஒருமுறை மட்டுமல்ல இருமுறையாகவும் பேசுகிறார்’ என்று ஆங்கில வேதாகமம் கூறுகிறது. மனிதன் அதைக் கவனிக்கத்தவறும்போது அவன் எப்போது உறங்குவான் என்று காத்திருந்து தேவன் தாம் சொல்ல விரும்பும் காரியங்களை கனவுகள் மூலமாகவும் தரிசனங்கள் மூலமாகவும் அவனுக்குக் காண்பிக்கிறார். தகவலை பரிமாறஇருக்கும் அனைத்து வழிகளும் செயலற்று போகும்போதுகடைசியாக தேவன் கனவை பயன்படுத்துகிறார்.பரமபிதாவின் சத்தத்தைக் கேட்டபதற்காக ஏன் அந்த கனவு என்னும் கடைசிவழியில் காத்திருக்க வேண்டும்?தேவன் பேசும்போதெல்லாம் உடன் உடன் கேட்டு கீழ்படியுமளவுக்கு ஏன் அவரோடு ஒரு நெருங்கிய ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ளக்கூடாது?

1994 ஆம் ஆண்டு, இன்னும் மறுபடிபிறக்காத ஒரு உறவுப்பெண் எங்களைப் பார்க்க வந்தாள். முன்னமே நான் அவளுக்கு நற்செய்தியை தெரிவித்திருந்தும், மனமாற விரும்பமில்லாதவளாக இருந்தாள்.என்னால் முடிந்த அளவு முயன்றேன் ஆனால் அவளை நான் வற்புறுத்தவில்லை. இரட்சிப்பு என்பது இலவசமான பரிசு என்றும் அதை ஒரு நபர் மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர பலவந்தப்படுத்த முடியாது என்றும் நான் விசுவாசிக்கிறேன்.

அவள் உறங்கச்செல்லும் முன் அன்றையத்தின செய்தித்தாளில் வெளியிடப்பட்ட ஒரு மனிதனைப்பற்றியும் அவனுக்கு விடுதலை தேவைப்படுகிறது என்பதை அவள் உணர்ந்ததாகவும் எங்களிடம் சொன்னாள்.‘தேவன் -இதைச்- செய்வார்’ ஊழியத்தில் வெளியிடப்பட்டவிடுதலைபற்றிய ஆழமான போதனைகள் அடங்கிய பத்திரிக்கைகளை அவளிடம் நிறைய இருந்தது அதிலிருந்து சிலவற்றை அவனுக்கு அனுப்பிவைத்ததாகவும் சொன்னாள். அவள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இயேசுவின் நாமத்தின் வல்லமையில் அவளுக்கு இருந்த அறிவைக்கண்டு ஆச்சரியப்பட்டேன். ஆவிக்குரிய காரியங்களை அவளால் கண்டுகொள்ள முடிந்ததே தவிர ஆவிக்குரியவைகளை புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு உலக செல்வங்களால் அவளது கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது.

நடுஇரவு 12மணிக்கு என் மனைவி என்னை எழுப்பினாள். உடலெல்லாம் நடுங்கியவாறு அந்த உறவுப்பெண் எங்கள் அறையில் வந்திருந்தாள். “என்ன நடந்தது?” என்று அவளிடம் கேட்டேன். “இப்பொழுதே இயேசுகிறிஸ்துவிடம் என் வாழ்க்கையை அற்பணிக்க விரும்புகிறேன்” என்றாள். இப்படி அவள் அவசரப்படுவதற்குக்கான காரணத்தை அறிய விரும்பினேன். நான்கு மனிதர்கள் அவள் முன்பாக ஈட்டிகளை அசைத்தவாறு அவளை பயமுறுத்துவது போல ஒரு கனவு கண்டதாகச் சொன்னாள். அந்த பிசாசுகள் கட்டிவைத்திருந்த அந்த நபருக்கு இவள் உதவிசெய்ததால் இவளை கொல்லவந்ததாக தெரிவித்தனவாம்.மரணம் சமீபமாயிருப்பதை உணர்ந்து அந்த அறையைவிட்டு ஓடி இங்கே வந்திருக்கிறாள். அந்நேரமே அவளை இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்திஅவளுக்கு விடுதலைக்குள் நடத்தினேன்.சில நாட்களுக்குப் பின்னர் அவள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அந்நியபாஷையில் பேசினாள்.

பரிசுத்த ஆவியானவர் அவளை இயேசுவிடம் வரும்படி உணர்த்திக் கொண்டிருந்தும் அந்த ஒரு கனவு அனுபவம் நேரிடும் வரை மறுத்துவந்தாள். அக்கனவு அவளை இயேசுகிறிஸ்துவிடம் "தள்ளிக்கொண்டு" வந்தது. தேவனிடம் நெருங்கிவருவதற்கு முன்னாக ஏன் உபத்திரவமும்,வியாதியும், வேதனையும் அல்லது எதாவது ஒருவகையான தாக்குதலும் வரட்டும் என்று காத்திருக்க வேண்டும்?

தேவஆவியானவரின் சத்தத்தை, உணர்வை, அசைவினை,தரிசனத்தை, அடையாளத்தை,எச்சரிப்பை அறிந்து செயல்படுவதற்கு நாம் எப்போதும் உணர்வுக்கூர்மையுடையவர்களாக இருக்க வேண்டும். சில மாதங்களுக்கு முன்பு நான் வீட்டிற்குகாரோட்டி செல்லும்போது, திடீரென வேகத்தை குறைத்துகொள்ளும்படி பரிசுத்தஆவியானவர் சொன்னார். வேகமாக செல்லும் சாலையில் நான் ஏன் வேகத்தை குறைத்துக் கொள்ளவேண்டும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியா விட்டாலும், நான் உடனடியாக கீழ்படிந்தேன். ஒரு பெரிய நீளமானசரக்கு வண்டி ஒன்று என் முன்னால் சென்றுகொண்டிருந்தது - இன்னொரு பிஜியட்505 என்னும் சொகுசுக்கார் எனக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தது. திடீரென்று பிஜியட்505 என்னை முந்திக்கொண்டு முன்னே பாய்ந்து சென்றது. 30 வினாடிகளுக்குள், முன்னால் சென்றுகொண்டிருந்த டிரைலரை (நீளமான சரக்கு வாகனம்) ஓட்டியவன், பசுகூட்டங்கள் ரோட்டைக் கடந்து சென்றதால் திடீரென்று பிரேக் பிடித்திருக்கிறான். விளைவு அந்த பிஜியட்கார் அந்த டிரைலரின் அடியில் மோதிசிக்கிக்கொண்டது. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கு கீழ்படியாமலிருந்தால் நான் அந்த டிரைலரின் அடியில் சிக்கியிருப்பேன். ஒவ்வொரு காரியத்திற்கும் - காரோட்டுவது, பேசுவது, வீடு சந்திப்பது, சாப்பிடுவது போன்ற ஒவ்வொரு காரியத்திற்கும் பரிசுத்தஆவியானவரின் வழிநடத்துதல் எனக்குத் தேவையாக உள்ளது.

> "சொப்பனம் கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்."(எரேமியா 23:28)

கனவுகளைப்பற்றிய காரியத்தில் வேதாகமத்தின் நிலை தெளிவாகஉள்ளது. தேவன் தமது பிள்ளைகளோடு பேச பயன்படுத்தும் வழிகளில் கனவு ஒன்றாகும்.ஆனால் தீர்க்கதரிசியாகிய எரேமியா,"சொப்பனங்காண்கிறவன் "உண்மையாக" சொல்ல வேண்டும் என்று அழுத்திக்கூறியுள்ளார். *(சொப்பனம் காண்கிறநபர்) சுத்தமில்லாதவராக இருந்தால் கனவுகளும் அசுத்தமாகிவிடும்.* ஒரு நடைமுறை உதாரணத்தைப் பார்ப்போம்.

உதாரணம்:-கார்பரேஷன் குழாயில் வரும் தண்ணீர் பொதுவாக வேதியல் மூலமாக நன்றாக சுத்தமாக்கப்பட்டதால் சுத்தமாக இருக்கும். ஆனால் ஒரு குறிப்பிட்ட வீட்டிலுள்ள தண்ணீர் குழாயானது, நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமலிருந்தால் அந்த குழாயை திறக்கும் போது முதலில் வரும் தண்ணீர் அசுத்தமாகவும் அல்லது பழுப்பு அல்லது சிவப்பு நிறத்திலும் வரக்கூடும். குழாயில் வரும் தண்ணீர் நன்றாக சுத்தம்செய்யப்பட்டதாக இருந்தாலும் குழாயினுள் துருப்பிடித்திருப்பதால் வெளியேவரும் தண்ணீர் அப்படி கலங்கி வருகிறது.

அதேபோல் கனவுகள் மூலமாகவோ அல்லது தீர்க்கதரிசனம் மூலமாகவோ தேவன் பேசும்போது, நமது அனுபவங்களும், பின்னணியங்களும், நமது முதிர்ச்சியும், நமது புரிந்துகொள்ளுதலும் நாம் சொல்லும் வியாக்கியான விளக்கங்களில் பாதிப்பை உண்டுபண்ணுகிறது. ஆகவேதான் நிதானிக்கும் முதிர்ச்சியுள்ள மக்கள் நம்மோடு இருக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறது. (1கொரி 14:29)

1977ஆம் ஆண்டு நான் கர்த்தரைச் சந்தித்தேன். நான் கலந்துகொண்ட ஐக்கியத்திலுள்ள ஒரு நபருக்கு ஒரு விசித்திர வெளிப்பாடு வந்தது. அந்த ஐக்கியத்திலுள்ள அனைத்து அங்கத்தினருக்கும் முகத்தில் பருக்கள் வரும் என்பதே அந்த 'வெளிப்பாடு'. இது ஒரு விநோதமான வெளிப்பாடு என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். இவ்வெளிப்பாட்டை நம்பவேண்டாம் என்று சொல்வதற்குப்பதிலாக

ஐக்கியத்தின் தலைவா் அமைதியாக இருந்தாா். இதைக் கேட்டவா்களின் வாழ்க்கையில் தீயவிளைவுகளை ஏற்பட்டது. சிலா் அங்கு வருவதை நிறுத்திக்கொண்டனா். வராதிருந்தசகோதரா்களில் ஒருவரை விசாரித்தபோது 'முகத்தில் பரு வராமல் தவிா்க்கவே' அந்த ஐக்கியத்தைவிட்டு விலகியிருப்பதாக ஒத்துக்கொண்டாா். தேவனைவிட்டுத் திசைத்திருப்புகின்ற அத்தகைய வெளிப்பாடுகளை சபையை தலைமைதாங்கி நடத்துகிறவா்கள் நிதானித்து அறிந்து உடனே சரிசெய்ய வேண்டும்.

தேவன் பேசும்போது அல்லது காரியங்களை வெளிப்படுத்தும்போது,அவைகள் பக்திவிருத்தியும், புத்தியும் ஆறுதலும் உண்டாக்குவதற்காக இருக்கும். தேவன் தமது மக்களோடு பேசுவதற்கு பயன்படுத்தும் பலவழிகளில் ஒன்றுதான் கனவு. ஆனால் கனவுகளையே இன்னொரு நற்செய்தியாக மாற்றிவிடக்கூடாது. அனைத்து கனவுகளும் வெளிப்பாடுகளும் தேவனுடைய வாா்த்தையினால் நிதானித்தறிய வேண்டும்.

தேவனிடமிருந்து வரும் கனவானது ஒருவேளை

- அறிவை உணா்த்தும் வரமாக இருக்கலாம்
- ஞானத்தைஉணா்த்தும் வரமாக இருக்கலாம்
- ஆவியை பகுத்தறியும் வரமாக இருக்கலாம்.

தேவன் கனவுகள் மூலமாக என்ன திட்டமிடவேண்டுமென்றோ, எதிராக என்ன செய்ய வேண்டுமென்றோ வெளிப்படுத்த முடியும். அப்படிப்பட்ட கனவுகள்,நான்கு பகுதிகளை உள்ளடங்கியதாகஇருக்கும்.

அ) **<u>கதை போன்றிருக்கும்</u>**(Story line):

கனவில் வந்த நிகழ்ச்சியை ஒரு கதைபோல விவரிக்கக்கூடியதாக இருக்கும். உதாரணமாக ஆதியாகமம் 41:1-8, எகிப்து ராஜாவாகிய பாா்வோன், வரப்போகும்ஒரு பிரச்சினையை அல்லது ஒரு தீமையைபற்றிய கனவு கண்டான். இது தேவனிடத்திலிருந்து வந்ததால் கதைபோல விவரித்துக்கூறத்தக்கதாக இருந்தது. இரண்டையும் இரண்டையும் சோ்த்தால் அதின் பொருள் புரியும்.

ஆ) **<u>செய்தியை தரும்</u>**(Message):

கனவு மூலமாக தேவன் ஒரு முக்கியமான செய்தியை அனுப்புவாா். தேவனிடத்திலிருந்து வந்த ஒருகனவாக இருக்குமானால் நிச்சயமாக அதில் ஒரு செய்தி இருக்கும்.“தேவன் என்ன செய்யப்போகிறாா் என்பதை அவா் பாா்வோனுக்கு காண்பித்திருக்கிறாா்.” என்று யோசேப்பு சொன்னான். (ஆதியாகமம் 41:25)

இ) **<u>நோக்கமிருக்கும்</u>**(Purpose):

தேவனிடமிருந்து வரும் கனவின் நோக்கமானது நல்ஆலோசனைக்காரரால் உறுதிப் படுத்தப்படுகிறது. யோசேப்பின் ஞானமுள்ள வியாக்கியானத்தாலும் விளக்கத்தாலும் ஆலோசனையாலும் பாா்வோன் கண்ட கனவின் நோக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

> “இந்த காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வாா் என்பதையும் குறிக்கும் பொருட்டு, இந்தச் சொப்பனம் பாா்வோனுக்கு இரட்டித்தது. ஆகையால், விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத்தேடி, அவனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாகப் பாா்வோன் ஏற்படுத்துவாராக.. . . . பின்னும் பாா்வோன் யோசேப்பை நோக்கி: பாா், எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, (ஆதியாகமம் 41:32,33,41).

ஈ) **<u>ஒரு அடையாளமாக இருக்கும்</u>**(Sign):

சிலவேளைகளில் தேவன் சொன்னதை முக்கியப்படுத்துவதற்காக,ஒரு அடையாளத்தை கொடுக்கிறார். அது தேவன் உறுதிப்படுத்தும் வெளிப்பாடானது ஒரு தனிநபரின் அபிப்பிராயமாகவோ அல்லது ஒரு நிகழ்ச்சியாகவோ இருக்கக்கூடும். (நியாயதிபதிகள் 7:13-15)

> 'மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்யும்' என்று பவுலை வேண்டியவாறு ஒரு மனிதன் கனவில் வந்து சொல்லும்வரை ஆசியாவில் வசனத்தை சொல்லாதபடி பரிசுத்தஆவியினாலே பவுல் தடைசெய்யப்பட்டிருந்தார். (அப் 16:6-10).

சிலவேளைகளில், தேவன் ஒரு நிபந்தனையை அல்லது ஒரு செய்தியை அனுப்புவதற்காக வழக்கமானவிதிகளிலிருந்து சற்றுவிலகிச்செல்கிறார். எடுத்துக்காட்டாக அப்போஸ்தலர் 10அதிகாரத்தில், பூமியிலுள்ள நான்கு கால்களுடைய மிருகங்களையும் காட்டு மிருகங்களையும், ஊர்வனவைகளையும் (பாம்பு போன்றவைகளையும்) வானத்துப்பறவைகளையும் பேதுரு கனவில் கண்டார். அவற்றை அடித்து புசிக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்குப்பேதுரு: "அப்படியல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்".

> "அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாம் தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது." (அப்போஸ்தலர் 10:14-16)

பேதுவுக்குள் பின்னிப்பிணைந்துகிடந்த யூதர்களின் பாரம்பரிய பழக்கவழக்கத்தை மாற்றி பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு கீழ்படியச்செய்து புறஜாதியானின் (கொர்னேலியு) வீட்டுக்கு நற்செய்தி எடுத்துச்செல்வதற்காக தேவன் இந்த அனுபவத்தை பயன்படுத்தினார். கனவுகளுக்கு வியாக்கியானம் செய்கிறவர் பரிசுத்தஆவியானவர்தான்,பரிசுத்தரிடமிருந்து பெற்ற ஒரு அபிஷேகம் உங்களிடத்தில் உண்டு (1யோவான் 2:20). உனக்குள் ஆவியாக இருக்கும் அனைத்தையும் அறிந்த உனது பரலோகபிதாவிடம், நீ ஜெபித்துக்கேட்க வேண்டும். அப்பொழுது உண்மையாக அவர் உனக்கு பதிலளிப்பார்.

*ஒரு செய்தியும் நோக்கமும் இல்லாத எந்தக்கனவையும் புறக்கணித்துவிடவேண்டும்.* கிறிஸ்தவர்கள் நல்ல கனவுகளைக் காணும்போது மகிழ்வதும் திகிலூட்டும் கனவுகளைக் காணும்போது கவலைப்படுவதும் ஆபத்தான காரியமாகும். நாம், கனவுகளால் அல்ல, தேவனுடைய வார்த்தையால்தான் வாழவேண்டும்.

# பிசாசிடமிருந்து வரும் கனவுகள்

(Dreams from the Devil)

பிசாசும் கூட கனவுகள் மூலமாக மக்களுக்கு காரியங்களை வெளிப்படுத்துகிறான். ஆனால் அவனுக்கு மூவகையான ஊழியங்கள் உண்டு.

- திருடவும் - 0கொல்லவும் - அழிக்கவும் (யோவான் 10:10) வருவதே அவன் ஊழியம்.

அவனது இராஜ்ஜியத்திற்குள் அதிகமான மக்களை இழுத்துக்கொள்ளும் நோக்கோடு அவனது மூவகை ஊழியத்தை பலவழிகளில் செயல்படுத்துகிறான். அதில் ஒரு வழியான கனவுகள் மூலமாக மற்றவர்களைவிட குறிப்பாக கிறிஸ்தவர்களை தாக்குகிறான். ஏனென்றால் மற்றவர்களெல்லாம் அவனுக்குரியவர்கள் (இயேசுகிறிஸ்துவை தங்களது சொந்த கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டால்தான் அவனது நுகத்தடியிலிருந்து விடுதலையானவர்களாக இருப்பார்கள்.

மனிதன் ஒரு ஆவியாயிருக்கிறான், அவனுக்கு ஒரு ஆத்துமா இருக்கிறது, அவன் ஒரு சரீரத்திற்குள் வாழ்கிறான் (1தெசலோனிக்கேயர் 5:23). நாம் உறங்கும்போது நமது ஆவிமனிதன் கனவு காண்கிறான், அதை நமது ஆத்துமா (மனம் என்ற நமது அறிவுப்பகுதி) நமது மூளைக்கு (சரீரத்திற்கு) கொண்டு வரும்போதுஅக்கனவை அறிந்துகொள்கிறோம். அதாவது நமது <u>சரீரமானது</u> உறக்கத்தில் ஆழ்ந்து இளைப்பாறும்போது <u>ஆவிமனிதன் ஆத்துமாவோடு</u> சேர்ந்து கனவு காண்கிறான். அதனால்தான் நாம் எதைக்குறித்து கனவு கண்டோம் என்பதை நம்மால் நினைவுபடுத்திக்கொள்ள இயலுகிறது.

பிசாசிடமிருந்து வரும் கனவுகளுக்கு பொதுவாக குறிப்பிட்ட இயல்புகள் (தன்மைகள்) உண்டு.

1) *அவைகள் பயத்தையும் வேதனையையும் கொண்டுவருகின்றன* (They bring fear and torment):

> “என் கட்டில் எனக்கு ஆறுதல் கொடுக்கும் என்றும், என் படுக்கை என் தவிப்பை ஆற்றும் என்றும் நான் சொல்வேனாகில், நீர் சொப்பனங்களால் என்னைக்கலங்கப்பண்ணி, தரிசனங்களால் எனக்குத் திகிலுண்டாக்குகிறீர். அதினால் என் ஆத்துமா நெருக்குண்டு சாகிறதையும், என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் மரணத்தையும்விரும்புகிறது.”(யோபு7:13-15)

பிசாசு கொண்டுவருகின்ற கனவுகளின் பின்னால் பயமும் வேதனையும் இருக்கும். இனம் புரியாத பயம் உள்ளே நுழைந்தவுடனேயே - அந்த கனவு சாத்தானிடமிருந்து வந்தது என்பதை ஒருவர் நிச்சயமாக புரிந்துகொள்ளலாம்.ஒருவேளைகனவு கண்டநபர் ஜெபித்தும் கனவை ரத்துசெய்தும்கூட அக்கனவு அந்நபரை அதிகமாக வேதனைப்படுத்துவதாக இருந்தால்; உபவாசித்தும் ஜெபித்தும்கூட ஜெபமானது கூரைக்குமேலாக போகாததுபோலத் தோன்றினால்,பயத்தால் அந்நபரின் முழுவாழ்க்கையையும் பாதித்து செயலிழக்கச் செய்ய பிசாசு முயற்சிக்கிறான் என்று பொருள். ஒருவரது வாழ்க்கைக்குள் பயத்தின் மூலம் பிசாசு நுழையமுடியும்.

<u>பயம் என்பது விசுவாசத்திற்கு எதிரானது. விசுவாசமானது,பிசாசு நுழையாதபடி அனைத்துவாசல்களையும் மூடிவிடுகிறது ஆனால் பயமோ பிசாசு நுழைவதற்காக அனைத்து வாசல்களையும் திறந்து விடுகிறது.</u>

2) *அவைகள் நிறைவேறுவதில்லை* (They do not come to pass):

> “அவன் ஒரு சொப்பனத்தைப்போல் பறந்துபோய்க் காணப்படாதவனாவான்;
> இரவில் தோன்றும் தரிசனத்தைப்போல் பறக்கடிக்கப்படுவான்.” (யோபு 20:8)

இம்மாதிரியான கனவு கண்டால், மறுபடியும் பிசாசு வந்துவிட்டான் என்பதை அறிந்து விழித்ததும் உடனே அவனைக் கடிந்துகொண்டு துரத்திவிடவேண்டும். <u>பிசாசால் நான்கு</u>

வருடங்களாக போடப்பட்ட திட்டத்தை ஒரு மெய்யான தேவபிள்ளையால் ஜெபத்தின் மூலம் ஒரு சில நிமிடத்தில் அழித்துவிடமுடியும்.பரிசுத்த ஆவியானவர், ஒருமனப்பட்டு ஜெபிக்கும் நோக்கத்திற்காக,இன்னொரு கிறிஸ்தவரோடு அக்கனவை பகிர்ந்துகொள்ள குறிப்பாக வழிநடத்துவாரானால் அவருடைய வழி நடத்துதலுக்கு கீழ்படியுங்கள். ஏனென்றால் இயேசு இப்படி சொல்லியுள்ளார்:

> "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எக்காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்." (மத்தேயு 18:18,19)

அதாவது நீங்கள் பிசாசை கட்டிப்போட்டும் நிலைமை சீராகவில்லை எனத்தோன்றினால்,தயங்காமல் இன்னொரு சகோதரரையோ சகோதரியையோ அழைத்து உங்களோடு சேர்ந்து ஒருமனப்பட்டு ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது அனைத்து பிசாசின் திட்டங்களும் ரத்து செய்யப்பட்டுவிடும்.

நீங்கள் ஜெபித்தும் உபவாசித்தும்கூட எதிர்மறையான கனவு அப்படியே நிறைவேறினால், பிசாசின்கிரியைகளிலிருந்து விடுபடுவதற்கு உங்களுக்கு விடுதலை ஊழியம் தேவையாக இருக்கிறது என்று பொருள். இதைக்குறித்து நாம் விரைவில் பார்க்கலாம்.

3) *அவைகள் அவலட்சணமாக- அசுத்தமானவைகளாக இருக்கும்* (They are filthy)

ஒழுக்கக்கேடான சொப்பனங்கள், அறுவெறுப்பான இடங்கள், கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தையும் ஆளுகையினையும் அவமதிக்கும் கனவுகளெல்லாம் பிசாசிடமிருந்து வருகின்றன.

> "அப்படிப்போலவே, சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக் கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைப்பண்ணி, மகத்துவங்களைத் தூசிக்கிறார்கள்." (யூதா 8)

## பிசாசினால் ஏற்படுத்தப்படும் கனவுகள் (Dreams caused by the devil):

முந்தின அத்தியாயத்தில்,வரஇருக்கும் ஆபத்தைக்குறித்து நம்மை எச்சரிக்கவும் அல்லது ஞானத்தையும் ஆலோசனையையும் புத்தியையும் கொடுக்கவும் தேவனிடமிருந்து எப்படி கனவு வருகிறது என்பதை நாம் விவாதித்தோம். தேவன் என்னவெல்லாம் செய்கிறாரோ, அதுபோல சாத்தானும் அதற்குப் பதிலாக எப்போதும் போலியான கனவை ஏற்படுத்துகிறான். அவனும்கூட மக்களை கனவுகாணும்படி செய்யமுடியமா என்று சிலர் ஆச்சரியப்படலாம். சாத்தானிடமிருந்து வரும் கனவுகள் தேவனிடத்திலிருந்து வரும் கனவுகளைப்போல் அல்லாமல்,அழிவை உண்டுபண்ணுகின்றன.

தீய நோக்கம் நிறைவேறவேண்டும் என்பதற்காக ஒருவரின் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைகளை பிசாசால் கொண்டுவரமுடியும்.

### கனவே வருவதில்லை(Not dreaming at all):

கனவு என்பது ஆவிக்குரிய உலகத்திற்கு திறக்கப்படும் ஒரு ஜன்னலாக இருக்கிறது.ஆவிக்குரிய உலகில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்ற மனஉணர்வைக் கொடுக்கிறது.மக்களுக்கு எதிராக பிசாசு பயன்படுத்தும் ஒரு தந்திரம் என்ன

என்றால்,அவர்கள் கனவே காணாதபடி வைத்துக்கொள்கிறான் அல்லது அவர்கள் கண்ட கனவை நினைவுபடுத்த முடியாதபடி செய்கிறான். கண்டகனவை ஒருவர் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரித்துவிடவோ முடியும் என்பது பிசாசுக்குத் தெரியும்.ஆகையால் கனவை மறக்கவைப்பதால் அந்நபர் கர்த்தரிடமிருந்து வந்த ஆக்கப்பூர்வமான கனவை ஏற்றுக்கொண்டு உரிமைபாராட்டவோ அல்லது எதிர்மறையான, தீங்கான கனவை ரத்துச்செய்யவோமாட்டான் என்பதை பிசாசு அறிந்திருக்கிறான்.

அதற்கென்று ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிமிடமும் கனவு காணவேண்டும் என்று நான் வாதாடவில்லை. பிதா ஒரு காரியத்தை வெளிப்படுத்துவாரானால் அது பிசாசுக்காக அல்ல. கனவு கண்டால் என்னால் நினைவுவைத்துக்கொள்ள முடியவில்லை, மறந்துவிடுகிறது என்று சொல்கிற மக்களது வாழ்வில் எதிர்மறையான காரியங்களே நடக்கிறது என்பதையும் ஜெபம்செய்தும்கூட அதை தடுக்க முடியவில்லை, விரும்பப்படாதவைகளே எப்பொழுதும் நடக்கிறது என்பதையும் கவனித்திருக்கிறேன்.

> கர்த்தராகியஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.(ஆமோஸ் 3:7)

தேவனிடத்திலிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக அவைகள் தடுக்கப்பட்டுக் கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலுள்ள மக்களுக்கு விடுதலைஊழியம் தேவையாக உள்ளது.

விடுதலை ஊழியத்தில் சில மக்களை நடத்தியும் அவர்கள் ஆக்கப்பூர்வமான எந்த பலனும் அடையாததற்கான நான்கு காரணங்கள்:

1. ***விடுதலையாக வாழவேண்டும் என்ற முழுவிருப்பம் இல்லாததால்:***(They are not totally willing to be free):

அநேகர் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபோதிலும் இருளின் வல்லமைகளிலிருந்து விடுதலை பெறவிரும்புகின்றனர். சாத்தானின்சபைகளுக்கு செல்கிறவர்களாக இருந்தும் விடுதலைவேண்டுமென்று சொல்லி தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த சபையைத் துறந்து முற்றிலும் வெளியேவராமல் இருக்கும்போது அவர்களுக்கு விடுதலை ஜெபம் செய்தால் அவர்களது நிலைமையானது முன்னைவிட மிகமோசமாகிவிடும். ஏனென்றால் அப்படிப்பட்ட நபரிடம் பரிசுத்தஆவியின் அபிஷேகம் இல்லாததால் முன்னைவிட மோசமான இன்னும் ஏழுஆவிகள் திரும்பி வந்துவிடும் என்று கர்த்தர் இயேசு சொல்லியிருக்கிறார். (மத்தேயு 12: 43-45)

2. ***பிசாசுகளின் பலம்***(The strength of the demons):

> ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)

பிசாசுகள் அனைத்தும் ஒரேவகையான பலமும் வல்லமையும் கொண்டவையல்ல. ஒரு பலங்குறைந்த ஒரு பிசாசு ஒருவரை உபத்திரவப்படுத்துவதாக இருந்தால் மறுபடியும் பிறந்த அந்நபராலேயே அதனை விரட்ட முடியும்; எந்த கிறிஸ்தவனும் விடுதலை ஊழியம் செய்யமுடியும். ஆனால் அது உயர்மட்ட பிசாசாக இருந்தால், உயர்மட்ட அபிஷேகமும் விடுதலை ஊழியத்தின் அதிகமான அனுபவமும் உள்ளவர்தான் அந்த விடுதலை ஊழியத்தை தொடர்ந்து நடத்தமுடியும். அனுபவமில்லாத கிறிஸ்தவர்களால் செய்யப்படும் விடுதலை ஊழியத்தினால் வரும் பலன் கொஞ்சகாலமே நிலைக்கும்.

3. ***பிசாசுகள் அந்நபருக்குள் எவ்வளவு காலமாக இருக்கின்றன?***

(The length of time the demons have been there.)

விடுதலை ஊழியம் செய்யத்துவங்கும்முன்பிசாசுகள் அந்நபருக்குள் எவ்வளவு காலமாக தங்கி இருக்கின்றன என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக, அந்த குறிப்பிட்ட பிரச்சினையானது குடும்பத்தில் அல்லது குடும்பம் முழுவதிலும் தொடர்ந்துவந்து கொண்டிருந்தால், அல்லது சிறுவயதிலிருந்து அல்லது வாலிபவயதிலிருந்து வந்துகொண்டிருக்குமானால் பொதுவான விடுதலையோ அல்லது மூன்று நிமிட ஜெபமோ பலனளிக்காது. விடுதலை ஊழியத்தை துவக்குமுன்னதாக, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட விடுதலை ஊழியர், அந்நபரோடு அமர்ந்திருந்து தனிப்பட்டமுறையில் விசாரித்து அப்பிரச்சினைக்கான **வேர்**என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். இதனை நானும் என் மனைவியும் நெடுங்காலத்திற்கு முன்னமே அறிந்துகொண்டோம். அது நற்பலன் அளிக்கிறது.

4. ***ஊழியர் மீதுள்ள அபிஷேகத்தின் அளவு***(The level of anointing on the Minister.):

ஒரு விடுதலை ஊழியம் செய்கிறவர் எல்லாநேரமும் பரிசுத்த ஆவியானவரோடு நெருக்கமாக இருக்க வேண்டும். ஜெபம், உபவாசம், தேவனுடைய வார்த்தையை தியானித்தல் போன்றவற்றால்தான் ஆவியானவரோடு நெருக்கமாக இருக்க முடியும். *ஊழியம் செய்யும்போது விடுதலை ஊழியர் சரீரபிரகாரமாகவும் சிந்தனையிலும் (புத்தியிலும்) விழிப்போடு சுறுசுறுப்போடு இருக்கவேண்டும். களைப்பாக இருக்கும்போது விடுதலை ஊழியம் செய்ய முயற்சிப்பது சிறப்பாக அமையாது.* ஆகவே விடுதலை ஊழியத்தினால் ஏற்ற பலனடைய வேண்டுமென்றால் ஒரு அனுகூலமான நேரத்தை விடுதலை ஊழியர் அல்லது தேவஆலோசகர் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். உங்களால் கடைபிடிக்க முடியாத ஒரு நேரத்தை,பிறருடைய வற்புறுத்துதலினால்,தீர்மானிக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்.

**கனவுகாண்கிறேன் ஆனால் நினைவில்நிற்பதில்லை**(Dreaming and not remembering):

அநேகர் கனவு காண்கின்றனர். ஆனால் கனவுகளை ஞாபகப்படுத்துவது அவர்களுக்கு சிரமமாக இருப்பதை உணர்கின்றனர். ஞாபகத்தில் கொண்டுவர முயன்றாலும்கூட கனவுகளின் சிலபகுதிகள் மட்டும் நினைவுக்கு வருவதும், அக்கனவின் முழுமையான அர்த்தத்தை தெளிவாக புரிந்துகொள்ள உதவும் பிரமுக்கியபகுதி அல்லது திறவுகோலாக உள்ள பகுதி மறக்கடிக்கப்படுகிறது. இது பிசாசின் கைவேலையாக இருக்கிறது. ***இவ்வுலகில் நிகழும் எதுவாக இருந்தாலும் அவைகள் ஆவிக்குரிய உலகத்தில் (மண்டலத்தில்) ஏற்கெனவே முன்னதாக திட்டமிடப்பட்டதாக இருக்கின்றது***.ஆகவே பிசாசு என்ன திட்டமிட்டுள்ளான்; என்ன காரியத்தை மறைத்து வைத்துள்ளான் என்பதை அறியமுடியாதபடிகனவு மறந்துபோவதால் பிசாசுக்கு எதிராக தாக்கும் திட்டங்களை வகுக்கமுடியாது.

> நேபுகாத் நேச்சாருக்கு இத்தகைய அனுபவம் எற்பட்டது. "நேபுகாத் நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே சொப்பனங்களைக் கண்டான்; அதினால் அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது. அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டு சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச் சொன்னான்; அவர்கள் வந்து, ராஜசமூகத்தில் நின்றார்கள்.ராஜா அவர்களை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அந்தச் சொப்பனத்தை அறியவேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான். அப்பொழுது கல்தேயர் ராஜாவை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க; சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது

அதின் அர்த்தத்தையும் விடுவிப்போம் என்று சீரியபாஷையிலே சொன்னார்கள்.ராஜா கல்தேயருக்குப் பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும். (தானியேல் 2:1-5)

கனவு கண்டும் எப்போதுமே அதனை ஞாபகத்தில் கொண்டுவரமுடியாதவர்கள்,அவர்களது முகத்தின் முன்போடப்பட்டிருக்கும் சாத்தானின் மாயத்திரையை கிழித்தெறிந்தாக வேண்டும். சிலவேளைகளில் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் இதை மேற்கொள்ள வேண்டும். அதன் பிறகும் பிரச்சினை தொடருமானால் அந்நபருக்கு விடுதலை ஊழியம் தேவையானது. விடுதலை ஊழியம் செய்தபின்னரும் ‘கனவு கண்டால் மறந்துபோகும் நிலைக்கு’ஒருமுடிவுக்கு வரவில்லை என்றால் அந்நபருக்கு இன்னும் அதிகமான விடுதலை ஊழியம் தேவை என்று பொருள். (*தன்னிடம் வந்த நோயாளிக்கு மருத்துசிகிச்சை கொடுத்தும் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் இன்னும் அதிகமான பரிசோதனைக்கு ஒரு மருத்துவர் வழிநடத்துவதுபோல –CM in Christ*)

அநேகர் வாழ்வில் விடுதலை அடையாமல் வெகுகாலமாக அலைந்து கொண்டிருப்பதற்குக் காரணம், ஆழமான ஜெப வாழ்க்கை இல்லாததால் அல்லது இன்னும் ஏதோ ஒருவகையான பாவத்தில் மூழ்கியிருப்பதால்தான் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறேன்.

**கனவு கண்டால் எப்பொழுதும் அப்படியே நடக்கும்** (Those whose dreams always come to pass):

சிலர் காணும் கனவு எதிர்மறையானதோ அல்லது நேர்மறையானதோ இருந்தாலும்,அதற்காக ஜெபித்தபிறகும்கூட,பெரும்பாலான அல்லது எல்லா நேரங்களிலும் அப்படியே நடந்துவிடுகின்றன. அதாவது அந்த நபரின் குடும்பத்தில் எவராவது இறப்பதுபோல கனவு கண்டால் உடனே சவப்பெட்டிக்கு ஏற்பாடு செய்துவிடலாம், அந்த அளவுக்கு அதை தவிர்ப்பதற்கு எவ்வளவு கடினமாக முயன்றாலும் அப்படியே நிறைவேறிவிடுகிறது.

இப்படிபட்ட நபர்களுக்கு அவசரமாக விடுதலை ஊழியம் செய்தாக வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்டவர்களுக்கு இரட்சிக்கப்படும்முன் நடந்தது போலவே இரட்சிக்கப்பட்ட பின்னரும் தொடருவதாக இருக்கும். சத்தியத்திற்கு புறம்பான (மந்திரசம்பந்தமான) காரியங்களில்நம்பி ஈடுபட்டதால் வந்த பிசாசுகள் கனவு மூலமாக ஒருவருடைய வாழ்வில் புகுந்துகொண்டதால் இப்படி நடக்கிறது.

இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாகவே இந்த வரம் அவர்களுக்கு உண்டு என்று அநேகர் என்னிடம் கலந்துரையாடும்போது சொல்லியிருக்கிறார்கள். பிசாசின் பிள்ளைகளாக இருந்த வேளையில் இக்கனவு வரத்தை இவர்களுக்கு யார் கொடுத்தார்கள் என்பதுதான் கேள்வி. மறுபடி பிறந்தபிறகும் அதே வரத்தை தூக்கித்திரிந்தால் என்ன நிகழும்? *வரம் தந்தபிசாசை வேண்டாம் என்று தள்ளிவிட்டவர்கள் ஏன் அவன் தந்த வரத்தை தங்களுடன் வைத்திருக்கின்றனர்? இது ஆபத்தானது.*இம்மக்கள்,தண்ணீரோடு சம்பந்தபட்ட பில்லிசூனிய ஆவிகளின் *(marine witchcraft demons)*கிரியைகளை அவர்களது வாழ்க்கையை விட்டு துரத்தவேண்டும்.

என்னுடைய ஆலோசனை: *நீங்கள் அவிசுவாசியாக இருந்தபோது பிசாசு என்ன வரத்தை தந்தானோ, அதை நீங்கள் மறுபடியும்-பிறந்தவுடன் அந்த வரங்களை உதறித்தள்ளிவிட்டு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் உங்களை கழுவி, பரிசுத்தஆவியானவருக்குச் சொந்தமான வரங்களை உங்களுக்குத் தரும்படி இப்போது வேண்டிக்கொள்ளுங்கள்.*

**கனவு கண்டால் அதற்கு எதிர்மறையாக நடக்கும்** : (Those whose dreams come to pass the opposite way)

இவர்கள் ஜெபித்தாலும் உபவாசித்தாலும் அல்லது எதுவுமே செய்யாமலிருந்தாலும் கூட கனவில் கண்ட சம்பவங்களுக்கு எதிரிடையாகவே வாழ்க்கையில் நடப்பதாக இருந்தால் இப்படிப்பட்டவர்களுக்கு விடுதலை ஊழியம் அவசரமாக தேவைப்படுகிறது.

நான் உங்களிடம் சொல்லும் சாராம்சம் என்னவெனில்,ஒரு எதிர்மறையான கனவு தேவனிடமிருந்தோ, மனிதனிடமிருந்தோ அல்லது பிசாசிடமிருந்தோ வந்ததாக இருந்தாலும் அல்லது எப்படிப்பட்ட கனவாக இருந்தாலும்கூட இயேசுவுகிறிஸ்துவுக்குள் ஒரு தீர்வு (பரிகாரம்) இருக்கிறது. அதிகம் ஜெபித்தும், உபவாசித்தும் ஒருமனப்பட்டு மற்றவர்களோடு சேர்ந்து ஜெபித்தும் தீர்வு காணமுடியவில்லை,கண்டகனவுக்கு எதிராக காரியங்கள் நடப்பதே வாழ்க்கையில் வாடிக்கையாகிவிட்டது என்றாலும் அந்நபருக்கு அவசரமான விடுதலை ஊழியம் தேவை என்று பொருள்.

**விசித்திரமான வேலைகளைச் செய்வதுபோல, உயரத்திலிருந்து விழுவதுபோல, குழிக்குள் விழுவதுபோல, எதோ ஒருஅடைக்கப்பட்ட இடத்திற்குள் போடப்பட்டதுபோல, சங்கிலியால் கட்டப்பட்ட நிலையிலிருப்பதுபோல, ஒரு மலையில் அல்லது ஒரு குன்றில் ஏறுவதுபோல, அசுத்தமான இடத்திற்குள் அசுத்தமான பொருட்களுக்கு மத்தியில் இருப்பது போல கனவு காண்பது** (Dreaming of doing odd jobs, falling from heights, falling into a pit, being put in an enclosure, being in dirty places or things.)

விறகு வெட்டுவதுபோல, பிறருக்காக சாப்பாட்டுத்தட்டுகளையும் துணிமணிகளை கழுவுவது போல, சமையல் வேலைசெய்வது போல, செய்திகொண்டு போவதுபோல, வழக்கத்துக்கு மாறான வேலைகள் செய்வதுபோல கனவு கண்டாலும், மலைகள், மரங்கள், கட்டடங்கள் போன்ற உயரமான இடங்களிலிருந்து விழுவதுபோல கனவு கண்டாலும், அல்லது அடைக்கப்பட்ட இடத்திற்குள் இருப்பதுபோலவோ அல்லது விலங்கிடப்பட்ட நிலையிலிருப்பதுபோலவோ, மலையிலோ சிறுகுன்றிலோ ஏறுவதுபோலவோ, கனவு கண்டால் இவைகளை புறக்கணித்துவிட வேண்டும் (should be rejected).

இப்படிப்பட்டவர்கள் ‘சபைக்கு சும்மா வந்துபோயிருந்தால் போதும் அல்லது சபைகாரியங்களில் ஈடுபட்டால் போதும் என்று சோம்பி இருக்காமல், இந்நிலையை மாற்ற அவசரமாக, தீவிரமாக ஏதாவது ஒன்றை செய்தாக வேண்டும். புத்தியுள்ள ஆவிக்குரிய யுத்தஜெபம் செய்வது இவர்களுக்கு உதவும். இவர்களுக்கு எதிராக அடிமைத்தனத்தின் ஆவிகள்,பிறருக்கு பணிந்து வேலைகாரனைப்போல வேலைசெய்யவைக்கும் ஆவிகள், அல்லது கடினவேலைகளை செய்யவைக்கும் - சுமத்தும் ஆவிகள் மற்றும் இவர்களை தாமதப்படுத்தும் ஆவிகள் மற்றும் தடைகளை உண்டு பண்ணும் ஆவிகள் போன்றவை சேர்ந்துள்ளது என்பதை இக்கனவுகள் அறிவுறுத்துகின்றது. இந்த ஆவிகளுக்குப் பலதரப்பட்ட சதித்திட்டங்கள் இருக்கின்றன. இவைகளால் பாதிக்கப்படுகிறவர்கள் வாழ்க்கையில் எந்த முன்னேற்றத்தையோ அல்லது எவ்வகையான அற்புதத்தையோ அனுபவிக்கவிடாதபடி இந்தஆவிகள் பார்த்துக்கொள்கின்றன.

எவ்வித காரணமும் இல்லாமல் வேலைசெய்கின்ற இடத்தில், இப்படிப்பட்ட நபர்கள் பிறரால் வெறுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். எவ்விதகாரணமும் இல்லாமல் இவர்களுடைய மேலதிகாரி இவர்களுக்கு பதவி உயர்வு செய்யக்கூடாது என்று பலமான காரணத்தைக் காட்டிக்கொண்டிருப்பார். அல்லது இந்நபர் எப்போதும் கடனுக்குள்ளிருக்கும்படி, தனது கடைசி ரூபாயையும் செலவளித்து முடிக்காவிட்டால் அல்லது கடினமான உபவாசமும் ஜெபமும் செய்யாவிட்டால் வேறு பணமோ அல்லது சாதனையோ வராத அனுபவமே நிகழும். இது சத்துருவால் கையாளப்படுகின்ற ‘காலதாமதம் செய்யும் தந்திரமாகும்.’ இன்னொரு அற்புதம் அல்லது சாதனையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்வேளையில் மற்றவர்களிடம் கடன்வாங்கிவிடுவார்கள்.

இவர்களிடம் ஒரு தொழில் பற்றிய பிரகாசமான சிந்தனைகள், திட்டங்கள் இருக்கும், ஆனால் அவர்கள் எவ்வளவுதான் கடினமாக முயன்றாலும் அவர்களால் அதனால் பலனடைய முடியாமலிருப்பார்கள். ஆனால் இவர்களிடமிருந்து காரியங்களை அறிந்துகொண்டு செயல்பட்டவர்களோ இதில் வெற்றிபெற்று திகழ்வார்கள். இது உங்கள் நிலையானால், நீங்கள் கடினமாய் வேலைசெய்ய வேண்டும் என்றும் பிறர் சும்மாஇருந்து அனுபவிக்கவேண்டும் என்றும் இப்பிசாசுகள் கிரியைசெய்கின்றன என்று அர்த்தம். மொத்த வேலையையும் நீங்கள் செய்தும் இன்னொரு நபர் நற்பெயரை எடுத்துக்கொள்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்களை உங்களுக்கு நிகழ்ந்திருக்குமானால் உங்களைச் சுற்றிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிற பிசாசுகளை அழித்தாக வேண்டும். இதுபோன்ற காரியங்கள் நற்செய்தி ஊழியம் செய்கின்றவர்களுக்கும் அவர்களது மந்தைகளுக்கும்கூட நேரக்கூடும். இது பிசாசுகளின் வேலையாக இருப்பதால் இவைகளை முற்றிலும் எதிர்க்க வேண்டும்.

1994 டிசம்பர் மாதத்தில் லாகோஸிலிருந்து (Lagos) வந்த ஒரு சகோதரன் கடந்த சில வருடங்களாக அவர் பட்டபாடுகளை எல்லாம் சொல்லி என்னிடம் புலம்பிக்கொண்டிருந்தார். அவரிடம் நான் கேட்ட சில கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்கள்மூலம் பின்தங்கிய நிலையில் அல்லது முன்னைவிடவும் மோசமான நிலைக்கு கொண்டுசெல்லும் அசுத்த ஆவி அவருடைய வாழ்க்கையில் செயல்பட்டுக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியது. அவரைச் ஜெபிக்கும்படி சொன்னேன். அவர் ஜெபித்து முடித்தபின் நான் அவருக்கு ஊழியம் செய்வதாக சொன்னேன்.

சிலருக்கு பிசாசு என்றாலே பிடிக்கவில்லை என்பதை அவர்கள் பிசாசை நடத்தும் முறையிலிருந்து, அவர்களது பேச்சிலிருந்து செய்கையிலிருந்து எளிதாகப் புரிந்துகொள்ளலாம். அந்த சகோதரன் பிசாசிடம் தயவுதாட்சண்யமில்லாமல் உண்மையில் கொடூரமாக நடந்துகொண்டார். பரிசுத்தஆவியின் அக்கினியை அனைத்து அசுத்தஆவிகளின் மீதும் கட்டவிழ்த்தார். அவர் அப்படி ஜெபித்தது எனக்கு விருப்பமானதாக இருந்தது. அவர் ஜெபித்து முடித்ததும் நான் அவருக்கு ஊழியம் செய்தேன். அதன்பின் அவர் சென்றுவிட்டார்.

‘விடுதலை மற்றும் சுகமாக்கும் பள்ளி’லாகோஸ் என்ற இடத்தில் நடைபெறுகிறதைக் கேள்விபட்டு அங்கே அவர் சேர்ந்தார். 1995 மார்ச்சு மாதத்தில் என்னிடம் வந்து அவர் விடுதலை அடைந்த பின்னர்,நம்புவதற்கே ஆச்சரியமாகத் தோன்றும் வண்ணம் தேவனிடமிருந்து அவர் பெற்றுவருகின்ற ஆசீர்வாதங்களை சொன்னார். இன்று அவர் நிம்மதியாக இருக்கிறார். நீங்களும் இயேசுவின் நாமத்தில் நிம்மதியாக இருக்கலாம்.

1994 டிசம்பர் மாதத்தில், ஓசன் மாநிலத்திலுள்ள ஓசோக்போ என்ற இடத்தில் நடைபெற்ற பெண்களால் நடத்தப்பட்ட ஊழியகூட்டத்தில் நான் ஊழியம் செய்தேன். இறுதியில் ஒரு தம்பதியினர் என்னிடத்தில் வந்தார்கள். 16ஆண்டுகளாக ஒரு கட்டிடம் கட்டும் பணியை பொறுப்பெடுத்து பெரியஅளவில் செய்துவந்தனர். சந்திக்கவேண்டிய அநேகதேவைகள் இருந்தது, பள்ளிக்கூடக்கட்டணம் செலுத்தவேண்டியிருந்தது. விலைவாசி ஏற்றத்தால் நிலைமை இன்னும் மோசமாகி கட்டுமானப்பணிதிட்டவேலை எல்லாமே ஸ்தம்பித்து நின்றுவிட்ட நிலை. அவருக்கு பொருளாதாரத்தில்- பணக்காரியத்தில் ஒரு அற்புதம் நடந்தாகவேண்டும். இது எடுத்தவேலையைகைவிட்டுவிடச்செய்யும் ஒரு அசுத்தஆவியாக இருந்தது. நாங்கள் ஒன்றாக ஜெபித்து முடித்தபின்னர் “அந்த வேலையை எப்போது தொடரப்போகிறீர்கள்” என்று விசுவாசத்தில் அவர்களிடம் கேட்டேன். 1995 ஏப்ரல் மாதம் என்றார்கள். நானும் அக்காரியத்தில் அவர்களோடு ஒருமனப்பட்டு ஏற்றுக்கொண்டேன். அதன்பின் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

ஒரு மணிநேரத்திற்குப்பின் அப்பெண்மணி இன்னொரு மனிதனை அழைத்து கொண்டுவந்தாள். அவள் சொல்வது உண்மைதான் என்று நம்பச்செய்வதற்காக ஒரு மனிதனை அவளோடு அழைத்து வந்தாள். அவளும் அவள் கணவனும் வீட்டிற்குத் திரும்பிய சில நிமிடங்களில் இன்னொரு மாநிலத்திலிருந்து வந்த ஒரு குடும்ப நண்பர் அப்பெண்மணிக்கு ஒரு இலட்சம் நைஜீரியா பணத்தை (N100,000) கொடுக்கும்படிதேவன்

அந்நண்பரின் இதயத்தில் பேசியதாகச் சொன்னாள். நம்பமுடியாததாக இருந்தது. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

இன்னொரு சாதனைமிக்க சாட்சி ஓசோக்போ கூட்டத்திற்கு வந்த இன்னொரு தம்பதிகளிடமிருந்து வந்தது. அந்த பெண்மணியின் வாழ்வில் ஒன்றன்பின் ஒன்றாக அநேக நஷ்டங்கள் ஏற்பட்டது. பல ஆயிரக்கணக்கான பணத்தை அவளிடமிருந்து ஏமாற்றிச் சென்றுவிட்டனர். இன்னொரு மாநிலத்திலிருந்து அவளுக்கென்று வந்த பொருட்கள் களவாடப்பட்டது. சுருக்கமாகச் சொல்லப்போனால் இதுபோன்ற நான்குவகையான நஷ்டங்கள் அவள் வாழ்வில்! ஆகவே அவள் கையில் ஒன்றுமில்லாத நிலை. அவளோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவளுடைய கணவரும் இதேபோல துன்பத்தை சந்தித்து வருவதாகச் சொன்னாள். ஆகவே அவளுக்கு ஆலோசனை சொல்லிவிட்டு அவளுடைய கணவரையும், ஜெபிப்பதற்கு கூட்டிக்கொண்டுவரும்படி சொன்னேன். அவளுடைய கணவனுடைய நிலைமை அவளைவிட பரிதாபமாக இருந்தது. கர்த்தர் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்று நான் கேட்டேன். வியாபாரம் செய்து பணம் சம்பாதிப்பதற்காக ஒரு கார் வாங்க விரும்புவதாக அம்மனிதர் சொன்னார்.

நானும் அவர்களோடு சேர்ந்து ஒருமனப்பட்டு ஜெபித்தேன். அதன் பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள். இது நடந்தது 1994 டிசம்பர் மாதம். நான் ஆச்சரியப்படும் அளவில் சில வாரங்கள் கழித்து இபதானிலுள்ள அலுவலகத்திற்கு ஒரு கார் சாவியோடு அந்த தம்பதியர் வந்திருந்தனர். காரைவிற்க விரும்பிய காரின் சொந்தக்காரர் அவர்களிடம் வந்து அந்த பியூசியட் 504 காரை அவர்களுக்கு விற்க விரும்புவதாகவும் அதை அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் உணர்த்துவதாலும் அதை இவர்களுக்கு விற்காமல் காலதாமதப்படுத்துவது அவருக்குச் சமாதானக்குறைவை ஏற்படுத்துவதாலும் அவர்களால் பணம் கொடுக்க முடிந்தாலும் முடியாவிட்டாலும் அவர்களுக்கே அதை விற்க விரும்புவதாக தெரிவித்தார்.‘எவ்வளவு பணம் உங்களிடம் இருக்கிறது?’ என்று கேட்டார்கள். நைரா5000தான் (N5000) என்றோம். அதை அவர் ஏற்றுக்கொண்டு மீதிபணத்தை பிறகு கொடுங்கள் என்று சொன்னார். ஒரு பியூஜியட் (Peugeot 504 Saloon) வாகனத்தை 5000நைராவுக்கு இத்தம்பதிகள் பெற்றுக்கொண்டனர். அந்த கார் சாவியையும் 5000நைரா பணத்துக்கான ரசீதையும் பார்த்து ஆனந்த சத்தமிட்டேன்.

அன்பு நண்பரே! உங்கள் முன்னேற்றத்தை தடுக்கிற பிசாசின் வல்லமைகளுக்கு எதிராக எழுந்து சவால் விடுங்கள், உங்களால் வெற்றிபெறமுடியும். நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தால் கர்த்தர் இயேசுகிறிஸ்து உங்கள் பக்கத்தில் ஆதரவாக இருக்கிறார்.

**முன்பு குடியிருந்த வீட்டை, பள்ளிக்கூடத்தை, அலுவலகத்தை அல்லது நீங்கள் ஏற்கெனவே வெற்றிபெற்ற தேர்வை மறுபடியும் எழுதுவதுபோல கனவு கண்டால்:** (Dreaming of former house, school, office, writing examinations you have passed before)

இக்கனவு காணும் நபர்களை, பின்னோக்கிய நிலைக்கு கொண்டுசெல்கிற அசுத்த ஆவியும் வேலையை பாதியில் விட்டுவிடச்செய்யும் அசுத்த ஆவியும் (demons of retrogression and abandonment) செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பொருள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு கனவு ஒருவருக்கு ஏற்பட்டிருந்தால் ‘அழிக்கும் அட்டூழித்தைச் செய்யும் சத்துரு’ அந்நபரின் வாழ்க்கையின் ஏதோ ஒரு பகுதியை பிடித்துவைத்துக்கொண்டு அவன் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறான் என்று பொருள். முன்பு வீடுகளும் நிலங்களும் கொண்ட செல்வந்தனாக இருந்தாலும் இப்படிப்பட்ட கனவுகளானது அந்த நபரை குறுகிய காலத்திற்குள் கீழ்நிலைக்கு கொண்டுவரச்செய்யகூடும். மட்டுமல்ல அந்நபர் ஒரு கார் வைத்திருப்பாரானால் அவருடைய குடும்பத்தை கவனிப்பதற்கும் உணவளிப்பதற்கும் பணமில்லாமல் இறுதியில் அக்காரையே விற்றுப்போட வைத்துவிடும். ஒவ்வொரு கோணத்திலிருந்தும் திசையிலிருந்தும் விவரிக்கமுடியாத பிரச்சினைகளை வரும்படிசெய்து இறுதியில்

இருப்பதையெல்லாம் விற்கிறவனாகவும் எல்லா வங்கிகளுக்கும் ஒரு கடன்காரனாகவும் மாற்றிவிடக்கூடும்.

பின்னடையச்செய்கின்ற (உயர்மட்டத்திலிருந்தவரைத் தரைமட்டத்திற்கு கொண்டுவரச்செய்கின்ற,வர வர சீர்கேட்டை ஏற்படுத்துகின்ற) எடுத்த காரியத்தை முடிக்க விடாமல் பாதியில் கைவிட்டுவிடச்செய்கின்றஅசுத்தஆவிகளின் நோக்கமெல்லாம் அவர்களிடம் சிக்குண்ட மனிதனை கீழ்நிலைக்கு கொண்டுவரச்செய்வதுதான்.எந்த ஒரு பொறுப்பெடுத்தாலும் அதில் திடீரென்று உற்சாகமிழக்க வைத்து இறுதியில் அந்த வேலையை வேண்டாம் என கைவிட்டுவிடச்செய்கிறது. ஒருவருக்கு நல்ல சம்பளம் உள்ள வேலை இருந்தும், காரணமில்லாமலே அதைவிட நல்லவேலை கிடைக்கும் என்று அவர்களை எண்ணவைத்து கையில் இருக்கிற வேலையை திடீரென்று விட்டுவிடவைத்து திண்டாடவைக்கக்கூடும். கடைசியாக தெரியாமல் அல்லவா வேலையை விட்டுவிட்டேன் என்று மனம் வருந்தத் துவங்குவதற்கே ஒரு ஆண்டுக்கு மேலாகிவிடும். எதிர்ப்பார்த்த சிறந்த வேலை அடுத்த ஒரு ஆண்டுகூட வராமல் இருக்கக்கூடும்.

ஒருவேளை அவன் கிறிஸ்தவனாக இருந்தால், கர்த்தரே அவனை வேலையை ராஜினாமா செய்யும்படி வழிநடத்தினார் என்று கூடசொல்லவைக்கும்; ஆனால் ஒரு ஆண்டு கடந்து சென்றபின் ஒன்றுமே வராததைக்கண்டு வேலை இல்லாமலிருப்பதற்கு என்னுடைய புத்தியீனந்தான் காரணம் - என் புத்தியீனந்தான் என்னை வழிநடத்தியிருக்கிறது என்பதை அவன் புரிந்துகொள்வான். வேலையை விட்டுவிடு என்று தேவன் சொல்லியிருந்தால் நிச்சயமாக அதைவிட சிறந்தவேலையை,செய்வதற்கு சிறந்தபணியைக்கிடைக்கப்பண்ணி யிருப்பாரே! ஆனால் துயரமான காரியம் என்னவென்றால் இம்மக்களுக்கு பிசாசுகொடுத்த அபிப்பிராயத்தை மாற்றிடச் செய்வது கூடாத காரியம். அதனால் அழிவு வந்தபின்தான் அவர்களது தவறு அவர்களுக்கே புரியும்!

---

# ஐந்து

---

## பாலியல் தொடர்பான கனவுகள்
(Sex related dreams)

**உடலுறவு செய்வதுபோல, களியாட்டத்தில் ஈடுபட்டதுபோல, காதலிப்பதுபோல அல்லது திருமணம் செய்வது போல கனவு காண்போர்** :(Those who have sex, merry or make love of any kind or degree in the dream)

இப்பகுதியில்,இந்நாளில், மக்களை பிசாசு பயங்கரமாக தாக்கிக்கொண்டிருக்கிறான்.இப்பகுதியில் பிசாசுக்கு எதிராக பயன்படுத்தவேண்டும் என்று தேவன் நமக்கு கொடுத்துள்ள ஏற்ற வேதவாக்கியங்களை முழுமையாக பயன்படுத்தாததால் அநேக கிறஸ்தவர்கள் அடிமைத்தளைக்குள் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இவ்வகையான கனவுகாணும் நபர்கள் அடிக்கடியோ அல்லது எப்போதாவதோ கீழே குறிப்பிடப்பட்ட அனுபங்களில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ காணக்கூடும்.

- தான் நிர்வாணமாக இருப்பதுபோல காண்பார்கள்
- யாராலோ அணைக்கப்படுவதுபோன்றோ அல்லது பாலியல் உணர்வு தூண்டிவிடப்படுவது போன்றோகாண்பார்கள்

- காதல் வயப்பட்டவர்கள் பேசுவதுபோன்றோ, திருமணம் நிச்சயமாவதுபோன்றோ அல்லது திருமணம் ஆவது போன்றோ அல்லது சேர நெருங்கிவருகிறவரை புறக்கணித்து தள்ளுவதுபோன்றேகாண்பார்கள்.
- ஈரப்படுத்தும் பாலியல் கனவுகள்
- எதிர் பாலினரிடம் சேர்ந்ததுபோல கனவு; தனது வாழ்க்கைத்துணையைப்போன்ற தோற்றமளிக்கும் நபரோடு சேர்ந்ததுபோல கனவு.
- கருவுற்றதுபோலவும், பிள்ளைகள் இருப்பதுபோலவும் அவர்களோடு விளையாடுவது போலவும், அவர்களுக்கு ஆகாரம் கொடுப்பதுபோலவும்காண்பார்கள்.
- மாதவிலக்கு வரும் முன்னதாக இரத்தத்தை அல்லது சிவப்பு பொருட்களை கனவில் காணுதல். (உதாரணமாக:-. பனங்காய், சிவப்பு மிளகு போன்றவை)
- கனவில் யாரோ உங்களது குழந்தையை எடுத்தது போலவும் அதைத் திரும்பத் தராததுபோலவும் அதன்பிறகு உண்மையிலேயே குழந்தை இழந்த அனுபவம்

*'உடன்படிக்கைகள், சாபங்கள் மற்றும் வெளியே வரும் வழி'*என்ற எனது புத்தகத்தில் காதலிப்பதுபோல கனவுகண்டால் கீழே குறிப்பிட்ட மூன்று காரியங்கள் நிகழக்கூடும் என்று சொல்லியிருக்கிறேன்.

- ஏற்ற காலத்தில் திருமணம் ஆகாத நிலை
- ஏற்றவேளையில் பிள்ளை பெறாதநிலை
- நிலையில்லாத வீடு

நாங்கள் மக்களுக்காக ஆலோசனை கொடுக்கும்போதும் உபவாசித்து ஜெபிக்கும் போதும் பரிசுத்தஆவியானவர் இந்த தலைப்பைக்குறித்து இன்னும் அதிகதெளிவையும் அதிகசிறுதலைப்புகளையும் கொடுத்தார். அப்போதுதானே சத்துருவை வல்லமையாய் எதிர்கொள்ள முடியும். நமது வெற்றி உறுதி!

**அஸ்மோதி மற்றும் அபதான்** (*asmodee* and *abaddon*) என்ற இரண்டு பாலியல் பிசாசுகள் இக்கனவுகளுக்கு அடிப்படையாக உள்ளன. பலர், பலபெயர்கள் கொடுத்தாலும் சிலர் இவைகளை ஆவிஉலககணவன் என்றும் ஆவிஉலகமனைவி என்றும் அழைக்கிறார்கள். ஒன்றன்பின் ஒன்றாக கவனிப்போம்.

### *கனவில் தான் நிர்வாணமாக இருப்பதுபோலப் பார்த்தல்(Seeing oneself naked)*

என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம். (யாத்திராகம் 20: 26)

நமது நிர்வாணமானது காணப்படக்கூடாது என்று வேதாகமம் சொல்கிறது. ஆகவே எவரையும் கனவில் நிர்வாணமாக்குவது தேவன் அல்ல. கணவன் மனைவியும் ஒன்றாக சரீரபிரகாரமாக நிர்வாணமாக இருந்தாலும் வெட்கப்படாதிருந்தார்கள் ஏனென்றால் வேதாகமத்தின்படி அவர்கள் ஒரே சரீரமாக இருந்தார்கள் (ஆதியாகமம் 2: 24-25). கனவில் உங்களை நிர்வாணமாக்குகிறது எதுவாக இருந்தாலும் அதை நிராகரித்து விடுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இவ்வகையான கனவுகளை தள்ளுபடிசெய்துவிடுங்கள்.

### *யாராலோ அணைக்கப்படுவதுபோல அல்லது யாராலோ பாலியல் உணர்வை தூண்டுவிடப்படுவது போல (Being romanced or caressed)*

பிசாசு இந்நபரின் வாழ்க்கையில் ஆபத்தான அளவுக்கு எதிர்மறையான காரியங்களை செய்ய நுழைந்திருக்கிறது என்பதை இக்கனவு உணர்த்துகிறது. இதற்கு நடைமுறையில் செய்ய வேண்டிய பரிகாரம் என்னவென்றால் பாலியல் உணர்வூட்டும் ஒவ்வொரு திரைப்படத்தையும், புகைப்படத்தையும், சிடியையும் (குறுந்தகடுகளையும்), பாடலிசையையும், மற்றும் எதிர்பாலினத்தாரோடுள்ள அல்லது பாவகூட்டாளிகளோடுள்ள நெருக்கமான உறவையும் உடனடியாக விட்டுவிடுங்கள்.

***காதல் வயப்பட்டு பேசுவதுபோன்றோ, திருமணம் நிச்சயசெய்வதுபோன்றோ அல்லது திருமணம் ஆவது போன்றோ** (Being courted or getting engaged or married)*

நீங்கள் மேற்குறிப்பிட்ட எதாவது ஒரு கனவை கண்டால் நிஜவாழ்க்கையில் திருமணம் செய்வதற்கு மிகவும் சிரமப்படக்கூடும்; அப்படியே திருமணமானாலும்கூட நிலையான அல்லது இயல்பான தாம்பத்தியவாழ்க்கை வாழ்வது சாத்திமற்றதாக இருக்கக்கூடும். ஏனென்றால் நீங்கள் ஏற்கெனவே ஆவிக்குரிய உலகில் ஒரு பிசாசை திருமணம் செய்திருக்கிறீர்கள். ஆகவே அந்த பிசாசானது அதனுடைய மனைவிமீதும் அல்லது அதனுடைய கணவன் மீதும் உரிமைபாராட்டுகிறது என்பதையும் இக்கனவு வெளிப்படுத்துகிறது.

உங்கள் சார்பாக பிசாசுகளின் உலகிலிருக்கும் அந்த வீட்டை அழித்து,கனவில் உங்களோடு செய்யப்பட்ட அத்திருமணத்தை அல்லது திருமணநிச்சயஒப்பந்தத்தைஉடைக்காவிட்டால் அனைத்து உபவாசமும் இரவுவிழிப்புஜெபமும்செய்தாலும் அந்நியபாஷையில் பேசினாலும் நற்பலன் ஒன்றும் ஏற்படாது என்பதை அனுபவங்கள் நிரூபித்திருக்கிறது. குடும்பங்களை உடைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அமர்த்தப்பட்ட பிசாசானது ‘‘abaddon- அபதான்’’ என்று அழைக்கப்படுகிறது. உங்களோடு இரண்டு அனுபவங்களை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**1992 மே மாதத்தில்** அகிலஉலக வியாபாரிகளின் பூரண சுவிஷேச ஐக்கியத்தார் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் நான் பிரசங்கம் செய்தேன். கூட்டம் முடிந்ததும் ஒரு பெண் அழுதவாறு என்னிடத்தில் வந்தாள். அவளுடைய வாழ்க்கையில் 11முறை திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதாகவும் 11முறையும் எதாவது ஒரு வகைக் காரணத்தால் அத்திருமணநிச்சயஒப்பந்தம் முறிந்துபோயிற்று என்றும் சொன்னாள்.அவளது வயது சுமார் 30க்கு மேலாக இருக்கும்,குழம்பிய நிலையில் காணப்பட்டாள்.

‘‘நீ எப்போதாவது திருமணம் ஆனதுபோலவோ,திருமணம் நிச்சயமானதுபோலவோ,எந்தமனிதனுடைய வீட்டிலாவது வாழ்ந்ததுபோலவோ கனவு கண்டாயா?’’ என்று அவளிடம் கேட்டேன்.‘‘ஆம்’’ என்றாள். அப்போது நான் ‘‘உன் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது’’ என்று சொன்னேன்.‘‘எப்பொழுது திருமணம் நடக்கவேண்டும் என்று விரும்புகிறாய்’’ என்றுவிசுவாசத்துடன் கேட்டேன்.அதே ஆண்டு அதாவது 1992க்குள் திருமணம் நடக்கவேண்டுமென்று விரும்புவதாகச் சொன்னாள்.ஆவிக்குரிய மண்டலத்தில் பிசாசோடு செய்யப்பட்ட திருமணத்தை இயேசுவின் நாமத்தில் ரத்து செய்துவிட்டு ஜெபித்தோம் கர்த்தர் எங்களுக்கு வெற்றிதந்தார். ஜூலைமாதத்தில் (2மாதங்களுக்கு பிறகு), லாகோசிலிருந்து ஒருவிசுவாசியோடு அவளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதாகவும், அக்டோபர் மாதத்தில் (5மாதங்களுக்குப்பின்னர்) அவர்களுக்கு திருமணமானதாகவும் நற்செய்தியை என்னிடத்தில் சொன்னாள். 1993ஆம் ஆண்டு. அவளுடைய முதல் மகனை தேவனுடைய மகிமைக்காக பிரதிஷ்டை செய்தேன்.

**1992 ஜூன் மாதத்தில்**எங்களது ஊழியத்தில் வழக்கமாக கடைசி வெள்ளிக்கிழமை இரவுவிழித்திருப்பு ஜெபக்கூட்டம் இருந்தது.பிசாசு அமைத்திருக்கும்அரண்களின் பகுதிகளை எப்படி அடையாளங்கண்டுகொள்வது என்று கற்றுக்கொடுத்தேன். ஜெபிக்கும் வேளையில் ஒரு பெண்மணி சத்தமிட்டவாறு விழுந்தாள். அவளோடு ஜெபித்துவிட்டு மற்றவர்களுக்காக ஜெபிக்கச் சென்றேன். இரண்டு நாட்களுக்கு பிறகு ஒரு சாட்சியோடு அவள் திரும்பி வந்தாள்.அந்த விழிப்பு ஜெபகூட்டத்தில்தான் நான் அவளை முதன்முறையாக பார்த்தேன்.

அவளும் அவளுடைய கணவனும் ஒருவருக்கொருவர் பேசி பலமாதங்களாகிவிட்டது என்றும் அவர்களுக்குள்ளே எவ்விதச்சண்டையோ கருத்துவேறுபாடோ கிடையாது என்றும் அவள் சொன்னாள்.ஒரு நாள் அவன் வேலைக்குபோய் வீடு திரும்பிவந்து அவள் ஒரு சூனியக்காரி என்றுசொல்லிவிட்டு அவ்வேளையிலிருந்து வீட்டில் சாப்பிடுவதை அவன் நிறுத்திவிட்டதாகவும் சொன்னாள்.

அவனது ஆகாரத்தைஅவனது படுக்கை அறையிலேயே சமைக்க ஆரம்பித்தான், அங்கேயே தேநீரையும் அருந்தினான். மதியஉணவை அவனதுஅலுவலகத்திலேயே சாப்பிடுவான். இரவு தூங்க வீட்டுக்கு வரும்முன்னதாகவே இரவுசாப்பாட்டை முடித்துவிடுவான். அவர்களுக்கு பிள்ளைகளிருந்தது, ஒருகாலத்தில் அவர்கள் சந்தோசமாக சபைக்கு செல்லும் தம்பதியராக இருந்தனர். அவள் அவனிடம் கெஞ்சிப்பார்த்தாள், அவனது நண்பர்களிடமும் உறவினரிடமும் சொல்லிப்பார்த்தாள். அவர்கள் தலையிட்டுப்பார்த்தும் ஆக்கப்பூர்வமான எப்பலனும் இல்லை. இந்நிலை பலமாதங்களாகஅந்த கடைசி இரவு விழிப்பு ஜெபநாள்வரை தொடர்ந்தது.<u>அவர்களது திருமணஉறவில் கேட்டை உண்டுபண்ணக் காரணமாக இருந்தது *அபதான் (abbadon)* என்பது எனக்கு புரிந்துவிட்டது.</u>அறியாமையினால் அந்த இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனால் அன்று அவள் செய்தியை கேட்டபின் *அபதான்* என்ற பிசாசை துரத்தினாள், அதன்பின் நான் அவளோடு ஜெபித்தேன். அப்போது அதிகாலை சுமார் 3.15இருக்கும்.

அவள் வீடு திரும்பியபோது, அவளுடைய கணவனை அவளதுவீட்டுவாசலிலேயே சந்தித்தாள். அவளுடைய கணவனை வாழ்த்த முயலாமலே உள்ளே சென்றுவிட்டாள். ஏனென்றால் கடந்த காலத்தில் வாழ்த்தினால்கூட பெரிய உபத்திரவத்தை அனுபவித்திருக்கிறாள்.ஆனால் அவளுடைய கணவனோ அங்கேயே அவளை வாழ்த்தியவாறு கட்டி அணைத்தான், காலைஉணவு ஆயத்தம் செய்ய பொருட்கள் வாங்க 500நைரா பணத்தை கொடுத்ததோடு தாமதம் ஏற்படாமலிருக்க அவனே அவளை சந்தைக்கு அழைத்து சென்றான். பலமாதங்களுக்கு பிறகு அன்றுதான் முதன்முறையாக இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

அப்பெண்ணுக்கு என்ன நடக்கிறது என்றே புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தது. திடீரென்றுஏற்பட்ட இந்த இதயமாற்றத்திற்கான காரணம் என்ன என்று கணவனிடம் கேட்டாள். அவள் ஜெபகூட்டத்திற்கு சென்ற இரவில் அவன் ஒரு கனவு கண்டதாக அவளிடம் சொன்னான். அந்த கனவில் யாரோ வந்து அவனுடைய மனைவி பொன்னைப்போன்றவள் என்றும் அவளை இழப்பது என்பது ஒரு விலைஉயர்ந்த நகையை இழப்பதுபோல, அவன் முழுவாழ்க்கையையும் இழப்பதுபோல அர்த்தப்படும் என்று சொன்னதாக தெரிவித்தான். உடனே எழுந்து அவனுடைய மனைவியின் படுக்கை அறைக்கு சென்றான். அங்கே அவள் இல்லாததால், அவனுடைய மகனை எழுப்பி அம்மா எங்கே என்று கேட்டான். அப்போது அந்த பையன் அம்மா இரவு விழிப்பு ஜெபத்திற்கு சென்றிருப்பதாகவும் காலை 5.30க்குத்தான் வருவார்கள் என்றும் தெரிவித்தான். அவன் அவளுக்குச் செய்த எல்லா தீயகாரியங்களுக்காக அவளிடம் மன்னிப்புகேட்கவேண்டும் என்று காலை 3.30மணிமுதல் அவள் வருகைக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருந்ததாக அவளிடம் சொன்னான்.

குறுகிய நேரத்திற்குள் அவளுடைய ஜெபத்திற்கு அருமையான ரீதியில் பதில் கிடைத்ததை குறித்து அந்த சகோதரி வியப்படைந்தாள். இரவு விழிப்பு ஜெப கூட்டத்தில் <u>தேவ ஊழியர் பிசாசின் அரண்களை எப்படி உடைக்கவேண்டுமென்று கற்றுக்கொடுத்தார் என்பதையும் அவள் எப்படி அபதான் என்ற ஒரு பிசாசை அவர்களுடைய வீட்டை விட்டு விரட்டினாள் என்பதையும் அவளுடைய கணவனிடம் தெரிவித்தாள்</u>. அந்த மனிதனுக்கு ஆர்வம் ஏற்பட்டதால் என்னை பார்க்கவேண்டுமென்று அவளிடம் வேண்டிக்கொண்டான்..

செவ்வாய் கிழமை கூட்டத்திற்கு அவர்கள் இருவரும் வந்திருந்தார்கள்,அன்று இயேசுவுக்கு அவனது வாழ்க்கையை அர்ப்பணித்தான். எனக்கு இது தெரியாது. ஆனால் மக்களின் தலையில் கைகளைவைத்து ஜெபித்தவாறு வந்துகொண்டிருந்தபோது, அந்த பெண்ணின் தலையில் கைகளை வைத்தபோது, அவள் என் காதுகளில்,‘‘ஐயா பின்பக்கம் இயேசுவுக்கு தன்வாழ்வை ஒப்புக்கொடுத்த அந்த உயரமான மனிதன்தான் என் கணவர், அவரைக்குறித்துதான் நான் நேற்று உங்களிடம் சொன்னேன். தயவுசெய்து அவர்மீது கவனம் செலுத்துங்கள்’’ என்றாள். நான் சிரித்தேன். அந்த திருமணவாழ்க்கையை மீட்டுக்கொண்ட தேவன் உங்கள் வாழ்க்கையையும் கூட மீட்டுக்கொள்வார்.<u>*குடும்பத்தை அழிக்கிற அபதான் என்ற பிசாசை விரட்டினால் பல்லாண்டுகளாக*</u>

*உடைந்துகிடக்கும் அநேக குடும்பங்களிலுள்ள தம்பதியர்கள் ஒருவருக்கொருவர் ஒப்புரவாக்கப்படுவார்கள்*என்று நான் இதை எழுதிக்கொண்டிருக்கும்போதே பரிசுத்தஆவியானவர் என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார். யோபு இந்த தீய பிசாசைப்பற்றி பேசியிருக்கிறார்.

> என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக. அது தோஷம், அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படும் அக்கிரமமாமே. அது பாதாளபரியந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் சம்பத்தையெல்லாம் நிர்மூலமாக்கும். (யோபு 31: 9-12)

### ***ஈரப்படுத்தும் கனவுகள்*** *(Having wet dreams)*

ஈரப்படுத்தும் பாலியல் கனவு எற்பட்ட நாளிலிருந்துதான் அநேக ஆண்களது விந்துஅணுக்களின் எண்ணிக்கை குறையும் பிரச்சினை ஆரம்பிக்கிறது. (உறங்கும்போது, பிசாசியின் தலையீடு இல்லாமலே விந்துவெளியேறுவதற்கும் வாய்ப்புண்டு.) பருவம் அடைந்த காலத்திலிருந்து இது ஒரு பையனுக்கு நேரிடமுடியும். மனைவி அருகில் இல்லாத ஒரு மனிதனுக்கும்இப்படி நேரிடக்கூடும். சுயஇன்பத்தில் ஈடுபடாத மனிதனுக்கும் எதிர்பாலினரோடு உடலுறவுகொள்ளாத மனிதனிடமிருந்தும் விந்து இயற்கையாக வெளியேறும். தேங்கும் தொட்டி நிறைந்துவிட்டதாலும் புதிய விந்து உற்பத்தியாகி சேருவதற்கு இடம் தேவைப்படுவதாலும் இப்படி நேருகிறது.

ஆனால் ஒரு மனிதன், கனவில் ஒரு பெண்ணைப்பார்க்கும்போது அவன் விந்து வெளியேறுகிறதாக இருந்தால் அவன் அந்த பெண்ணோடு காதல்வயப்படுகிறான் என்று பொருள்படுவதாலும் இப்படிபிசாசின் காரியங்கள் அந்த மனிதனுக்குள் விதைக்கப்படக்கூடும் என்பதால் இத்தீயகனவை உடனடியாக நிராகரித்து,ரத்துசெய்துவிட வேண்டும்.

### ***எதிர்பாலோருடன் உடலுறவு கொள்வது போன்ற கனவு****(Mating with the opposite sex)*

அநேகருடைய கனவுகளில் அடிக்கடி இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும். உறங்குமுன்னதாக இச்சையான எண்ணங்களை இஷ்டம்போல ஓடவிட்டதின் விளைவாக, சிலவேளைகளில் இப்படிப்பட்ட கனவு வருகிறது. இது நல்லதல்ல ஏனென்றால் ஒரு நல்ல கிறிஸ்தவன் எப்போதுமே சுத்தமான எண்ணங்கள் உடையவனாக இருக்க வேண்டும்.*அபதான்* மற்றும் *அஸ்மோதி* என்பவைகள் தீய சிந்தனையைத்தூண்ட வகைதேடக்கூடும். இதில் எதுவாக இருந்தாலும் பிசாசு கிரியை செய்கிறான். உங்கள் கனவு மூலமாக உங்களைஅசுத்தப்படுத்தும் எதையும் தேவன் செய்வதில்லை. இப்படி ஒரு பெண்ணுக்கு நேரிட்டால், இவ்வழியாக அநேக சாத்தானுக்குரிய காரியங்களை ஆவிமண்டல கணவனால் அவளுக்குள் விதைக்கப்படுகிறது. கனவில் ஏற்பட்ட உடலுறவால் ஏற்படும் சில தீயவிளைவுகள்:-

(1) ***வேதனையுள்ள மாதவிலக்கு:*** *(Painful menstruations or dysmenorhea)*

எவ்விதமான வேதனையுள்ள மாதவிலக்காக இருந்தாலும் அது தேவனிடத்திலிருந்து அல்ல,பிசாசிடமிருந்து வந்ததாக இருக்கிறது. கிறிஸ்துவானவர் நியாயப்பிரமாணத்தினால் வருகிற வேதனையிலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மை மீட்டுவிட்டார் (*கலாத்தியர் 3:13*). 1984இல், பொதுவாகமாதவிலக்கு வேளையில் மிகவேதனைப்படும் ஒரு 16வயது பெண்ணோடு நான் ஜெபித்தேன். அவளுக்கு நான் விடுதலை ஊழியம் செய்துகொண்டிருந்தபோது திடீரென்று பிசாசு அவள் மூலமாக,“அவள் என்னை திருமணம் செய்ய மறுத்தாள் ஆகவே நான் அவளுக்கு ஒரு பாடம் கற்பிப்பேன்.”

என்று பேசியது. நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் அந்த பிசாசை துரத்திய பிறகு,வேதனை நின்றது, அதற்குப் பிறகு அவளுக்கு மாதவிலக்குவேளையில் வேதனை வரவில்லை.

(2) ***அடிவயிற்றில் வேதனை, அடிவயிற்றில் சத்தம், இடுப்புவலி, முதுகுவலி, அல்லது மாதவிடாய் வேளையில் அதிக இரத்தப்போக்கு*** *(Lower abdominal pain, noise in the abdomen, waist pain, back pain or heavy flow of blood during menses.)*

இது போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு எவ்வகையான சிகிச்சை அளித்தாலும் அது தற்காலிகமான பரிகாரந்தான். நான் என்ன சொல்கிறேன் என்பதை எனது வாசகர்களில் அநேகர் புரிந்துகொள்வார்கள். இது போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ அறிவியலில் ஒரு நிரந்தரமான பரிகாரம் கிடையாது. இயேசு கிறிஸ்துவுக்குள்தான் நிரந்தரமான தீர்வு இருக்கிறது.

(3) ***ஒழுங்கற்ற மாதவிலக்கு அல்லது மாதவிலக்கு வராத நிலை :*** *(Irregular or no menstruation)*

ஒரு பெண் பருவமடையும் வயதுவந்தும், இன்னும் மாதவிலக்கு வரவில்லை என்றால் அல்லது மாதவிலக்கு வரும் நாட்கள் ஒழுங்கில்லாமலிருந்தாலோ அல்லது இரத்தப்போக்கு மிககுறைந்த அளவாக இருந்தாலோ, இந்நிலை பலஆண்டுகளாக இருந்தாலோ, அந்த பெண்ணுக்கு நிச்சயமாக விடுதலை தேவை. இதில் சிலருக்கு இது மருத்துவ காரணமாக இருந்தாலும், பெரும்பாலோருக்கு, இப்பிரச்சினையை ஏற்படுத்தும் பிசாசை துரத்தினாலே சரியாகிவிடும்.

1994 ஆகஸ்ட் மாதத்தில்,ஒரு கூட்டம் முடிந்தபிறகு ஒரு 17வயதான ஒரு பெண் என்னிடம் வந்தாள்.உடலுறவில் ஈடுபட்டது போன்ற அனுபவம் கனவில் ஏற்பட்டதிலிருந்து அவளுக்கு மாதவிலக்கு வருவது நின்றுவிட்டது. அவள் கருவுற்றிருப்பதுபோல அவளது மார்பகங்கள் மென்மையாகிவிட்டது. கவலையோடு அவளுடைய தாயார் அவளை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அல்ட்ரா ஸ்கேன் என்று மருத்துவசோதனை, அவள் கருவுற்றிருக்கிறாள் என்று வெளிப்படுத்தியது. என்னை சந்திக்கும் வரை மூன்றுமாதங்களாக அதேபோன்ற உணர்விலிருந்தாள். இந்த பிரச்சினையை ஏற்படுத்திய பிசாசை நான் கடிந்துகொண்டு, அடுத்த வாரம் மீண்டும் என்னை வந்து பார்க்கும்படி சொன்னேன். சந்திக்கமுன்குறித்த அந்நாளில் மகிழ்ச்சியோடு வந்திருந்தாள், ஜெபித்த பிறகு அவளுடைய மாதவிலக்கு வந்துவிட்டது. ஒரு எளிய விசுவாசமுள்ள ஜெபம்! இயேசுவின் நாமத்தில் வல்லமை இருக்கிறது.

> அதற்கு இயேசு: . . . கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாதகாரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 17:20)

ஆறுமாதத்திற்கு ஒருமுறை, சிலவேளைகளில் வருடத்திற்கு ஒருமுறை மட்டும் மாதவிலக்கு வருகிற இன்னொரு கிறிஸ்தவ பெண்மணியைக்கூட எனக்குத் தெரியும். ஆரம்பகாலத்தில் இதை அவள் முக்கியகாரியமாக எடுத்துக்கொள்ளாமல் இப்படிப்பட்ட நீண்ட இடைவெளிக்கு பிறகு வருவது அதிர்ஷ்டமாகவும் பிரச்சினையற்றது என்றும் அந்நாட்களில் தேவைப்படும் பொருட்களுக்கு பணம்செலவளிக்காததால் சேமிப்பை அதிகரிக்கலாம் என்றும் அவள் நினைத்தாள். என்னிடம் அவள் சொன்னபோதே அது பிசாசினால் உண்டான பிரச்சினை என்பதை நான் அறிந்து கொண்டேன். நாங்கள் சேர்ந்து ஜெபித்தோம். ஜெபத்திற்கு பிறகு சிலமாதங்களாக அவளுக்கு ஒழுங்காக மாதவிடாய் வந்தது. ஆனால் திடீரென்று நின்றது. அதன்பின் நாங்கள் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்தோம், பிசாசின் முதுகெலும்பு முற்றிலும் உடைக்கப்பட்டது. அவள் இப்பொழுது திருமணமாகி தேவன் அவளுக்கு ஒரு மகனை ஆசீர்வாதமாக கொடுத்திருக்கிறார். நம் கிறிஸ்து இயேசுவால் முடியாத காரியம் ஒன்றுமில்லை.

தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். (லூக்கா 1:37)

(4) ***திருமண துணை கிடைப்பதில் தாமதம்:*** *(Delay in having a marriage partner)*

உடலுறவு கொள்வதுபோல கனவு கண்டதால் ஏற்படும் இன்னொரு பாதிப்பு திருமணத்திற்கான துணைகிடைப்பதில்லை. சில பெண்கள் மிகஅழகாகவும், நன்றாக படித்தவர்களாகவும், நற்குணசாலிகளாகவும் இருப்பார்கள், எனினும் எவரும் திருமணம் செய்வதற்கு முன்வராமலிருப்பார்கள்.இன்னும் சிலருடைய வாழ்க்கையில் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டபின் எவ்வித காரணமில்லாமலே முறிந்துபோகும்.இந்நிலையிலிருப்பவர்கள் ஆணாக இருந்தால் பவுல் திருமணம் செய்யவில்லை ஆகவே அமைதியாயிரு. பேசிமுடித்த ஒவ்வொரு பெண்களிடமிருந்து இறுதியில்'முடியாது' என்ற பதில் வந்ததற்கு இதுதான் காரணம் என்றுகூட பிசாசு சொல்லக்கூடும். இப்படி நடப்பதற்கே பிசாசின் செயல்தான் காரணம்.

சில வருடங்களுக்கு முன்பு ஒரு மனிதனோடு பேசிக்கொண்டிருந்தேன். அவரது வயது 50க்கும் மேலாகிவிட்டது.''அவரது திருமணத்தைக்குறித்து தேவனுடைய பரிபூரண சித்தம் என்ன'' என்று கேட்டு ஜெபித்துக் கொண்டிருப்பதாகவும்,அவருக்கு ஏற்ற ஒரு பெண்ணை இன்னும் காணவில்லை என்றும் இனி காணநேர்ந்தால் உடனே நிச்சயம் பண்ணவேண்டும் என்றும் உத்தமமாய் நம்பிக்கொண்டிருப்பதாக சொன்னார்.

1994இல் நான்,தென்கிழக்கு ஆசியாவிலுள்ள சிங்கபூரிலிருந்தேன். தனிமையாக வாழும் 42வயதான ஒரு சிங்கப்பூர் பெண்மணியோடு பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எனது புத்தகங்களில் சிலவற்றை அவளுக்கு கொடுத்தேன், அவைகளை அவள் படித்தாள். அப்புத்தகமானது அவளுடைய கண்களைத் திறந்தது. அவளுக்காக நான் ஜெபிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அவளிடம் ஒருசில கேள்விகளைக்கேட்டபோது அவள் வாழ்க்கையில் செயல்பட்டுக் கொண்டிருப்பது பிசாசு என்பதை உடனே அறிந்துகொண்டேன்.''எப்பொழுதும் திருமணம் நடக்கவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்'' என்று அவளிடம் கேட்டேன்.''இந்த வருடமே'' என்று விசுவாசத்துடன் பதில் சொன்னாள். நாங்கள் ஒருமனப்பட்டு ஜெபித்தபோது பரிசுத்தஆவியானவரின் வல்லமை அவள் மீது இறங்கியதால் அவள் கீழே விழுந்தாள். அவள் எழுந்தபோது என்னுடைய முகவரியைக் கொடுத்தேன், அவளுடைய முகவரியை நானும் வாங்கிக்கொண்டேன். 1993 செப்டம்பர் 3, அவளிடமிருந்து கடிதம் வந்தது. அக்கடிதத்தில் ஒரு மனிதன் அவளை திருமணசெய்ய உறுதியளித்திருப்பதாக எழுதியிருந்தாள். 1994 டிசம்பரில் அவர்கள் திருமணஞ்செய்துகொண்டார்கள்.

பிசாசுகள் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அமெரிக்கா, யு.கே, ஆப்பிரிக்கா அல்லது ஆசியா, எந்த நாடாக இருந்தாலும் பிசாசின் கோட்பாடுகளும் - தந்திரங்களும் ஒரே மாதிரியே செயல்படுகிறது.

நீங்கள் என்ன வகையான பிரச்சினையை அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத்தெரியாது ஆனால் உங்கள் அற்புதம் இங்கேதான் இருக்கிறது என்பதில் எனக்கு நிச்சயமுண்டு. நீங்கள் ஜெபித்தும் உபவாசித்தும் இன்னும் அதே பிரச்சினைகளைத்தான் அனுபவிக்கிறீர்கள் என்றால், உங்களுக்கு அருகாமையிலிருக்கிற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஒருமனப்பட்டு ஜெபியுங்கள். உங்களுக்கு வசதிப்படுமானால்,வாருங்கள், நாம் ஒன்று சேர்ந்து ஜெபிக்கலாம். நான் பிசாசை வெறுக்கிறேன்.

# தம்பதியரின் பாலியல் சார்ந்த கனவுகள்

(Couples' Sex Related Dreams)

**உங்கள் வாழ்க்கை துணையைப்போலவே தோற்றமளிக்கும் ஒரு நபரோடு உடலுறவுசெய்வது போன்ற கனவு** : (Having sex with somebody that looks exactly like your spouse)

*அபதானின்* துணையோடு ஆள் உருவில் வரும் பிசாசுகள் இப்படிச்செய்கின்றன. இந்த பிசாசுகள் ஒருவரிடம் செயல்படத் தொடங்கினால் சில குறிப்பிட்ட காரியங்கள் அடையாளங்களாக வெளிப்படுகின்றன.

1) ***பாலியல் காரியங்களைவிட்டு பின்வாங்குதல் : (Withdrawal from sex)***

கணவனோ அல்லது மனைவியோ உடலுறவில் விருப்பமில்லாமல் இருப்பதையும் அல்லது அவர்மீது அல்லது அவள் மீது ஒரு ஈர்ப்போ கவர்ச்சியோ இல்லாமலிருப்பதையும் கண்டுகொள்வார்கள். இப்படி பாலுறவு காரியத்தில் பின்தங்கிஇருப்பதால் இவர்கள் உண்மையில்லாதவர்கள் என்று அர்த்தங்கொள்ளத்தேவையில்லை.பாலியல் கனவுகளினால் வந்த தீயவிளைவால்தான் தங்கள் வாழ்க்கைத்துணையோடு நிஜ வாழ்க்கையில் பாலுறவை அனுபவிப்பது அவர்களுக்கு இன்பமாக இல்லாமல் அது ஒரு துன்பமான,பாரமான காரியமாகவும் அது ஒரு தண்டனைபோலவும் தோன்றக்கூடும்.

மனைவிகள் தங்கள் கணவரை திருப்தியடையச் செய்வதில் தவறியதால் அநேக விசுவாசமில்லாத கணவன்மார்கள் தங்களைத்தாங்களே திருப்திப்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால் நிரந்தரமான தீர்வு கிடைக்கவேண்டுமென்றால் முடிந்தஅளவு விரைவாக விடுதலை ஊழியத்தை நாடவேண்டும். குடும்பம் இடிந்துபோகவேண்டும் என்று பிசாசு விரும்புகிறான், அதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது.

சிலர் சரீரபிரகாரமாக விலகிஇருப்பதால் தாம்பத்தியஉறவின் மந்தத்தன்மையோடு போராடிக்கொண்டிருப்பார்கள். கணவன் வேலைபார்த்துக்கொண்டு தேசத்தின் ஒருபகுதியில் தங்கியிருப்பான், மனைவி பிள்ளைகளுடன் இன்னொரு பகுதியில் வாழ்ந்து கொண்டிருப்பாள். இப்போது நாட்டில் போக்குவரவுக்கு அதிகசெலவு ஆகும் காரணத்தால் வாரத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை மட்டும் அவன் குடும்பத்தோடு சேர்ந்துவாழ வருகிறான். இப்படிப்பட்ட நிலையிலிருக்கும் வீடு சரிந்துவிழும் நிலையிலிருக்கிறது.

1995 மார்ச் மாதத்தில் நான் நைஜீரியாவின் தலைநகரான அபுஜாவில் இருந்தேன். தீயபழக்க வழக்கங்கள் அங்கே உச்சக்கட்டத்தில் அரங்கேறிக்கொண்டிருந்ததை கேள்விப்பட்டதோடு நானே கண்டேன். தலைநகரான அபுஜாவில் இன்னும் கட்டிட பணிகள் நடந்து கொண்டிருப்பதால் தங்குமிடம் கிடைப்பது மிகச் சிரமமாக இருந்தது.இதன் விளைவாக அரசாங்கத்தில் வேலைபார்க்கிற அநேகர் அங்குள்ளவர்களோடு சேர்ந்து வாழுகின்றனர். பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்தவீட்டை விட்டு வந்திருப்பவர்கள். அங்கே "அபுஜா திருமணம்" செய்துகொண்டு வாழ்கிறார்கள். அபுஜா மனைவி என்றால் தற்காலிகமான மனைவி, அவள் அங்கே அவர்களுக்கு எல்லாவேலைகளையும் செய்வதோடு சட்டபூர்வமான மனைவியைப்போல எல்லா காரியங்களையும் அந்த அபுஜாகணவன், அபுஜாவில் இருக்கும்வரை நிறைவேற்றுகிறாள். ஜெபிக்கவந்த ஒருவருக்கு 'பாவவாழ்க்கையை விட்டுவிட்டு

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி' நான் ஆலோசனை கொடுத்தேன். அவர் அதற்குக் கீழ்படிந்தபோது அவருக்காக ஜெபித்தேன், தேவன் அவரை உடனடியாக சுகமாக்கினார்.

திருமணத்தை நியமித்த தேவனைவிட மனிதன் அதிகஞானமுள்ளவனாக இருக்கமுடியுமா?

> இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத்தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். (மத்தேயு 19:5,6)

**1993இல்** இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது.கணவன் வடிவத்தில் வந்து கனவில் உடலுறவுசெய்த பிசாசினால் குடும்பவாழ்க்கையே உடைந்துபோகும் நிலையிலிருந்த ஒரு பெண்ணுக்கு ஊழியம் செய்தேன். அவள் விவரிக்கமுடியாத அளவுக்கு ஏமாற்றமடைந்த நிலையிலிருந்தாள். அவளை விசாரித்தபோது அவளுடைய கணவனைப்போலவே யாரோ ஒருநபர் கனவில் வந்து அவளோடு உடலுறவு கொள்வதாகவும் விழித்து எழும்பினால் உண்மையாகவே அவளுடைய கணவனோடு சேர்ந்தது போன்ற அடையாளங்களெல்லாம் அவளது சரீரத்தில் காணப்பட்டதாகவும் சொன்னாள். ஆகவேஇதுபோன்ற பாலியல்கனவு கண்டபின் பெரும்பாலான சமயங்களில் அவளுடைய கணவன் அவளோடு பாலுறவுகொள்ள வந்தால் அவளால் அதற்கு உடன்படுவதற்கு மிகச்சிரமமாக இருக்குமாம். ஒரு நாள் இதே கனவு கண்டு விழித்துக்கொண்டபோது கணவரும் அதே வேளையில் இவளோடு பாலுறவுகொள்ள வந்தபோது, அவள் சரீரபகுதியில் எங்கும் விந்து காணப்பட்டதால் அவள் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறாள் என்று முடிவுகட்டிவிட்டான். ஆகையால் தான் இப்படிப்பட்ட கனவு கண்டபின் அவளுடைய கணவன் நேசத்தோடு சேரவரும்போதெல்லாம் அவள் மறுத்துவிடுவதற்கு காரணமாக இருந்தது.

அந்தப்பெண் உள்ளம் உடைந்து கண்ணீர்விட்டு அழுது, தான் நிரபராதி, குற்றமற்றவள் என்று அறிக்கையிட்டாள். நல்லவேளை இத்தகைய பாலியல் கனவு வருவதைப்பற்றி அவளுடைய கணவனிடம் முன்னமே தெரிவித்திருந்தாள். ஆனால் இப்பொழுது கனவினால் அவளுக்குள் விந்து காணப்படுவது முற்றிலும் புதுமையான காரியமாக இருந்தது. ஆனால் அவர்கள் இருவருமே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக இருந்ததால் கணவன் அவளை விசுவாசித்து விடுதலைஊழியத்திற்கு அழைத்துச்சென்றான்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால் அந்த விந்துவால் அவள் கருவுற்றால் என்ன செய்ய வேண்டும். பிறக்கும் குழந்தை யாருடையதாக இருக்கும்? இவ்வகையான ஆவிமண்டல-கணவன் என்ற பிசாசுசாதாரணவகை பிசாசைவிட சற்றுகூடுதலான வகையை சேர்ந்தது. பாலியல் கனவினால் ஆரம்பமான பிரச்சினை,விடுதலை ஊழியத்திற்குப் பிறகு நீங்கிற்று; அவள் முற்றிலும் விடுதலை அடைந்தாள்.

1984 இல் இதுபோன்ற பிரச்சினை இன்னொரு அழகான கிறிஸ்தவ பெண்மணிக்கு – என்வகுப்புத்தோழிக்கு – நேர்ந்தது. பல்கலைகழக வளாகத்திற்குள் வைத்தே நான் அவளுக்கு ஆலோசனை கொடுத்து ஜெபித்தேன்.பிரச்சினை அவளால் தாங்கிக்கொள்ள முடியாதபடி இருந்ததால் ஒருநாள் என்னிடம் சொன்னாள். அவள் என்னிடத்தில் சொன்ன காரியம் நம்பமுடியாத அளவுக்கு திகிலூட்டக்கூடியதாக இருந்தது, ஆனால் அது ஒரு உண்மைசம்பவம்!

பொதுவாக படுக்கைக்குச்செல்லும் முன் ஒவ்வொரு இரவும் கதவை நன்றாக பூட்டிவிடுவாள். ஆனாலும் ஆச்சரியவிதமாக ஒரு 'உருவம்' கதவு பூட்டியிருந்தும் உள்ளே வந்து அவளுடன் உடலுறவு செய்துவிட்டு பின்னர் மறைந்துவிடும். சரீரபிரகாரமாக நடந்தது. அவள் விழித்துக்கொண்டிருந்தாலும் தெளிந்த உணர்வோடு இருந்தாலும் எதிர்த்து எதுவுமே செய்யமுடியாதவளாக இருப்பாள். உபவாசித்து ஜெபித்தும் அவளுடைய பாஸ்டர் பலமுறை அவளுக்காக ஜெபித்தும் அந்த பிரச்சினை தொடர்ந்து

நடந்துகொண்டிருந்தது. இக்காரியத்தை எப்படியாவது ஒரு முடிவுக்கு கொண்டுவந்தாக வேண்டுமென்ற தீர்மானத்தோடு ஒருநாள் உறங்காமல் அந்த ‘உருவம்’ எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருந்தாள். வழக்கம்போல அந்த உருவம் வந்ததும், அவள் அதன் மீது பாய்ந்து போராடியபோதும் அந்த உருவம் அவளோடு தப்பாக நடந்துவிட்டு மறைந்துவிட்டது. அந்த உருவத்தை தொட்டபோது சரீரமானது வழுக்கும் தன்மைஉடையதாக இருந்தது என்று அவள் சொன்னாள்.

என் ஆவியிலே எரிச்சல்கொண்டேன். அந்நாட்களில் விடுதலைபற்றிய செய்திஅநேகருக்கு–எனக்கும்கூட தெரியாது.அக்காலத்தில் உடன்படிக்கைகளும் சாபங்களும் பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. ஆனால் எனது ஆவியில் நான் எரிச்சல்கொண்டேன், அவளோடு ஜெபித்துவிட்டு அவளிடம் சொன்னேன் இனி அந்த உருவம் எப்போதெல்லாம் வருகிறதோ அப்போதெல்லாம் இயேசுவின் நாமத்தில் இனி ஒருபோதும் என்னிடத்தில் வராதே என்று கட்டளையிடு. அவளுக்குள் செலுத்தப்பட்ட ஒவ்வொருவிந்துவையும் அவளைவிட்டு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்தம் செய்துவிடும்படி சொன்னேன். அவள் பட்டப்படிப்பை படித்து முடிக்கும்வரை அந்த உருவம் அதற்குப் பிறகு வரவே இல்லை. அல்லேலூயா!

கிராமங்களிலிருக்கும் பிசாசுகளின் வழிபாட்டுஸ்தலங்களுக்கு யாரெல்லாம் அற்பணிக்கப்பட்டார்களோ, அவர்களுக்காக உறவினராலோ பெற்றோராலோ முன்னோர்களால் செய்யப்பட்ட பொருத்தனைகளையையும் உடன்படிக்கைகளையும் மனப்பூர்வமாக (renounce) நிராகரிக்க வேண்டும் என்பதை வெகு காலத்துக்குப் பிறகுதான் நான் அறிந்துகொண்டேன். மட்டுமல்லாமல் பரம்பரையாக வருகிற ஒவ்வொரு அசுத்த ஆவியை (reject) புறக்கணித்துவிடவேண்டும்.பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நுகமானது உடைக்கப்படவேண்டும், இல்லாவிட்டால் மன்றாட்டு ஜெபத்தால் எவ்வித பயனும் இருக்காது. ஆகவேதெய்வீகமற்ற பிடிப்புகளையும், பொருட்களையும், தொடர்புகளையும் விட்டுவிடுவதால் (renunciation)ஏற்படும் நற்பலனையும் முக்கியத்துவத்தையும் குறித்து எங்களது ‘விடுதலை மற்றும் குணமாக்கும் பள்ளி’யில் (School Of Deliverance And Healing-SODAH)நாங்கள் அழுத்திக்கூறுகிறோம்.

விடுதலைக்குறித்து சொல்லவேண்டிய காரியங்களை எல்லாம் சொன்னபிறகும் செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் செய்தபிறகும்,அநேகர் பிசாசுகள் என்று ஒன்றும் கிடையாது என்று சொல்கிறார்கள்; இன்னும் சிலரோ, ஒருமுறை மறுபடியும்-பிறந்துவிட்டால் அவர்களுக்கு விடுவிக்கிற காரியம் தேவை இல்லை என்று தவறாக சொல்கிறார்கள்; இப்படி அநேகர் அறியாமையிலும் மாய்மாலத்திலும் வாழ்வதைத்தெரிந்தெடுத்து கொண்டிருக்கிறார்கள்.ஒரு தேவபிள்ளைக்கு பிசாசின் மீது அதிகாரம் இருக்கிறது என்பது உண்மை. ஆனால்நமது முன்னோர்கள் கடந்தகாலங்களில் செய்த தீமையான மிகத்தீமையான காரியங்களாலும், அதிலும் குறிப்பாக ஆப்பிரிக்கா பகுதிகளில் பல்வேறு ஆண்தெய்வங்களுக்கும் பெண்தெய்வங்களுக்கும் மிருகஇரத்தபலிகள் கொடுத்ததாலும், மனிதஇரத்தபலி(நரபலி) கொடுத்ததாலும்,கருவுற்ற பெண்களை கொன்று எரித்ததாலும்,இப்பகுதிகளில் பிசாசுகளின் கிரியைகள் பலமாக இருப்பதால் மனந்திரும்பவேண்டிய அவசியத்தை அறிவிக்கிறோம்.

பலவருடங்களாக அப்பிசாசுகள் அங்கே வசித்துவருவதோடு, அங்கே தங்கி இருப்பதற்கு உரிமை உண்டு என்று சட்டப்படி உரிமைப்பாராட்டுகின்றன (ஓரளவுக்கு அவைகள் சொல்வது உண்மைதான் ஏனென்றால் முன்னோர்கள் பலியிட்டு அழைப்பு கொடுத்ததால் வந்தவைகள்). விடுதலை ஊழியத்தின் மூலமாக இயேசுவின் நாமத்தில் அதிகாரத்தை பயன்படுத்தி, இருளின் அதிகாரத்தினின்று பிதாவாகிய தேவன் நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்திவிட்டார் என்ற சத்தியத்தை நாம் அறிக்கை செய்யவேண்டும்*(கொலோ 1:13)*. கல்வாரி சிலுவையிலே பலியாக இயேசு கொடுத்த அவரது இரத்தத்தினாலும், நிறைவேற்றிமுடித்த அவரது மீட்பின் அனைத்து பரிகாரங்களினாலும் உறுதியோடு உரிமையோடு சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூறி கர்த்தரின் நாமத்தில் அவர்களை விடுவிக்கின்றோம்.

பிசாசிடம் நாம் பலவந்தமாக, கொடூரமாக நடந்துகொள்ள வேண்டும். ‘‘யோவான்ஸ்நானன் காலம் முதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக்கொள்ளுகிறார்கள்’’*(மத்தேயு11:12).* இயேசுவின் நாமத்தில் நமக்கே வெற்றி.

2) ***மலட்டுத்தன்மை****(Barrenness)*

தன்னுடைய வாழ்க்கைத்துணையைப் போலவே தோற்றமளிக்கும் ஒரு நபரோடு உடலுறவு கொண்டதுபோல கனவு கண்டிருந்தால் அதன் விளைவாகக்கூட பிள்ளைபெற இயலாமல் இருக்கக்கூடும்.கர்ப்பமுற்ற பெண் தன்கணவனோடு உடலுறவுகொண்டது போல கனவுகண்டதாலே அநேகருடைய கர்ப்பங்கள் தானாக விழுந்துபோயிருக்கின்றன(miscarriage).

இப்படிபட்ட பிரச்சினை உள்ளவர்கள் அமர்ந்திருந்து சிந்திக்க வேண்டும். பெற்றோர்கள் உயிரோடு இருப்பார்களானால் நீங்கள் பிறக்கும் முன்பும் பிறந்த பின்னும்என்னவெல்லாம் வாழ்க்கையில் நடந்தது என்பதை அவர்களிடம் கேள்விகள் கேட்டுதெரிந்துகொள்ளவேண்டும்.

- நீங்கள் பிறக்குமுன்னதாக எதாவது தெய்வங்களுக்கு பலி செலுத்தினார்களா?
- அல்லது எதாவது மந்திரவாத, பில்லிசூனிய காரியங்களில் ஈடுபட்டார்களா?
- உள்ளூர் இனத்தைச் சார்ந்த நபர் என்ற அடையாளங்கள் உங்கள் சரீரத்தின் மேல் உள்ளதா?
- உங்கள் தொப்புள் கொடியை எதாவது குறி சொல்லுகிற வீட்டு பூசாரியிடம் கொண்டு கொடுத்தார்களா?
- இதுபோன்ற அநேக கேள்விகள் . . .

இதுபோன்ற கேள்விகளுக்கு உங்களிடம் பதில்கள் இருக்குமானால் விடுதலை ஊழியமானது எளிதாக இருக்கும். ஏனென்றால் பிரச்சினைக்கான காரணத்தை நாம் வேரிலிருந்தே சரிசெய்துவிடுகிறோம். நான் முன்னமே குறிப்பிட்ட என்னோடு படித்த வகுப்புத்தோழியின் பிரச்சினைக்கு சரியாக என்ன செய்யவேண்டும் என்று பரிசுத்தஆவியானவர் எங்களுக்கு சொன்னார். ‘‘அந்த பிசாசை கூப்பிட்டு வெளியேறும்படி கட்டளை கொடு’’ என்று சொன்னார்.

1993 இல் ஒரு தம்பதியினர் என்னிடம் வந்தார்கள். அவர்களுக்கு திருமணமாகி 10வருடங்களாகியும் அவர்களுக்கு பிள்ளைகளில்லை. தேவன் அவர்கள் மீது கிருபைகூர்ந்து அவர்களை கனிகொடுக்கிறவர்களாக்கவேண்டும் என்று நான் அவர்களோடு சேர்ந்து உபவாசித்து ஜெபித்தேன். அதிக நாட்கள்கூட ஆகவில்லை ஒருநாள் அந்த மனிதன் அவனுடைய மனைவி கற்பமுற்றிருப்பதாக என்னிடம் வந்து சொன்னான். ஆனால் சிலநாட்கள் கழித்து அவருடைய மனைவியின் கர்ப்பம் தானாக விழுந்துவிட்டது என்ற சோக செய்தியைச் சொன்னார்.

என்ன நடந்தது என்று அவளிடம் கேட்டேன்.அவளுடைய கணவன் கனவில் அவளோடு உடலுறவு செய்ததுபோல கண்டாள்.மிக உண்மையான நிகழ்ச்சிபோலிருந்தது. ஆனால் விழித்துப்பார்த்தால் அவளுடைய கணவர் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அவள் கண்டது கனவு என்பதை உணர்ந்தாள். அது கனவுதான் என்பதை உணர்ந்த உடனே இரத்தம் வெளிவரத்துவங்கியது, இறுதியில் கர்ப்பச் சிதைவு எற்பட்டது. தேவனுடைய ஆசீர்வாதத்தின்மீது பிசாசு எப்படிக் கைவைக்க முடியும்? இக்கேள்விக்கும் இதுபோன்ற பிறகேள்விகளுக்கும் பதில்களை *‘உங்களது விடுதலையையும் தெய்வீக சுகத்தையும் நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்வது எப்படி’* என்ற எனது புத்தகத்தில் கண்டறிந்து கொள்ளாலாம்.

3) ***கர்ப்பத்திலிருக்கும் சிசுவின் பால்மாற்றம்****(Foetal sex change):*

ஒரு பாலியல் சார்ந்த கனவு கண்டபின்னர் கர்ப்பத்திலிருக்கும் பிள்ளையின் பாலினம் மாறமுடியும் (மாற்றம் நேரிடுகிறது) என்பது ஒரு மர்மமாக இருக்கிறது.

1992இல், நான் மிகவும் நேசிக்கின்ற ஒரு கிறிஸ்தவ சகோதரனுக்கும் அவரது மனைவிக்கும் விடுதலை ஊழியம் செய்தேன். முதலில் 3 அல்லது 4பிள்ளைகளைத்தான் விரும்பினார்கள் ஆனால் இறுதியில் ஆறுபிள்ளைகளாயிற்று எல்லாம் பெண்பிள்ளைகள். ஒரு ஆண்பிள்ளை வேண்டுமென்று அவர்கள் உபவாசித்து ஜெபம் பண்ணியும் வாய்க்காமல் போயிற்று. ஆறாவது பெண்பிள்ளை பிறந்த பின்னர் அது ஒரு ஆவிக்குரிய பிரச்சினை என்பதை அவர்கள் அறிந்தார்கள். பெண்பிள்ளைகள் பெற்றிருப்பது நல்லதுதான் ஆனால் இந்த தம்பதிகளைப் பொறுத்தவரை ஒரு ஆண்பிள்ளையாவது வேண்டுமென்று விரும்பினர் ஏனென்றால் வேதாகமம் சொல்கிறது:-

> தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:27)

அத்தம்பதியினர் அழைத்ததினால் அவர்களோடு ஜெபிப்பதற்காக அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அவர்களது வீட்டில் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் எனது ஆவிக்குரிய கண்களை திறந்தார். அப்போது அங்கு நடக்கிற அனைத்து பிரச்சினைக்கு காரணம் என்று உரிமைபாராட்டுகிற ஒரு ‘மனிதனை’ நான் கண்டேன்.

நான் வேகமாக ஜெபத்தை முடித்துவிட்டு அந்த ஆறுபிள்ளைகளையும் அனுப்பிவிட்டு, அவர்களது படுக்கை அறையில் சென்று ஜெபத்தை தொடரலாம் என்று அந்த தம்பதிகளிடம் சொன்னேன். என் வாழ்நாளில் இப்படி நான் ஒருபோதும் செய்ததில்லை, ஆனால் என் எஜமானனும் என்னை வழிநடத்துகிறவருமாகிய பரிசுத்த ஆவியானவர் அப்படி வழிநடத்தியதால் நான் கேள்விகேட்காமல் எளிமையாக அவருக்கு கீழ்படிந்தேன். படுக்கை அறைக்கு சென்ற உடனே பரிசுத்த ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தியதை அவர்களுக்கு சொன்னேன். அந்த ‘மனிதன்’ யாராக இருந்தாலும் அவர்கள் துரத்தவேண்டும் என்று சொன்னேன்.

அவர்கள் இருவரும் அஸ்மோதி மற்றும் அபட்டான் (*asmodee* and *abbaddon*) என்ற பிசாசுகளை (இவைகள்தான் பாலியல் சம்பந்தமான கனவை ஏற்படுவதற்கு பொறுப்பாக இருப்பவைகள்) அவர்கள் இருவரும் கட்டிப்போட்டு அவைகளைத் துரத்தினார்கள். உடனே, அவருடைய மனைவி சத்தமிட்டவண்ணம் படுக்கையில் விழுந்தாள், பிசாசுகள் வெளிப்படத்துவங்கின.

கண்ணை திறந்ததும் அவளுடைய கணவன் திடீரென்று விடுதலை ஊழியம் செய்யும் ஒரு ஊழியனாக மாறிவிட்டார்.நேருக்கு நேராக சரீரத்தில் நடக்கும் ஒரு போராட்டம் போல இருந்தது. அவரது மனைவியை பாடுபடுத்தும் பிசாசு செய்கின்ற காரியத்தை கண்டதும் அவர் தீவிரவாதியாக மாறிவிட்டார். அந்நாளின் விடுதலை ஜெபம் எனக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இருந்ததுஏனென்றால் நானல்ல,அவளுடைய கணவனே அவளுக்கு விடுதலை ஊழியம்செய்துகொண்டிருந்தார்.பிசாசை,நீங்கள் நேருக்குநேராகஉங்கள் வீட்டில் சந்திப்பீர்களானால் அவனை என்ன செய்யவேண்டுமென்பதை நீங்கள் தானாகவே அறிந்துகொள்வீர்கள். “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்;....”*(மாற்கு 16:17).* அற்புதமான மாற்றத்தை அடையும்வரை அவர் பிசாசின் வல்லமைகளை கட்டிப்போட்டு துரத்தினார்.

அதன் பிறகு நான் அவர்களோடு ஜெபித்தேன். மகத்தான காரியத்தை பெற்றுக்கொண்டோம் என்பதை நாங்கள் அனைவரும் அறிந்து கொண்டோம். நீங்கள் ஜெபிக்கும்போது உங்களுக்குள் எழும் ஒரு உள்ளான சந்தோஷம் உங்களுக்கு நிச்சயத்தை ஏற்படுத்தும். ஆவியில்கர்த்தர் எனக்கு காண்பித்த அந்த பிசாசுதான் வழக்கமாக குழந்தைகள் கருவிலிருக்கும் போது மூன்றாவது மாதத்திலேயே பாலின மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அந்த அசுத்த ஆவி போய்விட்டது என்பதை அறிந்தார்கள். அவள் கர்ப்பந்தரித்திருக்கும் மூன்றாம் மாதம் கனவில் ஒரு மனிதன் வந்து அவளோடு படுத்துக்கொள்வான் என்பதை கணவனிடம் சொல்லியிருக்கிறாள். இது

அவனுக்குத்தெரிந்திருந்தும் கனவை அவன் ஒரு பெரியகாரியமாக எடுக்கவில்லை. அவர்கள் ஆண்குழந்தையை பெற்றெடுக்கமுடியாததற்கு இதுதான் காரணம் என்பதை ஒருபோதும் அறியாதவர்களாக இருந்தனர்.

1993 ஜனவரி மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை இரவு விழிப்பு ஜெபத்தில் கலந்துகொள்ள அவர்கள் பெற்றெடுத்த மகனோடு வந்திருந்தார்கள், அவனுக்கு சாமுவேல் என்று பெயர்வைத்திருந்தனர்.இம்மகனை பெற்றெடுக்கும் வரை அவர்கள் வாழ்க்கையில் நடந்த காரியங்களை அவளுடைய கணவன் என்னிடம் விவரித்துச்சொன்னான்.‘‘குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்*(யோவான் 8:36)* என்று நான் சொல்லியிருக்கிறேன் அல்லவா’’ என்று கர்த்தர் அவரை கடிந்துகொள்ளும்வரை, சாமுவேல் என்ற குழந்தை கர்ப்பத்திலிருந்தபோது இரவில் அவள் மனைவி விழித்தால் ‘‘இன்று அவன் வந்தானா?’’ என்று கேட்பது வழக்கமாக இருந்தது என்பதை அவரே சாட்சியில் சொன்னார்.

கிறிஸ்துவின் சரீரமானது விடுதலைக்குறித்த சில அடிப்படை போதனைகளை புரிந்துகொண்டால், பெரும்பாலான விடுதலையையும் சுகத்தையும் அவர்களே பெற்றுக்கொள்ள முடியும். அப்படி நிகழ்வதை நான் அனேக முறை கண்டிருக்கிறேன். இயேசுவின் நாமத்தினால் இன்றே உங்களது அற்புதத்தை பெற்றுக்கொள்ளமுடியும்.

4) ***கருத்தரிக்கும் காலம் ஏற்படாமை****(Not ovulating)*

பெண்களின் கருத்தரிக்கும் காலம்வராதபடி சில பாலியல் பிசாசுகள் தடைசெய்கின்றன. ஒருவேளை கருத்தரிக்கும் காலம் அவர்களுக்கு வராமலே இருக்கும் அல்லது அவர்கள் கருத்தரிக்கும் காலமானது மாதமாதம் ஒழுங்கில்லாமல் வருவதால் கர்ப்பம் தரிப்பதற்கு சிரமமாக இருக்கக் கூடும். இங்கும் ஒரு பெரிய விடுதலை ஜெபம் தேவையாயிருக்கிறது.

5) ***விந்துவானது பின்னோக்கி விரைந்துவருதல்****(Sperm rushing back)*

கர்த்தர் சிருஷ்டித்தபடியே விந்தானது நேரடியாக முன்னோக்கி முட்டைக்குள் சென்று கருத்தரிக்க செய்யவேண்டும். அப்படி நேரிடாதபடி அவைகளை தடுத்து பின்னோக்கி செல்லச் செய்யும் சாத்தானின் ஆவிகள் சிலருடைய வாழ்க்கையில் கிரியை செய்கின்றன.இந்த அசாதாரண பிரச்சினையை மருத்துவ ஆலோசகர்கள் ஓரளவு சரிசெய்துவிடலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் மருத்துவசிகிச்சை செய்தும் இக்காரியம் தொடருமானால் விடுதலை ஊழியம் அவர்களுக்கு அத்தியாவசியமானது என்று பொருள்.

6) ***கர்ப்பத்தில் கட்டி,தேவையற்ற வளர்ச்சி, கருமுட்டையை கர்ப்பத்திற்குள்கொண்டுவரும் குழாய்களில் அடைப்பு*** (Fibroids and blockage *of the Fallopian tubes)*

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது (*ஆதியாகமம் 1:31*). கர்ப்பத்தில் கட்டியும், கருமுட்டை வரவேண்டிய குழாய்களில் அடைப்பும், தேவனால் உண்டானவை அல்ல, அவைகள் பிசாசிடமிருந்து வந்தவை.*யாத்திராகமம் 23:26* சொல்கிறது, கர்ப்பம் விழுகிறதும் மலடும் (கட்டியோ கருமுட்டைவரும் குழாய்களில் அடைப்போ, விந்துவில் உயிரணுக்களின் எண்ணிக்கையில் குறைவோ) உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்.

மருத்துவர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன், ஆனால் ஒரு நபரின் சரீரத்திலிருக்கும் பிசாசுகளைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.மருத்துவ சிகிச்சைக்கு நான் ஆதரவளிக்கிறேன் ஏனென்றால் அது வேதவசனத்தின்படி இருக்கிறது. ஆனால் அநேக நபர்களது வியாதிகளை தீர்ப்பதற்கு மருத்துவ அறிவியலால் உதவ முடியவில்லை.

அம்மாதிரியான வியாதி பிரச்சினைகளுக்கு மரித்து உயிர்த்தெழுந்தவரும், இனி ஒருபோதும் மரிக்கத்தேவை இல்லாத என்னுடைய மூத்த சகோதரனாகிய இயேசுகிறிஸ்துவினால் தான் எளிதாக குணமாக்க முடியும்.

1994 நவம்பர் மாதத்தில்,(God-Will-Do-It Ministries) தேவன்-இதை-செய்வார் - ஊழியங்களானது ஆண்டுக்கு ஒருமுறை நடத்துகின்ற **"பிள்ளையற்றோருக்கு பிள்ளை"**என்ற கருத்தரங்கை ஏற்பாடுசெய்திருந்தது. பொதுவாக நவம்பர் மூன்றாம் வாரஇறுதியில் (வெள்ளியும் சனியும்) நடத்துவோம். இதில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பலபகுதிகளிலிருந்து பலர் உபவாசித்து ஜெபிக்கும்படி வந்திருந்தார்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாகும்படிஅனேக நற்சாட்சிகளும் அற்புதங்களும் கூட்டமுடிவில் அறிவிக்கப்பட்டது. 1995 பெப்ருவரி மாதத்தில் எங்களது குடும்ப நண்பர்களில் ஒருவரும் இபதான் பகுதியின் ஒரு மூத்த மருத்துவ நிபுணருமாகிய ஒருவர் அவருடைய அனுபவத்தை என்னிடம் சொன்னார்கள்.

ஒரு பெண் திருமணமாகி 11வருடங்களாகியும் பிள்ளை இல்லாமலிருந்தாள். அவரே அவளை சோதித்து அநேக மருத்துவ பரிசோதனைகள் செய்து பின்னர் அவளுக்கு மருந்துகள் கொடுத்து சிகிச்சை செய்தார். அவளுக்கு *(fibroids)* கர்ப்பத்தில் கட்டி இருப்பது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்று வருடங்கள் மருந்துசாப்பிட்டும் பலசோதனைகள் செய்தும் ஒருபலனுமில்லை ஆகவே அவளுடைய கர்ப்பப்பையை திறந்து பார்க்க முடிவுசெய்தார். இன்னொரு மருத்துவநண்பரையும் துணைக்கு அழைத்து அறுவைசிகிச்சை செய்து பார்த்தபோது, அவருக்கு மிகப்பெரிய ஆச்சர்யமாகஇருந்தது அதற்குள் எந்த கட்டியும் இல்லை. ஸ்கேன் அறிக்கைகளை திரும்பத்திரும்பப் பார்த்தார் பலஆண்டுகளாக சிகிச்சைபண்ணிக் கொண்டிருந்த அந்த கட்டி எப்படி மறைந்தது என்று அவரால் விளக்கம் சொல்ல முடியவில்லை.

இவர்அழைத்ததால் வந்த மருத்துவநண்பரோ மருத்துவ தர்மத்தை மீறி அந்த பெண்ணிடம் பணம் பறிப்பதற்காகத்தான் நீ அறுவைசிகிச்சை தேவை என்று அந்த பெண்ணிடம் கூறியிருக்கிறாய் என்று குற்றஞ்சாட்டினார். உடனே நான் இவ்வளவு காலமாக கொடுத்த மருத்துவ சிகிச்சைகளையும் சோதனைஅறிக்கைகளையும் காட்டிய பின்னர்தான் இது மருத்துவத்தால் சரிசெய்யக்கூடிய பிரச்சினை அல்ல, இது ஆவிக்குரிய பிரச்சினை என்பதை நாங்கள் இருவருமே ஒத்துக்கொண்டு அந்த பெண்ணை நவம்பர் கூட்டத்திற்கு அழைத்துவந்தேன் என்று சொன்னார்.

அடுத்த முறை நாங்கள் அந்த மருத்துவரைப் பார்த்தபோது, அக்கருத்தரங்கில் கலந்துகொண்ட பிறகு அவளுக்கு மாதவிலக்கு வரவில்லை என்றும் கர்ப்பமுற்றாள் என்பதையும் தெரிவித்தார். 1995 ஜூலைமாதம் அவளுக்கு குழந்தை பிறந்தது. கர்த்தருக்கு துதி உண்டாகட்டும்!

நான் ஒரு காரியத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அறுவைசிகிச்சை செய்வதில் தவறில்லை,ஆனால் அது பிசாசினால் ஏற்பட்ட பிரச்சினையாக இருந்தால் அறுவைசிகிச்சை அல்ல பரிகாரம். நான் சொல்லும் ஆலோசனை என்னவென்றால் ஒருநபர் எதாவது அறுவைசிகிச்சைக்கு போகும் முன்னதாக அந்த நபருக்கு ஒரு விடுதலைக்கான ஜெபம் செய்யப்பட்டாக வேண்டும். வியாதியின் பின்னணியில் இருக்கும் பிசாசை துரத்தாவிட்டால், அறுவைசிகிச்சை மூலமாக ஒருகட்டியை அகற்றினாலும் அது இன்னொரு கட்டியையோ அல்லது இன்னொரு பிரச்சினையையோ ஏற்படுத்தக்கூடும். வல்லமையான விடுதலை ஊழியம் செய்யும்போது அந்த வியாதியும் அது வருவதற்கு காரணமாக இருக்கிற அசுத்தஆவியையும் அகற்றப்படுகின்றது.

1995 பெப்ருவரி 13முதல் 19வரை கானாவிலுள்ள அக்ராவில் நான் ஊழியம் செய்தேன். காலையில் விடுதலை ஊழியத்தையும் மாலையில் நற்செய்தி கூட்டங்களையும் நடத்தினேன். 15தேதி, மாலையில் விடுதலை ஊழியத்தை செய்யும்போது ஒரு பெண்மணி சத்தமிட்டவாறு மிகஅலைக்கழிக்கப்பட்டாள். அவளிடம் தேவன் கிரியை செய்து

கொண்டிருக்கிறார் என்று அறிந்தேன், ஆனால் அவளுடைய பிரச்சினை என்ன என்று எனக்கு தெரியவில்லை. சாட்சியின் வேளையில் வேறுசிலரோடு வந்தாள். 17 வருடங்களாக அவளுக்கு கர்ப்பபையில் கட்டி இருந்தது என்றும் அதனால்தான் அவள் பிள்ளையற்றவளாக இருப்பதாக தெரிவித்தாள். கட்டியானது அவளது கர்ப்பப்பைக்கும் குழாய்களுக்கும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி இருந்ததால் கர்ப்பபையை எடுத்துவிடவேண்டும் என்று சிகிச்சையளித்த டாக்டர் அவளுக்கு ஆலோசனை சொல்லி இருந்தும் அவள் மறுத்துவிட்டாள். அதன்பின்னர் அந்த கட்டியானது அளவிலும் எண்ணிக்கையிலும் இருமடங்காகிவிட்டது.

விடுதலை ஊழியம் செய்யத்துவங்கியதும் அறிவை உணர்த்தும் வரம் வெளிப்படத்துவங்கியது. அப்பொழுது அவளால் விளக்கமுடியாத ஒரு கூர்மையான வேதனை உணர்ந்ததும் அப்படியே விழுந்தாள் அதன்பின் ‘அது’ காணாமல் போயிற்று என்று சொன்னாள். அவளுடைய சாட்சியும் மற்ற அநேகருடைய சாட்சிகளோடு வீடியோபடம் எடுக்கப்பட்டது.

தேவன் அற்புதமானவர்.தேவனுடைய பிரசன்னமானது கர்ப்பபையின் கட்டி, கருமுட்டைகுழாய் அடைப்பு, விந்துவில் உயிரணுக்களின் எண்ணிக்கையின் குறைவு போன்ற எந்த நுகத்தையும் உடைத்துவிடமுடியும் என்று என்னை நம்பச்செய்திருக்கிறார்.

**கர்ப்பமாயிருப்பதுபோலவோ, பிள்ளைகளிருப்பதுபோலவோ, பிள்ளைகளோடு விளையாடுவது போலவோ அல்லது அவர்களுக்கு ஆகாரம் ஊட்டுவதுபோலவோ கனவு கண்டால்**(HavingChildren, being pregnant, playing with or feeding children in the dream)

இவைகளில் எதாவது ஒன்று கனவில் நடந்திருக்குமானால், நிலைமை முற்றிய நிலையிலிருக்கிறது என்று அர்த்தம். அவளுக்கு ஆவிக்குரிய மண்டலத்தில் கணவனும், பிள்ளைகளும் உள்ள ஒரு குடும்பம் இருக்கிறது என்று அர்த்தம். எனது ஆலோசனை என்னவென்றால் பிசாசிடமிருந்து வந்த பிள்ளைகளை கர்த்தரின் பட்டயத்தினால் கொன்று விடுங்கள்.

<u>பிசாசுகளின் நடவடிக்கைகளைக்குறித்து அறியவில்லாதவர்கள் இக்கனவுகளை நிராகரிப்பதற்குபதிலாக/ ரத்துசெய்வதற்கு பதிலாக /விட்டுவிடுவதற்குப் பதிலாக அவளுக்கு இருக்கப்போகிற பிள்ளைகளை தேவன் காண்பிக்கிறார் என்று நினைத்துக்கொள்வார்கள்</u>.அது தவறு. சாத்தானுலகத்திலுள்ள ஒவ்வொரு அசுத்தஆவி-கணவனையும் விவாகரத்து செய்துவிட்டு ஒவ்வொரு பிசாசு-குழந்தைகளின் மீதும் தேவனுடைய அக்கினியை கட்டவிழ்த்து விடுங்கள். அவைகள்தான் தாமதத்தை ஏற்படுத்துகின்றன.அவைகள் மொத்தமாக அழிக்கப்பட்டாகவேண்டும்.அப்போதுதான் உலகில் வாழும் உண்மையான கணவனோடு நன்றாக வாழமுடியும்.

1994 இன் ‘**பிள்ளையற்றோருக்கு பிள்ளை**’ என்ற கூட்டத்திற்கான செலவுகளை ஒரு தம்பதியினர் பொறுப்பெடுத்துகொண்டனர். 1989இல் திருமணம் செய்த அவர்களுக்கு இதுவரை அவர்களை பிள்ளை இல்லாமல் தாமதப்படுத்தியது எது என்பதை கண்டுபிடித்துவிட்டார்கள். ஆலோசனை நேரத்தில் அந்தபெண்ணிடம் சில கேள்விகள் கேட்டேன். சிலநேரங்களில் பாலுறவுகனவுகளையும், பிள்ளைகளுக்கு ஆகாரம் ஊட்டுவது போன்ற கனவுகளையும் கண்டதாக சொன்னாள். அந்த கனவின் அர்த்தம் என்ன என்று எனக்குத்தெரியும். 1993இல் மாதம்தோறும் நடைபெறுகிற ‘**பிள்ளையற்ற தன்மைக்கு எதிரான யுத்தம்**’ என்ற கூட்டத்தை நடத்தினோம். அங்கே, அவர்கள் எங்களது கூட்டங்களில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட தம்பதியர்களின் சாட்சிகளை பார்த்தார்கள், கேட்டார்கள்.

இந்த சாட்சிகள் அவர்களது ஆவியை அனலூட்டி எழுப்பிற்று, அவர்களும் யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். ஜெபவேளையில் அந்தபெண்மணி அவளது பிசாசுஉலகத்து அனைத்து பிள்ளைகளையும் கொன்றுவிட்டாள். பிசாசுஉலக கணவனையும் விவாகரத்து செய்துவிட்டு பிசாசுஉலக வீட்டையும் சுட்டெரித்துவிட்டாள்.அந்த ஜெபமானது பலவந்தப் படுத்தி ஜெபிக்கிற ஜெபமாக இருந்தது. ஒன்றில் செயல்படு அல்லது செத்துமடி என்ற தீவிரத்தன்மையுள்ள ஜெபமாக இருந்தது. மறுமாதமே அவள் கர்ப்பவதியானாள். 1994 ஏப்ரல் மாதம் அவளுடைய முதல் குழந்தையாக ஒரு மகளைப் பெற்றெடுத்தாள். இப்புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தேவனுக்கு மகிமையாக இன்னொரு குழந்தையை பெற்றெடுத்திருக்கிறாள்.

*நமது ஜெபங்களுக்கு பதிலளிக்க தேவன் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் அவர் ஒருபோதும் நமக்காக பிசாசை கட்டமாட்டார். நரகசேனைக்கு எதிராக நாம் யுத்தம் செய்தாகவேண்டும், அது பெரிய காரியமல்ல ஏனென்றால் இயேசு கிறிஸ்து கல்வாரிசிலுவையிலே யுத்தத்தில் வெற்றிபெற்றுவிட்டார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் நரகத்தின் ஒவ்வொரு வல்லமையின் மீதும் கர்த்தர் நமக்கு தந்திருக்கிற அதிகாரத்தை (பிரயோகிக்க) பயன்படுத்த வேண்டும். நீங்கள் மறுபடியும் பிறந்தால்தான் இந்த அதிகாரத்தை நீங்கள் செயல்படுத்த முடியும்! மன்னியாமையையும், கசப்பையும் முரட்டாட்டத்தையும் இன்னும் இதயத்தில் வைத்துக்கொண்டு பிசாசோடு போராடி ஜெயங்கொள்ள முடியாது. இயேசுவாகிய பலிபீடத்தில் அவைகள் அனைத்தையும் நீங்கள் சமர்ப்பித்தாக வேண்டும்.*

**இரத்தத்தையோ அல்லது சிவப்பான பொருட்களையோ பார்த்தபின்னர் மாதவிலக்கு வருதல்** (Seeing blood or red objects, afterwards menstruating):

பிசாசு தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பலிகடாக்களாக தெரிந்துகொண்ட பெண்களின் ஒத்துழைப்பை பெறுவதற்காக இப்படி சில விளையாட்டுகளை விளையாடுகிறான். அவைகள் சிவப்பான பொருளை காண்பித்து அந்த பெண்ணிடம் பயத்தை உருவாக்குகின்றன. இதற்கு இவர்கள் ஒத்துக்கொள்ளும்போது கனவில் இதைப்பார்த்தால் என்னுடைய கர்ப்பம் கலைந்துபோகும் (விழுந்துவிடும்) என்று ஒத்துக்கொள்ளும்போது அக்கணமே கர்ப்பம் வெளியே வந்து விடுகிறது.

1992 இல், அக்வா-இபாம் மாநிலத்திலுள்ள உயோ (Uyo in Akwa-Ibom State) என்ற இடத்தில், இதைப்போன்ற பிரச்சினையுடைய ஒரு பெண்ணுக்கு நானும் என் மனைவியும் ஊழியம் செய்தோம். திருமணமாகி கர்ப்பமுற்றாள் ஆனால் அந்த குழந்தை இறந்து பிறந்தது. அதிலிருந்து சுமார் 10 வருடங்களாக அவள் கருவுற இயலாதவளாக இருந்தாள். அவளிடம் நாங்கள் விசாரித்தபோது கனவில் எந்த சிவப்பான பொருளை (உதாரணமாக:- சிவப்பு மிளகு, இரத்தம் அல்லது பனங்கொட்டை) பார்த்தாலும், கருவுற்றதால் மாதவிலக்கு நாட்கள் தவறிப்போயிருந்தாலும், உடனே மறுபடியும் மாதவிலக்கு ஆரம்பித்துவிடும். கொஞ்சகாலமாகவே இப்படி நிகழ்ந்துகொண்டிருந்ததால் குழப்பமடைந்து ஏமாற்றமடைந்திருந்தாள்.

அவளோடு சேர்ந்து ஜெபித்தோம், எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று அவளுக்கு உறுதிகூறினோம். தேவனுக்கு மகிமையாக அவள் கர்ப்பமுற்று முதலாவது ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். கடந்தமுறை நான் உயோ (Uyo)விலிருந்த போது அக்குழந்தையை பிரதிஷ்டை பண்ணினேன்.

**யாரோ உங்கள் குழந்தையை உங்களிடமிருந்து எடுத்துப்போவது போன்ற கனவு** (Some one taking a baby from you in the dream)

ஒரு பெண் கனவு கண்டாள். அவள் ஒரு குழந்தையோடு இருப்பதுபோலவும் திடீரென்று அதை யாரோ அவளிடமிருந்து பறித்துகொண்டு செல்வதுபோலவும் கனவு கண்டால் அந்த பெண் விழித்தவுடன் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.**அவள் கருவுற்றிருந்தால் இயேசுவின் நாமத்தில் அவளுடைய குழந்தையை அவளிடம் திரும்ப கொடுத்துவிடும்படி தீவிரமாக பிசாசிடம் கட்டளையிடவேண்டும். தாமதமில்லாமல் விடுதலை ஊழியத்திற்கு சென்று அவளுடைய வாழ்க்கையில் செயல்படுகிற பில்லி சூனியத்தை ரத்துசெய்யவேண்டும். இவ்வகையான கனவால் வரும் விளைவு என்னவென்றால் கர்ப்பமாகஇருக்கிறது மறைந்துபோகக்கூடும்.** கர்ப்பம் காணாமல் போகமுடியுமா? என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். ஆம். வளர்ச்சியடைந்த கர்ப்பம்கூட ஒரு இரவுக்குள் நம்பமுடியாத அளவுக்கு மறைந்துபோனதை நான் கண்டிருக்கிறேன்.

1995 ஜனவரி, ஒரு தம்பதியர் என்னிடம் ஆலோசனைக்காகவும் விடுதலைக்காகவும் வந்தனர். 17வருடங்களாக அவர்களுக்கு பிள்ளையில்லை. இறுதியில் அந்த பெண் 1987ஆம் ஆண்டு கர்ப்பமுற்றாள், இறுதியில் அவர்கள் பெற்றோராகப்போகின்றார்கள் என்று மக்கள் அவர்களோடு சேர்ந்து மகிழ்ந்தனர். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? கர்ப்பமாகி 8வது மாதமாக இருக்கும்போது ஒரு மனிதன் அவளுடைய கர்ப்பப்பையிலிருந்து வலுக்கட்டாயமாக குழந்தையை பறித்து செல்வதுபோல கனவு கண்டாள். அவள் விழித்துப் பார்த்தபோது எங்கும் இரத்தமாக இருந்தது ஆனால் குழந்தையைக் காணவில்லை, அவளது வயிறு தட்டையாக இருந்தது.

அறியாமை ஒரு நன்மையல்ல, அது தீமையாகும். ஒருவர் மறுபடியும் பிறந்தவராக இருந்தால் இயேசுவின் நாமத்திலிருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி சத்துருவின் தாக்குதலை வெற்றிகரமாக தடுத்துநிறுத்த முடியும். ஒரு தம்பதியினர் தைரியமாக பிசாசை எதிர்த்து நின்று வெற்றிபெற்றனர். இந்த தம்பதியினர்தான் ஒருநாள் ஆலோசனைக்காகவும் விடுதலைக்காகவும் வந்திருந்தனர். அவர்கள் வந்தநாள்தான் ‘விடுவிக்கும் மற்றும் சுகமாக்கும் பள்ளி’யில் ஒருவர் போதிக்கின்ற நாளாக இருந்தது. அந்த போதகர் சொன்ன சிலகாரியங்களைப் ஆர்வத்துடன் கிரகித்துக்கொண்டனர், இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆர்வங்கொண்டனர். அப்பள்ளியில் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்தார்கள். அவர்கள் கேட்ட முதல் போதனையே அவர்களுடைய கண்களைத் திறப்பதாக இருந்தது. முன்னோர்கள் செய்த உடன்படிக்கைகளினாலும் சாபங்களாலும் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களை எப்படி அடையாளங்கண்டுகொள்வது என்றும் அவர்களை எப்படி சரிப்படுத்துவது என்பதையும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. அவர்களது சொந்தவாழ்க்கைக்கே அது பிரயோஜனமாக இருந்தது. அவர்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊர்களுக்குச் சென்று கேள்விகள் கேட்டு விசாரித்து கடந்த காலங்களில் அவர்களது கிராமங்களில் நடந்த நிகழ்ச்சிகளையும், அங்கு வழிபடப்பட்ட விக்கிரகங்களைக் குறித்தும் அறிந்துகொண்டு ஆவிக்குரிய தாக்குதலை நடத்தினர்.‘விடுவிக்கும் மற்றும் சுகமாக்கும் பள்ளி’யில் (SODAH) கற்றுக்கொண்ட காரியங்கள் சத்துருவின் தலையில் ஆணிஅடிக்க அவர்களுக்கு உதவிற்று. அதே மாதத்தில் கதவு திறந்தது, அந்த பெண் கர்ப்பமானாள். ஆனால் பிசாசோ,“உங்கள் பிரச்சினை கர்ப்பம் தரிப்பதில் இல்லை, இக்கர்ப்பம் நான்கு மாதங்கள் நிலைக்குமா பார்ப்போம்” என்று சொன்னான்.

பிசாசு சொன்னது உண்மையாக இருந்ததால் பயம் அவர்களைப் பற்றிக்கொண்டது. கர்ப்பம் தரிப்பது அவர்களது பிரச்சினையல்ல. பிசாசு சொன்ன எந்த ‘உண்மை’யாக இருந்தாலும் அதை நிராகரித்தாகவேண்டும்.<u>உங்கள் வாழ்க்கையை குறித்து உறுதியும் இறுதியுமான வார்த்தை இயேசுவின் வார்த்தைகளே தவிர பிசாசின் வார்த்தைகளல்ல.“இயேசு மீண்டும் வரப்போகிறார்” என்று பிசாசு சொல்வது உண்மையாக இருந்தாலும்கூட நான் சத்திய வேதத்தில் எழுதப்பட்ட “இயேசு மீண்டும் வருகிறார்” என்பதைத்தான நான் நம்புவேன்</u>.

பிசாசு சொல்கிற எதுவாக இருந்தாலும் அது மறைக்கப்பட்ட பொய்களாக இருக்கும் ஏனென்றால் அவன் சொல்வது உண்மையாக இருந்தாலும்கூட அவன் உண்மையை பேசுகிறவன் அல்ல. சிலர் சொல்வார்கள்,“ அந்த மனிதனை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை ஆனால் என் வாழ்க்கையின் முழுசரித்திரத்தையும்

என்னிடம்சொல்லிவிட்டான்'' இது ஒரு பிசாசு பேசிக்கொண்டிருக்கிறது என்று பொருள். நீங்கள் வருங்காலத்தில் 'பெரிய' ஆளாக மாறுவீர்கள் என்று வருங்காலத்தைக் குறித்து ஒரு பிசாசு வெளிப்படுத்தினால் சிலர் மகிழ்ச்சியடைவார்கள்.

என் வருங்காலத்தை ஏற்கெனவே அறிந்திருக்கிறேன். அதை அடையும்படி முன்னேறிச் செல்கிறேன். வேதாகமம் சொல்கிறது:

> நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)

ஆகவே பிசாசு சொன்னதை இத்தம்பதியினர் நிராகரித்துவிட்டனர். அவள் 'விடுவிக்கும் சுகமாக்கும் பள்ளி'யில் (SODAH) ஆறுமாதம் படித்துமுடித்து பட்டம்பெற்றாள். அதே வேளையில் அவளும் ஆறுமாத கர்ப்பிணி என்ற பட்டம் பெற்றாள். தேவனுக்கு மகிமை உண்டாவதாக. கடந்த வருடம் சாட்சிசொல்லவும் கர்த்தருக்கு நன்றிசொல்லவும் அவர்களுடைய குழந்தையை கொண்டு வந்திருந்தனர். அவர்களது சாட்சிகளை கேட்டபோது கர்த்தரிடமிருந்து கர்ப்பத்தின் கனியை பெற்றுக்கொள்ளபொறுமையாக காத்திருக்கிறவர்கள் பட்டபாடுகளையும்,அவமானத்தையும், மனவேதனையையும் எவரும் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருந்தது. தேவனுக்கு ஸ்தோத்திரம். அப்படி வேதனைப்பட்ட மக்களின் முகத்தில் புன்னகை மலரச்செய்து சாட்சிசொல்ல புத்தம் புதிய காரியத்தை இயேசு செய்வாராக. ஆமென்.

---

# ஏழு

---

# தண்ணீர் கனவுகள்

(Water Dreams)

**தண்ணீர், ஆறு, கடல் போன்ற கனவுகள்** (Dreaming of water, river, ocean, etc.)

சிலர் நீந்துகிறதுபோலவும், தண்ணீரை கடந்து செல்வதுபோலவும், ஏரிகரையோரமாக, நதியோரமாக நடப்பது போலவும் கனவு காண்பார்கள். சிலருக்கு தண்ணீருக்கு அடியில் உள்ள கிராமங்களில் வீடுகள் இருக்கும், சிலர் குளிப்பதுபோலவும் சிலர் படகில் சைக்கிள்போன்று மிதித்து கால்களால் ஓட்டிச்செல்வதுபோலவும், சிலர் மேலிருந்து தண்ணீரில் குதிப்பதுபோலவும் தண்ணீரில் பயணம்செல்வதுபோலவும். அதே வேளையில் மற்றவர்கள் நதியின் குறுக்காக செல்வதுபோலவும். தண்ணீரின்மேல் நடப்பதுபோலவும், மீன்பிடிப்பது போலவும், நத்தைகள் சேகரிப்பதுபோலவும், கடற்சிப்பிகளை சேகரிப்பதுபோலவும் இதுபோன்ற கனவுகளை காண்பார்கள்.

கனவில் இதுபோன்ற அனுபவங்கள் எப்போதாவது வந்திருக்குமானால் அல்லது இப்போது வந்துகொண்டிருக்குமானால் நீங்கள் விடுதலையடையச் சென்றாகவேண்டும்.அதைப்பற்றி எனக்கு கவலையில்லை நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்லக்கூடும். நீங்கள் பரிசுத்தமும், ஜெபமும் உள்ள ஒரு வாழ்க்கை வாழ்வீர்களானால் உங்களது பரிசுத்தமும் ஜெபமும் உள்ள வாழ்வானது தண்ணீர் சம்பந்தமான அசுத்த ஆவிகள் இருப்பதையும் அவைகளின் கிரியைகளையும் வெளியில் தெரியாதபடி அடக்கிவைக்கப்பட்டிருக்கக்கூடும். என்னுடைய ஆலோசனை என்ன என்றால் விடுதலையடையச்செல்லுங்கள் அப்போதுதான் அவைகள் உங்கள் வாழ்க்கையின் ஒருபகுதியில் அடக்கிவைக்கப்படாமல் முற்றிலும் உங்கள் வாழ்க்கையை விட்டு வேரோடு பிடுங்கிப்போடப்படும் - அழிக்கப்படும்.

<u>அசுத்தஆவிகளின் கிரியைகளை மொத்தமாக அழிக்காமல் அவைகளை அடக்கிவைத்துக் கொள்வீர்களானால் உங்களது பலவீனமான நேரங்களில் அதாவது, நீங்கள் ஜெபமற்ற நிலையிலோ அல்லது முன்பு ஜெபிக்கிற அளவுக்கு ஜெபிக்காமல் இருக்கும்போதோ இந்த அசுத்த ஆவிகள் மேற்பரப்புக்கு வருகின்றன</u>. ஆகவேதான் ஆலோசனைக்கு வரும் சில கிறிஸ்தவர்கள்,"நான் மறுபடியும் பிறந்தபோது 'இந்த பிரச்சினை' நின்றுவிட்டது ஆனால் மறுபடியும் நான் இப்போது அனுபவிக்கிறேன்." என்றும் இன்னும் சிலர்,"நான் அந்த..அந்த இடத்திலிருந்து ஜெபித்தபோது அந்த பிரச்சினை நின்றுவிட்டது ஆனால் மறுபடியும் ஏன் அக்காரியம் கடந்த வாரத்தில் நிகழ்ந்தது." என கேட்கிறார்கள். இப்படிபட்ட ஏற்ற இறக்க அனுபவங்களுக்கு காரணம் - இன்னும் வேரோடு பிடுங்கப்பட வேண்டிய சிலகாரியங்கள் எஞ்சிஉள்ளது என்பதுதான். உங்கள் மொத்த விடுதலைக்கான விலைக்கிரயத்ததை இயேசு கிறிஸ்து முழுமையாய் செலுத்தி விட்ட பின்னர் நீங்கள் ஏன் மௌனமாக அவதிப்படவேண்டும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் (100%) நூற்றுக்கு நூறு அற்புத முன்னேற்றத்தையோ, விடுதலையையோ காணவில்லை/பெறவில்லை என்றால் பெற்றுக்கொண்டதுபோல நடிக்காதீர்கள். உங்களது முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறஆயத்தமாகுங்கள், அவைகளை நீங்கள் முழுமையாய் பெற்றுக்கொள்ளும்வரை சத்துருவை தொடர்ந்து தாக்குங்கள். நீங்கள் செய்யக்கூடாத ஒருகாரியம் உண்டென்றால் - ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்.

தண்ணீர் கனவுகளும் அதோடு தொடர்புடைய தண்ணீர் பிசாசுகளின் தாக்குதல்களும் இருக்குமானால், அதற்கு அர்த்தம் நீங்கள் பெயர் சொல்லித்துரத்தவேண்டிய மூவகையான சாத்தானின் துரைத்தனங்களும் வல்லமைகளும் இருக்கின்றன. அவைகள் முறையே:-

- லிவியதான் என்ற பில்லிசூனிய ஆவிகள்
- கடற்கரை ராணி (நீங்கள் பெண்ணாக இருந்தால்)
  கடற்கரை ராஜா (நீங்கள் ஆணாக இருந்தால்)
- கடல் சம்பந்தமான ஆவிகள் (மம்மி )

ஜலத்திலுள்ள அனைத்து பிசாசுகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற துரைத்தனமாக இருப்பது லிவியாதான் என்று வேதாகமம் சொல்கிறது.

> அக்காலத்திலே கர்த்தர் லிவியதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது

> பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார். (ஏசாயா 27:1)

சரீர பலத்தினாலே அதாவது தூண்டிலினால், பிடிக்கவோ அடக்கவோ முடியாதது என்று இத்துரைத்தனத்தைக்*(லிவியாதான்)* குறித்து யோபு கூறினார்.

> லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக் கூடுமோ? அதின் மூக்கை நார்க்கயிறு போட்டுக் கட்டக்கூடுமோ? குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்தக்கூடுமோ? *(யோபு 41:1-2)*

இதுபோன்ற துரைத்தனங்களையும் வல்லமைகளையும் மேற்கொள்வதற்கு ஒரே வழி,அவைகள் வந்த நுழைவாயில்களையும் அவைகளின் கிரியைகளையும் செயல்களின் தன்மை தீவிரமா அல்லது மிதமா என்று அறிந்துகொண்டு அதற்கேற்றபடி அதை எதிர்த்து ஆவிக்குரிய யுத்தம் செய்யவேண்டும். தெளிவான வேதவசன அறிவானது இந்த யுத்தம் செய்வதற்கு உங்களுக்கு ஆதரவாக இருக்கட்டும்.

பிள்ளை பாக்கியம் கிடைப்பதற்காக அறிந்தோ அறியாமலோ தண்ணீர் சம்பந்தமான அசுத்தஆவிகளை நாடியவர்களுக்குள்ளாக இப்பிசாசுகள் நுழைந்துவிடுகின்றன.பலிகள் செலுத்தியதன் மூலமாகவும் இப்பிசாசுகள் சில குடும்பங்களுக்குள் நுழைந்துவிடுகின்றன. நைஜீரியா போன்ற கடற்கரை பகுதிகளில் இருக்கும் இப்பிசாசுகளின் இடைத்தரகர்களாக செயல்படும் மனிதர்கள், ஆகாரங்களையும் குடிக்கும் பானங்களை(வெளிப்பார்வைக்கு தீங்கற்றதுபோல தோன்றும்) மக்களுக்கு கொடுப்பதன் மூலம் அந்த மக்களை பிசாசுகளுக்கு வேலைசெய்கிறவர்களாக நியமித்துவிடுகின்றனர். எத்தனை பேர் அந்த ‘சிறப்பான ஆகாரத்தையும் பானத்தையும்’ சாப்பிடுகிறார்களோ அத்தனைபேரும் ஒரு தண்ணீர் சம்பந்தமான பிசாசை வீட்டுக்கு சுமந்து செல்கிறார்கள்.

எவர்களை எல்லாம் இப்பிசாசு ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறதோ, அவர்களிடம் அவைகளுக்கென்று படுக்கையறையில் பூஜை அறை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தும். அதற்கு உடன்படாமலிருந்தால் அனைத்துவகையான உபத்திரவங்களையும் வேதனைகளையும் ஏற்படுத்தும்.

1992, அக்டோபர் மாதத்தில் ஒருபெண் அவளுடைய பிள்ளைகளோடு விடுதலை ஊழியத்தினால் பலன்பெற வந்தாள்.அவள் சட்டபூர்வமாக திருமணஞ்செய்துகொண்டவளாகவும் மூன்று பிள்ளைகளைப்பெற்றவளாகவும் இருந்தாள். கனவில் ஒரு நாள் தண்ணீருக்குள்ளிருந்து ஒரு பெண் தோன்றி அவள்தான் அப்பெண்ணின் உண்மையான தாய் என்று உரிமைபாராட்டியதோடு, பலியிடவும் அதோடு தொடர்புடைய சடங்காச்சாரங்கள் செய்யவும் வேளைவந்தது என்று சொன்னாள். திகிலடைந்தவளாய் விழித்தெழுந்தாள். நல்லவேளை அவளைப்பெற்ற தாய் உயிரோடு இருந்ததால் அவளிடம் சென்று நம்பமுடியாத அக்கனவை விவரித்துச் சொன்னாள். அவளது அம்மா சிரித்தவாறு, பலவருடங்களாக அவள் மலடியாக இருந்தபோது, பிள்ளைவேண்டும்என்று இத்தண்ணீரில் வசிக்கும் பிசாசுகளை நாடி அவைகளிடமிருந்து அவளை பெற்றுக்கொண்டதாகவும், ஆகவே“தாயாகிய அவள் செய்த பொருத்தனை”யை மகளாகிய அவள் செய்தாகவேண்டும் என்று சொன்னாள்.

இப்பெண் அதற்குப் மறுத்துவிட்டாள்,குறுகிய காலத்திற்குள்,உண்மையான காரணம் ஏதும் இல்லாமலே அவளது குடும்பம் உடைந்துபோயிற்று. அவளுடைய கணவன் வீட்டைவிட்டு வெளியேறி அவளை விவாகரத்து செய்துவிட்டான், பின்னர் அவன் வெளிநாடு சென்று திருமணம் செய்து கொண்டான். அவளும் அவளுடைய மூன்று பிள்ளைகளும் இக்கட்டான நிலையில் கைவிடப்பட்டவர்களாக நைஜீரியாவில் இருந்தனர். இந்த உபத்திரவங்களில் மிகமோசமானகாரியம், 12வயதான அவளுடைய மூத்தமகன் அவளை கற்பளிக்க பலமுறை முயற்சித்தான். சிலவேளை திடீரென்று விழித்துப்பார்த்தால் அந்த பையன் அவளை முத்தமிட்டு கொஞ்சிக்கொண்டிருப்பதை கண்டிருக்கிறாள்.

பிள்ளை வேண்டுமென்ற ஆசையில் பிசாசுகளை நாடிச்சென்று அறியாமையினாலே இப்படிப்பட்ட ஆபத்தும் பேரழிவும் உண்டுபண்ணும் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்ட பெற்றோர்களும்,தாத்தா பாட்டிகளும் எத்தனை திரளாயிருக்கிறார்களோ?உங்கள் வாழ்க்கையில் காணப்படும் அவலட்சணமான நிலைமைக்கு என்ன காரணம் என்பதைத் தோண்டித் துளாவி வேரைக்கண்டுபிடித்து அதை அப்புறப்படுத்தாவிட்டால் உங்களால் முழுமையான எந்த மாற்றத்தையோ, சாதனையையோ நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாது.

தண்ணீர் கனவுகளில் சிலர் நீளமான தலைமுடியோடு தங்களைக் கண்டிருக்கின்றனர். சிலர் அவர்களுடைய தலைகளில் கிரீடங்களை இருப்பதாக கண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட எதாவது ஒரு நிலைமைகளில் நீங்கள் இருந்தால், சாத்தானின் கூட்டத்தில் ஒரு உயர்பதவியில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம், ஆகவே எவ்வளவு சீக்கிரமாக விடுதலை ஊழியத்தை நாடிச்சென்று விடுதலை பெறுகிறீர்களோ அவ்வளவு நல்லது. பிசாசுகள் நல்லவைகள் அல்ல. வெகுகாலமாக அப்பிசாசுகளின் அடிமைத்தனத்திற்குள் சிறைப்படுத்தப்பட்ட நபர்கள் விடுதலை அடைய விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால் அவாஹஹ்களுக்கு திடீர் மரணத்தையோ அல்லது விபத்துக்களையோ ஏற்படுத்த முயலும். ஆகவே விடுதலை பெறும் காலத்தை ஒத்திப்போடுவது பாதுகாப்பற்ற செயலாகும்.

இப்படிப்பட்ட தண்ணீர் பிசாசுகளுடையவர்கள், சாதாரணமனிதர்களால் பார்க்கமுடியாததையும் பார்க்கவும் கேட்கமுடியாததையும் கேட்கவும் முடியும்.சிலர் மிகவும் பயந்துகொண்டிருப்பார்கள், அதிலும் அவர்கள் பிசாசின் ராஜ்யத்தில் செய்யவேண்டிய எதையாவது செய்யத்தவறி இருந்தால் அளவுக்கு அதிகமாக பயந்துகொண்டிருப்பார்கள்.சில நபர்கள், சிறியதும் பெரியதுமான பாம்புகள் அவர்களை வழிகாட்டி பாதுகாத்து செல்வது போல காண்பார்கள். இப்படிக்காண்பவர்கள் தண்ணீர்பிசாசுகளின்உலகத்தில் உயர் அதிகாரியாக இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

*ஒருவர் மறுபடியும் பிறந்த உடனேயே, பிசாசு-உலகத்தோடு முன்பு அவருக்கு இருந்த உறவும் தானாகவே ரத்தாகிவிடும் என்று தவறாக சிந்திக்கின்றனர். அப்படி அல்ல.இவ்வகை பிசாசுகளோடுள்ள உறவை துண்டித்துவிட்டு பிசாசின் வல்லமையை வெளிப்படுத்துகின்றஅல்லது பிசாசுக்குச் சொந்தமான பொருளை விட்டுவிட்டு அல்லது அழித்துவிட்டு பின்னர் சம்பந்தப்பட்ட பிசாசுகளுக்கு எதிராக ஒரு ஆவிக்குரிய யுத்தத்தை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மறுபடிபிறந்தாலும் பிறரால் பார்க்க முடியாததை பார்க்கும், பிறரால் கேட்க முடியாததை கேட்கும், பிசாசுகளின் கூட்டத்தில் பங்கெடுக்கும் அனுபவம் போன்ற கனவுகூட தொடரும்.*

பிசாசோடும் அல்லது பிசாசின் குழுவினரோடும் உள்ள ஒவ்வொரு உறவையும் நீங்கள் துண்டித்து விட்டு விடுதலை ஊழியத்தின் மூலம் முழுமையாக கழுவப்பட வேண்டும். அதன்பின்னர் பரிசுத்தஆவியானவரால் நீங்கள் நிரப்பப்படவேண்டும். இவை அனைத்தையும் செய்துவிட்டு,ஜெபம், உபவாசம், தியானம், தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்தல் போன்றவைகளினால் சத்துருவின் இராஜ்யத்திற்கு எதிராக நீங்களாகவே ஒரு யுத்தத்தை பலவந்தத்துடன் செய்தாக வேண்டும்.

1993 இல், ரிவர் மாநிலத்தில் (River State) ஒரு கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன் (நான் செய்திகொடுக்கவில்லை). நான் அக்கூட்டத்திற்கு வந்ததும் போகிறதும் ஒருவருக்கும் தெரியாமல் இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன். ஆனால் சபையின் தலைமைப்போதகர் ஒரு சில நிமிடங்கள் ஒரு பெண்ணுக்கு விடுதலைஊழியம் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.அந்த பெண்மணியின் விடுதலைக்காக முழுசபையும் உபவாசித்து, ஜெபித்து, முழுஇரவு ஜெபம் நடத்தியும் ஒரு பலனும் இல்லை என்றார். ஆகவே நான் அங்கு தங்குவதற்கு ஒத்துக்கொண்டேன்.

அவளிடம் விசாரித்தபோது பாம்புகள் அவளோடு படுக்கையில் உறங்கும் என்றும் அவளுடைய காலணிகளுக்குள்ளும் பானைகளுக்குள் ஊர்ந்து செல்லும் என்றும் சொன்னாள். அந்த பாம்புகளை சாகடிப்பதற்காக அவளது அயலகத்தாரை இப்போது

பலமுறை அழைத்தும் அவளுக்கு அவர்கள் உதவ விரும்பவில்லை என்றும் அவளுடைய வீட்டில் ஒருநாளில் பலபாம்புகள் கொல்லப்படும் என்றும் சொன்னாள். அவளுக்கு விடுதலை ஊழியம் செய்வதற்காக மேல்மாடியிலிருந்த வகுப்பறைக்கு அழைத்துச் சென்றேன். விடுதலை ஊழியம் செய்யும் ஒரு ஆவிக்குரிய மகனையும் என்னோடு அழைத்துச் சென்றேன்.

*ஒரு ஊழியர்,ஒரு எதிர்பாலினருக்கு தனியாகவோ, மறைவான இடத்திலோ, விடுதலை ஊழியம் செய்யக்கூடாது. உங்களையும் உங்கள் சாட்சியையும் அழிப்பதற்காக பிசாசுகள் எவ்வகையிலாவது பாலியல் ரீதியாக உங்களைத் தாக்கக் கூடும். எச்சரிக்கையாக இருங்கள்.* ஊழியத்தை துவங்கியபோது அந்த பெண்மணி நன்றாக ஒத்துழைத்தாள். ஆனால் பிசாசின் எதிர்ப்பையோ வெளியேறுதலையோ காணமுடியவில்லை. ஆகவே ஏன் என்று தெரியாமல் ஆச்சரியப்பட்டேன். அப்போதுதான் பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிட்ட ஆலோசனையைச் சாராமல், பொதுவான விடுதலை ஊழியத்தின் விதிமுறைகளை பயன்படுத்திஅந்த பெண்மணியை விடுதலையில் நடத்திவிடலாம் என்று கருதியது தவறு என்று உணர்ந்துகொண்டேன்.

‘‘இயேசுவின் நாமத்தில் கடற்கரை ராணியே அவளை விட்டு வெளியே வா’’ என்று கட்டளைகொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் என் இதயத்தில் உரத்தகுரலில் சொன்னார். ஆகவே நான், ‘‘ஏ கடற்கரை ராணியே!........’’ என்று கட்டளையிடும் வாக்கியத்தை சொல்லிமுடிப்பதற்குள். அவள் கொடூரத்தோடு படுவேகத்தில் என்னை நோக்கிப் பாய்ந்தாள். நான் அதைவிடவேகமாக, ‘‘இயேசுவின் நாமத்தில் எனக்கெதிராக உன்னால் ஏதும் செய்யமுடியாது.’’ என்று சத்தமிட்டேன். உடனே அவள் நின்று விட்டாள். அதன் பின்னர்,‘‘இயேசுவின் நாமத்தில் அவளைவிட்டு வெளியே வா’’ என்று சொல்லி முடித்தேன். உடனே அவள் கீழே விழுந்தாள் அவ்வளவுதான் எல்லாம் சரியாயிற்று.

ஒரு வருடம் கழித்து பரிசாக கொடுக்க ஒரு கோழி வாங்குவதற்காக அப்பகுதியிலுள்ள சந்தைக்கு சென்றேன். யாரோ என் பின்னால் வந்து,‘‘ஐயா, வணக்கம்.’’ என்றார்கள். திரும்பிப் பார்த்தால் ஒரு வருடத்திற்கு முன்னால் நான் விடுதலைக்குள் நடத்திய அந்த பெண்மணி, இயேசு கிறிஸ்துவால் மட்டுமே கொடுக்க முடிந்த மிகுந்த அழகும் விடுதலையடைந்த மகிழ்ச்சியும் முகத்திலே பிரதிபலிக்க நின்றுகொண்டிருந்தாள்.அந்த சந்தையில் மிகக்குறைந்த விலையில் மிகச்சிறந்த கோழியை வாங்கும்படி செய்தாள்.

அவர்கள் தண்ணீர் சம்பந்தமான பிசாசுகளிலிருந்து விடுதலைபெற்றவர்களின் விசுவாசத்தை தக்கவைப்பதற்காக சகோதரி. விக்டோரிய ஈற்றோ அவர்களால் கொடுக்கபட்ட ஆலோசனைகள்:-

- அதிகவேதவசனங்களால் நிரப்பப்படவேண்டும். தண்ணீர்-பிசாசுகள் ஒருமனிதனை விட்டுப்போகும்போது அவனை வெறுமையும் குழப்பமடைந்த வனாகவும் விட்டு சென்றுவிடுகிறது. அந்த நபர் தேவவசனத்தால் அனுதினமும் போதிக்கப்படவேண்டும். வேதவசனமானது புத்தியோடு வாழ்க்கையில் செயல்படுத்தப்படவேண்டும். மூளைஅறிவாக இல்லாமல் நடைமுறையில் கடைபிடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தேவன் நம்மீது வெளிப்படுத்தின தேவஅன்பையும் அதற்கு ஈடாக நாம் பதிலுக்கு செலுத்தவேண்டிய அன்பையும் முக்கியப்படுத்த வேண்டும். அளவுக்கு பாவத்தையும், சுபாவத்தையும் சரீரதோற்றத்தையும் அதிகமாக முக்கியப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தேவஅன்பு ஒருவனைத் தொட்டுவிட்டால் அதன் பின்னர் அந்த நபர் சுபாவத்திற்கும், தோற்றத்திற்கும் அதிக அக்கரை செலுத்துகிறான்.

- வல்லயையாக ஜெபிக்க கற்றுக்கொடுங்கள், அதிலும் குறிப்பாக எப்படி தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுங்கள். தேவனை

ஆராதிப்பது பாய்கின்ற நதிபோல ஓடிக்கொண்டேயிருக்கும். ஆனால் இதயத்தில் முரட்டாட்டம் இருக்குமானால் அன்பு, ஆராதனை என்னும் நதியை பாயவிடாதபடி வற்றவைத்துவிடும் (நதி உள்வாங்கிக்கொள்ளும்).

- அவர்கள் மீது கவனம் வைத்திருங்கள் ஆனால் அவர்கள் உங்களை மோசடி செய்யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். பரிதாபத்தின்படி நடத்தப் படுவீர்களானால் தோற்றுப்போவீர்கள்.

- தெய்வீக அன்பை வெளிப்படுத்துங்கள். அவர்களோடு ஏன் நேரத்தை செலவு செய்கிறீர்கள் என்பதை புரிந்துகொள்ளச் செய்யுங்கள்.

- கேட்கப்படும் அனைத்து கேள்விகளுக்கும் நேர்மையான, உத்தமமான, வேதவசனத்தின் படியுள்ள பதில்களைச் சொல்வதற்கு ஆயத்தமாயிருங்கள்.

- பாவம் என்றால் என்ன என்பதையும் அது எப்படி அவர்களுக்கும் தேவனுக்கு இடையே உள்ள தொடர்பை கெடுக்கிறது என்பதையும் விளக்கிச் சொல்லுங்கள்.

- சரியான சுபாவத்தின் தேவையை (தெய்வீககுணநலன்களின் அவசியத்தை) அறிமுகப்படுத்துங்கள்.

- ஞானமுள்ளவர்களாகவும் அற்பணிக்கப்பட்டவர்களாகவும் இருங்கள். உங்கள் இதயம் கிறிஸ்துவை நேசிக்கவேண்டும் - காதல் கொள்ள வேண்டும். நீங்களாகவே கிறிஸ்துவில் காதல் கொள்ளாவிட்டால் எவர் சொல்லியும் உங்களால் அவரை நேசிக்க முடியாது.

- சபைக்குள் இப்படிப்பட்ட மக்களை தக்கவைத்துக்கொள்ள சபையார் ஏராளமான காரியங்களை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களை நேசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். சகோதரர்கள் காண்பிக்கும் அன்பானது அவர்கள் முன்பு வைத்திருந்த தண்ணீர் பிசாசுகளோடு உள்ள ஐக்கியத்தை இடமாற்றக்கூடியதாக இருக்கவேண்டும்.

- மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்களை அழைத்து அவர்களுக்காக 2ஆண்டுகள் தொடர்ந்து ஜெபம் பண்ணவேண்டும்.

தண்ணீர் சம்பந்தமான அசுத்தஆவிகளை உடைய மக்கள் வழக்கமாக தண்ணீரில் குழுக்களாக சந்திப்பார்கள். தீய காரியங்களைத் திட்டமிடுவதோடு புதிதாக பிறஆட்களை எப்படி சேர்க்கலாம் என்றும் திட்டமிடுவார்கள். அவர்களில் அநேகர் இளவயதினராக இருக்கிறார்கள். அவர்களை வெவ்வேறான பெயர்களில் வெவ்வேறான மக்கள் அழைப்பார்கள். அதில் ஒரு பெயர் ஓக்பன்ஜி. இந்த ஓக்பன்ஜியினர் இளவயதிலேயே இறந்து விடுவார்கள். இக்குழுவினரில் பெரும்பாலானவர் எப்போது சாகப்போகிறார்கள் என்பதை அறிவார்கள். கொஞ்சகாலத்திற்கு முன்பு ஒரு ஓக்பன்ஜியாக இருந்த ஒருத்தி அவள் எப்போது இறப்பாள் என்றும் அதன்பின் என்ன செய்யவேண்டும் என்றும் அவளுடைய கணவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அந்த கணவர் கத்தியவாறு திகிலடைந்து இதைக்குறித்து என்னிடம் பேசவந்திருந்தார். அவருடைய மனைவி அந்த குழுவினரோடு தொடர்ந்து இருக்க விரும்பவில்லை என்று சொல்லியிருந்ததால் அவளுடைய குழுஉறுப்பினர்கள் அவளை கொல்ல திட்டமிடுவதாக என்னிடம் சொன்னாள்.

1991 இல், ஒரு சிறுபெண், சபைஆராதனை முடிந்ததும் என்னிடம் வந்து,"தயவு செய்து நான் உங்களோடு வீட்டிற்குச் செல்லவிரும்புகிறேன். உங்களிடம் ஒரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன்." வீடுவந்து சேர்ந்ததும்,"நான் சாக விரும்பவில்லை" என்று சொன்னாள். நான் உடனே,"நீ சாகமாட்டாய்." என்று சொன்னேன். அவளுக்கு உடனடியாக உதவியாகவேண்டும் என்பதை அறிந்து யுத்தம்செய்ய ஆயத்தமாகிவிட்டேன்.

அவள் விடுதலையாக்கப்பட்டுவிட்டால் அவள் திரும்பி அவைகளை தாக்கவும் உபத்திரவப்படுத்தவும் அவர்களுடைய ரகசியங்களை வெளிப்படுத்திவிடுவாள் என்று பிசாசுகள் அறிந்துகொண்டன. அது அவர்களுடையராஜ்யத்திற்கு பெருத்த அடியாக இருக்கும் என்பதால் அவளை எவ்வளவு வேகமாக கொல்லமுடியும் என்று முயற்சிக்கக்கூடும்.

அவளிடம் ஒரு சிலகேள்விகள் கேட்டேன். அவளுடைய குழுவில் சுமார் 20பேர் இருப்பதாகச் சொன்னாள். அவர்கள் அனைவருடைய சரீர அடையாளங்களை அறிந்திருந்தாள். அதுபோல அவர்கள் ஒருவருக்கொருவர் அறிந்துவைத்திருந்தார்கள். அவளது எண்.17 என்றும் அதில் அவளுக்கு முன்னிருந்த 16பேரும் இறந்தவிட்டனர் என்றும் அடுத்தது அவள்தான் என்றும்,இறந்துவிடுவோமே என்ற எண்ணம் திடீரென்று அவளை மிகவும் பயமூட்டியதால் அந்த ஓக்பனஜி குழுவோடுள்ள ஐக்கியத்திலிருந்து விலகிவிடுவதற்காக விடுதலை அடையும் வழியைத்தேட முடிவெடுத்தாள். ஒரு சாதாரண பெண்ணோடு நான் பேசிக்கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்திருந்தேன். எனினும் விடுதலை சம்பந்தமான சில அடிப்படை விதிகளையும், பாடத்தையும் செயல்முறைகளையும் சொல்லிக்கொடுத்தேன்.

நான் அவளுக்கு ஊழியம் செய்துகொண்டிருந்தபோதே பரிசுத்தஆவியானவரின் வல்லமை அவள் வாழ்க்கையின் மீது இருந்த பிசாசின் வல்லமைகளை உடைத்துப்போட்டது. ஜெபித்து முடித்தபோது, பிசாசின் ஏஜென்ட்டாக (இடைத்தரகர்களாக) இருக்கிற ஒவ்வொருவரின் சரீரத்திற்குள்ளும் சாத்தானுக்குரிய சில பொருட்கள் பதித்துவைக்கப்பட்டிருக்கும் என்பதை வெளிப்படுத்தினாள். அவர்களில் சிலர் சபையில் சுறுசுறுப்பாக செயல்படும் சபை அங்கத்தினர் என்றும் உத்தம கிறிஸ்தவர்களை ஒழுக்கக்கேடான அல்லது அவர்களை விழுந்துபோகச்செய்யும் எதாவது ஒருபாவம்செய்யும் படி கவர்ந்ததிழுப்பதே இவர்களது வேலை என்றும் சொன்னாள். தேவனுக்கு மகிமையாக அந்த பெண் மரிக்கவில்லை,இந்நாள்வரை அவள் உயிரோடு இருக்கிறாள்.இதுபோன்ற பிரச்சினைக்குள் அகப்பட்டிருக்கிறீர்கள் என்றால் உதவிபெற உடனே விரைந்து வாருங்கள். சிங்காசனத்தில் இயேசு வீற்றிருக்கிறார். அவரது சிங்காசனத்தை கவிழ்க்க ஒருவராலும் முடியாது. கர்த்தருக்கு துதி உண்டாகட்டும்!

எட்டு

# கனவுகளைக் குறித்த கூடுதல் செய்திகள்

**கனவில் சாப்பிட்டுக்கொண்டோ குடித்துக்கொண்டோ இருந்தால்**(Eating or drinking in the dream)

சிலர் கனவில் எல்லாவகையான பொருட்களையும் சாப்பிடுவார்கள் குடிப்பார்கள். சாதாரண கொக்கோலா,ஃபான்டா, பீர் போன்றவைகளையும் விசித்திரமாக ரத்தத்தையும், மனிதசரீரத்தையும்கூட அவர்களது கனவில் சாப்பிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் விழித்தெழும்பினால் அவர்களது ஜெபவாழ்க்கையானது குறைந்துபோயிருப்பதைக் காண்பார்கள். இப்படிப்பட்ட நபர்களின் வாழ்வை உபத்திரவப்படுத்தும்படி, சாப்பிடும் கனவை கொண்டுவருவதற்கு காரணமாக இருக்கிற பரம்பரையாக வருகிற பழக்கப்பட்ட

பிசாசுகளோடு (familiar spirits) சில பிசாசுகள் ஒத்துழைக்கின்றன. இன்னும் சில சூழ்நிலைகளில் ஆகாரத்தை கனவில் காண்பார்கள் ஆனால் சாப்பிடுவதில்லை. சிலர் சமைத்து பரிமாறுவதுபோல காண்பார்கள் ஆனால் சாப்பிடமாட்டார்கள். சிலர் ஆகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டவுடன் அல்லது ஆகாரத்தை சாப்பிடப்போகும் நேரத்தில் விழித்து எழும்பிவிடுவார்கள். சிலர் தெரிந்த நபர்களோடு அல்லது முன்பின் தெரியாத நபர்களோடு விருந்துகளில் கலந்துகொள்வதுபோல காண்பார்கள்.

*கனவுகளின் மூலமாக வெளிப்பட்ட இப்படிப்பட்டகாரியங்கள் அந்த நபரிடம் ஒரு (பரம்பரையாக வருகிற) ஒரு பழக்கப்பட்ட அசுத்த ஆவி இருக்கிறது என்பதைக் சுட்டிக்காட்டுகின்றது. பிலிப்பியர் 4:8 இல் சொல்லப்பட்டபடி ஒரு கிறிஸ்தவன் எப்போதும் நற்காரியங்களைக் குறித்தே சிந்திக்கக் கடமைப்பட்டவனாக இருப்பதோடு அது அவனுடைய கனவில்கூட அது பிரதிபலிக்க வேண்டும். கனவில் சாப்பிடப்போகும் தருணத்தில் விழித்துவிட்டீர்கள் என்றால் உங்கள் உள்ளான ஆவிக்குரிய மனிதன் இருக்கவேண்டிய அளவுக்கு ஊக்கமாக இல்லை என்பதை காண்பிக்கின்றது. கனவில் சாப்பிடுவதிலோ குடிப்பதிலோ ஈடுபடாத அளவுக்கு தெய்வீக வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ளும்படி நீங்கள் ஜெபத்தினாலும் வேதவசனதியானத்தினாலும் உங்கள் ஆவிக்குரிய மனிதனை மேம்படுத்துவது இன்றியமையாத காரியமாக உள்ளது. கிறிஸ்து இயேசுவோடு உன்னதங்களில் நீங்கள் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள்என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 2:6).*

1992, கனவில் சாப்பிட்டதால் பிரச்சினை ஏற்பட்ட ஒரு பெண்ணுக்கு நான் ஊழியம் செய்தேன். அவளுடைய இரைப்பைக்குள்ளிருந்து எதோ துள்ளத்துவங்கியது. அவைகளைத் தொட்டுணரத்தக்கதாக இருந்தது. பலமுறை அவளோடிருந்து நான் ஜெபித்திருக்கிறேன், பிசாசி வெளிப்படுவதுபோன்ற அலைக்களிப்பு ஏற்பட்டும் அந்த பிரச்சினைகள் அவளுக்குள் அப்படியே இருந்தது. கனவில் யாரோ கொடுத்த இரண்டு அவித்த முட்டைகளை சாப்பிட்டாளாம், உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டதிலிருந்து அவளுக்குள் அவைகள் துள்ளிக்குதிக்க ஆரம்பித்துவிட்டன.

அவளுடைய கணவனிடம் கனவை விவரித்துச்சொன்னதும் அவர் அவளை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார். மருத்துவ பரிசோதனைகள் எல்லாம் செய்து முடித்தபின்பு அவளுடைய கா்ப்பப்பையில் கான்சர் இருப்பதாக மருத்துவர் சொன்னார். அறுவை சிகிச்சை செய்து கா்ப்பப்பையை அகற்றிவிடவேண்டும் என்று மருத்துவர் ஆலோசனை கூறினார். அவளுக்கு ஏற்கெனவே 5பிள்ளைகள் இருந்ததால் அதற்கு சம்மதித்துவிட்டாள். அறுவை சிகிச்சை முடிந்து 8நாட்கள் கழித்து மறுபடியும் அவளுக்குள் இரண்டு முட்டைகள் துள்ளிக்குதிக்க ஆரம்பித்துவிட்டன. மறுபடியும் மருத்துவசோதனை நடத்திய தலைமை மருத்துவ ஆலோசகர் எங்கோ தவறு இருக்கக் கூடும் என்றும் அதை கண்டுபிடிக்க வேண்டும் என்று இன்னொரு அறுவை சிகிச்சைக்கு மருத்துவரிடம் அனுப்பினார். அதற்கு அந்த தம்பதிகள் மறுத்துவிட்டனர். அதன் பின்னர்தான்,நினைத்தது எல்லாம் நடக்கும் என்று எண்ணி அவர்கள் குறி சொல்லுகிற வீட்டிற்கு செல்ல ஆரம்பித்தனர் ஆனால் அதனால் அவர்களுக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை.

இந்த வேளையில் குறி சொல்லுகிற வீட்டிற்கு சொந்தமான– உரிமைப்பட்ட எதாவது பொருட்கள் அவர்கள் வீட்டிலிருக்கிறதா என்று கேட்டேன்.‘திருவோடு’ (calabash=பழக்கொட்டையின் மேல்தோடு) ஒன்று வீட்டில் இருப்பதாகவும் புண்ணியஸ்தலத்திலுள்ள ஒரு குட்டிக்கடவுளின் ஆலோசனைப்படி அதற்குள் 4மாதத்திற்கு ஒரு முறை கோழியைக் கொன்று அதின் இரத்தத்தை அதில் ஊற்றிவருவதாகவும் சொன்னாள். இப்படி சுமார் 10வருடங்கள் செய்து வருவதாகவும் சொன்னாள். மறுபடியும் பிறந்தவள் என்று நான் நினைத்திருந்த அந்த சகோதரியிடம் கிறிஸ்தவ மதபக்திமட்டும் இருந்ததோடு அவளது படுக்கை அறையில் இன்னும் ஒரு சிறிய பூஜை மேடை

இருப்பதையும் கண்டு ஏமாற்றமடைந்தேன். பெரிய வேதாகமத்தை கையில் தூக்கிவைத்துக்கொண்டு நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன்,பெந்தேகோஸ்த் சபையில் தான் ஆராதிக்கிறேன் என்று சொல்கிறவர்கள் எல்லாம் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அல்ல என்றும் அதைக்குறித்து ஆச்சரியப்படக்கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் சொன்னார்.

அவள்,ஒரு பெரிய திருவோட்டோடு வந்தபோது, அதைப்பார்த்து அவள் பிசாசோடு செய்த பொருத்தனைகளையும் உடன்படிக்கைகளையும் நிகழ்ச்சிநிரல்களையும் ரத்துசெய்துவிடும்படி (நிராகரித்து விடும்படி) சொன்னேன். அவள் அப்படியே செய்தாள். பின்னர் இயேசுவின் நாமத்தில் அந்த பிசாசின் வல்லமையை கட்டிவிட்டு அதை துரத்தும்படி சொன்னேன். அதன் பின் அவள் ஜெபித்தாள். முன்பு நாங்கள் உபவாசித்து ஜெபித்தும் பலமுறை தேவன் தந்த அதிகாரத்தைப் பயன்படுத்திப் பார்த்தும் தீராத பிரச்சினை, தேவனுக்கு மகிமை உண்டாகும்படி மூன்றே நிமிடங்களுக்குள் முடிவுக்கு வந்தது, அவள் இன்றுவரை கர்த்தர் கொடுத்த விடுதலையை அனுபவித்து வருகிறாள்.

1992, மே மாதத்தில் ‘விடுவிக்கும் சுகமாக்கும் பள்ளி’யை நிறுவுவதற்குகாரணமாயிருந்தமுன்னணியினரில் அவளும் ஒரு நபராக இருக்கிறாள்.

இந்த சகோதரியின் வாழ்க்கையிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்கள்:

- ✓ வேதாகமத்தை விசுவாசிக்கும் சபைக்கு செல்கிறவர்கள் எல்லாம் தானாகவே மறுபடியும் பிறந்தவர்களாகிவிடுகிறார்கள் என்று எண்ணக்கூடாது.

- ✓ கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற அநேகருடைய பீரோக்களில் எலும்புகூடுகள் இருக்கின்றது.

- ✓ சிலரது பிரச்சினைகளுக்கு மூலக்காரணம் (வேர்) என்ன என்று தெரிந்தும் நிரந்தரமான பரிகாரத்திற்கு என்ன செய்தாக வேண்டும் என்று அறிந்திருந்தும் கேள்விகள் மேல் கேள்வி கேட்டு விடாப்பிடியாக விசாரித்துக் கேட்காவிட்டால் அவைகளை சொல்வதில்லை.ஒருவருடைய விடுதலைக்காக அவரோடு சேர்ந்து ஜெபித்தும் பலவாரங்களுக்குப் பின்னர்தான் ஒருநாள்,“ பாஸ்டர்!இன்று உங்களிடம் முழுஉண்மையையும் சொல்லிவிடுகிறேன்” என்றார். இவ்வளவு காலமாகஎன்னிடம் உண்மையைச் சொல்லாமல் வேண்டுமென்றே மறுத்துவந்திருக்கிறாரே!

- ✓ ஒருவருக்கு பலமுறை விடுதலை ஊழியத்தை செய்தும் பலனடைவது சிரமம் போலத் தோன்றினாலும் அதற்காக நான் தேவை இல்லாமல் கவலைப்படாமல்,தேவனுடைய வல்லமையானது அவர் வாழ்வில் செயல்படமுடியாதபடி எதிர்த்து நிற்கும் அளவுக்கு அந்நபரது வாழ்வின் பின்னணியத்தில் எக்காரியத்தை பிசாசு கேடகமாக பிடித்துவைத்துள்ளான் என்பதைக் கண்டுபிடித்தாகவேண்டும் என்பதை கற்றுக்கொண்டேன். நற்செய்தியை பிரசங்கம் பண்ணுகிற ஊழியக்காரர்களின் கைகளில்தான் அற்புதங்கள் இருக்கிறது என்று நம்புகின்றனர். ஆனால் அவர்கள் நேர்மையாக இருந்து பரிசுத்தஆவியானவரிடம் ஆலோசனையைக் கேட்பார்களானால் அவர்களது அற்புதங்கள் மிக எளிதாக நடக்கும்.

- ✓ அநேகர் தேவனுடைய வல்லமையை சோதிப்பதற்காக வருகிறார்கள். ஒரு நபரின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் குறித்துச் சொல்லக்கூடிய ஊழியரே உண்மையாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அநேகர் நம்புகிறார்கள். இது குறிகேட்டலாகும் இது தேவனுக்கு முன்பாக ஒரு பாவமாக இருக்கிறது. ஒருவர் தேவ ஊழியரா இல்லையா என்பதை இப்படி தீர்மானிப்பது ஒரு தவறான வழியாகும். இப்படிப்பட்டவர்கள் கர்த்தரால் கடிந்துகொள்ளப்பட்ட ஆவிஉலகவணக்கத்தையும் குறிசொல்லுவதையும் பின்பற்றுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

‘அறிவைஉணர்த்தும் வரத்தை’பரிசுத்தஆவியானவர் என்னில் வெளிப்படுத்தும்போதுதான் அதை பயன்படுத்துவேன்; மாறாக மக்களை ஏமாற்ற நானாக சொந்தமாக ‘ரீல்’விட முயற்சிக்க மாட்டேன். அற்புதம் நடப்பதற்கு எவைகள் தடைகளாக இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரிந்த காரியங்களை வெளிப்படையாகச் சொல்லும்போதுதான் பரிசுத்தஆவியானவர் நீங்கள் அறியாதிருக்கிற பிற தடைகள் என்ன என்பதை உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஏனென்றால் நீங்கள் நேர்மையாக இருக்கிறீர்களா இல்லையா என்பதை அவர் அறிவார்.சில பெண்கள்,திருமணமாகும் போது கன்னித்தன்மையுடன் இருந்தாக சொல்வார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர்,“அவர்கள் மூன்று முறை கருக்கலைப்பு செய்ததுதான் அவர்கள் மலடாக இருப்பதற்கான காரணம்” என்று என்னிடம் சொன்னதை நான் அவர்களிடம் சொன்னபிறகுதான் செய்தபாவத்தை ஒத்துக்கொண்டு நாங்கள் பாவஞ்செய்யும்படி தூண்டப்பட்டோம் என்பார்கள். ஏன் முதலிலேயே இவர்கள் பொய் சொல்லவேண்டும்?

கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு பெண் விடுதலை பெற்றுக்கொள்வதற்காக என்னிடம் வந்தாள்.ஒரு வாரத்திற்கு முன்பாக அவள் கலந்துகொண்ட ஜெபகூட்டம் மிக அற்புதமாக இருந்ததாக என்னிடம் சொன்னாள். ஆழமான சத்தியத்திற்காகவும் இன்னும் சில காரியங்களுக்காகவும் அவள் என்னை பாராட்டினாள். அதைக்கேட்டு நான் பரவசப்பட்டேன். நான் அவளோடு ஜெபிக்க விரும்பியபோது,‘அவள் கடைசியாக எப்பொழுது புகைப்பிடித்தாள் என்றும் அவளுக்கு எத்தனை ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள்?’ என்றும் அவளிடம் கேட்க வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் சொன்னார். நான் திகைத்துப்போனேன். இத்தர்மசங்கடமான கேள்வியை அவளிடம் நீ கேட்டுத்தான் ஆகவேண்டும் என்று திரும்பவும் பரிசுத்த ஆவியானவர் சொன்னார். (சிலவேளை பரிசுத்தஆவியானவர் சொல்லும் காரியம் எனக்கு விநோதமாக தோன்றினாலும்கூட அவருக்கு உடனடியாகக் கீழ்படியக் கற்றுகொண்டிருக்கிறேன்).

ஆகவே அவளிடம் கடைசியாக எப்பொழுது புகைப்பிடித்தாய் என்றும் எத்தனை ஆண்நண்பர்கள் அவளுக்கு உண்டு என்றும் நான் கேட்டேன். மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக என்னை சந்திப்பதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்னதாக புகைப்பிடித்ததாகவும் இருஆண் நண்பர்கள் இருப்பதாகவும் சொன்னாள்! அங்கேயே அவளை பிரம்பால் அடிக்கவேண்டும் போலிருந்தது எனக்கு. அவள் இன்னும் மறுபடியும் பிறக்கவில்லை. அவள் இன்னும் பாவத்திலும் ஒழுக்கக்கேடான காரியங்களிலும் வாழ்ந்துகொண்டிருந்தாள். எனினும் என் கூட்டத்திற்கு வந்ததோடு, மாயஜாலவித்தை காட்டுபவன் போல நான் அவளுடைய வாழ்க்கையில் அற்புதத்தை நிகழ்த்தும்படி ஜெபிக்கவேண்டுமென்று விரும்பி வந்திருந்தாள்.இவள் இபதான் என்ற இடத்திலுள்ள ஒரு வல்லமையான பெந்தேகோஸ்ட் சபைக்கு செல்கிறவள்.

1994இல் எங்களது ஊழியக்கூட்டத்திற்கு வழக்கம் போல ஒரு பெண் விடுதலைநாடி வந்திருந்தாள். கலந்தாய்வு முடிந்ததும் அவள் விடுவிக்கும்படியாக அவள் பரிசுத்தஆவியானவரின் அறுவைசிகிச்சை அறைக்கு அனுப்பப்பட்டாள். ஊழியம் நடந்துகொண்டிருந்தபோது அவளுடைய கைப்பையில் தாயித்தை வைத்திருக்கிறாள் என்று பரிசுத்தஆவியானவர் அங்கிருந்த ஒரு தேவஊழியக்காரிக்கு வெளிப்படுத்தினார். அது விநோதமாக இருந்தாலும் “உன் பையில் இருக்கும் தாயித்தை எடுத்துவா” என்று அவளிடம் சொன்னாள். வியப்பூட்டும் வகையில் அவள் சென்று அந்த பையிலிருந்து தாயத்தை எடுத்துவந்தாள்! அந்த தாயித்தை எரித்த உடனே, திடீரென்று ஒரு பாம்பு எங்கிருந்தோ வந்து தீயைநோக்கி விரைந்து சென்றது.

சிலர் இந்த ஊழியத்திற்கு தீங்குசெய்யும் நோக்கத்தோடு வருகின்றனர். ஆனால் வேதவசனம் என்ன சொல்கிறது?

> “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.” புலம்பல் 3:22

## மரண ஆவி

*தாக்கப்படுவதுபோன்றோ, சண்டையிடுவதுபோன்றோ. கீழ்நோக்கி அழுத்தப்படுவது போன்றோ, செத்துப்போன உறவினர்களை காண்பதுபோன்றோ அல்லது திறந்த குழிகளை காண்பதுபோலவோ கனவு கண்டால்*

பாம்புகளையும், பசுக்களையும். நாய்களையும், பூனைகளையும் அல்லது வேறு மிருகங்களையும் அநேகா் கனவில் காண்கிறார்கள்; முகமூடிஅணிந்தவா்களையும், ஆயுதம்அணிந்த நபா்களையும், பைத்தியம் பிடித்த ஆண்கள் அல்லது பெண்கள், அரக்கா்கள் போன்றவா்கள் துரத்திக்கொண்டு வருவதுபோலவும் அல்லது தாக்குவதுபோலவும் கனவுகாண்கிறார்கள். சிலவேளைகளில் இவா்கள் தப்பிச்சென்று விடுவதுபோலவும் ஆனால் வேறு சிலதருணங்களில் அவா்கள் பிடிக்கப்பட்டவா்கள் போலவும் அல்லது கொல்லப்பட்டதுபோலவும் கனவு காண்கின்றனா். சிலா் திறந்த குழிகளையும், கல்லறைகளையும். சவப்பெட்டிகளையும், பிணங்களையும். செத்துப்போன உறவினா்களையும் அல்லது நண்பா்களையும் அல்லது வாழ்க்கைத்துணை போன்றவா்களையும் அல்லது யாரோ தரையோடு சோ்த்து அமுக்குவதுபோலவும் இயேசு என்ற நாமத்தை அழைப்பதற்கு முன் அவா்களால் மூச்சுவிடவோ அல்லது சரீரத்தின் எப்பகுதியையும்அசைக்கமுடியாத முடியாத நிலையில் இருப்பதுபோன்றோ கனவு காண்கின்றனா்.இதுபோன்ற காரியங்கள் கனவில் நிகழுமானால் மரணஆவியானது,பலமான லூசிபரின் பில்லிசூனிய ஆவியின் மேற்பார்வையில், கிரியைசெய்து கொண்டிருக்கிறது என்று அா்த்தம். இதனை நிராகரித்து (ரத்துசெய்து), புறக்கணித்து, முறியடித்து, முற்றிலும் அழித்துவிடவேண்டும். அது கிரியைசெய்யும் பகுதியை அல்லது அந்த நபருக்கும் அந்த அசுத்தஆவிக்கும் இடையே உள்ள தொடா்பை துண்டித்துவிடவேண்டும்.

இப்பிசாசுகள் மிகவிரைவாக கொல்கின்றன. அனைவருக்கும் தெரிந்த பெருமளவு அழிவை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் எல்லாம் இவைகளின் வேலையாகும். ஒரு வாலிபனுக்கு நோ்ந்த ஒரு கோரமான நிகழ்ச்சியைப்பற்றி என்னிடம் ஒரு நண்பன் சொன்னான்.

இரவில் காரோட்டிச்சென்று கொண்டிருக்கும்போது மிகவும் கவா்ச்சியாக உடை அணிந்திருந்த ஒரு பெண்ணை சந்தித்தான். காரை நிறுத்தி அவளை ஏற்றிச்சென்றான். கொஞ்ச தூரம்சென்றதுமே ‘போகவேண்டிய இடத்தைச்சொன்னால் அங்கேயே அவளை விட்டுவிடலாம்’ என்று அவளிடம் சொன்னான். அந்த பெண்ணோ சிரித்துவிட்டு அவன் எங்குசெல்கிறானோ அங்கே அவளும் வருவதாகச் சொன்னாள். அந்த இரவு, விருந்துக்கு ஒரு பெரியமீன் ஒன்று கிடைத்துவிட்டதாக கருதி அவன் வீட்டிற்கே அவளை அழைத்துச் சென்றான். அவள் உணவு தயாரித்தாள்; இருவரும் சாப்பிட்டனா். அந்த இரவில் இருவரும் பாலுறவில் ஈடுபட்டனா்.

இரண்டு வாரங்கள் கழித்து, அவளை திருமணம் செய்ய விரும்புவதாகவும் அவளுடைய குடும்பத்தைக்குறித்து அறிய விரும்புவதாகவும் சொன்னான். சொல்லமுடியாது என்று மறுத்துவிட்டாள். அவன் அதிகமாக வேண்டிக்கொண்டதின் நிமித்தமாக தொந்திரவு பொறுக்கமுடியாமல் அவளுடைய குடும்பத்திற்கு அவனை அழைத்துச்செல்வதற்கு ஒத்துக்கொண்டாள்.அவளுடைய குடும்பத்தாரின் வீடு இருந்த ரோட்டிற்கு வந்ததும் அவன் முதலில் உள்ளே செல்லட்டும் என்றும் அவள் விரைவில் பின்னால் வந்துவிடுவேன் என்றும் சொல்லி வழியில் இறங்கிவிட்டாள். அவளுடைய அப்பா, அம்மாவின் பெயா்களைச் சொல்லிச்சென்றாள்.

மாமனாருக்கும் மாமியாருக்கும் இக்போ (Igbo) பழக்கவழக்கத்தின்படி குடிப்பதற்காக கொடுப்பதற்கு பானங்களை வாங்கிச்சென்றான். கடைசியில் அந்தபெண்ணின் தகப்பனாரை சென்று சந்தித்தான். அந்த தகப்பன் அவருடைய மகள் எங்கே இருக்கிறாள்; சந்தித்து எத்தனை நாட்களாகிறது தற்போது அவள் எங்கே இருக்கிறாள் என்றும் விசாரித்தார். எல்லாம் நல்லபடியாக நடக்கிறது என்று நினைத்துக்கொண்டு, அவா்களது மகளின் கணவனாகப் போகிறவன் அவன்தான் என்று

தன்னை அறிமுகம் செய்துகொண்டான். அந்த பெண்ணின் புகைப்படத்தை எடுத்துக்காட்டி பேசிக்கொண்டிருக்கும் பெண் இவள் தானா என்று கேட்டபோது அவன் ''ஆம்'' என்றான்.

அப்போது அந்த தகப்பனார் சொன்னார்,''உனது வீட்டில் தங்கியவள் இந்தப் பெண்ணாக இருந்தால் எந்த குளிர்பானமோ அல்லது பெண்ணுக்கான எந்தப்பரிசப்பணமோ கொடுக்காமல் அவளை எடுத்துக்கொள்'' என்றார். ஆனால் நான் உனக்கு ஒரு செய்தியை சொல்லவேண்டும் அவள் இறந்து வெகுகாலமாகிவிட்டது. அதோ அதுதான் அவளது கல்லறை என்று அந்த திசையை சுட்டிக்காட்டினார். அந்த மனிதன் கிட்டதட்ட நிலைகுலைந்துபோனான். வேகமாக திரும்பி வீட்டிற்குள் சென்று பார்த்தபோது அவனது ''இனியவள்'' காணாமல் மறைந்துபோனாள். நான்கு நாட்கள் கழித்து தூங்கும்போதே அவன் இறந்துபோனான். அவன் ''பிடித்த பெரியமீனோடு'' சேர்ந்துவிட்டான்.

அநேக ஆண்கள் இன்னும் பெண்களோடு சுற்றிக்கொண்டிருக்கின்றனர். *தெருவில் காணப்படும் அநேக வேசிகள், இருளின் உலகத்திலுள்ள ஆவிகளால் அவர்களது மூன்று அம்ச ஊழியமாகிய திருடும்-கொல்லும்-அழிக்கும்- ஊழியத்தை வேகமாக நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர்.*

1992 ஆண்டின் துவக்கத்தில் இபதானிலுள்ள பல்கலைக்கழக கல்லூரி மருத்துவமனையில் மிகஆபத்தானநிலையில் இருந்த ஒரு பெண்ணுக்கு ஊழியம் செய்வதற்காக ஒரு நண்பருடன் சென்றேன். மூன்று மனிதர்கள் அவளுக்குள் ஆணிஅடித்ததாக கனவுகண்ட நாளிலிருந்து அவளுடைய பிரச்சினை ஆரம்பித்தது. மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு வேதனைகளிலிருந்து விழித்தெழும்பினாள். அவளை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது அவளுக்கு காசநோய் (tuberculosis) என்று கண்டறிந்தனர். அதற்கான மருந்துகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் சிலநாட்களுக்குள் அவள் மார்பில் அதிகமான வேதனை ஏற்பட்டதால் மறுபடியும் சோதனை நடத்துவதற்காக மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டாள். அநேக மருத்துவசோதனைகள் செய்தபின்னர் அவளுடைய நுரையீரலில் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின்னர் அவளை லாகோஸ் பல்கலைக்கழக போதிக்கும் மருத்துவமனையிலிருந்து(LUTH- Lagos University Teaching Hospital) UCHக்கு அனுப்பப்பட்டாள். மருத்துவ நிபுணர்களின் கணிப்பின்படி அவளது இரண்டு நுரையீரல்களும் அரித்துப்போன நிலையிலிருக்கிறது என்றார்கள். ஆகவே அவள் சுவாசிப்பதற்கு இயலும்படி அவளை ஆக்ஸிசன் (பிராணவாயு) கூடாரத்திற்குள் வைக்கப்பட்டாள். நான் கேட்டவைகளும் பார்த்தவைகளும் என்னால் நம்புவதற்கு சிரமமாக இருந்தது. இரவில் பார்த்த கனவால் ஒருநாளைக்குள் காசநோய், கொஞ்ச நாட்களுக்குள் நுரையீரல் புற்றுநோயாக மாறி நுரையீரல் பகுதிகளெல்லாம் ஏற்கெனவே அரித்துபோனநிலையாயிற்று. சாத்தான் தந்திரமானவன். அவன் கொல்லவும் திருடவும் அழிக்கவுமே வந்தான் (யோவான் 10:10).

*இத்தகைய தீயபிசாசுகள் அவைகளின் ஒழுக்கக்கேடான தீயதிட்டத்தை நிறைவேற்றுவதற்காக பறவை அல்லது மிருகம் போன்ற எத்தோற்றத்திலும் மாறமுடியும்.* இவைகளில் சில வாகனங்கள் செல்லும்முன்பாக ரோட்டில் தோன்றும், இதைப்பார்த்ததும் அதன் மீது மோதிவிடக்கூடாது என்று முயற்சித்து காரைஓட்டும்போது கார் விரைந்து சென்று ஆற்றுக்குள் விழுந்துவிடும். ஒரு வாகனமானது போர்ட் ஹார்கோர்ட் என்ற பல்கலைக்கழகத்தின் அருகிலுள்ள ஆற்றுக்குள் விழுந்து காருக்குள் இருந்த அனைவரும் இறந்துவிட்டனர். இத்தீய அதிகாரங்களையும் வல்லமைகளையும் கடலில் சில கப்பல் மாலுமிகள் கண்டிருக்கின்றனர். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நம்மை பாதுகாத்து வழிநடத்த முடியும்.*இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்குள் பரிபூரண பாதுகாப்பு உண்டு; இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு வெளியே எப்பாதுகாப்பும் இல்லை.* இயேசுவின் இரத்தத்திற்கு வெளியே உள்ள பாதுகாப்பெல்லாம் வீணானதும் வஞ்சகமானது.

இவ்வகையான அசுத்தஆவிகளின் கிரியைகளால்தான் அநேகர் உறங்கும்போதே இறந்துவிடுகின்றனர். சிறு பிள்ளைகளும் இப்படிப்பட்ட கனவுகளை விவரித்துச்சொல்லமுடியாததால் கனவு கண்டு சத்தமிட்டு அழுகின்றன. உறக்கத்தில் ஒரு பிள்ளை அழுதால், அதிலும் குறிப்பாக தீவிரமாக அழுதால் உடனடியாக அந்த

குழந்தைக்கு விடுதலை ஊழியம் செய்தாக வேண்டும் முடிந்தால் அபிஷேகம் செய்யப்படவேண்டும். வளர்ந்தவர்களைவிட குழந்தைகளைவிட்டு பிசாசுகள் வேகமாக தங்கள் கைகளை எடுத்துவிடுகின்றன. ஏனென்றால் சிறுபிள்ளைகளிடம் ஒருபாவமும் இல்லாததால் இயேசுவின் நாமத்தில் உடனடியாக பிசாசுகளோடுள்ள தொடர்புகளை துண்டித்துவிடலாம்.

1995, ஏப்ரல் 27 இல்,''பிள்ளைஇல்லாமைக்கு எதிரான யுத்தம்'' என்ற வகுப்பில் குடும்பங்களிலும் வீடுகளிலும் சத்துரு ஏற்படுத்திய காரியங்களை எப்படி அழித்து அவைகளை விரட்டுவது என்று கற்றுக்கொடுத்தேன்.அச்செய்தியானது குறிப்பாக'விடுவிக்கும் சுகமாக்கும் பள்ளி'கூடத்தில் (SODAH) உள்ள ஒரு மாணவனுக்குத்தான் என்பது எனக்குத் தெரியாது. ஒருநாள் நடுஇரவில் அவர் வீட்டில் பெண்குழந்தையானது உறங்கும்போது திடீரென்று சத்தமிட்டு இறந்துவிட்டது. எதாவது உயிர் இருக்குமா என்று நாடித்துடிப்பபை சோதித்துப் பார்த்தபோது ஒன்றுமில்லை. சில மணிநேரங்களுக்கு முன் நான் கற்றுக்கொடுத்த காரியத்தை பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு நினைப்பூட்டினார். ஒரு பலமான விசுவாசம் அவனுக்குள் கிளர்ந்தெழுந்தது, உடனே ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிட்டான். ஏனென்றால் விசுவாசம் கேள்வியினால் வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும் (ரோமர் 10:17).

அவன் அழவும் இல்லை மன்றாடவும் இல்லை பிள்ளையை எடுத்துவைத்துக்கொண்டு,''இயேசுவின் நாமத்தில் மரணத்தின் ஆவியே என் மகளைவிட்டு இப்போதே வெளியே போ'' என்று கட்டளை கொடுத்தார். உயிர்இருப்பதற்கான எந்த அசைவோ அடையாளமோ இல்லை. பரிசுத்த ஆவியானவர் அவனிடம் ''இப்போது ஜீவனை கட்டவிழ்த்துவிடு'' என்று சொன்னார். இரண்டாவது முறையும் அவன்,''இயேசுவின் நாமத்தில் ஜீவனைப் பெற்றுக்கொள்'' என்று ஜெபித்தான். அதன் பின் அவளது நாசியில் ஊதினான். இப்போது அந்தப்பிள்ளையின் நாடித்துடிப்பை உணரமுடிந்தது. சுவாசம் அவளுக்கு திரும்பிவந்தது. ஆனால் அவள் இன்னும் நினைவிழந்தவளாகக் கிடந்தாள். அவளுடைய மனைவி பிள்ளையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டுமென்று வற்புறுத்தினாள். மருத்துவமனை கட்டிடத்திற்கு பக்கத்தில் வந்தபோது அந்த சிறுமி ''கர்த்தருக்கு துதி உண்டாகட்டும்'' என்று சத்தமிட்டபோது நாங்கள் எல்லோரும் அல்லேலூயா என்று அவளோடு சேர்ந்து ஆர்ப்பரித்தோம்.மருத்துவமனைக்குள் செல்ல இனி அவசியம் இல்லாததால் காரை பின்னோக்கி எடுத்து வீடுநோக்கி முன்னோக்கிச் சென்றார்கள். மரணஆவியின் மீது அப்பிள்ளையின் தகப்பன் அதிகாரம் செலுத்தி ஜெபித்ததால் ஜெபத்தின் பயனாகஇறந்துபோன சிறுமியை தேவன் உயிரோடு எழுப்பினார்.

அவனைப்போல பிசாசுக்கு சவால் விடுகிறவர்கள் கிறிஸ்துவின் சபைக்கு தேவையாக உள்ளனர். தேவபிள்ளைகளாகிய அநேக உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் சூனியக்காரிகளாலும் பில்லிசூனியக்காரர்களாலும் தாக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றனர்.பலர் ''தேவன் கொடுத்தார், தேவன் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக''என்று அறியாமையினால் அறிக்கைசெய்கிறார்கள். தேவன் ஒருபோதும் துன்மார்க்கத்தின் தேவனல்ல. அவர் உன் குழந்தையை உன்னிடமிருந்த எடுப்பதில்லை. தேவன் சொல்கிறார்,

> கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன்தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன். (யாத்திராகமம 23:26)
>
> ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.
> நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்கு காண்பிப்பேன். (சங்கீதம் 91:10,16)

கர்த்தர் இயேசுவை சந்திக்கும்முன் சிலர் பிசாசுக்கு ஏஜென்ட்டாக (கையாளாக) இருந்தனர். பாவங்களிலிருந்து அவர்கள் மனந்திரும்பிவிட்டாலும் இருளின் வல்லமைகள் அவர்கள்மீது ஆதிக்கமோ,பெலனோ செலுத்தாமலிருக்கும்படி அவர்கள் விடுதலை

ஊழியத்தினால் விடுதலை அடையவேண்டும். சிலர் அளவுக்கதிகமாக சென்றுவிட்டதால் பிசாசினால் சூழப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். மற்றவர்களால் காணமுடியாதவைகளைக் காணவும் கேட்கமுடியாதவைகளை கேட்கவும் இப்படிப்பட்டவர்களால் முடியும். ஒரு முறை பார்த்தாலே ஒரு நபர் எப்படிப்பட்டவர் என்று தீர்மானிக்க இவர்களால் முடியும். அந்த நபருக்கு மக்கள் உண்டா, வேலைக்காரர்கள் உண்டா, ஒரு அரண்மனை உண்டா, அல்லது ஒரு ராஜரீகமான அந்தஸ்தைக் காட்டும் ஆடைகள் உண்டா என்று இவர்களால் சொல்ல முடியும். இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக அசுத்தஆவிகளை ஒரு குறிப்பிட்ட காரியமாக அனுப்பிவைத்த அனுபவங்கள் இவர்களுக்கு இருக்கும். இரட்சிக்கப்படும் முன் சிலர் இருளின் ராஜ்யத்தில் முக்கியமான பதவிகளில் இருந்து, பிசாசாகிய சாத்தானாகிய லூசிபரை சந்தித்து அவனோடு உணவருந்தி இருக்கக் கூடும். சிலருடைய மார்பில் பறவைகள் இருக்கக்கூடும். இன்னும் அநேகருக்கு என்ன நடக்கப்போகிறது என்பது கூட தெரியும்.**சிலர்** மனந்திரும்பும்முன் அவர்கள் பயன்படுத்திவந்த அதே சாத்தானின் வரங்களை, இப்போதும் பயன்படுத்திக்கொண்டு, ஆனால் அந்த வரத்தை பரிசுத்தஆவியானவர்திருத்தம் செய்து பரிசுத்தப்படுத்தி பயன்படுத்திவருகிறார்தவறாக நினைத்துக்கொள்கின்றனர். பிசாசுக்குச்சொந்தமான அனைத்தையும் உங்களைவிட்டு நீக்கிவிட்டு உங்களை சுத்தப்படுத்தி புத்தம்புதிய அபிஷேகத்தால் உங்களை பரிசுத்தஆவியானவர் நிரப்புகிறார் என்பதையும் வரங்கள் கீழிருந்தல்ல மேலிருந்தே பாயத்துவங்குகிறது என்பதை மறந்துவிடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களில் சிலருக்கு மிருகமாகவோ, ஊர்ந்து செல்கின்ற பிராணியாகவோ அல்லது பறவையாகவோ மாறமுடியும். சிலருக்கு, சாத்தானோடு இருந்தபோது அவர்களுடைய சரீரத்திற்குள் எவைகள் பதிக்கப்பட்டன என்பதைக்கூட நினைவுபடுத்தமுடியும். சிலருடைய சரீரத்திற்குள் ஒழித்துவைக்கப்பட்டவைகள் இருக்கும். அதில் வெகுசிலரே இருளின் ராஜ்யத்தில் உயர்பதவி வகித்தவர்களாக இருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் என்ன கட்டளையிட்டாலும் அப்படியே நடக்கும். வல்லமையான சக்தி வேண்டுமென்று ஆசையோடு இருக்கிறவர்களை கவர்ந்திழுப்பதற்காக இவர்களைதூண்டிலில் வைக்கப்பட்ட ஆகாரமாக பிசாசுபயன்படுத்துகிறான்.

பொதுவாக, இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பும் போது என்ன நடக்கிறது என்றால் இவர்கள் பிசாசோடு மனப்பூர்வமாக செய்த உடன்படிக்கையை உடைத்துப் போட்டதால் இவர்கள் மீது சாபங்களை பொழிகிறது. ஆகவே, இவர்களில் சிலர் எதோ கடித்தது போன்றோ அல்லது கிள்ளுவதுபோன்றோ உணரும்போது விழித்துஎழும்புவார்கள். வேறுசிலர் விழித்தவுடன் எளிதாக எழும்பமுடியாத அளவுக்கு மிகக்களைப்படைந்திருப்பதாக உணருவார்கள். காலை 6மணிக்கு கண்விழித்தாலும் காலை 9மணிவரை தொடர்ந்து படுக்கையில் படுத்தாகவேண்டும் போல உணருவார்கள். கனவில் அந்த பிசாசுகளால் அவர்கள் அடிக்கப்பட்டிருப்பார்கள். சிலருக்கு கனவு நினைவுக்கு வருவதில்லை ஆனால் அவர்கள் முந்தினநாள் சாதாரணவேலைதான் செய்திருந்தாலும் அளவுக்கு அதிகமான வேலைசெய்ததுபோன்ற களைப்பை உணருவார்கள்.

சிலர்,மனிதர்களைக் கொன்று அந்த இரத்தத்தை அவர்கள் கூடும் இரகசியகூட்டங்களில் குடித்திருப்பார்கள். சில சூனியக்காரர்களும் மந்திரவாதிகளும் (witches and wizards) தாங்கள் உண்மையிலேயே மந்திரவாதிகள் என்றோ சூனியக்காரர்கள் என்றோ தெரியாது என்று சொல்வார்கள் ஆனால் பெரும்பாலோர் அவர்கள் யார் என்பதை அறிவார்கள்.1991. காலை 7மணிக்கு ஒரு பெண் என் வீட்டிற்கு வேகமாகவந்து அழுகையுடன்,“சகோதரர் ஒயார் அவர்களே, நான் ஒரு சூனியக்காரியா? என்றுஎன்னிடம் கேட்டாள். ஆச்சரியத்துடன் அவளிடம் சில கேள்விகள் கேட்டேன். இரண்டுபிள்ளைகளை அவள் சாகடித்துவிட்டாள் என்று இரண்டு பெற்றோர் குற்றஞ்சாட்டியிருப்பதாகவும்,அப்படி எதுவும் செய்யவில்லை என்பதில் அவளுக்கு நிச்சயமுள்ளதால் அவள் குற்றமற்றவள் என்பதை நிரூபிக்க எவ்வளவு தூரமும் செல்லத்தயார் என்று என்னிடம் சொன்னாள்.

ஆனால் ஆச்சர்யப்படும்வகையில், சிலர் அவளிடம் வந்து ஜோஸிடம் போய் ஒரு ஜெர்ரி டின் நிறைய இரத்தத்தை நிரப்பிவா என்று சொல்லியதாக கனவு கண்டாள்.

பிசாசோடு உள்ள ஒவ்வொரு தொடர்பையும் நிராகரித்துவிட்டு அவளுக்குள்ளிருக்கிற தேவனிடத்திலிருந்து வராத ஒவ்வொரு ஆவியையும் துரத்திவிடும்படிச் சொன்னேன். சிலநிமிடங்களுக்குள்ளாகவே அவள் கடுமையாக ஜெபிக்கத்துவங்கினாள்.''இல்லை,இல்லை நீ இன்றே போயாகவேண்டும். வெளியே போ, சமரசபேச்சுக்கு இடமே இல்லை நீ போய்த்தான் ஆகவேண்டும்.'' என்று சத்தமிட்டாள். அவள் ஜெபித்து முடித்தபின்னர் நான் அவளுக்கு விடுதலைஊழியம் செய்தேன்.

நான் அவளுக்கு ஜெபம்செய்யும்போது ஒரு வயதானபெண்ணின் உருவம் அவளைவிட்டு துள்ளி வெளியே குதித்ததாகவும், சமரசம் செய்துகொண்டு சண்டையை தீர்த்துவிடும்படி தயவுசெய்யவேண்டும் என்று அது வெளியிலிருந்துஅவளிடம் மன்றாடியதாகவும் அவள் முடியாது என மறுத்தபோதுஅந்த வயதான பெண் 'முற்றிலும் துரத்திவிடாதே'என்று கெஞ்சி அழத்துவங்கி பின்னர் ஓடிவிட்டதாகவும் சொன்னாள்.அவள் விடுதலையாக்கப்பட்டாள். இன்று அவள் (God-Will-Do-It Ministries) தேவன்-இதை-செய்வார்-ஊழியங்களிலுள்ள ஒரு அங்கத்தினராக இருக்கிறாள்.

குறிப்பாக குறிசொல்லுகிற வீடுகளுக்கும் சாத்தானின்சபைகளுக்கும் சென்றிருந்தவர்கள் இந்நாளில் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவர்களில் அனேகரை பிசாசு (அவர்களை அறியாமலேயே) பயன்படுத்தி வருகிறான் என்பது ஒரு உண்மையாகும்.

1994. அக்டோபர் மாதத்தில் உலக வியாபாரிகளின் பூரண சுவிஷேசஐக்கியத்தில் ஐந்து வாரங்கள் நான் ஊழியம் செய்தேன்.தேவனுடைய வல்லமை விளங்கச்செய்யும் அநேக காரியங்கள் நடைபெற்ற இரண்டாவது வாரக்கூட்டமானது அற்புதமாக இருந்தது. கூட்டமுடிவில் ஒரு பெண் அவளுடைய தோழியை என்னிடம் அறிமுகப்படுத்தினாள். ஆலோசனையும் விடுதலை ஊழியமும் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் இருவருக்கும் ஒரு நாள் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

நடுஇரவில் ஒரு விருந்துமண்டபத்தில் வைத்து அவளுடைய அம்மாவின் கர்ப்பபைக்குள் அவள் நுழைந்ததாகவும்,தாயின் கர்ப்பத்தில் வளர்ந்ததாகவும் பின்னர் அவள் பிறந்ததாகவும் சொன்னாள். அவளுடைய கைகளிலும் விரல்களிலும் காதுகளிலும் மார்பிலும் கண்களிலும் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் அவள் விரும்புகிறபடி எதையும் பார்க்கவும் கேட்கவும் முடியும் என்றும் அவள் சொன்னாள். லண்டனுக்கோ அல்லது உலகத்தின் எந்த பகுதிக்கும் தொடர்புகொள்ள தொலைபேசி தேவையில்லை என்றும் சொன்னாள். அவளுடைய 4வது விரலில் அந்நோக்கதிற்காகவே ஒருகருவி பொருத்தப்பட்டிருப்பதாக சொன்னாள். அத்தகைய பிசாசின் வல்லமைகள் அவளிடம் இருந்தன.

அப்பெண்ணிடம் சாதாரணமனிதர்களால் பார்க்கமுடியாதவைகளை பார்க்கஉதவக்கூடிய பிசாசின் கண்ணாடிகள் இருக்கிறது என்பதை தேவஆவியானவரால் என் மனைவி அவளுக்கு ஆலோசனை கொடுக்கும்போது கண்டுகொண்டாள். அப்படி ஒரு வல்லமை இருக்கிறது என்பதை முதலில் மறுத்தாள் ஆனால் பின்னர் அதை ஒத்துக்கொண்டு என் மனைவி உண்மையாகவே ஒரு தேவமனுஷி என்று அறிக்கையிட்டாள். அனேகபிரசங்கிகளை– பெந்தேகோஸ்ட் வட்டாரங்களில் உள்ளவர்களைக்கூட விழத்தள்ளுவதற்கு இப்பிசாசின் வல்லமைகளைப் பயன்படுத்தியதாக சொன்னாள்.**தேவ மனிதர்கள் - தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைகளும்கூட எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.நம்மை பின்மாற்றமடையச் செய்யும் எந்தவாய்ப்பையும் பிசாசுக்கு கொடுக்கக்கூடாது ஆகவே,எவ்வகையான பாவமாக இருந்தாலும் நாம் அவைகளை விட்டுவிடவேண்டும்**.

நான் பிரசங்கம் செய்துகொண்டிருந்த அந்நாளில் வழக்கமாக அவள் கேடுவிளைவிக்க விரும்பினாள், ஆனால், அல்லேலூயா, அவளிடமிருந்த பிசாசைவிட எனக்குள்ளிருப்பவர் பெரியவர் ஆகையால் அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவள் முயன்று பார்த்தாள், ஆனால் அவளுடைய கைகளால் ஒன்றும் நிறைவேற்றமுடியவில்லை. வாசலை நோக்கி ஓரடி எடுத்துவைத்தபோது, ''எங்கே இருக்கிறாய், இப்பொழுதே இயேசுவிடம்

ஓடிவா'' என்று நான் பிரசங்கம் பண்ணும் வேளையில் சொல்லியிருக்கிறேன். அதைக் கேட்டது அவளுக்கு நினைவில் இருப்பதாக சொன்னாள்.அப்பொழுது ஒரு காற்று அவளைநேராக மேடையைநோக்கித்தள்ள வீசியது என்றும் உடனே அவள் சுதாரித்துக்கொண்டு எழுந்து இன்னொரு பிசாசின் ஏவுகணையை கட்டவிழ்த்துவிட விரும்பியதாகவும் சொன்னாள்.

உடனே,நான் ''பிசாசோடு சமரசம் செய்துகொள்ளாதே. அவனை வெளியே அனுப்பிவிடு. இப்பொழுதே அவனைவிட்டுவிடு.''என்று அவளிருந்த திசையை நோக்கி சொன்னேனாம்.இப்படிச் சொன்னதே அவளுக்கு அதிகமாகிவிட்டது, நான் அவளைக்குறித்து எல்லாம் தெரிந்துகொண்டுதான் அவளைப்பார்த்து பேசுவதாக நினைத்தாள். முதன் முறையாக அவளுடைய இதயத்தை தேவன்பால் திறந்து இயேசுகிறிஸ்துவே கர்த்தர் என்று அறிக்கைசெய்தாள். உடனே லூசிபர் அங்கே தோன்றி கட்டிடங்களை பற்றிஎரியவைக்க பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட பொடியைத் தூவினான் என்றும் அவளுக்கு ஆச்சரியமூட்டும்வகையில் அந்த கட்டிடம் எரியவில்லை என்றும் அங்குள்ள ஒருவரும் பாதிக்கப்படவில்லை என்பதையும் கண்டதாக அவள் சொன்னாள். இயேசுகிறிஸ்துதான் உண்மை என்றும் பிசாசுபோலி என்றும்சொன்னாள்.

கர்த்தராகியஇயேசு கிறிஸ்துவை அவள் ஏற்றுக்கொண்டபிறகு தொடர்ச்சியான தாக்குதல் அவள் வீட்டின்மீதும், அலுவலகத்தின் மீதும், அவளுடைய ஆரோக்கியத்தின் மீதும் வந்ததாம். தத்ரூபமாக ஒரு கத்தி, அவளை துண்டாக வெட்டவந்ததைக் கண்டாளாம். இரண்டு நாட்களாக அவளுக்கு ஊழியம் செய்தோம். பிசாசின் கருவிகளை அவளைவிட்டு அகற்றும்போது ஏற்பட்ட கொடூரமான பிசாசின் அலைக்களிப்புகளையும் நரகசேனையின் தீயஎண்ணத்தையும் விடுதலை ஊழியத்தை நம்பாமல் பொய்யென்று மறுப்பவர்கள் அனைவரும் அன்றையத்தினத்தில் வந்து பார்த்திருக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் தேவனுக்கு நன்றி! இயேசுவின் நாமத்திற்கு முன்பாக ஒவ்வொரு முழங்காலும் முடங்கும். சில அசுத்த ஆவிகளை அவளுடைய பிள்ளைகளிடமும் அவள் கடத்திவிட்டிருந்ததாக சொன்னதால், நாங்கள் அவளுடைய பிள்ளைகளுக்கும், விசேஷமாக மூத்தபிள்ளைக்காக ஜெபித்தோம். ஆகவே இயேசுவை ஏற்றுக்கொண்ட மந்திரவாதிகள் மற்றும் சூனியக்காரர்களின் பிள்ளைகளையும்கூட கண்டிப்பாக விடுதலை ஊழியத்தில் நடத்தியாக வேண்டும்.

## கனவில் பறத்தல்

கனவில் சிலர் பிசாசின் தாக்குதலிலிருந்து பறந்து தப்பிசெல்வார்கள். அநேகர் இதை ஒரு வெற்றியான கனவு என்று கருதுகிறார்கள். அநேகர் இறக்கை முளைத்து பறப்பார்கள். அந்தரத்தில் தொங்குவதுபோன்ற, பறவைபோல் பறப்பதுபோன்ற காரியங்களெல்லாம் தேவனிடத்திலிருந்து வந்தவைகள் அல்ல. சாத்தானின் அதிகாரங்களுக்கும் வல்லமைகளுக்கும் சவால் விடும்அளவுக்கு நமது **ஆவிமனிதனை பலப்படுத்தவேண்டும்** அப்பொழுது அவைகள் விரைந்தோடிப்போகும்.

> ஆகையால். தேவனுக்குக் கீழ்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக்கோபு 4:7)

நம் வாழ்நாளெல்லாம் பயமின்றி உபத்திரவமின்றி கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாக இருக்கும் ஒரு நிலைக்கு நம்மைக்கொண்டுவர தேவனால் முடியும். பிசாசின் தாக்குதல்கள் உங்களைப் பாதிக்கத்தக்கதாக இருக்குமானால் அவன் வந்துபோவதற்கு ஒரு திறப்பு இருக்க வேண்டும் அல்லது உங்களிடம் இருக்கவேண்டிய எதோ ஒன்றை எங்கோ தவறவிட்டிருக்க வேண்டும் என்று அர்த்தம். எதை தவறவிட்டீர்கள் என்பதைக் கண்டுபிடித்து இயேசுவோடு ஒப்புரவாகிவிடுங்கள். நீங்கள் தவறவிட்டது உங்கள் ஜெபவாழ்க்கையாகவோ, வேததியானமாகவோ, அல்லது தேவவார்த்தையை உட்கொள்ளுகிறதாகவோ இருக்கக் கூடும்.

பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கும் ஜெபிப்பதற்கும் உபவாசிப்பதற்கும் கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்ற முழுமையான அறிவை பெற்றிருக்கவும் தேவனிடம் உங்களை மொத்தமாக நம்மை அற்பணிக்கவும் வேண்டும். நாம் நமது ஆவிமனிதனை மேம்படுத்தவேண்டும், பலப்படுத்தவேண்டும் அப்போதுதான் பிசாசால் நம்மை தாக்கவோ நம்மை ஓடவோ பறக்கவோ செய்வதற்கான சட்டரீதியான எக்காரணத்தையும் நம்மிடத்தில் ஒருபோதும் அவனால் கண்டுபிடிக்க முடியாது. அப்படியிருந்தும் ஒருவேளை அவைகள் வரத்துணியுமானால் இயேசுவின் நாமத்தில் அவைகளை சவால்விட்டு எதிர்த்து நின்று ஒரு வார்த்தையில் கட்டளையிட்டு அவைகளைப் பறந்தோடச்செய்யும் அதிகாரம் நம்மிடத்தில் இருக்கிறது. தேவனுடைய பிள்ளையாக இருப்பதினால் சாத்தான் நமது பாதங்களுக்கு கீழே.

> சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென். (ரோமர் 16:20)

---

ஒன்பது

---

# திரும்பத்திரும்ப வரும் மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும்

அநேகர்,தெளிவான காரணம் ஒன்றும் இல்லாமலே, குடும்பத்தில்,வியாபாரத்தில் அல்லது தொழிலில் தேவையற்ற கஷ்டங்களையும் முட்டுகட்டைகளையும் தாக்குதல்களையும் அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் கடினமாக உழைத்தும், ஜெபித்தும், உபவாசித்தும், குறிப்பிடத்தக்க எவ்வித பலனும் அவர்களால் அடையமுடியவில்லை.

கர்ப்பத்தின் கனிக்காக தேவசமூகத்தில் காத்திருக்கும் தம்பதிகள், ஒவ்வொரு மருத்துவ சோதனையும் அறுவைசிகிச்சையும் பண்ணியும் ஒரு மாற்றமும் இல்லாத நிலை. சில தம்பதிகள் கருத்தரிப்பதற்கு மருத்துவபூர்வமாக தகுதி உடையவர்கள் என்று மருத்துவர்கள் உறுதிபடுத்தியும் காரியம் வாய்க்காதநிலை.

“…அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.”(சங்கீதம்1:3) என்று வேதாகமம் வாக்குறுதி அளித்திருக்கும்போது ஏன் எடுத்த காரியங்களில் எல்லாம் தோல்வியின் அனுபவம்? எல்லாவகையான தொழில்களையும் முயன்றுபார்த்தும் பலனில்லாமல் உயிர் வாழ்வதற்கே தடுமாறிக்கொண்டிருக்கும் நிலை ஏன்? இன்னும் சிலநபர்களின் வாழ்க்கையைப்பார்த்தால்அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களின் வாழ்விலும் இதே போன்ற நிலை – திடீரென்று ஏற்படுகிறதாக இருக்கிறது அல்லது நீடித்துக்கொண்டே செல்கிறது.

உதாரணமாக சில பெண்களுக்கு சீக்கிரமாக திருமணம் நடப்பதில்லை, திருமணமாகியும் பலருக்கு குழந்தைகளில்லை, சிலர் பிள்ளைகள் பெற்றபின்னரே திருமணம் செய்கின்றனர், சிலர் திருமணம்செய்துகொண்டபின்னர், எவ்வளவோ கடினமாக திருமணத்தை காப்பாற்ற முயன்றும் பலனில்லாமல் விவாகரத்தில் முடிவதைக் காண்கின்றனர். எவ்வளவோ கடினமாக முயன்றும் தேர்வில் தோல்வியின் மேல் தோல்வி, இப்படி பட்டியல் நீளுகிறது. இதுபோன்ற சில உதாரணங்களும் பிறஅடையாளங்களும், சூனியக்காரர்களால் அல்லது மந்திரவாதிகளால் போடப்பட்ட சாபம் அல்லது வேறு எதோ ஒருசாபம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அறிவுறுத்துகிறது.

ஒரு சகோதரர் தனது குடும்பத்தில் அவரது நான்கு சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் திருமணம்செய்த பின்னர் குழந்தையில்லாமலிருப்பதை கண்டுகொண்டார்.. அவர் திருமணசெய்யும் வேளை வந்தபோது இக்காரியத்தை மனதில் கொண்டு ஏழு நாட்கள் உபவாசித்து ஜெபித்தார்.ஜெபத்தின்போது கர்த்தர் அவனது இதயத்தில் ஒரு ஆலோசனை கொடுத்தார். திருமணமாகிய முதல் ஏழு நாட்கள் கணவனும் மனைவியும் உடலுறவில் ஈடுபடக்கூடாது என்றும் அப்போது அந்த பிரச்சனைக்கான காரணம் என்ன என்பது வெளிப்படுத்தப்பட்டு தீர்த்துவைக்கப்படும் என்றும் சொன்னார். இறுதியில் அச்சகோதரருக்கு திருமணமாகியது,அவரும் அவருடைய மனைவியும் தேனிலவுக்காக பயணம்சென்றனர்.

தேனிலவின் இரண்டாம் நாள் உடலுறவில் ஈடுபடவேண்டுமென்று வற்புறுத்தினாள் ஆனால் இம்மனிதன் மறுத்துவிட்டான்.. அவர்குடும்பத்தில் பிள்ளையில்லாத பிரச்சினை இருப்பதற்கு தீர்வுகாண்பதற்கு கர்த்தர் இந்த ஆலோசனை சொல்லியிருக்கிறார் என்று விளக்கமாக சொன்னான். மூன்றாம் நாள் அவனுடைய மனைவி உடலுறவுகொள்ளாவிட்டால் விவாகரத்து செய்துவிடுவேன் என்று மிரட்டினாள். அவனுடைய மூத்தவர்களுக்கு ஏற்பட்ட அதே அவலநிலை அவளுக்கு வராமல் இருக்கவேண்டுமென்றால் பொறுமையை கடைபிடிக்கவேண்டும், இப்பாலுறவில் ஈடுபடாமலே திருமணமாகும் முன் பலவருடங்கள் வாழ்ந்திருக்கிறோம் ஆகவே இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துக்கொள் என்றான். அவளோ மறுத்துவிட்டாள். நீயா நானா என்று இருவருக்கும் இடையே கயிறுஇழுப்புபோட்டி நடந்தது. அவனது தீர்மானத்தில் உறுதியாக இருக்கும்படி கர்த்தர் அவனுக்கு உதவினார்.

ஏழாவது நாள், அவனுடைய அம்மா மிகஆபத்தான நிலையில் மரிக்கும்தருவாயில் மருத்துவமனையில் இருப்பதாக ஒரு அவசர செய்தி அவனுக்கு கிடைத்தது. ஆகவே அவளுடைய அனைத்துபிள்ளைகளும் உடனடியாக அவளுக்கு முன்பாக கூடிவரவேண்டும் என்று வற்புறுத்தினாள்.

சரியான நேரத்தில் இவர்கள் மருத்துவமனையை சென்றடைந்தனர். அவளுடைய அனைத்து பிள்ளைகளுக்கு முன்பாக அவள் ஒரு சூனியக்காரி என்றும் அவர்கள் பிள்ளையில்லாமலிருப்பதற்கு அவள்தான் காரணம் என்றும் கதறிஅழுது பாவத்தை ஒத்துக்கொண்டாள். அவள் சேர்ந்துகொண்ட சூனியக்கார குழுவினர் அவர்களுடைய பிள்ளைகள் திருமணமானதும் பிள்ளைகளுடைய‘உயிரணுவாகிய விந்துவை’ சேகரிப்பதற்காக (ஆவிக்குரியரீதியில்) முதல் சிலதினங்கள் ஒன்று கூடுவார்களாம். முதல் முறையாக தம்பதிகள் சேர்ந்துவாழும்போது அவர்களது வாழ்நாளெல்லாம் குழந்தை இல்லாமலிருப்பதற்கு சூனியங்கள் செய்வார்களாம்.

இவ்வளவு காலமாக அவர்களுக்கு கைகூடிவந்த சூனியம் இவளது ஐந்தாவது மகன் திருணமானதும் அவனது மனைவியோடு சேராததால் பலனளிக்கவில்லை. வழக்கமாக கூடியஇந்த குழுவினர் அவளுடைய மகனின் விந்துவை கேட்டபோது இவளால் அவர்களிடம் சமர்பிக்கமுடியாததால் கூட்டம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மறுநாளும் கிடைக்காததால், இறுதியாக அதைகொடுப்பதற்கு அவளுக்கு 24மணிநேரம் சலுகை கொடுக்கப்பட்டது. இச்சமயத்தில்தான் இவள் நம்பிக்கை இழந்தவளாக ஆவியில் வெறிபிடித்தவளாக இவளுடைய மகனும் மருமகளும் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்து மருமகளுடைய எண்ணத்தின்மீது சூனியத்தால் தாக்கத்தை உண்டுபண்ணியதால்தான் அவனுடைய மனைவி அவனை விவாகரத்து செய்துவிடுவதாக அன்று மிரட்டினாள்.

‘சூனியக்காரர்களின் ஆலோசனை சங்கத்திலிருந்தவர்களுக்குநான் ஏன் விந்துவை கொண்டுவருவதற்கு தயக்கம் காட்டுகிறேன் என்று அறிய முடியாததாலும் அக்கூட்டத்தை வீணடித்துவிட்டதால் ஒரு பெரிய துரோகத்தை செய்துவிட்டேன் என்று குற்றஞ்சாட்டி என்னை ஆணிஅடித்து கொல்லும்படி அவர்கள் சூனியக்காரிகளை அனுப்பினார்கள்.நான் அழுதுபுலம்பி கேட்கவேண்டிய எல்லா மன்னிப்பும்கேட்டுப்பார்த்தபிறகும் அவர்கள் என்னை ஆணிஅடித்துவிட்டார்கள் என்று சத்தமிட்டவாறு இறந்துபோனாள்.’

இப்பொழுது கேள்வி என்னவென்றால் ஐந்து பிள்ளைகளை பெற்றெடுத்த ஒரு தாயால் எப்படி அத்தனைபிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பிறக்காமலிருக்க செய்யும் காரியத்தில் ஈடுபட மனம் வந்தது? அப்படிச்செய்ய அவள் வற்புறுத்தப்பட்டாளா அல்லது அவளே விரும்பிச் செய்தாளா? அவர்கள் பிள்ளைகளில்லாமல் இருப்பதைக்குறித்து மிககவலைப்படுகிறது போல் கவலைபட்டு பணம் செலவளித்து நடித்திருப்பாளோ அல்லது அந்த குற்றமில்லாத மருமகள்கள் தான் மலட்டுத்தன்மைக்கு காரணம் என்று குற்றஞ்சாட்டியிருப்பாளோ? இப்படியெல்லாம் ஆச்சரியப்படத்தேவையே இல்லை, ஏனென்றால் வேதாகமம் சொல்கிறது"ஒருவனது சொந்த வீட்டாரே அவனுக்குச் சத்துரு."

> சிநேகிதனை விசுவாசிக்கவேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம்; உன்மடியிலே படுத்துக்கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு. (மீகா 7:6)

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே" (மத்தேயு 10:36) என்று இயேசுவே அதை உறுதிப்படுத்தியுள்ளார்.

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் என்று அவிசுவாசிகளைக்குறித்து இயேசு சொன்னார்*(யோவான் 8:44)*. கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் பிசாசு கிரியை செய்கிறான் என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லியுள்ளார்.நம்மீது எவ்வளவோ கரிசனையோடு கவனிப்பவர்களாக இருந்தும்கூட,அவிசுவாசியாக இருக்கும்,நமக்கு பிரியமாயிருக்கும் இவர்கள்,சுமைகளால் அழுத்தப்படுவதால் அவர்களுடைய பிதாவாகிய பிசாசுக்கு கீழ்படிகிறார்கள். நாட்கள் பொல்லாததாக இருக்கிறது என்ற உண்மைதான் பிரதிபலிக்கிறது.

> நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. (புலம்பல் 3:22,23)

தயவுசெய்து தவறாக புரிந்துகொள்ளாதீர்கள். ஒருவர் இன்னும் மறுபடியும் பிறக்கவில்லை என்றால் அவர்கள்சூனியக்காரர் என்றோ மந்திரவாதி என்றோ அர்த்தமில்லை. அதற்கென்று ஒவ்வொருவரையும் சந்தேகித்து அவர்கள் கொடுக்கும் பரிசுபொருட்களை பெற்றுக்கொள்வதற்கு மறுக்கவோ அல்லது நண்பர்களின் வீடுகளில் சாப்பிடுவதை நிறுத்திக்கொள்ளவோ வேண்டாம். மட்டுமல்ல எல்லாதாய்மார்களும் தீயவர்களல்ல.வேதாகமம் கூறுகிறது:

> உலகத்திலிருப்பவனைக் காட்டிலும் உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவர். (1யோவான் 4:4)

> விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன்: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு16:17,18)

## உண்மையான வாழ்க்கை அனுபவங்கள்

சூழ்நிலைகள் நல்லதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளவோ அல்லது மோசமானதாக இருந்தால் அதை தள்ளிவிடவோ, முடிவெடுக்கும் சித்தம் மனிதர்களுக்கு உண்டு. விடுதலைஊழியத்தில் முதலாவதாக தள்ளிவிட விரும்புகிற காரியங்களை தீர்த்துக்கட்டுகிறோம்.

பொதுவாக மக்கள் வேண்டாமென தள்ளிவிட விரும்பும் சூழ்நிலைகளில் சில இவைகளாகும்:

## கொடியதரித்திரம் அல்லது எப்போதுமே வாழ்க்கையில் தட்டுப்பாடு(போதாமை) என்ற நிலை

> பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3யோவான் 2)

> உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர். (உபாகமம் 8:18)

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து வாழும் நாளெல்லாம் வேதாகம் முழுவதிலும் எவ்விடத்திலும் எச்சமயத்திலும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தரித்திரத்தையோ அவதிப்படும் ஒரு வாழ்க்கையையோ வாக்களிக்கவில்லை. தரித்திரமானது நம்மைவிட்டு அகற்றப்படும் என்று அவர் வாக்களித்துள்ளார்.

> எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படி இப்படிச் செய்ய வேண்டும்; இன்று நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யும்படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.(உபாகமம்15:4,5)

இப்படிப்பட்ட பகுதிகளெல்லாம் வேதாகமத்தில் இருக்கும்போது தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் ஏன் கொடிய வறுமையும் கஷ்டமும் இருக்க வேண்டும்? ஏன் கிறிஸ்தவர்கள் தொழிலிலும் வேலையிலும் அனைத்து மூலதனத்தையும் இழக்கவேண்டும்? வாடகைபணம் கொடுப்பதற்கும் பிள்ளைகளுடைய கல்விக்கட்டணம் செலுத்துவதற்கும் ஏன்அவர்கள் சிரமப்படவேண்டும்? நல்ல சத்தான சரிவிகிதஉணவை நாங்கள் சாப்பிடுகிறோம் என்று அநேக கிறிஸ்தவர்களால் ஏன் சொல்லமுடியவில்லை?பிறர் இரக்கம்பாராட்டி கொடுக்கும் தர்மஉதவியால் ஏன் அநேகர் வாழ்கின்றனர்? இந்நிலை இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?

தேவ வாக்குதத்தங்கள் எல்லாம் தங்க தட்டில் வைத்து வழங்கப்படுவதில்லை. தேவனுடைய பரிபூரண செழிப்புக்குள் நுழையும்முன்னர் ஒரு கிறிஸ்தவராக இருக்கிற நீங்கள் நீங்களாகவே நிறைவேற்ற வேண்டிய பகுதி உள்ளது.

> உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வாயானால், நிச்சயமாய் அழிந்துபோவீர்கள் என்று இன்று உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன். (உபாகமம் 9:19)

உபாகமம்15:4 வசனத்தின் முடிவில் சொல்லப்பட்டுள்ளது:

> இன்று நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யும்படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால்,

பரிபூரணமான செழிப்பில் நீங்கள் வாழவிரும்பினால் எல்லாக்காரியங்களிலும் தேவனுக்கு கீழ்படிந்தாகவேண்டும்.ஒருவன் தேவனுக்கு கீழ்படியாமலிருந்தால் அவன் பிசாசுக்கு கீழ்படிகிறான் என்றும்ஒருவகையில் அவன் அந்த பிசாசை எஜமானனாக அங்கீகரித்து விட்டான் என்றும் அவனை நடத்துவதற்கு தேவைப்படும் அனுமதியை,

உரிமத்தை (லைசன்ஸ்) பிசாசிடம் கொடுத்துவிட்டான் என்றும் அர்த்தம்.இப்படிசெய்யும் ஒருவனுக்கு பிசாசு என்ன கொடுக்கப்போகிறான்? அழிவு *(யோவான் 10:10).*

தேவனுக்கு கீழ்படியாமை என்பது பிசாசு நுழைவதற்கு வாசலைத் திறக்கும்; பணமே எல்லாம் என்ற ஆசையை கொடுக்கும் அசுத்தஆவிக்கும்தரித்திரஆவிக்கும் (spirit of mammon & spirit of poverty)அழைப்புகொடுக்கும். அவைகள் பல்வேறு வழிகளில் செயல்படுகின்றன.பணத்தை பிசாசு திருடும் போது சில நபர்களுடைய உள்ளங்கையில் ஊறல் எடுப்பதுபோல் உணருவது உண்டு. சிலர் வைத்திருந்த பணம் திடீரென்று மறைந்துபோவதை அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள். சிலருக்கு பணம் எப்படி எதற்காக செலவளிக்கப்பட்டது என்று சொல்லமுடியாமல் இருப்பார்கள் சிலர் கொஞ்சம் பணம் சேர்ப்பதற்கு எவ்வளவு கடினமாக உழைப்பையும் நேரத்தையும் செலவளிக்கவேண்டியிருக்கிறது என்பதையும் உணருவார்கள். வேறு சிலருக்கு எப்போதுமே பிரச்சினைகள் கூடிக்கொண்டே இருப்பதையும் வாழ்க்கை முழுவதும் தொடர்ச்சியாக போதாமை (தட்டுப்பாடு) இருப்பதை உணருவார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் ஒரு சாபத்தின் கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது தான் உண்மையாகும். இப்பகுதியில் அதிகமான விளக்கம் பெறவேண்டும் என்றால் 'உடன்படிக்கைகள்,சாபங்கள் மற்றும் வெளிவரும் வழிகள்' என்ற எனது புத்தகத்தை படித்துப் பாருங்கள்.

## மருத்துவ சிகிச்கைக்கு கட்டுப்படாத நோய்கள்

> அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்தீரி, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,(மாற்கு 5:25,26)

இப்பெண்ணின் கதை நம்மெல்லாருக்கும் மிகவும் தெரிந்தஒன்றாகும். 12வருடங்களாக பெரும்பாடுள்ள பெண்ணாக அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். எவ்வளவோ மருத்துவசிகிச்சைக்காக செலவழித்தும் சற்றுகூட குணமாகாமல் அவதிப்பட்டாள். ஒருவரது வியாதியானது எல்லாமருத்துவசிகிச்சைக்கும் மிஞ்சியதாக காணப்பட்டால் பிரிட்டனுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ அல்லது ஜெர்மனிக்கோ சென்று உயர்மருத்துவ நிபுணர்களை நாடிச்செல்வதால் விடைகிடைக்காது. அந்த வியாதியின் பின்னணியிலிருக்கிற சாத்தானுடைய வல்லமைகளையும் துரைத்தனங்களையும் முதலாவதாக துரத்தியாக வேண்டும்.அதிகமாக ஜெபிப்பதும் அந்நியபாஷையில் பேசுவதும், உபவாசமிருப்பதும் விசுவாசஅறிக்கை செய்வதும் எல்லாம் தற்காலிக முயற்சிகள்தான். ஆனால் விடுதலை ஊழியத்தின் போது இவைகள் அனைத்தையும் இயேசுமுற்றிலும் நீக்கிவிடுகிறார்.

சிலர் ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காக மூன்றோ நான்கோ முறைகள் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். சிலருக்கு அவ்வப்போது வருகிற தோல்நோய்களும் சரீரத்தில் உள்ள துர்நாற்றத்தையும், எவ்வளவோ சிறந்த நறுமணப்பொருளையும் மருத்துவ சிகிச்சையும் செய்தும் மறைக்கமுடியாத நிலையிலிருக்கின்றனர். அநேகர் அவர்களுடைய பிரச்சினையை அமைதியாக சகிப்பதைத்தவிர வேறுவழியே இல்லை என்று முடிவுகட்டிவிடுகின்றனர்.'சாத்தானின் தூதன்' என்று பவுலால் அழைக்கப்படுகின்ற*(2கொரி 12:7)*பிரச்சினையை வைத்துக்கொண்டு சகித்துக்கொள்ள ஏன் திட்டமிடவேண்டும்.
வியாதிப்பட்ட சிலரது நிலைமைகள் ஒரு அளவுவரை முன்னேற்றமடைந்து நம்பிக்கை ஒளிவீசும்போது, திடீரென்று எவ்வித உண்மையான மருத்துவ காரணமும் இல்லாமல் மோசமானநிலை அடைந்து இறுதியில் இறந்துவிடுகின்றனர்.பெரும்பாடுள்ள ஸ்திரீ

அனைத்து ஆஸ்தியையும் செலவழித்தபிறகும் பலனொன்றும் காணாத அவள் இறுதியில் இயேசுவிடம் சென்றாள். அவர் அவளை உடனடியாக குணப்படுத்தி விடுவித்தார்.

1995. மார்ச் 5 முதல் 8 வரை அபுஜா என்று இடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நான் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தேன். கார்கியிலுள்ள 'முதல் பாப்டிஸ்ட சபை'யாரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமாக இருந்தது. நான் பிரசங்கம் செய்து முடித்தவுடன் அந்த சகோதரர்களிடம் ஒரு இலக்கை வைத்து குறிப்பிட்ட யுத்தஜெபம் செய்யும்படி சொன்னேன்அதனால் அந்த சூழலே மாறிவிட்டது. அந்த ஜெபத்தில்தான் அவர்கள் உயிரே இருப்பதுபோல தீவிரமாக ஜெபித்தார்கள், அதனால் அவர்கள் விரும்பிய பலனை பெற்றுக்கொண்டார்கள். தேவனுக்கு மகிமையாக அங்கே அநேக சாட்சிகள் எழும்பியது. இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார்,

> யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக்கொள்ளுகிறார்கள். (மத்தேயு 11:12)

நரகசேனைகளுக்கு எதிராக ஜெபிக்கும்போது தீவிரவெறியோடு குறிப்பாக ஜெபிக்கவேண்டும். இதுதான் சமநிலையான விடுதலை ஜெபம் (balanced deliverace prayer) என்று அழைக்கப்படுகிறது.

கூட்டத்தில் ஒரு பெண் அபிஷேகத்தினால் சத்தமிட்டு விழுந்தாள். சாட்சியின்வேளையில் அந்த பெண் எவ்வித மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாத இருதய எரிச்சலுக்கு காரணமான சத்துருவை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை அன்றையத் தினத்தில் புரிந்துகொண்டதாகவும்,அவள் ஜெபிக்கும்போது ஒரு கையானது அவளுடைய இதயத்தை நோக்கி நேராக வந்து பழைய இதயத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் ஒரு புத்தம் புதிய இருதயத்தை வைத்ததை பார்த்ததாகச் சொன்னாள். அப்பெண் கீழே விழுந்தபோது அறுவைச்சிகிச்சை துவங்கியது,ஆவிக்குரிய அறுவைசிசிச்சை முடிந்ததும் அவள் எழுந்திருக்கிறாள்.

நண்பனே, உனது சரீரத்திலுள்ள மோசமாகிப்போன அல்லது தவறிப்போன உறுப்புகளுக்கு பதிலான புதியமாற்று உறுப்புகள் தேவனுடைய பண்டகசாலையில் ஆயத்தமாக இருக்கின்றன. அவரது கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்படிகிற எவரையும் மகிழ்ச்சியாக வைப்பதற்கு அவர் ஒருபோதும் களைப்படைவதில்லை. இந்த விசேஷித்த ஆவிக்குரிய கூட்டம் முடிவதற்குள்ளேயே, பலவருடங்களாக அரசாங்க அதிகாரிகளால் கொடுக்கமுடியாது என்று மறுத்துவந்த வசிப்பிடம் அவளுக்கு கிடைத்தது. அந்த அதிகாரியே அதை அங்கீகரித்து கையெழுத்திட்டு அக்கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டு பின்னர் அவர் செய்த காரியங்களைப் பார்த்து அவரே ஆச்சரியப்பட்டாராம். உங்கள் ஆசீர்வாதத்தை தடுத்துக்கொண்டிருந்தவர்களே என்ன செய்கிறோம் என்று அவர்களே அறியாமல் அவைகளை உங்களுக்கு கட்டவிழ்த்து விடுவார்கள். தேவன் அசைவாடிக்கொண்டிருக்கிறார்.

*இந்நாளில் நமக்குத்தெரிந்த அனைத்து முறைகளையும்விட தீவிரவெறியோடு ஒரே இலக்கைநோக்கி, திட்டமிட்டு குறிப்பாக ஜெபிப்பது மிகவேகமாக வேலைசெய்கிறது.*தேவனுடைய வார்த்தையால் பவத்திலிருந்து நாம் கண்டுகொண்டது, ஒருவர் தேவவார்த்தைகளினால் முற்றிலும் அனலூட்டப்பட்டவராக, விசுவாசியாக இருக்கும் அவருக்கு இருக்கிற அதிகாரத்தை முழுமையாக புரிந்துகொண்டிருந்தால்,சமநிலைகொண்ட விடுதலைஜெபமானது பிசாசினால் ஏற்பட்ட எந்த உபத்திரவத்தின் பகுதிகளையும் அணுஅணுவாக வெட்டிக்கொண்டு செல்லும்.

1994. ஏப்ரல் 13. இபதானிலுள்ள ஸ்கெளட் கேம்ப்,'அவருடைய கிருபை நற்செய்தி சபையில்' (His Grace Evangelical Church) நான் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது இன்னொரு சாட்சி எழுந்தது. யாருக்கும் நான் ஊழியம் செய்யக்கூடாது என்றும் யார்

மீதும் நான் கைகளை வைக்கக்கூடாது என்றும் எப்படி விடுதலை ஊழியத்தை செய்யவேண்டும் என்று அச்சபையாருக்கு கற்றுக்கொடுத்து அவர்களைக் கொண்டே என் நான் தீர்மானித்திருந்தேன். அச்சபையைச்சார்ந்த சகோதரர்களைக்கொண்டே அங்கு வந்தவர்களுக்கு ஊழியஞ்செய்ய வைக்கவேண்டும் என்று நான் தீர்மானித்திருந்தேன்.**அநேக சராசரி விசுவாசிகள் எண்ணுவது போல, சாத்தான் ஒரு விசுவாசிக்கும் மேலாக வல்லமை உடையவன் அல்ல.** வேதாகமம் சொல்கிறது, அவனைப் பார்க்கும்போதுஅவன் ஒரு அவலட்சணமான, பெருமைபேசுகிற ஜந்து என்றும் இவ்வளவு காலமாக அவனுடைய திறமைகள் குறைவாகஇருந்தும் அநேகரை கட்டுபடுத்தி மயக்கிவைத்திருக்கிறானே என்று ஆச்சரியப்படுவீர்கள்.

> உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக்குறித்துச் சிந்தித்து; இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும்செய்து. உலகத்தை வனாந்தரமாக்கி, அதன் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள். (ஏசாயா 14: 16, 17)

தேவனிடமிருந்து நமது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்பும்போது அதை நிறைவேற்றுகிறதற்கு அறிவு பெரும் பங்காற்றுகிறது. கூட்டத்திலிருந்த ஒரு பெண்,''வெளியே வா. நீ ஒரு முட்டாள். உன்னுடன் சமரசமே கிடையாது. உன்னோடு எந்த பேச்சும் கிடையாது.'' என்று சத்தமிட ஆரம்பித்தாள். சுமார் 800பேர் உள்ள கூட்டத்தில் அவளுடைய சத்தம் அதிகமாக கேட்டது, ஆகவே அவளிருந்த திசைநோக்கி நான் பார்வையை திருப்பினேன்.அவளால் மட்டுமே பார்க்கமுடிந்த ஒரு பொருளையோ ஒரு உருவத்தையோ சுட்டிக்காட்டியவாறு சத்தமிட்டு சுற்றி சுற்றி ஓடிக்கொண்டிருந்தாள்.

ஜெபம் முடிந்தவுடன், சாட்சிசொல்ல மக்களை அழைத்தபோது அந்த பெண்தான் முதலில் சாட்சிசொல்ல ஓடிவந்தாள். ''21 ஆண்டுகளாக ஆஸ்த்துமாவினால் பாடுபட்டுவந்தேன். ஒவ்வொரு ஜெபகூட்டத்திலும் ஆஸ்த்துமாவிற்கு எதிராக ஜெபித்திருக்கிறேன். ஆனால் இன்று நான் யார் என்பதையும் பிசாசை நான் எப்படி துரத்தவேண்டும் என்பதையும் புரிந்துகொண்டேன். ஏ! ஆஸ்த்துமாவே இயேசுவின் நாமத்தில் வெளியே வா என்று வாயைத்திறந்து சொன்னதும் யாரோ ஒருவர் என்னைவிட்டு துள்ளி வெளியே வந்து,''தயவுசெய்து நமக்குள் சமரசம் செய்துகொள்வோம்'' என்று என்னிடம் சொன்னது. அதனால்தான் அந்த அசுத்தஆவியை நோக்கிசத்தமிட்டு விரட்டினேன். அது தோற்றத்திலிந்து மறைந்தஉடனே நான் முழுமையான சுகத்தைப் பெற்றேன். அந்த சாட்சி எங்கள் அனைவரையும் அசைத்துவிட்டது. ஆஸ்த்துமா ஒரு ஆவிமனிதனா? ஆம்!

சிலமக்களை பிசாசுகள் உள்ளேயிருந்து உபத்திரவப்படுத்திக் கொண்டிருக்கிறது, வேறு சிலரை அவைகள் வெளியேயிருந்து தாக்கிக்கொண்டிருக்கின்றன. பிசாசுகள் ஒரு நபருக்குள்ளிருந்தால், குறிப்பான, இலக்கை நிர்ணயித்து யுத்தஜெபம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை லூக்கா 13இல் காணலாம்.

> அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து; ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். (லூக்கா 13:11-13)

ஓய்வு நாளில் சுகமாக்கியதற்காக யூதர்கள் அவரை குற்றஞ்சாட்டியபோது, இயேசு,

> இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார். (லூக்கா 13:16)

சாத்தான், வியாதிகளினாலும் வேதனைகளினாலும் ஜனங்களை கட்டிவைத்திருக்கிறான். இன்னும் சிலருக்கு ஒரு பிசாசை அனுப்பி தொந்திரவு படுத்துகிறான், இன்னும் சிலருக்கு பிசாசை வெளியேயிருந்து அனுப்பி வேதனைப்படுத்துகிறான்.

1981ஆண்டு, 14 வருடங்களுக்குமுன்,'**தேவனால் எல்லாம் கூடும்**' என்ற தலைப்பில் ஒரு பெருங்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தேன். பிரசங்கம் செய்து முடித்தஉடனே ஜெபிப்பதற்காக ஒரு வயதானபெண் ஒரு சிறுமியை கொண்டுவந்தாள். "அந்த சிறுபெண் செவிடாக இருக்கிறாள். தேவனால் எதுவும் செய்யமுடியும் என்றும் எந்த பிரச்சினையையும் தீர்க்கமுடியும் என்றும் எந்த நோயையும் குணமாக்க முடியும் என்றும் நீங்கள் சொன்னீர்களே" என்று அந்த மூதாட்டி என்னிடம் சொன்னாள். என்னால் அதை மறுக்க முடியாது, ஏனென்றால் அதைத்தான் அப்பொழுது பிரசங்கம்செய்துமுடித்திருந்தேன்.

பயம் என்னை கிட்டதட்ட பிடித்துக்கொண்டது. நான் கர்த்தருக்குள் வந்து அப்போதுஇரண்டு ஆண்டுதான் ஆயிற்று. இதற்கு முன் தலைவலி, வயிற்றுவலி போன்ற வற்றை தேவன் குணமாக்கியதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் எனது கூட்டங்களில் செவிடர் கேட்கும்படி, ஊமையர் பேசும்படி, குருடர் பார்வையடையும்படி இதுவரை தெய்வீக சுகம்பெற்றதை நான் கண்டதில்லை. என்ன செய்யப்போகிறேனோ? துவண்டநிலையிலிருந்த போது பரிசுத்த ஆவியானவர் என் இதயத்தில் மெல்லிய குரலில்,"செவிட்டு ஆவியை துரத்து" என்று சொன்னார்.எனது வாழ்விலே முதன்முறையாக எது வியாதியோ எது வியாதியின் அடையாளமோ அதுதான் பிசாசின் பெயர் என்பதை அறிந்துகொண்டேன். உதாரணமாக கோபத்தின்ஆவி, கசப்பின் ஆவி, மன்னியாமையின் ஆவி. ஒழுக்கக்கேட்டின்ஆவி, பொய்யின்ஆவி, திருட்டு ஆவி, ஜெபமற்றநிலையை கொண்டுவரும்ஆவி, குருட்டு ஆவி, ஊமைஆவி, தரித்திர ஆவி முதலியன.

என் கண்களை மூடியவாறு,"ஏ'! **செவிட்டு பிசாசுகளே**, இயேசுவின் நாமத்தில் அவளைவிட்டு வெளியே வா, இனி அவளுக்குள் திரும்பிவராதே"என்று கட்டளையிட்டேன். திடீரென்று யாரோ கீழே விழுந்தது போன்று சத்தம் கேட்டு கண்களைத்திறந்து பார்த்தபோது அந்த சிறுபெண் தரையில் கிடந்தாள். அபிஷேகத்தில் யாரும் விழுந்ததாக நான் பார்த்ததோ கேட்டதோ கேள்விப்பட்டதோ இல்லை. நான் இப்போதுள்ள நிலையில் அப்போது இருந்திருந்தால் அவளாக நினைவு வந்து எழும்பட்டும் என்று சொல்லியிருப்பேன். ஆனால் நான் வேகமாக தூக்கிஎடுத்து, "உனக்கு என்ன நடந்தது?" என்று கேட்டேன். "நீங்கள் அப்படி கட்டளையிட்டபோது, வாளை ஏந்திய ஒருமனிதன் என்னை நோக்கிவந்தான், நான் அப்படியே விழுந்துவிட்டேன். நான் விழுந்தபோது ஐந்து கறுப்பு உருவங்கள் என்னைவிட்டு வெளியே ஓடியதையும் உடனே என்னுடைய காதுகள் திறந்துவிட்டது."என்று சொன்னாள்.

ஓ! அன்று இரவு எனக்கு ஒரே கொண்டாட்டமாக இருந்தது. அன்று கூட்டத்திற்கு வந்த அத்தனைபேரையும் அழைத்து அந்த சாட்சியை கேட்கச்செய்யவேண்டும் போலிருந்தது. இன்னொரு பாடத்தை நான் கற்றுக்கொண்டேன்: **விடுதலை ஊழியம் செய்யும்போது ஊழியர் கண்களை மூடக்கூடாது. நீங்கள் பிசாசிடம் ஜெபிக்கவில்லை, வெளியேறும்படி நீங்கள் கட்டளையிடுகிறீர்கள்.**

---

பத்து

---

# பில்லி சூனிய பழக்கவழக்கங்கள்

முன்பு முஸ்லீம்களாக, குறிசொல்லுகிற வீட்டில் பூசாரிகளாக, சூனியக்குழுவில் உறுப்பினராக, அல்லது வெள்ளாடை சபையில் உறுப்பினராக (விசேஷமாக ஆவிக்குரிய குளியல் எடுத்தவர்கள்) இருந்தவர்களின் பிள்ளைகள்.

இது மிக ஆபத்தான காரியம். அநேகர் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் எதாவது ஒரு தருணத்தில் தெரிந்தோ தெரியாமல் பிசாசுகளிடம் (அற்பணித்திருக்கின்றனர்) ஒப்படைத்திருக்கின்றனர். அப்படிப்பட்ட நபர்கள் மனந்திரும்பி மறுபடியும் பிறந்தவர்களாக –அவர்களது வாழ்க்கைக்குள் இயேசுவை வரவேற்று ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல் அவர்கள் பிசாசோடு செய்துகொண்ட ஒவ்வொரு தொடர்பையும் உடன்படிக்கையையும் துண்டித்துவிட வேண்டும்.

## *முன்னாளில் முஸ்லீம்களாக இருந்தவர்கள்*

பெரும்பாலான முஸ்லீம்களிடம் அந்திகிறிஸ்துவின் (anti-Christ) ஆவி இருக்கும். ஆகவே ஒரு நபரோ அவருடைய பெற்றோரோ முன்னர் அம்மதத்திலிருந்ததன் நிமித்தமாக அவர்களுக்குள் **கிறிஸ்துவுக்கு எதிரானஒரு பிசாசு வந்திருக்கக்கூடும். அப்பிசாசின் கிரியையினால் அவர்கள் வைராக்கியமாக கிறிஸ்தவத்தை வெறுப்பார்கள்.** இஸ்லாமை பின்பற்றுவதைவிட்டு மனந்திரும்புகிற யாராக இருந்தாலும் அவனுக்கு அல்லது அவளுக்கு விடுதலை ஊழியம் தேவையாக உள்ளது. அவர்கள் கிறிஸ்தவத்தை சேர்ந்து நீண்டகாலம் ஆனாலும் சரி ஆகாவிட்டாலும் சரி அப்பிசாசோடுள்ள தொடர்பை நிராகரித்து, ரத்துசெய்து துரத்தாவிட்டால் அதுஅவனுக்கு தேவனோடுள்ள உறவைபாதிக்கும்.

மோசமான சூழ்நிலைகள் ஏற்படும்போது அந்நபருக்குள் இருக்கும் வெறுப்பின் சின்ன உணர்வானது தேவனுக்கும் அச்சபைவிசுவாசிகளுக்கு எதிராக பொங்கி பாயச்செய்துவிடும். நெருக்கமான சூழ்நிலைகளில் பிசாசு அவனை பயங்கரமான ஆயுதமாக எடுத்துப்பயன்படுத்தாதபடிக்கு அவனோடுள்ள தொடர்புகளைத் துண்டித்து விடுவது மேலானது.

## *முன்னாளில் குறிசொல்லுகிற வீட்டில் ஆண் அல்லது பெண் பூசாரியாக இருந்தவர்கள்*

முன்பு எப்போதாவது ஆண்பூசாரியாகவோ பெண்பூசாரியாகவோ இருந்து பிசாசுகளுக்கு பணிவிடைசெய்தவர்கள், இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட பிறகு முதலாவதாக அவர்களுக்கு தீவிரமான விடுதலை ஊழியம் தேவையாக இருக்கிறது. உண்மையாகவே அவர்கள் கர்த்தருக்கு சேவைசெய்ய வந்திருந்தாலும்,பூஜைஅறையில் புகைகாட்டியதால்,மந்திரங்களை உச்சரித்ததால் அந்த நபர்களின் சரீரத்திற்குள் பிசாசுகள் போட்ட சாத்தானின் வல்லமைகளும் அதிகாரங்களும் முற்றிலும் அழிக்கப்பட்டாகவேண்டும்.

## *பிசாசுக்கு அற்பணிக்கப்பட்டவர்கள்*

கிறிஸ்தவர்களில் அநேகர் பிறந்த உடனேயே அறியாமையினால் முன்புபிசாசுக்கு அற்பணிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.சிலருக்கு சூட்டப்பட்டிருக்கும் பெயர்களைக் கேட்டாலே பிசாசுக்கும் அவன் செயல்களுக்கும் துதியும் மகிமையும் செலுத்துவதாக இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். சிலருடைய முகங்களில் விசித்திரமான அடையாளங்கள் போடப்பட்டிருக்கும். சிலருடைய சரீரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கூராயுதத்தால் செய்யப்பட்ட கீறல்களின் தழும்புகள்இருக்கும். பிசாசுக்கு அற்பணிக்கப்பட்ட நபர்கள்,

விடுதலை ஊழியத்தினால் விடுதலைபெறாவிட்டால் அவர்கள் வாழ்க்கை மிக போராட்டம் நிறைந்ததாக இருக்கக்கூடும்.

முன்போ இப்போதோ பிசாசுக்கு பூசாரியாக இருந்தவர்களுடைய மற்றும் இருப்பவர்களுடைய அவர்களது அனைத்து பிள்ளைகளும் பிசாசுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்தவ சபைகளில் பிறந்தபிள்ளைகளை 40வது நாளில் சபைக்கு கொண்டுவந்து அர்ப்பணிப்பதுபோல அவர்களும் அவர்களது பிள்ளைகளை அவர்களுடைய கோயில்களுக்கு அர்ப்பணித்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக :1991 இல் எனது மனைவி கர்ப்பவதியாக இருந்தபோது அவளுடைய வயிற்றில் அடிக்கடி கைவைத்து அவளுடைய கர்ப்பத்திலிருந்த இரட்டைபிள்ளைகளை தேவனுக்கு அர்ப்பணித்து ஒழுங்காக ஜெபிப்பேன். அவர்கள் பிறக்கும் வரை இதை ஒழுங்காக செய்துவந்தேன். அவர்கள் பிறந்தபோது அவர்கள் மேல் கைவைத்து அந்நியபாஷையில் பேசினேன் அவர்களுக்கு தீர்க்கதரிசனம் கூறினேன். மேலும் அவர்கள் பரிசுத்தஆவியினால் நிரப்பப்படும்படி கட்டளையிட்டேன் (decreed). 30 நாட்கள் கழித்து நாங்கள் அவர்களை எங்கள் சபைக்கு எடுத்துச்சென்றோம் எங்கள் பாஸ்டர் முறைப்படி சபையில் அவர்களை தேவனுக்கு அர்ப்பணித்தார். இப்படி தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட செய்கையோடு பிசாசுக்கு அர்ப்பணிக்கப்பட்டதை ஒருபோதும் சரிசமமாக்க முடியாது.

நான் எப்படி எனது இரட்டைப்பிள்ளைகளை தேவனுக்கு அர்ப்பணித்தேனோ அதுபோலவே பெரும்பான்மையான *குறிசொல்லுகிற* பூசாரிகள் அவர்களுடைய சொந்த பிள்ளைகளை அவர்கள் நம்பும் தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கின்றனர். சர்வவல்லதேவனுக்கு ஒப்புக்கொடுத்தவர்களை பரிசுத்தஆவியானவர் வழிகாட்டி பாதுகாப்பதுபோல பூசாரிகளால் அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகளிடமும் சாத்தானோடுசம்பந்தபட்ட தீயபிரசன்னம் ஓரளவுக்கு இருக்கும். அர்ப்பணிக்கப்பட்ட சாத்தானின் கையாட்கள் (ஏஜென்ட்கள்) இரட்சிப்புக்காக தேவனிடம் வந்தாலும்*அவர்கள் வாழ்வில் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அனுபவிக்க விரும்பினால் மனப்பூர்வமாக பிசாசோடுள்ள தொடர்பை நிராகரிக்க- ரத்துசெய்தாக வேண்டும். அப்படி அவர்கள் செய்யாவிட்டாலும் இறந்தால் இறுதியில் பரலோகம் செல்வார்கள் ஆனால் அவர்கள் பூமியில் வாழும்போது அவர்கள் அனுபவிக்கவேண்டும் என்று அவர்களுக்காக தேவனால் ஆயத்தப்பண்ணி வைக்கப்பட்டிருக்கும் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் அடைய முடியாமல் அனுபவிக்காமல் சென்றுவிடுவார்கள்.*முந்தைய வாழ்க்கையில் அவர்கள் பிசாசோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகளும் பிசாசை பிரியப்படுத்த அவர்களது சரீரத்தில் போடப்பட்ட அடையாளங்களும், சரீரத்திற்கள் புதைக்கப்பட்ட பொருட்களும் அவர்களுக்கு வரவேண்டிய அற்புதங்களை தாமதப்படுத்துவதோடு அவர்கள் இப்பூமியில் இருக்கும் நாளெல்லாம் அவர்களது வாழ்வை மிக சிக்கலுள்ளதாகவும் சிரமமுள்ளதாக ஆக்கக்கூடும்.

மேலும், முதல் மகனுக்கு அல்லது முதல் மகளுக்கு செய்தாகவேண்டும் என்று பாரம்பரியங்களாலும் பழக்கவழக்கங்களாலும் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்காகவும், சரீரத்தில் குறியிடுவதற்காகவும்,கடைபிடிக்கப்பட்ட எல்லா சடங்காச்சாரங்களினாலும் விசேஷமாக படைக்கபட்ட உணவுகளை பகிர்ந்துகொண்டதாலும் உட்கொண்டதாலும்ஏற்பட்ட பிசாசோடுள்ள உறவை நிராகரித்து, புறக்கணித்து அவைகளொடுள்ள தொடர்புகளை துண்டித்தாகவேண்டும். சத்தியத்தை தெரிந்தபிறகும் தாமதிப்பதால் பிசாசுக்கு கூடுதலாக தருணத்தை,ஒரு நாளைக்கூட அனுமதிப்பது ஆபத்தானது. நாம் சத்தியத்தை அறியும்போது சத்தியம் நம்மை விடுதலையாக்கும் *(யோவான் 8:32)* என்று வேதாகமம் சொல்கிறது.

## *ஜு ஜு வீடுகளுக்கு சென்றவர்கள்*

இரவு விழிப்பு ஜெபம் நடத்தும் ஒவ்வொரு வேளையிலும் (இரண்டாவது வெள்ளிக்கிழமை லாகோஸில், கடைசி வெள்ளிக்கிழமை இபதானில்) நாங்கள் பொதுவாக உபவாசித்து ஜெபித்து பெரும்பாலும் கூட்டம் நடக்கும் அரங்கத்தை

பரிசுத்தப்படுத்துவோம், ஒவ்வொரு பெஞ்சின் மீதும் இருக்கையின் மீதும்,கூட்டத்திற்கு வந்து அமர்கின்ற ஒவ்வொருவரும் தேவனுடைய தொடுதலையும் அற்புதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபிப்போம். ஜெப அரங்கத்திற்குள் நுழைந்ததுமே அவர்களுடைய வியாதிகள் அல்லது பிரச்சினைகள் மறைந்துபோனது என்று அநேகர் வந்து சாட்சிசொல்லியிருக்கிறார்கள். இப்படி பெரும்பாலான சபைகளிலும் ஊழியங்களிலும் செய்யப்படுகிறது.

இதே போல *குறிசொல்லுகிற* பூசாரிகளும் அங்கு வருகிற வாடிக்கையாளர்களின் மீதுதீயசக்தியை கட்டவிழ்த்துவிடுவதற்காக பொதுவாக அவர்களது தெய்வங்களுக்கு முன்பாக அவர்களை ஆயத்தப்படுத்தும்படி மந்திரங்களை (incantations) உச்சரித்துக்கொண்டிருப்பார்கள். பால் (baal) என்ற ஒரு குறிப்பிட்ட பிசாசு அங்கு சென்று திரும்புகிறவர்களோடு வீடுகளுக்குச் சென்று, அவர்கள் அக்கோயிலில் பூசாரிமுன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை பின்பற்றுகிறார்களா இல்லையா என்பதை கண்காணித்து உறுதிசெய்துகொள்ளுமாம்.ஆகவே இந்த *குறிசொல்லுகிற* வீடுகளுக்கு சென்றவர்களில் எவராவது இயேசுவை பின்பற்ற தீர்மானித்தால்,அவர்களுக்கு தீங்குசெய்யவேண்டும் என்று இப்பிசாசுகள் எடுக்கும் எம்முயற்சியும் பலனற்றுபோகத்தக்கதாக, விடுதலை ஊழியத்தின் மூலம் எல்லாவித அப்பிசாசின் தொடர்புகளிலிருந்தும் இவர்கள் விடுதலைபெற்று பரிசுத்தமாக்கப்பட வேண்டியது மிகஅவசியமாகும். அந்த ஒப்பந்தம் 50வருடங்களுக்கு முன்செய்யப்பட்டதாக இருந்தாலும் அறிக்கை செய்து ரத்துசெய்தாகவேண்டும் (நிராகரிக்கப்பட்டே ஆகவேண்டும்).பலகோடி பிசாசுகளிருப்பதால் ஒரு நபரை வாழ்நாள் முழுவதும் தொடர்வதற்காக போதுமானவைகள் நியமிக்கப்படுகின்றன. ஆகவே குறிசொல்லுகிற வீடுகளுக்கு சென்றவர்கள் ஒவ்வொருவரும் இந்த'பால்' (baal) பிசாசுகளிடமிருந்து விடுதலைபெற்றாகவேண்டும்.

## *முன்னாளில் சூனியக்குழுவில் உறுப்பினராக இருந்தவர்கள்*

கிறிஸ்தவமதம் என்று சொல்லிக்கொண்டு போலியானஅமைப்பில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் ஒவ்வொருவரும் விடுதலை ஊழியத்தை பெற்றாகவேண்டும். உதாரணமாக: Grail Message, (கிரேல் மெசேஜ்),Amorc (அமோரக்), Freemasonry (ப்ரீமாசனரி),New Age (புதுயுகம்), Hare Krishna (ஹரே கிருஷ்ணா)etcஅல்லது Ogboni confraternity etc போன்ற சூனியக்காரகுழுவிலிருந்தவர்களும் விடுதலை பெற்றாகவேண்டும். அப்படி விடுதலைபெறாவிட்டால் உறுப்பினராக இருந்தபோது அவர்கள் செய்த வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும், பொறுத்தனைகளையும் பயன்படுத்தி அப்பிசாசுகள் அவர்களுக்கு மரணத்துக்கேதுவான நோய்களையும் பலவீனங்களையும் ஏற்படுத்தி உபத்திரவப்படுத்துவதோடு மரணத்தையும் ஏற்படுத்தக்கூடும்

எவராவது அப்படிப்பட்ட சூனியக்குழுவில் உறுப்பினராக இருப்பதை நிறுத்திவிட்டு மறுபடியும் பிறவாத நிலையிலும் இருந்தால் அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலோர் படுவேதனையை அனுபவிக்கக் நேரிடும். அப்படிப்பட்ட பிசாசின் அனைத்து தாக்குதல்களிலிருந்து உண்மையாக பாதுகாத்து வழிநடத்த இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே முடியும். இத்தலைப்பின்கீழ் ஏராளமான காரியங்களை விவரிக்க வேண்டியுள்ளது, அதுபின்னர் தனி புத்தகமாக வெளிவரும்.

## *முன்னாளில் சாத்தானின் சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள்*

வெண்ஆடை அணிந்த சபைகள் சூனிய காரியங்களில் அதிகமாகஈடுபட்டுள்ளனர். அவர்கள் தவறான வழிகளிலேயே அநேக காரியங்களை செய்கின்றனர். அவர்கள் தூபங்காட்டுகின்றனர். வேதாகமத்தின்படி அது நிகழ்கால கிறிஸ்தவர்களுக்கு அருவருப்பானதாகும்.

…தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; (ஏசாயா 1:13)

(வானத்தில் கிரியைசெய்கிற) வானுலக ராணி என்று அழைக்கப்படுகின்ற அவளுக்கு தூபங்காட்டி ஆராதனை செய்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.

எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், யூதா பட்டணங்களிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி. ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். (எரேமியா 44:17)

சாத்தானின் சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் இப்பொழுது, ஆச்சரியமான இயேசுவின் ஒளியை கண்டுகொண்டு அச்சபையை விட்டு சென்றுவிட்டதை மனப்பூர்வமாக அனுமதி கொடுக்காமல் அவர்கள் திரும்பிவருவதற்காக என்ன அதிகாரமெல்லாம் உண்டோ அவைகள் அனைத்தையும் பயன்படுத்துவார்கள். அப்படியும் வராவிட்டால் அவர்கள் வாழ்க்கை சிரமப்படுத்த என்னவெல்லாம் உண்டோ அத்தனையும் செய்வார்கள். வானராக்கினியை (queen of heaven = விண்ணகஅரசி) ஆராதிப்பதை விட்டுவிட்டவர்களைப்பற்றி வேதாகமம் சொல்கிறது:

நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமலும், அவளுக்கு பானபலிகளை வார்க்காமலும்போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம். (எரே44:18)

இப்படிப்பட்ட சில சபைகள், உறுப்பினர்களை மிரட்டியும், பயமுறுத்தியும், மனதை கட்டிப்போட்டும் சூனியத்தின் மூலம் கட்டுப்படுத்தியும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியும் சபைக்குள்ளேயே பிடித்துவைத்துக்கொள்வார்கள். இப்போது கிறிஸ்தவர்களாக நின்றுகொண்டிருக்கிறவர்களே! நீங்கள் முன்னாளில் அங்கே உறுப்பினர்களாக இருந்ததற்காக உங்கள் மேல் சொல்லப்பட்ட இப்படிப்பட்ட பயமுறுத்தல்களை எளிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

இப்படிப்பட்ட மிரட்டல்களை ஊக்கமான ஜெபத்தினால் செயலிழக்கச்செய்ய வேண்டும். ஏனென்றால் இதுபோன்ற சூனியத்தால் கட்டுப்படுத்துகின்ற சபையில் எப்போதாவது உறுப்பினராக இருந்தது உண்டானால் அவர்களை அறியாமலே அவர்கள் சாத்தானோடு சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் நுழைந்துவிட்டதால் பால் (baal) என்ற பிசாசுக்கும் மற்றும் மதசம்பந்தமான பிசாசுகளுக்கும் உள்ளே வருவதற்கான வாசல் திறக்கப்படுகிறது.அச்சபையைவிட்டுவந்தவர்கள் உண்மையாகவே மறுபடியும் பிறவாதவர்களாக இருந்தால் அந்நபரின் நிலைமையானது மிகமோசமானதாக இருக்கும். பொதுவாக அவனுக்கு எதிராக அவனது பழையசபையானது ஏற்படுத்துகிற தாக்குதல்களை விலக்கி பாதுகாக்க, அந்நபரிடம் நியாயமான காரியமில்லை.

முன்பு சடங்காச்சாரமாக நதியில் குளியல் செய்து அச்சபையோடு மிகதீவிரமான உடன்படிக்கை செய்தவர்களுக்கு விடுதலை ஊழியம் செய்யும்போது அவர்கள் முற்றிலும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கவேண்டும்.“நான் வெளிப்புறமாகவும் சுத்தமாகும்படி இயேசுவின் இரத்தத்திற்குள்ளாக குளிக்கிறேன்.” என்று அந்த நபர் சொல்லவேண்டும். விலையேறப்பெற்ற இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை எதிர்த்திட எந்த தைலமோ, வல்லமையோ, துரைத்தனமோ இல்லை. இதுபோன்ற சூனியசபைகளில் சேர்ந்ததால் உள்ளேவந்த விஷத்தின் அனைத்து தீயவிளைவுகளும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் செயலிழக்கச் செய்யப்பட்டு அழிக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தை சொல்கிறது:

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். (வெளி 12:11)

> அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். (எபிரேயர் 13:12)

இன்னும் இச்சபையில் ஆராதிக்கொண்டிருக்கிற அநேகர் அவர்கள் சரியான காரியத்தை செய்துகொண்டிருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.‘‘ஆனால் நாங்களும்கூடஇயேசுவின் நாமத்தில்தானே ஜெபிக்கிறோம்’’ என்று அடிக்கடி வாக்குவாதம்செய்கிறார்கள். ஆம், இயேசுவின் நாமத்தில்தான் ஜெபிக்கிறீர்கள் ஆனால் வேறு சில நாமங்களையும்கூட உள்ளே கொண்டுவந்துவிட்டீர்கள். சுவிசேஷத்தோடு உலகவழிபாட்டுநம்பிக்கைகளையும் கலந்துவிட்டீர்கள். தேவனுடைய நாமத்தில் ஏராளமான தீமைகளும் அருவெறுப்புகளும் செய்யப்படுகின்றன, இருந்தும்,‘‘நாங்களும்கூட இயேசுவின் நாமத்தில்தான் ஜெபிக்கிறோம்’’ என்று வாக்குவாதம் செய்கிறீர்கள்.பிசாசை நாம் துரத்தவேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது அதுமட்டுமல்லாமல் பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகி ஓடுங்கள் என்றும் சொல்கிறது.

1994இல் இப்படிப்பட்ட சபைகளில் உறுப்பினராக இருந்த ஒரு பெண் விடுதலை நாடி எங்களது ஊழியத்திற்கு வந்தாள். பாஸ்டர் என்று சொல்லப்பட்ட ஒருவரால் ஒரு ஆற்றில் குளித்ததிலிருந்து அவளுக்கு பிரச்சினைகள் ஆரம்பித்தது.எல்லாவகையான தீமைகளும் கழுவப்படுவதற்காக ஆவிக்குரிய குளியல் நடத்த அந்த பெண்ணை அவளது பாஸ்டர் ஆற்றுக்கு அழைத்துவந்தார்.ஆற்றிலிருக்கும்போதே அப்பெண்ணோடு உடலுறவுகொண்டிருக்கிறார். அவள் கர்ப்பமுற்று ஒரு ஆண்குழந்தையை பெற்றெடுத்தாள்,அது பாதி மனிதனாகவும் பாதி பிசாசாகவும் இருந்தது.அந்த பையன்,அவனது தாயை கொடூரமாக கொடுமைப்படுத்தியதைப் பார்த்தால் அவளை அழிப்பதற்காகவே அனுப்பப்பட்டதுபோல இருந்தான்.இறுதியில் ஒரு நாள் அப்பையனோடு விடுதலை ஊழியத்திற்கு வந்திருந்தாள். அவளுடைய பிரச்சினைக்கு உண்மையான காரணம் என்ன என்று சொல்லியதால் அப்பெண்ணுக்கு எங்களால் உதவமுடிந்தது.

1994இல், இன்னொரு பெண் சாட்சிசொன்னாள். தீர்க்கதரிசி என்று சொல்லப்பட்ட ஒருநபரிடம் சென்று அவளுக்கு ஒரு கணவன் கிடைக்கவேண்டும் என்று ஜெபிக்கச் சென்றிருந்தாள். இந்த ‘‘தீர்க்கதரிசி’’க்கு நான்கு மனைவிகள் உண்டு.ஆற்றிற்கு அழைத்துசென்று அவளுக்கு ஆவிக்குரிய குளியல் நடத்தியிருக்கிறார். அதன்பிறகு அவளால் பாலியல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அழைத்துசென்ற அந்த நபரோ அவளை ஒரு நாய் போல பயன்படுத்தியிருக்கிறான். அவளுடைய பாலுணர்வுபசிக்கு காரணம் என்ன என்று அவளால் சொல்லவோ கட்டுப்படுத்தவோ முடியாமலிருந்தது. பலமாதங்களாக அவளை பயன்படுத்திய அந்தநபர் அவளை தனது ஐந்தாவது மனைவியாக ஆக்க தீர்மானித்தார். ஆனால் அவள் அதற்கு மறுத்துவிட்டாள். இன்னொருமுறை ‘‘பரிசுத்தப்படுத்த’’ அவளை ஆற்றுக்கு அழைத்து சென்று ஏதோ ஒன்றை அவள் விழுங்குவதற்காக கொடுத்திருக்கிறார். அதை விழுங்கிய உடனே அவள் நிம்மதி இழந்தவளாகி கிட்டதட்ட பைத்தியம்போல ஓடினாள். அவரை திருமணம் செய்ய உடன்படாவிட்டால் உலகில் எவரும் அவளை திருமணம் செய்யமாட்டார்கள் என்றும் அவள் குழந்தையில்லாமல்தான் இறப்பாள் என்றும் அந்த ‘‘தீர்க்கதரிசி’’ மிரட்டியிருக்கிறார்.

அதன்பின் அப்பெண் அச்சபையைவிட்டு விலகத் தீர்மானித்தாள். ஆவிக்குரிய சபையில் சேர்ந்து,இயேசு கிறிஸ்துவுக்கு அவளுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தாள், பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டாள். எனினும் அதற்குப்பிறகு பலவருடங்களாக அவளுக்கு கணவன் இல்லை. அவள் எப்பொழுதும் பலவீனமாகவும் அவளுடைய உடம்புக்குள் ஏதோ பொருட்கள் ஓடிக்கொண்டிருந்தது. அவள் சரீரத்தில் குறையாக, தவறானதாக எதையும் மருத்துவர்கள் காணவில்லை, எனினும் அவள் செத்துக்கொண்டிருந்தாள்.

அவளுக்காக முழுசபையும் உபவாசித்து அழுது மன்றாடியது. அதன்பிறகு சீக்கிரமாகவே ஒரு கிறிஸ்தவநபரோடு அவளுக்கு திருமணம் நிச்சயமாயிற்று. திருமணமாகி அவளுக்கு ஒரு மகன் பிறந்தான் ஆனால் அடிக்கடி பலவீனமும் அவளுடைய உடம்புக்குள் ஏதோ ஓடிக்கொண்டிருப்பதுபோன்ற அனுபவமும் தொடர்ந்தது. அடுத்த 10ஆண்டுகளாக அவளால்

கர்ப்பவதியாகமுடியவில்லை. ஆனால் அவள் கலந்தாய்வும் விடுதலையும் பெற்றபின்னர் முழுமையாக குணமாகி மறுபடியும் கர்ப்பவதியாக இருப்பதாகவும் சாட்சி சொன்னாள்.

அவள் சாட்சிசொல்லும்போது நான்குமாத கர்ப்பிணியாக இருந்தாள்.''பிள்ளையற்ற நிலைக்கு எதிரான யுத்தம்'' என்ற விசேஷ கூட்டத்தில் அவளுடைய சாட்சியைச் சொல்லியபின், எல்லாமதசம்பந்தமான பிசாசுகளைக்காட்டிலும் சாத்தானின் சபைகளின் சூனியங்களைகாட்டிலும் மிகஉயர்ந்தவராகிய தேவனுடைய மகிமைக்காக அவள் நடனமாடியபோது எங்கள் எல்லாருக்குமே உண்மையில் ஆசீர்வாதமாக இருந்தது.

ஒருவேளை நீங்கள் அப்படிப்பட்ட விசித்திரகுளியல் நடத்தும் அச்சபைக்கு முன்பு சென்றிருந்தாலோ, அல்லது அங்கிருந்து வெளியேவர விரும்பினாலோ, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு முழுமையான விடுதலையும் உண்டாயிருக்கும்.

---

## பதினொன்று

---

# பயம்

சிலமனிதர்கள் பயத்தின் ஆவியினாலும் எதிர்மறையாக சிந்திக்கவைக்கும் ஆவியினாலும் கட்டுண்டு இருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் பிரச்சினைகளையும் பேரழிவுகளையுந்தான் எப்போதும் காண்கிறார்கள். ஒருவேளை பயணம்சென்ற கணவர் திரும்புவதற்கு காலதாமதமாகிவிட்டால் உடனே பலவகையான எதிர்மறையான எண்ணங்கள்தான் பிசாசிடமிருந்து அவர்களுக்கு வந்துகொண்டிருக்குமே தவிர, தாமதத்தை ஏற்படுத்துவதற்கான பிற நல்லகாரணங்களும் உண்டு என்பது அவர்களது சிந்தையில் ஒருபோதும் வராது. இப்படிப்பட்ட நபர்களால் இருட்டில் தனியே போகமுடியாது.இப்படிப்பட்டவர்களால் தனியாக ஒரு அறையில் உறங்கமுடியாது,அறையில் வெளிச்சமில்லை என்றால் (லைட்போடாமல்) அவர்களால் உறங்க முடியாது.

இப்படிப்பட்ட அநேக மக்களிடையே பொதுவாகக் காணப்படும் இருபிரச்சினைகள்: கவலையும் உபத்திரவமும்.

### *கவலை*

இவர்கள் எதற்கும் எல்லாவற்றிற்கும் கவலைப்படுவார்கள். ஆனால் வேதாகமம் சொல்கிறது:

> அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார். (உபாகமம் 33:27)

தேவனுடைய கரம் உங்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நம்பியாக மவேண்டும். எந்த பொல்லாப்பும் உங்கள் கூடாரத்தை அணுக அவர் அனுமதிப்பதில்லை *(சங்கீதம் 91:10)*, உங்கள் திராணிக்கு மேலாக எந்த சோதனையையும் உங்கள் பக்கம் வர அவர் அனுமதிப்பதில்லை *(1கொரிந்தியர் 10:13)*. 'என் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது' என்று நீங்கள் அறிக்கைசெய்ய வேண்டும் *(கொலோசெயர் 3:3)*. இறுதியாக பிசாசு உங்களிடம் முயற்சித்து பார்ப்பதற்கு முன் எதையும் முதலில் தேவனிடமும் பிறகு இயேசுவிடமும் முயற்சித்துப்பார்க்கிறான். ஆகவே பிசாசினால் எந்த பொல்லாங்கையும் தேவனிடமும் அவருடைய குமாரன் இயேசுவிடமும் ஒருபோதும் முயற்சித்து பார்க்கமுடியாது. ஆகவேதான் விழிப்போடும் ஜெபத்தோடும் இருக்கும் தேவனுடைய பிள்ளையின் ஜீவனை எடுக்க பிசாசால் முடியவே முடியாது.

எல்லாரையும் விட உங்களுக்குள்ளிருக்கிறவர் பெரியவர் *(1யோவான் 4:4).* இயேசு சொன்னார்:

> என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்கிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. (யோவான் 10:27-29)

நண்பனே, இப்பொழுது படித்த வசனம் உங்களுக்குப் புரிந்ததா? நீங்கள் உறங்கும்போதுஉறங்காமலும் தூங்காமலுமிருக்கிற தூதர்கள் எந்த பிசாசும் உங்களைத் தாக்க அனுமதிப்பதில்லை *(சங்கீதம் 34:7).*

கவலை என்பது ஒரு பாவம், ஏனென்றால் நீங்கள் கவலைப்படும்போது நீங்களிருக்கும் சூழ்நிலையில் உங்களை பொறுப்பெடுத்துக்கொள்ள தேவனுக்கு திறமையில்லை என நீங்கள் சந்தேகப்படுகிறீர்கள். ஆனால் பொதுவாக மனிதர்களாகிய நாம் புயலைப்பார்க்கும்போது பேதுருவைப்போல கவலைப்படும் நிலையில் இருக்கிறோம். சிலகாலங்களுக்கு முன் ஒரு சம்பவம் நடந்தபோது தேவனிடத்தில் எனது மனைவி வைத்திருக்கும் விசுவாசத்தின் மூலமாக நான் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொண்டேன்.

1993, பெப்ருவரியில், அபியோகுட்டாவிலுள்ள (Abeokuta) ஒரு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் நான் பிரசங்கம்பண்ண வேண்டியிருந்தது. அங்கு புறப்படுவதற்கு ஆயத்தமாகும்போது எனது இரட்டைபிள்ளைகளுக்கு (மகன்களுக்கு) வாந்தியும் வயிற்றுப்போக்கும் தொடங்கியது. கொஞ்ச நேரத்திற்குள்ளாக பலமுறை அவர்களுக்கு வாந்தியும் வயிற்றுப்போக்கும் நேர்ந்துவிட்டது.அவர்களுக்காக நான் ஜெபித்தேன். வாந்தியையாவது நிறுத்தலாம் என்று செய்யவேண்டிய சிறந்த அனைத்தும் செய்தும் ஒரு பயனுமில்லை. நிலைமை முற்றிலும் மோசமாக இருந்ததால் அபியோகுட்டா கூட்டமானது நன்றாக விளம்பரப்படுத்தப்பட்டும் முன்ஆயத்தம் செய்யப்பட்டிருந்தும் அக்கூட்டத்தை ரத்துசெய்ய முடிவெடுத்தேன். அந்நிலையில் பிள்ளைகளை தாயிடம் விட்டுச்செல்ல நான் விரும்பவில்லை, எல்லாவற்றிற்கும் மேலாக அப்போது எங்களிடம் பணமும் இல்லை. நாங்கள் என்னசெய்வதென்று தெரியாமல் தயங்கிக்கொண்டிருந்தபோது ஒரு நண்பன் எங்களைக்காண காரில்வந்தார்.

மகன்களை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லலாம் அங்கிருந்து நான் கூட்டத்திற்கு பயணம் செய்யலாம் என்று என் மனைவி சொன்னாள். மருத்துவமனைக்கு கொடுப்பதற்கு எங்களிடம் பணம் இல்லை, நாங்கள் எல்லாரும் நண்பரின் காரில் ஏறி மருத்துவமனைநோக்கி சென்றோம். நாங்கள் அங்கே சென்று சேர்ந்தபோது அங்கிருந்த மருத்துவர் ஒரு தேவனுடைய பிள்ளையாக இருந்தார், அவர்களிடம்,‘‘என் மகன்களுக்கு வயிற்றுப்போக்கும் வாந்தியும் இருக்கிறது.’’ என்றேன். அதிர்ச்சியடைந்து ‘‘அவர்கள் எங்கு இருக்கிறார்கள்?’’ என்று கேட்டார்கள். ‘‘காரில் இருக்கிறார்கள். தயவு செய்து அவர்களுக்கு மருத்துவசிகிச்சை கொடுங்கள் ஆனால் அதற்கான மருத்துவகட்டணம் சம்பந்தமாக என் மனைவியிடம் ஒன்றும் சொல்லவேண்டாம், ஏனென்றால் எங்களிடம் தற்போது பணமில்லை. நான் ஞாயிற்றுக்கிழமை திரும்பிவரும்போது பணம் செலுத்துவேன்’’ என்று அவர்களிடம் சொன்னேன். அது ஒரு வியாழக்கிழமையாயிருந்தது.

அன்று பிரசங்கமும் விடுதலைஊழியமும் நடத்தி முடித்தபின்னர் அந்த இரவில் நான் இளைப்பாற ஹோட்டல் அறைக்கு சென்றபோது பிசாசுஎன்னிடத்தில் வந்தான். வீட்டில் நிலைமைகளைக் குறித்து அவன் எனக்கு நினைப்பூட்டினான். இபதானுக்கு திரும்பும்போது பிள்ளைகளை இறந்தவர்களாகப் பார்ப்பாய் என்று என்னிடம் சொன்னான். அவன் என்னிடம் சொல்லாத எதிர்மறையான காரியங்கள் ஒன்றுமில்லை. நான் ஜெபித்தேன், பரிசுத்த ஆவியானவர் என்னிடம்,‘‘யார் சொல்கிறதை நீ நம்புகிறாய் : தேவனுடைய அறிக்கையையா அல்லது பிசாசினுடைய அறிக்கையையா?’’ என்று

கேட்டார்.“தேவனுடைய அறிக்கையை நம்புகிறேன்” என்று பதிலளித்தேன். அப்படியானால் நான் உறங்கவேண்டும் என்று சொன்னார். அதன் பின்னர்தான் என்னால் உறங்கமுடிந்தது. ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் இபதான் சென்று சேரும்வரை இத்தகைய போராட்டத்தோடு சென்றேன். தேவனுக்கு மகிமையாக நான் அவர்களை சந்திக்கும்போது விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை தூக்கியெடுத்து அணைத்தேன். ஆனந்தத்தில் அழுது எனது மனைவியின் விசுவாசத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்தினேன். என் முடிவுக்கு விட்டிருந்தால், எனக்கிருந்த கவலையால் அக்கூட்டத்தை ரத்து செய்திருப்பேன். இந்நாள் வரை அவள் சொன்ன வார்த்தை என்னில் பதிந்திருக்கிறது,“நீங்கள் சரீரத்தில் இங்கிருந்து பிள்ளைகளுக்கு என்னசெய்வீர்கள்? சுகமளிப்பதும் ஜெபத்துக்கு பதிலளிப்பவரும் தேவனல்லவா? நீங்கள் அபியோகுட்டா- சென்று அங்கிருந்து ஜெபம் பண்ணும்போது தேவன் இபதானில் பதிலளிப்பார். தயவு செய்து போங்கள். கர்த்தர் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.”

## *உபத்திரவம்*

பயத்திற்கு வேதனை உண்டு.

> “அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.” (1யோவான் 4:18)

பிசாசினால் தாக்கப்படும்படி பயமானது ஒரு மனிதஆவியின் கதவை திறக்கிறது.ஒரு நபரது தைரியத்தையும் பலத்தையும் வல்லமையற்றதாக்கி பலவீனப்படுத்துகிறது. மனிதத் திறமையிலும் நம்பிக்கையிலும் சேதத்தை விளைவிக்கிறது.

பக்கவாதம் வந்ததால் அல்லது அதுசம்பந்தமான அடையாளங்களோடு மருத்துவமனை வார்டுகளில் படுக்கைகளில் படுத்திருக்க ஆரம்ப காரணம் அவர்களது வாழ்க்கையில் எங்கோ எப்போதோ எப்பகுதியிலோ பயத்துக்கு இடங்கொடுத்ததால் ஏற்பட்டதுதான். சிலர் தங்கள் எஜமான் குறிசொல்லுகிற செய்கிறவர் என்பதால் பயந்திருக்கின்றனர்,சிலர்தங்கள் மேலதிகாரிகள் சூனியக்குழுவில் உறுப்பினராக இருக்கின்றார்கள் என்பதால் பயந்திருக்கின்றனர்,இப்படி ஒவ்வொருவரும் எதோ ஒருவகையில் பயந்திருக்கின்றனர். ஒரு கரப்பான் பூச்சி பறந்துதிரிந்தால், அல்லது ஒரு எலி திடீரென்று அறைக்குள் துள்ளிச் சாடினால், சில நபர்களால் அதற்குப்பிறகு அந்த இரவில் தூங்கவே முடியாது.கரப்பான் பூச்சி அல்லது எலிவடிவத்தில் சூனியக்காரர்கள் சரீரத்தைத்தாக்க வந்திருக்கிறார்கள் என்று தீர்மானிக்க கூடும். பூச்சிமருந்துகொல்லிகளை பயன்படுத்தி வீட்டை சுத்தம் செய்யவேண்டும்; எலிமருந்தை பயன்படுத்தி எலியை ஒழிக்கவேண்டும். இப்படி செய்வீர்களானால் அதன்பின் இந்த ஜந்துக்களுக்காக நீங்கள் பயப்படத்தேவை இல்லை.

1992, நவம்பர் மாதத்தில் ஒசோக்போ (Osogbo) என்று இடத்தில் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்ய நான்ஒத்துக்கொண்டேன். பிரயாணத்திற்கு கொண்டுசெல்ல வேண்டிய பொருட்களையெல்லாம் எல்லாம் ஆயத்தமாக்கிவிட்டேன்.. ஆனால் வீட்டைவிட்டு என்னால் கிளம்ப முடியவில்லை. வீட்டில் எங்களிடம் இருந்தபணம் 160நைரா மட்டுந்தான். இதிலிருந்து ஓசோக்போ செல்வதற்கு செலவளிக்கவேண்டும். எனக்கு பெரியகுடும்பம் இருந்தது. இரண்டு நாளில் ஒரு பால்டின்னை (infant formula) குடித்து தீர்த்துவிடும் இருமகன்கள் இருந்தனர். அதன் விலை 58நைரா.ஊழியத்திற்காகநாங்கள் எந்த சம்பளமும் வாங்கவில்லை ஏனென்றால் எங்களை தம்முடைய வேலைக்கென்று அழைத்த சர்வவல்ல தேவன் எங்கள் அனைத்து தேவைகளையும் அவருடைய வாக்குதத்தத்தின் படி தருவார் என்று நாங்கள் விசுவாசித்தோம்.

எனது தேவைகளுக்காக யாரிடமும் பிச்சைகேட்பதோ அல்லது பணத்தேவைகளுக்காக சிறப்பாக வேண்டுகோள்வதோ கூடாது என்ற கொள்கைஉடையவனாக இருந்தேன். (எனது தேவைகளும் எனது குடும்பத்தின் தேவைகளும்) எங்கள் அனைத்து தேவைகளையும் எதாவது ஒரு மனித பாத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அன்று எதோ சிலஎண்ணங்கள் எனது மனதில் குறுக்கே ஓடியதால் நான் விசுவாசத்தைக்குறித்து

பிரசங்கித்ததையும் கேட்டதையும் நான் மறந்துவிட்டேன். சிலநேரங்களில் பிரசங்கம் செய்வது மிக எளிதாக இருக்கிறது ஆனால் சிலபிரச்சினைகளுக்கு முழுக்க முழுக்க தேவனையே நம்பவேண்டும் என்ற தீர்மானமே முக்கியமாகும். பத்துபேர் அடங்கிய ஒரு குடும்பத்தின் செலவுக்காக 6 நாளுக்கு நான் எப்படி 100 நைரா பணத்தைமட்டும் கொடுத்துசெல்வது? தேவனுடைய வார்த்தையை நான் புரிந்துகொள்கிறேன் ஆனால் எனது விசுவாசத்தை உற்சாகப்படுத்த சிலர் எனக்கு தேவையாக இருந்தது. வேதாகமம் சொல்வதை நான் அறிவேன்:

> ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உஙகள் ஜீவனுக்காவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?
>
> ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.(மத்தேயு 6:25,26, 34)

நான் புறப்பட்டுச்செல்ல தயங்குகிறேன் என்பதை என் மனைவி பேசியன்ஸ் (Patience) கவனித்துவிட்டாள். என் வீட்டிலுள்ள அனைவரது நிலை, குறிப்பாக சிறுபிள்ளைகளின் நிலை எப்படி இருக்கும் என்ற எதிர்மறையான எண்ணத்தால் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதை அவள் அறிந்தாள். நம் குடும்பத்திற்கு தேவையான அனைத்தையும் கொண்டுவந்து கொடுக்கும்படி கட்டளைபெற்ற தூதர்கள் வழியில் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி என்னை போகும்படி உற்சாகப்படுத்தினாள். இன்னும் பயணத்திற்காக எடுத்துவைக்கவேண்டிய பொருட்களை எடுத்துவைக்க உதவியதோடு கடந்த காலங்களிலெல்லாம் நமக்கு கொடுத்துஉதவியது தேவன்தான் என்று எனக்கு நினைப்பூட்டினாள். இதுவரை அவர் நமக்கு உதவி செய்வதில் தவறியதில்லை, இனியும் தவறுவதில்லை. இவ்வார்த்தைகளால் நான் ஆறுதலடைந்தேன் புறப்பட ஆயத்தமானேன்.

அவ்வேளையில், எங்களது ஊழியத்திலுள்ள ஒரு உறுப்பினர் உள்ளே வந்து,"சகோதரர் ஒயார் அவர்களே! நான் அவசரமாக வந்தேன். நான் உடனே சீக்கிரமாக செல்ல வேண்டியிருக்கிறது. இங்குவந்து இந்த இரண்டு உரைகளை, ஒன்று உங்களுக்காகவும் இன்னொன்று உங்கள் ஊழியத்திற்காகவும் உங்களிடம் கொடுக்கவேண்டும் என்ற ஒரு பலமான வழிநடத்துதலை உணர்ந்தேன்" என்றார். அந்த உரையை வாங்கி திறந்த போது தேவனுக்கு மகிமை உண்டாகும்படி ஒருஉரையில் என் குடும்பத்திற்காக 1000 (ஓராயிரம்) நைரா பணமும் இன்னொரு உரையில் என் ஊழியத்திற்காக 1000 (ஓராயிரம்) நைரா பணமும் இருந்தது. அப்போதே எங்களது சாட்சியை அவரிடம் பகிர்ந்துகொண்டு அவருக்காக ஜெபித்தேன். தேவனுக்கு கீழ்படிந்ததற்காகவும், தேவனுடைய ஊழியக்காரருடைய வாழ்க்கையில் ஒரு ஜீவவிதையை விதைக்க தன்னை ஒரு தகுதியான பாத்திரமாகவும் தேவன் கண்டுகொண்டதற்காக அவர் பரவசப்பட்டார்.

அந்நாளில் சிலகாரியங்களை நடைமுறையான ரீதியில் அதிகமாக நான் கற்றுக்கொண்டேன்.

- எவ்வளவுதான் நமக்கு விசுவாசமிருந்தாலும் நம்மை உற்சாகப்படுத்துவதற்கு சிலர் நமக்குத் தேவையாக இருக்கிறார்கள்.
- உங்களோடு சேர்ந்து ஜெபிக்கிறவர்கள் வேதவசனங்களின்படி சமநிலை அறிவுடையவராக இருந்து, அந்நபரின் வார்த்தையோடு வேதவசனத்தையும் சேர்த்து, அவைஇரண்டையும் விசுவாசத்தால் கலந்து சொல்லும்போது நற்பலன் கிடைக்கும்.
- ஒருவர் தனது வாழ்க்கைத்துணையிடமிருந்து எதையும் மறைத்துவைக்கக் கூடாது.

- செலவளிக்க பணமும் சாப்பிட ஆகாரமும் இருக்கும்போதும் மட்டும் விசுவாசம் உயர்ந்தோங்கியிருந்தால் போதாது அவைகள் இல்லாதவேளையிலும் விசுவாசம் உயர்ந்து ஓங்கியிருக்கவேண்டும்.

## *விநோத சத்தங்களை கேட்பதும் அல்லது விநோத உருவங்களை காண்பதும்:*

அடிக்கடி அல்லது எப்போதாவது ஒருமுறை விநோதமான காரியங்களை உங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கும் சத்தங்களை கேட்டாலும், அல்லது விநோதமான உருவங்கள் உங்களோடு பேசுவதுபோலவோ அல்லது நீங்கள் அவர்களோடு விவாதித்துக் கொண்டிருப்பது போலவோ அல்லது உங்களுக்குத் தெரிந்த இறந்துபோனவர்களுடன் விவாதித்துக் கொண்டிருப்பதுபோலவோ கண்டால் உங்களுக்கு அவசரமான விடுதலை ஊழியம் தேவை என்று பொருள். சிலர் தங்களது ஆழ்மனதில் (subconcious) இப்படிப்பட்ட நபர்களோடு விவாதித்துக்கொண்டிருப்பார்கள்; சிலர் 'உறக்கத்தில் பேசுவார்கள்' அதாவது சிலர் அவர்கள் காணும் கனவில் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர் விழிக்கும்போது கனவில் பேசக்கேட்ட காரியங்களால் மிகவும் திகைப்படைவார்கள்.

1994, என் நண்பர்களில் ஒருவர் இன்னொருவரை என்னிடம் அறிமுகம் செய்துவைத்தார். சிலவேளைகளில் அவரால் மட்டும் பார்க்கக்கூடிய ஒரு உருவத்தோடு பேசிக்கொண்டிருப்பார். சிலவேளைகளில் வகுப்பறையைவிட்டு கண்களால் பார்க்கமுடியாத அந்த விநோத நபரோடு சிரித்துக்கொண்டும் - விவாதித்துக்கொண்டும் சென்றுகொண்டிருப்பார். விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் அவமானச்சின்னமாக மாறியிருந்தார்.

இந்த மனிதனோடு கலந்தாய்வு (counselling) செய்த போது அப்பிரச்சினையின் ஆணிவேரைக் கண்டுபிடித்தேன்.அவனுடைய நண்பனும் இவனைப்போன்ற ஒரு சிறந்த கால்பந்து வீரராய் இருந்தான்.கால்பந்தாட்டபோட்டியில் கலந்துவிட்டு திரும்பும்போதுஅந்த நண்பன் இறந்துவிட்டான். அதிலிருந்து அந்த நண்பன் கனவிலும் நனவிலும் தோற்றமளிக்க ஆரம்பித்தான். இறந்துபோன நண்பன் எந்நேரம் தோன்றினாலும் இவர் ஐம்புலனறிவையும் இழந்து அந்த நண்பன் அவரைவிட்டு போகும்வரை அவரது நண்பன் சொல்வதை அல்லது விரும்புவதைச்செய்வார்.

கலந்தாய்வுக்கு பின் நான் அவனை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஜெபத்தில் வழிநடத்திவிட்டு முறைப்படி விடுதலை ஊழியத்தை செய்தோம். அவன் மீது ஆதிக்கம் செய்த பிசாசுகளைக் கட்டிப்போட்டுக்கொண்டிருந்தபோது அவன் யாரிடமோ,''தயவுசெய்து போய்விடாதே, வா, வா'' என்று சொல்ல ஆரம்பித்தான். ஜெபித்தபிறகு யாரிடம் பேசிக்கொண்டிருந்தாய் என்று கேட்டேன். அவனுடைய நண்பனிடம் பேசிக்கொண்டிருந்ததாகச் சொன்னான்."என்னை அழிக்கக்கூடிய இடத்திற்கு கொண்டுவந்து எனக்கு தீங்கு செய்துவிட்டாயே" என்று அவன் குற்றஞ்சாட்டியதாகச் சொன்னான்.

அவர்கள் இருவருக்கிடையே இருந்த ஒவ்வொரு தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன என்று இறந்துபோன நண்பன் சொன்னதாகச் சொல்லிக்கொண்டிருந்தார். மீண்டும் நாங்கள் அவனோடு கலந்துபேசினோம் ஜெபித்தோம், அபிஷேகத்தினால் கீழே விழுந்தான். சுமார் 45நிமிடங்களுக்குப் பிறகு, எழுந்ததும் ஒரு வேதாகமம் வேண்டுமென்று அவன் கேட்டதும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனுடைய திடீர் மாற்றத்தை கண்ட நாங்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டோம். அபிஷேகத்தால் விழுந்துகிடந்தபோது மூன்றுமனிதர்கள் அவனை ஒரு சபைக்கு எடுத்துச்சென்று அவனுக்கு ஒரு வேதாகமத்தை கொடுத்துவிட்டு, வேதாகமத்தைப் படிக்கவேண்டும் என்றும் தேவனுடைய வார்த்தையை கேட்கவேண்டும் என்றும் ஆலோசனை அளித்தார்களாம்.தூதர்கள் அவனிடத்தில் வந்து அவனுடைய ஆசீர்வாதத்தை எப்படி தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று அவனுக்கு போதித்திருக்கிறார்கள் என்பதை பின்னர் நாங்கள் புரிந்துகொண்டோம்.

## *திடீரென்று கோபப்படுகிறவர்கள்*

> தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான். (நீதிமொழிகள் 25:28)
>
> உன்னால் உன் கோபத்தை அடக்கமுடியவில்லை என்றால், நீ, மதில்களில்லாத ஒரு நகரத்தைப்போல, உதவியற்ற நிலையில் ஆனால் பிறரால் தாக்கப்படுவதற்கு திறந்துகொடுக்கப்பட்ட நிலையிலிருக்கிறாய். (Goodnews Bible குட்நியூஸ் பைபிள் நீதி 25:28)

எளிதில் கோபப்படுகிறவர்கள், பாதுகாப்புகவசத்தை இழந்துவிடுவதால், அவர்களால் அவர்களது அற்புதங்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களை சுற்றியிருக்கும் மதிலானது கோபப்படும்போதுஇல்லாமலாக்கப்படுவதால் எளிதில் தாக்கப்படும் நிலையிலிருக்கிறார்கள். பொதுவாக பிறரை எளிதில் தாக்குகிறவர்கள் அவர்களுடைய நாவை எளிதில் அடக்கமுடியாமலிருப்பதால் கோபம், குரோதம், வெறுப்பு, மன்னியாமை,போன்ற அசுத்தஆவிகள் பலவழிகளில் அவர்களுக்குள் நுழைவதற்கான வாசல் திறக்கப்படுவதால் அம்மனிதன் ஆவிக்குரிய பாதுகாப்பற்றவனாகவும்,எளிதாக தாக்கப்படத்தக்கவனாகவும் இருக்கிறான்.இதற்குப் பரிகாரமும் தீர்வும் என்னவென்றால் அம்மனிதன் தேவவார்த்தையில் உறுதியாக வேரூன்றியவனாகவும், மாம்சத்தை கீழ்படுத்தி பணியச்செய்யும் மனப்பான்மை கொண்டவனாகவும் அதற்கான தேவகிருபை பெருகுவதற்கு ஸ்தோத்தரிக்கிறவனாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, அந்த நபரை கோபமூட்டும்படி பிசாசினால் கொண்டுவரப்படுகின்ற அனைத்து சோதனைகளையும் (temptations) எதிர்த்து நிற்பதற்கு விழிப்புடன் காவல் காப்பவனாக இருக்கவேண்டும்.

## *கண்டிப்பாக செய்யதூண்டும் செயல்கள்*

நீங்கள் செய்கிற சில செயல்களை உங்களால் கட்டுப்படுத்தமுடியவில்லை என்பதை நீங்கள் கவனித்திருப்பபீர்களானால், உதாரணமாக, உங்கள் பசியையோ, எண்ணங்களையோ, உணர்ச்சிகளையோ, செயல்களையோ, கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அவைகள் சாதாரண பழக்கவழக்கம் இல்லை என்றும் பிசாசினால் ஏவப்பட்டுச் செய்கின்ற காரியங்கள் என்று அர்த்தமாகும். உங்களுக்கு விடுதலை ஊழியம் தேவையாக இருக்கிறது.நினைத்ததையே திரும்பத் திரும்ப நினைத்துக்கொண்டிருப்பது மற்றும் புகைப்பிடிக்க வேண்டும், குடிக்கவேண்டும், சாப்பிடவேண்டும் மற்றும் இதுபோன்ற கட்டாயப்படுத்துகிற எண்ணங்கள் - உணர்வுகள் உங்களை உந்தித்தள்ளுவது போலிருக்கும்.நீங்கள் ஒழுங்கீனமாவாழ்க்கையை அறவே வெறுப்பவர்களாகவும்,சிறப்பாக நீங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையாகவும் இருந்தும்கூட அந்த ஒழுக்கக் கேட்டுக்குள்ளேயே இருப்பவர்களாக இருந்தால் நீங்கள் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருக்கிறீர்கள் என்று அர்த்தம். இப்படிப்பட்டவர்கள், சுயஇன்பம் அனுபவிப்பவர்களாகவும், ஒழுக்கக்கேடான எண்ணங்கள் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இதற்கான பரிகாரம், விடுதலை பெறுவதிலும் தீயஇச்சைக்குட்படுத்தும் பழைய இடங்களுக்கு செல்லாமலும் அல்லது பழைய காரியங்களை செய்யாமலும் தங்களைக் காத்துக்கொள்ளும்படி எப்பொழுதும் உள்ளான மனதில் எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும்.

ஒருவன் அடிமைத்தனத்திற்குள் இருப்பதை வெறுக்கும் வேளையிலேயே அதிலிருந்த வெளியே வருவதற்கான வழியும் உண்டாகிவிடும். விடுதலை பெறுவதற்காகவும் விடுதலையை தக்கவைத்து வாழ்வதற்கான தேவையான அனைத்தையும் இயேசுகிறிஸ்து வழங்கிவிட்டார்.ஆகவே, ஆயத்தமாகுங்கள்; இப்போதே

ஒரு துணிச்சலான அடியெடுத்துவைத்து தேவனால் வழங்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தையும்,அளவிடமுடியாதஅற்புதங்களையும் அனுபவியுங்கள்.

---------------------------------